# மார்க்ஸ் முதல் மாசேதுங் வரை



புரட்சிகர இயங்கியல் பற்றிய ஓர் ஆய்வு

ஜார்ஜ் தாம்சன்

# மார்க்ஸ் முதல் மா சேதுங் வரை

புரட்சிகர இயங்கியல் பற்றிய ஓர் ஆய்வு

ஜார்ஜ் தாம்ஸன்

கீழைக்காற்று வெளியீட்டகம்
சென்னை - 600 002.

- முதல் பதிப்பு : மே 1981
- பதிப்புரிமை : பொதுமை வெளியீடு
  16 மங்கேஷ் தெரு,
  சென்னை - 600 017.
- மொழியாக்கம் : எஸ்.வி. ராஜதுரை
  இன்குலாப்
- இரண்டாம் பதிப்பு : மே 1997
- வெளியீடு : கீழைக்காற்று வெளியீட்டகம்
- நூல் கிடைக்குமிடம் : கீழைக்காற்று வெளியீட்டகம்
  10, அவுலியாசாகிபு தெரு,
  எல்லீசு சாலை,
  சென்னை - 600 002.
- விலை : ரூ. 40.00
- அச்சாக்கம் : எழில் பிரிண்ட்ஸ்
  சென்னை - 600 024.

# பதிப்புரை

மார்க்ஸ் முதல் மாசேதுங் வரை என்ற இந்நூல், இலண்டனில் உள்ள சீனக் கொள்கை ஆய்வுக் குழுவால் வெளியிடப் பட்ட ஆங்கில மூலநூலின் திருத்தப்பட்ட மூன்றாம் பதிப்பின் மொழியாக்கமாகும். இந்நூல், மூல நூலின் பதிப்பாளர்களின் அனுமதிகேட்டு தமிழில் கொண்டு வரப்படுகிறது. சீனக் கொள்கை ஆய்வுக் குழுவுக்கும் பேராசிரியர் ஜார்ஜ் தாம்ஸன் அவர்களுக்கும் நம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்திய மொழிகள் பெரும்பாலானவற்றில் பல ஆண்டுகளுக்கு முன்பே மொழியாக்கம் செய்யப்பட்டுவிட்ட இந்நூல் தமிழில் வருவது இதுவே முதல் தடவை.

இந்நூலின் மூன்று அத்தியாயங்கள் கவிஞர் இன்குலாப் அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டன. மற்ற ஐந்து அத்தியாயங்களையும் மொழிபெயர்த்துத் தந்தவர் தோழர் எஸ்.வி. ராஜதுரை ஆவார். இம் மொழி பெயர்ப்பைச் சிறப்பாக வும், எளிமையாகவும் கொண்டு வருவதில் தோழர் எஸ்.வி. ராஜதுரை காட்டிய ஆர்வத்தையும், அதற்காக அவர் வழங்கிய கடுமையான உழைப்பையும், மீண்டும் மீண்டும் கையெழுத்துப் பிரதிகளைச் சரிபார்த்துச் செப்பனிட்ட அவர் தம் பொறுப்புணர் வையும் நாம் ஒரு போதும் மறக்க முடியாது.

இம்மொழி பெயர்ப்பில் தோழர் எஸ்.வி. ராஜதுரைக்கு உறுதுணையாக இருந்து, மொழியாக்கத்தின் ஒவ்வொரு பகுதிக் கும் தனது ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் திருத்தங்க ளையும் அவ்வப்போது வழங்கி இம் முயற்சிக்குப் பெரும் பங்களிப்பைச் செலுத்தியவர் நண்பர் பா. சிங்கராயர்.

நூலைக் குறித்தநேரத்திலும் சிறப்பாகவும் அச்சிட்டுத் தந்த வர்கள் பி.ஆர்.வி. அச்சகத் தொழிலாளிகளும் உரிமையாளருமா வர்.

இவர்கள் அனைவர்க்கும் நம் நன்றிகள்.

SEELAN BOOKS
SIGNATURE
NO.

*இந்நூலின் தொடர்வரிசையில் ஜார்ஜ் தாம்ஸன் எழுதிய பிற இரண்டு நூல்கள் 'முதலாளியம் அதன் பிறகும்: சரக்கு உற்பத்தியின் எழுச்சியும் வீழ்ச்சியும்', 'மனித சாரம்: விஞ்ஞானம், கலை ஆகியவற்றின் ஊற்றுக் கண்கள் என்பனவாகும். இவ்விரு நூல்களும் ஆங்கிலத்தில் உள்ளன. இவற்றையும் தமிழில் கொண்டு வர முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன. இம் மூன்று நூல்களும் சேர்ந்து புரட்சிகர மார்க்சியத் தத்துவம் பற்றிய ஒரு முழுமையான புரிதலை வாசகர்க்கு வழங்க முடியும்.*

*மார்க்சின் 163-ஆவது பிறந்த நாளன்று (5.5.1981) இந்நூல் தமிழகப் பாட்டாளி வர்க்க வாசகர்களுக்குச் சென்றடையும் வாய்ப்பு உருவாகியது குறித்து நாம் பெருமை கொள்கிறோம்.*

*சென்னை - 17*
*மே 1, 1981*

**பொதுமை வெளியீடு**

# இரண்டாம் பதிப்புக்கான உரை

உலகெங்கிலும் மூலதனத்தின் சுரண்டலுக்கெதிராய் போரா டிக் கொண்டிருக்கும் மக்களை திசை விலக்குவதற்கான முயற்சி கள் திரும்பவும் சூடு பிடித்துள்ளன. அரசியல் அரங்கில் அன்னதானம், உதவித்தொகை, மனித உரிமை, 'தன்னார்வ' அரவணைப்புகள் என்று ஒரு முனையில் வர்க்கப் போராட் டத்தை வளைக்க முயற்சிப்பது போலவே, மறுமுனையில் சீர்திருத்தவாதம், இருத்தலியம், பின்நவீனத்துவம், விளிம்பு நிலைக் கோட்பாடு எனும் பாசக்கயிற்றோடு சுரண்டலின் பங்காளிகள் களம் புகுந்துள்ளனர். முதலாளித்துவத்தின் காலாட் படைகளோடு, இத்தகைய கையாட் படைகளையும் எதிர்த்தபுரட் சிகரப் போராட்டத்தின் அனுபவமாய் மீண்டும், மீண்டும் மார்க்சிய - லெனினியமே வர்க்கப் போராட்டத்தின் அறுவடைக் குரிய ஆயுதமாய் மக்களின் கரம் கோர்த்து நிற்கிறது.

மார்க்சியத்தை மறுப்பதற்கு காரணம் தேடும் தமிழக தளபதிகள், ஐரோப்பாவிலும், சோசலிச நாடுகளிலும் புரட்சிக ரப் பாட்டாளி வர்க்கம் சிந்தாந்தத் துறையில் 'போஸ்ட்மார்டம்' செய்த இசங்களை தமிழகத்தில் ஆவி எழுப்புதல் முயற்சிகளை நிகழ்த்திக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் மார்க்சு முதல் மாசேதுங் வரை எனும் இந்நூல் மறுபதிப்பாவது மார்க்சிய - லெனினிய எதிரிகளை இனங்காட்டவும் மார்க்சிய - லெனி னிய - மாசேதுங் சிந்தனைக்கு வழிகாட்டவும் உதவி செய்கிறது.

''வர்க்கப் போராட்டத்தை ஏற்பது மட்டுமல்ல; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் வரை ஏற்று விரித்துச் செல்வதே மார்க் சியம்'' என்ற லெனினிய வாதத்தை முன்வைத்து ரசிய, சீன, புரட்சிகர போராட்டங்களின் வெளிச்சத்தில் நடைமுறைக்கும் தத்துவத்திற்குமான இயங்கியல் உறவை விளக்கும் ஜார்ஜ் தாம்சனின் இந்நூல் வர்க்கப் போராட்டத்தில் பிணைக்கப்பட்டி ருக்கும் அனைவருக்குமான தெளிவையும் தீர்வையும் வழங்குகி றது.

இந்நூலை மறுபதிப்பாக வெளியிட அனுமதி வழங்கிய எஸ்.வி. ராஜதுரை, இன்குலாப் மற்றும் பொதுமை வெளியீட்ட கத்தார்க்கு எமது நன்றிகள்.

*புரட்சிகரப் போராட்டம், சித்தாந்தத்தின் கடமைகளை வலியுறுத்தும் இந்நூலை தமதாக்கிக் கொள்ளும் வாசகர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.*

**மே - 1997** **பதிப்பகத்தார்**

## முன்னுரை

1917 ஆம் ஆண்டு ரசியப் புரட்சியைப் பற்றியும், 1949 ஆம் ஆண்டு சீனப் புரட்சியைப் பற்றியும் ஆராயும் மார்க்சிய ஆய்வு இது. உலக சோசலிசப் புரட்சியின் அடுத்தடுத்து வந்த இரண்டு கட்டங்கள் என்ற வகையில், அவற்றின் ஒற்றுமையை யும் தொடர்ச்சியையும் மெய்ப்பிப்பதே இந்த ஆய்வின் குறிக் கோள். மார்க்சிய இலக்கியங்களில் இருந்தும், குறிப்பாக லெனின், மா சேதுங் ஆகியோரது படைப்புகளில் இருந்தும் விரிவான மேற்கோள்களை எடுத்தாள்வதன் மூலம், இவ்விரண்டு புரட்சிகளுக்கும் பொதுவான தத்துவ அடிப்படை விளக்கப்படுகி றது. இதனால், இப்புரட்சிகளுக்குத் தலைமையேற்றவர்களின் சிந்தனைகளின் வழியாக அவற்றை வாசகரால் புரிந்து கொள்ள முடியும்; அதேவேளையில் இம்மேற்கோள்கள், வாசகருக்கு, இயங்கியல் - வரலாற்றுப் பொருள் முதலியலின் அடிப்படைக் கொள்கைகைளயும் அறிமுகம் செய்து வைக்கின்றன. ஏனெனில், புரட்சிகரப் போராட்டங்களின் வெளிச்சத்திலேதான் தத்துவத் தைப் புரிந்து கொள்ள முடியும். புரட்சிகரப் போராட்டங்களில் இருந்துதான் அது வளர்ந்தது; அவற்றில்தான் தத்துவம் தனது மிக முழுமையான, மிகத் தெளிவான வெளியீட்டைக் காண்கிறது.

இந்நூல் டக்ளஸ் கார்மனின் நினைவுக்குக் காணிக்கையாக் கப்படுகிறது. அவர்தான் எனக்கு மார்க்சியத்தைப் பயிற்றுவித்த வர். பிரிட்டிஷ் பொதுவுடைமைக் கட்சியின் தேசியக் கல்வி அமைப்பாளராக இருந்த அவர், கட்சிப் பள்ளிகளை வலைப் பின்னல்களாய் உருவாக்கினார். இப்பள்ளிகளில் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தொழிற்சாலைத் தொழிலாளர் கள் பயில வந்தனர். அவர்களுக்கு அவரும்; கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட விவாதங்களின் வழியாகக் கற்பித்தல்' என்ற அவரது

*முறையில் பயிற்றுவிக்கப்பட்ட பிறகும் கல்வியூட்டினர். கட்சி யின் தலைமை முன்வைத்த 'சோசலிசத்துக்கான பிரிட்டிஷ் பாதை' என்ற புரட்டல் வழியை அவர் தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வந்தார். இக்கருத்து வேறுபாடு காரணமாக, 1950-இல் அவர் இப்பள்ளிப் பணியைக் கைவிட நேர்ந்தது. இப்போராட் டத்தில் அவர், தோற்கடிக்கப்பட்டு விட்டார்; ஆனால் அவரு டைய கட்சிப் பள்ளிகளில் பயிற்சிபெற்ற என்னைப் போன்ற பலர், புரட்சிகர இயங்கியலில் அவர் கற்பித்த பாடங்களை ஒரு போதும் மறந்து விடவில்லை. இன்று புரட்சிகரப் பாதை எங்கு நிலவுகிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கு அவருடைய போதனை எங்களைப் போன்றவர்களுக்கு உதவி செய்துள்ளது.*

*பர்மிங்ஹாம், 1971* **ஜார்ஜ் தாம்ஸன்**

# சுருக்க வடிவங்கள்

இந்நூலில் காட்டப்பட்டுள்ள மேற்கோள்கள் இடம் பெற்றுள்ள மூலநூல்கள் யாவும் ஆங்கிலத்தில் உள்ளவை. அவற்றின் சுருக்க வடிவங்கள் தமிழில் கீழே தரப்பட்டுள்ளன. அந்நூல்களின் ஆங்கிலத் தலைப்புகளும் பதிப்பு விவரங்களும் உடன் தரப்பட்டுள்ளன.

**உபோ.** *ஏங்கல்சு: ஜெர்மனியில் உழவர் போர்.*
Engels, The Peasant War in Germany (London 1927) 1850.

**சோபொபி.** *ஸ்டாலின்: சோவியத் யூனியனில் சோசலிசத்தின் பொருளாதாரப் பிரச்சினைகள்.*
J. Stalin, Economic Problems of Socialism in the USSR. Moscow, 1952.

**பீரி.** *பீக்கிங் ரிவ்யூ* (Peking Review) *(இதழ் வெளி வந்த ஆண்டும் இதழ் எண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளன)*

**மப.** *மார்க்சு - ஏங்கல்சு: மதத்தைப் பற்றி.*
Marx and Engels, On Religion. Moscow, 1957.

**மா.ஏ.** *மார்க்சு - ஏங்கல்சு: தெரிவு நூல்கள்.*
Marx and Engles, Selected works in three volumes. Moscow, 1969.

**மா.நா.க.** *மாசேதுங்: தத்துவம் பற்றிய நான்கு கட்டுரைகள்*
Mao Tse - tung Four Essays on Philosophy. Peking, 1966.

**மா.மே.** **மா சேதுங் படைப்புகளில் இருந்து மேற்கோள்கள்.**
Quotations from Chairman Mao-Tse-tung peking, 1967

மா.தெ.நூ. *மா சேதுங்: தெரிவு நூல்கள் - 4 பாகங்கள்.* Selected Works of Mao Tse-tung. 4 Vol. Peking, 1961 - 65

லெ.தொ.நூ. *லெனின்: தொகுப்பு நூல்கள் - 45 பாகங்கள்.* V.I. Lenin, Collected Works, 45 Vol. Moscow, 1960-70.

வ.அ. **பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய வரலாற்று அனுபவம்பற்றி மேலும் சில விளக்கம்.** Mao Tse--tung and others, More on the Historical Experiences of the Proletarian Dictatorship. December 1956.

ஜெ.சி. *மார்க்சு - ஏங்கல்சு: ஜெர்மானியச் சித்தாந்தம்* Marx and Engles, The German ideology, (London, 1965) 1846

ஸ்.தொ.நூ. *ஸ்டாலின் : தொகுப்பு நூல்கள் - 13 பாகங்கள்.* J.V. Stalin, Works, 13 Vol, (Uncompleted) Moscow, 1952 - 55.

ஸ்.மா.வி. *மாஸ்கோ விசாரணைகளும் ஸ்டாலின் ஆற்றிய இரண்டு சொற்பொழிவுகளும்* The Moscow Trial (Jan. 1937) and Two Speeches by J. Stalin: compiled by W.P. & Z.K. Coates. London 1937).

ஸ்.லெ. *ஸ்டாலின்: லெனினியம்* Joseph Stalin, Leninism. London. 1940

ஒப். *ஒப்பிடுக. (ஒரே கருத்தைத் தெரிவிக்கும் ஒன்றுக்கும் மேலான மேற்கோள்கள் காட்டப்படும் போது இச் சுருக்க வடிவம் கையாளப்படுகிறது. இம் மேற்கோள்கள் ஒரே ஆசிரியரின் படைப்புகளிலிருந்தோ அல்லது வெவ்வேறு ஆசிரியர்களின் படைப்பிலிருந்தோ காட்டப்படலாம்).*

# பொருளடக்கம்


முன்னுரை vii

சுருக்க வடிவங்கள் ix

1. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் 1

*1. உழைக்கும்-வர்க்க அதிகாரம் — 2. வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துதல் — 3. சிந்தாந்தப் போராட்டம் — 4. 'இடது' மற்றும் வலது சந்தர்ப்பவாதம்.*

2. முதலாளி வர்க்கப் புரட்சியிலிருந்து பாட்டாளி வர்க்கப் புரட்சிவரை 22

*1. நவீன சமுதாயத்தில் வர்க்க உறவு — 2. ரஷ்யப் புரட்சி — 3. சீனப் புரட்சி.*

3. பாட்டாளி வர்க்கமும் உழவர் வர்க்கமும் 41

*1. பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் — 2. தொழிலாளர் - உழவர் நேச அணி — 3. உழவர் வர்க்கத்தைப் பாகுபடுத்திப் பார்த்தல் — 4. உதிரிப் பாட்டாளிகள் — 5. மேற்கு நாடுகளில் பாட்டாளி வர்க்கம்.*

4. தேசியப் பிரச்சினை 60

*1. நவீன சமுதாயத்தில் தேசம் — 2. தேசியத் தன்னாட்சி — 3. தேசிய விடுதலைப் போர்கள் — 4. தேசியத் தன்னாட்சியும் பிரதேசத் தன்னாட்சியும் — 5. தேசியப் பண்பாடும் அனைத்துலகப் பண்பாடும்.*

5. ஒரு நாட்டில் சோசலிசம் 80

*1. இடையறாத புரட்சி பற்றிய மார்க்சின் தத்துவம் — 2. அக்டோபர் புரட்சியின் வெற்றி — 3. ஏற்றத்தாழ்வான வளர்ச்சி — 4. கிழக்கு நாடுகளில் புரட்சி.*

6. கட்சி 97

*1. பாரிஸ் கம்யூனின் படிப்பினைகள் — 2. ஒரு புதிய வகைக் கட்சி — 3. முன்னணிக் கட்சி — 4. ஜனநாயக மத்தியத்துவம் — 5. மக்கள் திரளிடமிருந்து மக்கள் திரளுக்கு.*

7. முதல் சோசலிச அரசு 119

*1. பாட்டாளி வர்க்கப் புரட்சி — 2. சோசலிசம் கட்டுதல் — 3. 'இடது' மற்றும் வலது திசை விலகல்கள் — 4. புதிய முதலாளி வர்க்கம் — 5. ஒரு பண்பாட்டுப் புரட்சியின் தேவை — 6. சோசலிசச் சமுதாயத்தில் வர்க்கப் போராட்டம் — 7. புதிய புரட்டல்வாதம்.*

8. பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சி 162

*1. தேசிய விடுதலை — 2. முரண்பாடுகளைக் கையாளுதல் — 3. முதலாளியப் பாதை — 4. அரசாங்கத்தில் மக்கள் பங்கு பெறுதல் — 5. புரட்சியும் உற்பத்தியும் — 6. பொதுவுடைமை உழைப்பு.*

அத்தியாயம் 1

# பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்

*பாட்டாளி வர்க்கத்தை ஆளும்வர்க்கத்தின் நிலைக்கு உயர்த்துவது, ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் வெற்றி பெறுவது என்பதுதான் உழைக்கும் மக்களின் போராட்டத்தின் முதல் நடவடிக்கையாகும்.*

**— பொதுவுடைமை அறிக்கை**

## 1. உழைக்கும் - வர்க்க அதிகாரம்

லெனின் எழுதினார்:

> *வர்க்கப் போராட்டத்தை மட்டும் ஏற்பவர்கள் மார்க்சியவாதிகள் ஆகிவிடமாட்டார்கள்... வர்க்கப் போராட்டத்தை ஏற்பதை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்பதுவரை விரித்துச் செல்பவனே மார்க்சியவாதியாவான். மார்க்சியவாதிக்கும் சாதாரண சிறு (அதேபோல் பெரு) முதலாளிக்கும் இடையே உள்ள மிகவும் ஆழமான வேறுபாடாக இதுவே அமைகிறது. மார்க்சியம் பற்றிய உண்மையான புரிதலையும், அதை ஏற்றுக் கொள்வதையும் சோதித்து அறிவதற்கான உரைகல்லும் இதுதான். (லெ.தொ.நூ. 25. 411)*

இவ்வாறு ஒரு மார்க்சியவாதி பற்றிய லெனினின் வரையறுப்புக்குள்ளேயே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய கருத்தாக்கம் நுழைந்து விடுகிறது. எனவே, நாம் இவ்வரையறுப்பை ஏற்றுக் கொள்வோமானால், மார்க்சியம் பற்றி தற்காலத்தில் நிலவும் முரண்பட்ட விளக்கங்களை இனம் பிரித்தறிவதில் இவ்வரையறுப்பை நாமும் ஒரு உரைகல்லாகப் பயன்படுத்துவோம்.

வர்க்க சமுதாயம் சுரண்டலையே அடிப்படையாகக் கொள்கிறது. சுரண்டுபவர்கள் ஆளும் வர்க்கமாகவும் சுரண்டப்படுபவர்கள் ஆளப்படும் வர்க்கம் அல்லது வர்க்கங்களாகவும் அமைகிறார்கள். ஆளும் வர்க்கம் அரசின் வழியாக தனது ஆட்சியைத் திணிக்கிறது. அரசு என்பது ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தை வன்முறையோடு ஒடுக்கும் உறுப்பு. அதன் முதன்மையான கருவிகள் இராணுவமும் காவல்படையுமே (போலிஸ்) ஆகும்:

> *தமது கரங்களில் அதிகாரத்தைக் குவித்துக் கொண்டுள்ளவர்கள் ஒரு தனிப்பட்ட வர்க்கமாக இருப்பது தான் அரசின் சிறப்பான அம்சமாகும். (லெ.தொ.நூ. 1. 419)*

*மார்க்சைப் பொறுத்தவரை, அரசு என்பது வர்க்க ஆட்சிக்கான ஒரு உறுப்பு; ஒரு வர்க்கம் மற்றொரு வர்க்கத்தை ஒடுக்குவதற்கான உறுப்பு; வர்க்கங்களுக்கிடையிலான மோதலை மட்டுப்படுத்துவதன் மூலம் இந்த ஒடுக்குமுறையை சட்டரீதியானதாக்கி, நிலையானதாக்குகிற 'ஒழுங்கை' உருவாக்குவதே அரசு. (லெ.தொ.நூ. 25. 387)*

*நிலையான ஒரு இராணுவமும் காவல் படையுமே அரசு அதிகாரத்தின் முதன்மையான கருவிகளாகும். (லெ.தொ.நூ. 25. 389)*

எனவே, வர்க்க சமுதாயத்தின் ஒவ்வொரு வடிவமும் — அடிமைச் சமுதாயம், நிலப்பிரபுத்துவச் சமுதாயம், முதலாளியச் சமுதாயம் இவை ஒவ்வொன்றுமே — ஆளும் வர்க்கத்தின் சர்வாதிகாரமாகும். முதலாளிய சமுதாயத்தில், அதாவது பூர்சுவா சமுதாயத்தில் இது அநேகமாக ஜனநாயகமாக இருக்கலாம்; இது அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையைக் கொண்ட பாராளுமன்றத் தேர்தல்களையும் அனுமதிக்கலாம்; ஆயினும் அது இன்னும் ஒரு சர்வாதிகாரம் தான் — 'பாராளுமன்ற வடிவங்கள் என்ற முகமூடி தரித்த முதலாளி வர்க்க சர்வாதிகாரம்' தான். (லெ.தொ.நூ. 30. 100):

*பாட்டாளி வர்க்கத்துக்குக் கல்வி புகட்டுவதற்கும், போராட்டத்துக்காக அதற்குப் பயிற்சி அளிப்பதற்கும் முதலாளிய ஜனநாயகம் விலைமதிப்பற்றதாக உள்ளது என்றாலும், அது எப்போதும் குறுகலான, போலித்தனமான, மாய்மாலம் நிறைந்த, பொய்யான ஒன்று; அது எப்போதும் வசதி படைத்தவர்களுக்கு ஜனநாயகமாகவும் வறியவர்களுக்கு மோசடியாகவுமே இருக்கிறது. (லெ.தொ.நூ. 28. 108)*

எனவே, *'மிக உறுதியான, தீர்மானகரமான, புரட்சிகர ஜனநாயக உணர்வோடு' (லெ.தொ.நூ. 21. 409)* முதலாளி வர்க்க ஜனநாயக உரிமைகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு தொழிலாளிகளிடம் வற்புறுத்திக் கூறிய அதேவேளையில், லெனின், பாராளுமன்ற வழிமுறைகளைக் கொண்டு அவர்கள் அதிகாரத்தை வென்றெடுக்க முடியும் என்று நினைப்பது ஒரு பிரமை என்றும் எச்சரித்தார். இதுதான் அவருக்கும், அவர் காலத்திய புரட்டல்வாதிகளுக்கும் இடையே இருந்த முதன்மையான பிரச்சினையாகும்:

சொல்லளவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஏற்றுக் கொள்வதுதான் பெர்னே அகிலத்திலிருக்கும்[1] மிக ஆபத்தான விசயம்... பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதைச் சொல்லளவில் ஏற்பதற்கான முயற்சிகளின் நோக்கம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதைச் சொல்லளவில் ஏற்றுக் கொண்டு, கூடவே 'பெரும்பான்மையினரின் சித்தம்', 'அனைவர்க்கும் வாக்குரிமை' (இதைத்தான் காவுட்ஸ்கி செய்கிறார்), முதலாளி வர்க்கப் பாராளுமன்றக் கொள்கை, முதலாளி வர்க்க அரசு யந்திரம் முழுவதும் அழிக்கப்பட்டு, உடைக்கப்பட்டு, சுக்குநூறாக்கப்பட வேண்டும் என்ற கருத்தை ஒதுக்குதல் — ஆகியவற்றைக் கள்ளத்தனமாகக் கொண்டுவருவதுதான். இப்புதிய நழுவல்கள், சீர்திருத்தவாதப் புதிய ஓட்டைகள் ஆகியவைதான் மிகவும் அஞ்சத்தக்கவை.

பாட்டாளிகளும், அரைப்பாட்டாளிகளும் மக்கள் தொகையின் பெரும்பாலோராக அமையாவிட்டால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது சாத்தியமாகாது. காவுட்ஸ்கியும் அவரது கூட்டாளிகளும் இவ்வுண்மையைப் பொய்யாக்க முயற்சி செய்கிறார்கள்; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் 'செல்லத்தக்கது' என்று ஏற்றுக் கொள்ளப்பட 'பெரும்பான்மையினரின் வாக்கு' தேவைப்படுகிறது என்று வழக்காடுகிறார்கள். கோமாளிப் பண்டிதர்கள்! முதலாளி வர்க்கப் பாராளுமன்ற நெறியின் எல்லைகள், நிறுவனங்கள், மரபுகள் ஆகியவற்றுக்குட்பட்டு வாக்களிப்பது என்பது, அவ்வரசு யந்திரத்தின் ஒரு அம்சமே என்பதையும், முதலாளி வர்க்க ஜனநாயகத்தில் இருந்து பாட்டாளி வர்க்க ஜனநாயகத்துக்குச் செல்ல இந்த யந்திரம் மேலிருந்து கீழ்வரை உடைக்கப்பட்டு, தகர்க்கப்பட வேண்டும் என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ளத் தவறுகிறார்கள். (லெ.தொ.நூ. 29. 510)

இதன் பொருள், முதலாளி வர்க்க உரிமைகளைப் பாதுகாக்கும் முதலாளி வர்க்க அரசுக்கருவியைக் கொண்டு அவ்வுரிமைகளை ஒழித்துக் கட்டுவதற்கான முயற்சிகள் அனைத்தும் தோல்வியைத் தழுவியே தீரும் என்பதாகும்:

ஈட்டுத் தொகை வழங்காமல் நில உடைமைகளை ஒழிப்பது, தானிய ஏகபோகத்தை ஒழிப்பது போன்ற சீர்திருத்தங்

களை இக்கருவியின் வழியாக நிறைவேற்ற முனைவது என்பது, மிகப்பெரும் பிரமையாகும்; மிகப்பெரும் அளவில் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்வதாகும்; மக்களை மோசம் செய்வதாகும். இந்த உரிமைகளை ஒழிப்பது ஒருபக்கம் இருக்கட்டும், 'புனிதமான தனிச்சொத்து' உரிமைகளைத் தீவிரமாகக் குறுக்குகிற அல்லது வரம்புக்கு உட்படுத்துகிற சீர்திருத்தங்களைக்கூட இக்கருவியின் மூலம் சிறிதும் நிறைவேற்ற முடியாது. இக்காரணத்தாலேயே 'சோசலிசவாதிகள்' உள்ளடங்கிய எல்லா வகையான 'கூட்டு' அமைச்சரவைகளிலும் இந்த சோசலிசவாதிகள் — அவர்களில் சிலர் மிகவும் நேர்மையானவர்களாக இருக்கும் போது கூட — உண்மையில் முதலாளி வர்க்க அரசாங்கத்துக்குத் தேவையற்ற அணிகலனாக அல்லது அதை மூடிமறைக்கும் திரையாகவே இருப்பர். மக்களின் சினத்தை அரசாங்கத்தின் மீதிருந்து திசைதிருப்பும் இடி தாங்கியாக இருப்பதும், மக்களை ஏமாற்ற அரசாங்கத்துக்கான ஒரு கருவியாக இருப்பதுமே அவர்களின் வேலை... இப்படிதான் இதுவரை இருந்து வந்திருக்கின்றது; பழைய முதலாளிய அதிகார வர்க்க அரசுக் கருவி நிலைத்து இருக்கும்வரை இப்படிதான் எப்போதும் இருக்கும். (லெ.தொ.நூ. 25. 369)

இதன் காரணமாக, வன்முறை கொண்டே முதலாளி வர்க்க அரசைத் தூக்கியெறிய முடியும். முதலாளி வர்க்க சர்வாதிகாரத்தின் இடத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் கொண்டுவரப்பட வேண்டும்:

தனியொரு வர்க்கத்தின் சர்வாதிகாரம் தேவைப்படுவது பொதுவாக ஒவ்வொரு வர்க்க சமுதாயத்துக்கும் மட்டுமல்ல; முதலாளி வர்க்கத்தைத் தூக்கியெறிந்த பாட்டாளி வர்க்கத்துக்கு மட்டுமல்ல; முதலாளியத்தை 'வர்க்கங்கள் அற்ற சமூகத்திலிருந்து — பொதுவுடைமையிலிருந்து — பிரித்திடும் வரலாற்றுக் கட்டம் முழுமைக்கும் அச்சர்வாதிகாரம் தேவைப்படுகிறது என்பதை உணர்வோர் மட்டுமே, அரசு பற்றிய மார்க்சின் கோட்பாட்டிலுள்ள சாரத்தைக் கற்றுத் தேர்ந்தவர் ஆவர். முதலாளிய அரசுகள் பல்வேறு வடிவங்களில் இருக்கின்றன. ஆனால் அவற்றின் சாரம் ஒன்றேதான். வடிவம் எப்படி இருப்பினும், இறுதியாகப் பார்க்கும்போது, இவ்வரசுகள் எல்லாம் தவிர்க்க இயலாதபடி முதலாளி வர்க்க சர்வாதிகாரமாகவே அமைகின்றன.

*முதலாளியத்தில் இருந்து பொதுவுடைமைக்கு மாறிச் செல்வதற்குரிய இடைக்காலம், பலவகையான அரசியல் வடிவங்களை ஏராளமாகத் தோற்றுவிக்கவே செய்யும்; ஆனால் சாரம் தவிர்க்க இயலாதவாறு ஒன்றாகவே இருக்கும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாகவே இருக்கும். (லெ.தொ.நூ. 25. 413)*

*இந்த சர்வாதிகாரம் ரசியாவில் மேற்கொண்ட வடிவம், வறிய உழவரின் ஆதரவுடன் பாட்டாளி வர்க்கமானது, நிலப்பிரபுக்களிடமிருந்தும், பெரும்பூர்சுவா அல்லது பெருமுதலாளி வர்க்கத்திடமிருந்தும் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றிய ஒரு வடிவமாகும். (லெ.தொ.நூ. 29. 119)*

*இவ்வகையில் அரசு அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள பாட்டாளி வர்க்கம், முதலாளி வர்க்க ஜனநாயகத்தை ஒழித்துக் கட்டி, அதனிடத்தில் பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தைக் கொண்டுவருகிறது:*

*பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தை எடுத்துக் கொள்கிறது; ஆளும் வர்க்கமாகிறது; முதலாளி வர்க்கப் பாராளுமன்ற நெறியையும் அதன் ஜனநாயகத்தையும் தகர்த்தெறிகிறது; முதலாளி வர்க்கத்தை அடக்குகிறது; முதலாளியத்துக்குத் திரும்பி வருவதற்காக எல்லா இதர வர்க்கங்களும் மேற்கொள்கிற எல்லா முயற்சிகளையும் அடக்குகிறது; உழைக்கும் மக்களுக்கு உண்மையான சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் வழங்குகிறது. (இது உற்பத்திச் சாதனங்களில் உள்ள தனியுடைமை ஒழிக்கப்பட்ட போதுதான் சாத்தியம் ஆகும்); அவர்களுக்கு, முதலாளி வர்க்கத்திடமிருந்து கைப்பற்றப் பட்டவற்றின் மீது பெயரளவு உரிமையை மட்டுமல்ல, அவற்றை உண்மையாகப் பயன்படுத்தும் உரிமையையும் வழங்குகிறது. (லெ.தொ.நூ. 29. 511)*

*இவ்வகையில், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது மக்களுக்கான ஜனநாயகம், முதலாளிகள் மீதான சர்வாதிகாரம் எனப் பொருள்படுகிறது:*

*பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கருத்தை போல்சுவியம் உலகம் முழுவதும் பரவலாக்கியிருக்கிறது. இச் சொற்களை லத்தீன் மொழியிலிருந்து முதலில் ரசிய மொழிக்கும் பிறகு உலகிலுள்ள எல்லா மொழிகளுக்கும் மொழி பெயர்த்துள்ளது. சோவியத் அரசாங்கம் என்ற*

*எடுத்துக்காட்டின் மூலம் போல்சுவியம் கீழ்க்கண்டவற்றை மெய்ப்பித்துள்ளது. ஒரு பிற்பட்ட நாட்டின் தொழிலாளிக ளும் வறிய உழவர்களும் கூட, மிகக் குறைந்த அனுபவத் தையும் கல்வியையும் அமைப்புகளைக் கட்டும் பழக்கங்க ளையும் கொண்டே, மிகப்பெரும் இன்னல்களுக்கிடையி லும், சுரண்டலாளருக்கு (இவர்கள் உலகம் முழுவதிலும் உள்ள முதலாளி வர்க்கத்தால் ஆதரிக்கப்பட்டனர்) எதிரான போராட்டத்துக்கிடையிலும், ஓராண்டு காலமாக, உழைக் கும் மக்களின் அதிகாரத்தைப் பேணிப் பாதுகாக்கவும், உலகில் முன்பிருந்த மற்ற எல்லா ஜனநாயகங்களைக் காட்டிலும் அளவிட முடியா வகையில் உயர்ந்ததும் பரந்தது மான ஜனநாயகத்தை உருவாக்கவும் முடிந்தது; சோசலி சத்தை நடைமுறையில் கட்டுவதற்காக பல்லாயிரம் தொழி லாளர் உழவர் ஆகியோரது படைப்பாற்றல் மிக்க வேலை யைத் துவக்கி வைக்கவும் முடிந்தது. (லெ.தொ.நூ. 28. 293)*

*முதல்முறையாக வறியவர்களுக்கான ஜனநாயகம், மக்க ளுக்கான ஜனநாயகம், பணமூட்டைகளுக்காக இல்லாத ஜனநாயகம் என்ற ஜனநாயகத்தை மிகப் பெருமளவு விரிவுபடுத்தும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமானது கூடவே ஒடுக்குவோர், சுரண்டுவோர், முதலாளிகள் ஆகி யோரின் சுதந்திரத்தின் மீது வரிசை வரிசையான கட்டுப்பா டுகளைச் சுமத்துகிறது. கூலி அடிமைத்தனத்திலிருந்து மனித குலத்தை விடுவிக்க நாம் சுரண்டுபவர்களை அடக்க வேண்டும்; அவர்களது எதிர்ப்பு வன்மையாக நசுக்கப்பட வேண்டும். (லெ.தொ.நூ. 25. 461)*

*1949 ஆம் ஆண்டில் பொதுவுடைமைக் கட்சியாலும் மா சேதுங்காலும் தலைமை தாங்கப்பட்ட சீனத்தின் தொழிலாளரும் உழவரும் ஆயுத வலிமை கொண்டு அதிகாரத்தைக் கைப்பற்றி, ஒரு மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தை நிறுவினர். இது சீனத்தின் சிறப்பான நிலைமைகளுக்கு உகந்த, பாட்டாளி வர்க்க சர்வாதிகார வடிவமாகும். இது சோவியத் வடிவத்திலிருந்து சில கூறுகளில் வேறுபடுகிறது. இவை அடுத்த அத்தியாயத்தில் விவாதிக்கப்படும். ஆனால் அதன் சாரம் இதுதான்:*

*மக்கள் யார்? சீனத்தின் தற்போதைய கட்டத்தில் மக்கள் என்பவர்கள் தொழிலாளி வர்க்கம், உழவர் வர்க்கம், நகர்ப்புற சிறுமுதலாளி வர்க்கம், தேசிய முதலாளி வர்க்கம்*

ஆகியோர் ஆவர். பாட்டாளி வர்க்கத்தாலும் பொதுவுடைமைக் கட்சியாலும் தலைமை தாங்கப்படும் இவ்வர்க்கங்கள், தமது சொந்த அரசை உருவாக்கவும், தமது சொந்த அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்கவும் ஒன்றுபடுகிறார்கள்; அவர்கள் நிலப்பிரபுத்துவ வர்க்கம், அதிகார வர்க்க - முதலாளி வர்க்கம் ஆகிய ஏகாதிபத்தியத்தின் வேட்டை நாய்கள் மீதும், இவ்வர்க்கங்களின் பிரதிநிதிகளான கோமின்டாங் பிற்போக்குவாதிகள் மற்றும் அவர்களது கூட்டாளிகள் மீதும் சர்வாதிகாரத்தைத் திணிக்கிறார்கள்; அவர்களை ஒடுக்குகிறார்கள்; ஒழுங்காக நடந்துகொள்ளும் அளவுக்கும், சொல்லிலோ செயலிலோ மட்டுமீறாது இருப்பதற்குமே அனுமதிக்கிறார்கள்; மட்டுமீறிப் பேசினாலோ, செயல்பட்டாலோ அவர்கள் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படுவார்கள். ஜனநாயகம் என்பது மக்களின் அணிகளுக்குள்ளே மட்டும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பேச்சுரிமை, கூடுவதற்கான உரிமை, சங்கம் அமைப்பதற்கான உரிமை போன்ற உரிமைகளை மக்கள் அனுபவிக்கிறார்கள். வாக்குரிமை மக்களுக்கு மட்டுமே உரியது, பிற்போக்காளர்களுக்கு அல்ல. மக்களுக்கான ஜனநாயகம் பிற்போக்காளர் மீது சர்வாதிகாரம் என்ற இவ்விரு அம்சங்களின் சேர்க்கைதான் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் ஆகும். *(மா.தெ.நூ. 4. 417)*

**2. வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துதல்**

முதலாளி வர்க்கத்தைத் தூக்கியெறிந்த பிறகு வர்க்கப் போராட்டம் நின்று விடுவதில்லை. மாறாக, அது ஒரு நீண்ட காலத்துக்கு நீடிக்கிறது. பலவகைகளிலும் மேலும் கடுமையானதாகிறது:

வர்க்கங்களை ஒழித்துக் கட்டுவதற்கு ஒரு நீண்ட, கடினமான, விடாப்பிடியான வர்க்கப் போராட்டம் தேவைப்படுகிறது. இது, முதலாளிய ஆட்சியைத் தூக்கி எறிந்த பிறகு, முதலாளி வர்க்க அரசை அழித்த பிறகு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவிய பிறகு (பழைய சோசலிச இயக்கம், பழைய சமூக ஜனநாயக இயக்கம் ஆகியவற்றின் கொச்சைப் பிரதிநிதிகள் கற்பனை செய்வதுபோல) மறைந்து விடாது. மாறாக, அதன் வடிவங்கள் மட்டுமே மாறுகின்றன. பல வகைகளிலும் அது மேலும் கடுமையாகிறது. *(லெ.தொ.நூ. 29. 389, ஒப்பிடுக: ஸ்.தொ.நூ. 13. 357)*

இக்கால கட்டத்தில் முதலாளி வர்க்கத்தின் தொடர்ந்த எதிர்ப்பை அடக்கவும், முதலாளிய உற்பத்தியின் இடத்தில் சோசலிச உற்பத்தியைக் கொண்டு வருவதன் மூலம் பொருளாதார அடிப்படையை மாற்றியமைக்கவும், சித்தாந்தத்தளத்தில் புரட்சியை நடத்தவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பேணிக் காக்க வேண்டியுள்ளது:

> நம் நாட்டில் முதலாளி வர்க்கம் வெற்றி கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் அது இன்னும் வேரோடு பிடுங்கியெறியப்படவில்லை; இன்னும் அழிக்கப்படவில்லை; முழுமையாக உடைத்தெறியப்படக்கூட இல்லை. இதன் காரணமாகவே, நாம் முதலாளி வர்க்கத்துக்கு எதிரான ஒரு புதிய, மேலும் உயர்ந்த போராட்ட வடிவத்தை எதிர்கொண்டுள்ளோம். முதலாளிகளிடமிருந்து மேலும் பறிமுதல் செய்வது என்ற எளிய கடமையில் இருந்து, முதலாளி வர்க்கம் நிலவவே சாத்தியமில்லாத அல்லது ஒரு புதிய முதலாளி வர்க்கம் தோன்றவே சாத்தியம் இல்லாத நிலைமைகளை உருவாக்குதல் என்ற மேலும் சிக்கலானதும் கடினமானதுமான கடமைக்கு மாறிச் செல்லும் போராட்ட வடிவமாகும் அது. *(லெ.தொ.நூ. 27. 244)*
>
> சுரண்டுவோர், முதலாளிகள், நில உடைமையாளர்கள், அவர்களது கைக்கூலிகள் ஆகியோரின் எதிர்ப்பை நசுக்குவதற்காக ஈவிரக்கமற்று, கடுமையாக, விரைவாக, உறுதியாக வன்முறையைப் பயன்படுத்துதல் என்பதை பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முன்னிபந்தனையாகக் கொண்டுள்ளது. இதை யாரெல்லாம் புரிந்து கொள்ளவில்லையோ, அவரெல்லாம் புரட்சியாளரல்லர். அவர் பாட்டாளி வர்க்கத்தின் தலைவர் அல்லது ஆலோசகர் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும்.
>
> ஆனால் வன்முறை மட்டுமே பாட்டாளி வர்க்கத்தின் சாரம் அல்ல. அதன் சாரம் வன்முறையில் மட்டுமே முதன்மையாக இருப்பதும் இல்லை. உழைக்கும் மக்களின் முன்னேறிய பிரிவும் முன்னணிப்படையும் அவர்களது ஒரே தலைவனுமான பாட்டாளி வர்க்கத்தின் அமைப்பும் கட்டுப்பாடுமே அதன் முழுமையான அம்சம். பாட்டாளி வர்க்கத்தின் இலக்கு, சோசலிசத்தைக் கட்டுதலும், சமுதாயத்திலுள்ள வர்க்க வேறுபாடுகளை ஒழித்துக் கட்டுதலும், சமுதாயத்தின் உறுப்பினர்கள் அனைவரையும் உழைக்கும் மக்களாக்குவதும், மனிதனை மனிதன் சுரண்டுவதற்கான அடிப்படை

*அனைத்தையும் நீக்குதலும் ஆகும். இந்த இலக்கை ஒரேயடியாக நிறைவேற்றிவிட முடியாது. அதற்கு, முதலாளியத்திலிருந்து சோசலிசத்துக்கு மாறிச் செல்லும் ஒரு கணிசமான நீண்டகாலம் தேவைப்படுகிறது. காரணம், உற்பத்தியை வேறுவகையில் அமைத்தல் என்பது கடினமான காரியம்; வாழ்வின் எல்லாத் துறைகளிலும் தீவிரமான மாறுதல்களைக் கொண்டுவரக் காலம் தேவைப்படுகிறது. ஒரு நீண்ட, விடாப்பிடியான போராட்டத்துக்குப் பிறகே விசயங்களை ஒரு சிறு முதலாளிய அல்லது முதலாளிய வழியில் நிர்வகிக்கிற நீண்டகாலப் பழக்க வழக்கத்தை வெல்ல முடியும். அதனால்தான், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரக் காலகட்டம் முழுவதுமே, முதலாளியத்திலிருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்லும் காலகட்டமாகும் என்று மார்க்ஸ் கூறினார். (லெ.தொ.நூ. 29. 388)*

*பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் சுரண்டுவோர், நிலவுடைமையாளர் மற்றும் முதலாளிகள் ஒரேயடியாக மறைந்து விடவில்லை, மறைந்துவிடவும் முடியாது. சுரண்டுவோர் தகர்க்கப்பட்டுள்ளனர்; ஆனால் ஒழித்துக்கட்டப்படவில்லை. அனைத்துலக மூலதனம் என்ற வடிவில் அவர்களுக்கு இன்னும் ஒரு அனைத்துலக அடிப்படை உள்ளது. அதன் ஒரு கிளையே அவர்கள். அவர்கள் இன்னும் குறிப்பிட்ட உற்பத்திச் சாதனங்களில் ஒரு பகுதியைத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர். அவர்களிடத்தில் இன்னும் பணம் இருக்கிறது. அவர்களுக்கு இன்னும் பரந்த சமுதாயத் தொடர்புகள் உள்ளன. அவர்கள் தோல்வி கண்டுள்ள காரணத்தினால் தான், அவர்களது எதிர்ப்பு ஆற்றல் ஒரு நூறு, ஆயிரம் மடங்கு கூடியுள்ளது. அரசு, இராணுவம் மற்றும் பொருளாதார நிர்வாகக் 'கலை'யானது அவர்களுக்கு ஒரு மேன்மையை, ஒரு மிகப் பெரும் மேன்மையை வழங்குகிறது. அதன் காரணமாக அவர்களுக்குள்ள முக்கியத்துவம் மக்கட்தொகையில் அவர்களது எண்ணிக்கைக்குள்ள முக்கியத்துவத்தைக் காட்டிலும் ஒப்பிட முடியாத வகையில் அதிகமாக உள்ளது. (லெ.தொ.நூ. 30. 115)*

*மிக அண்மையில் லெனினின் கருத்து மாசேதுங்கால் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது:*

*பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வலுப்படுத்தவும், முதலாளிய மீட்சியைத் தடுக்கவும், சோசலிசத்தைக் கட்டவும் நடப்பிலுள்ள மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப்*

> புரட்சி முற்றிலும் தேவையானது; மிகவும் சரியான நேரத்தில் துவக்கப்பட்டுள்ளது. (பீரி. 69 - 18.15)

### 3. சித்தாந்தப் போராட்டம்

பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு முன்பும் பின்பும், முதலாளி வர்க்கச் சித்தாந்தத்துக்கு, குறிப்பாக சிறு முதலாளியச் சித்தாந்தத்துக்கு எதிராக பாட்டாளி வர்க்கம் ஒரு தொடர்ச்சியான போராட்டம் நடத்தவேண்டும். முதலாளியக் கருத்துக்கள் முதன்மையாக பூர்சுவா அறிவாளிகளால் உருவாக்கப்படுகின்றன. இவர்கள் சித்தாந்தப் போராட்டத்தில், குறிப்பாக புரட்சிகரக் காலகட்டங்களில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறார்கள். இத்தகைய வேளைகளில் சிலர் மார்க்சைப் போலவே 'வரலாற்று இயக்கம் முழுவதையும் தத்துவ வகையில் முழுமையாகப் புரிந்து கொள்ளும் அளவுக்கு தங்களை உயர்த்திக் கொண்டு பாட்டாளி வர்க்கத்திடம் செல்வர்.' (மா.ஏ. 1.117, ஒப்: லெ.தொ.நூ. 5.375)

ஒரு சிறு உடைமையாளனாக இருக்கிற சிறுமுதலாளியின் நிலைமையில் இருந்துதான் சிறு முதலாளியச் சித்தாந்தத்தின் சிறப்பு அம்சங்கள் எழுகின்றன. இவ்வகையில் அவனுக்கு முதலாளிய சமுதாயத்தில் குறுகிய நலன் இருக்கிறது; ஆனால் அதேவேளையில், பெரும் உடைமையாளர்களால் அவன் சுரண்டப்படுவதின் காரணமாக, அவன் நாசமடைந்து பாட்டாளி வர்க்கத்தினுள் தூக்கியெறியப்படும் ஆபத்தில் இருக்கிறான். போட்டியிடும் இரண்டு முதன்மையான வர்க்கங்களுக்கிடையே நிலையற்ற இடத்தைப் பெற்றுள்ள அவன், ஊசலாடும் போக்குடையவன்:

> நெடுநாட்களாகவே ஒவ்வொரு மார்க்சியவாதிக்கும் தெரிந்துள்ள உண்மை இதுதான்; ஒவ்வொரு முதலாளிய சமுதாயத்திலும் உள்ள தீர்மானகரமான சக்திகள் பாட்டாளி வர்க்கமும் முதலாளி வர்க்கமும் மட்டுமே; இரண்டு வர்க்கங்களுக்கு இடையில் ஒரு இடத்தை வகிக்கிற, சிறுமுதலாளி வர்க்கம் என்ற பொருளாதார வகையினத்தில் வருகிற சமூக சக்திகள் அனைத்தும் இவ்விரண்டு தீர்மானகரமான சக்திகளுக்கிடையில் தவிர்க்க இயலாதபடி ஊசலாடுவர். (லெ.தொ.நூ. 28. 186)

> முதலாளி வர்க்க சர்வாதிகாரம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஆகியவற்றுக்கு இடையில், சிறு முதலாளி வர்க்கம் தவிர்க்க இயலாதபடி, புறக்கணிக்க இயலாதபடி ஊசலாடும் (கெரன்ஸ்கி, கோர்னலோவ், சாவின்கோவ்).

காரணம், தனக்குள்ள பொருளாதார நிலையின் அடிப்படை அம்சங்களின் காரணமாக, எதையும் சுதந்திரமாகச் செய்யும் ஆற்றல் சிறு முதலாளி வர்க்கத்துக்கு இல்லை. (லெ.தொ.நூ. 28. 300)

பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையே இன்னொரு வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கி றார்கள். அவர்கள் முதலில் இந்தப் பக்கமும் பிறகு அந்தப் பக்கமும் சாய்வர். இது எல்லாப் புரட்சிகளிலும் எப்போ தும் நிகழ்ந்துள்ளது. பாட்டாளி வர்க்கம், முதலாளி வர்க்கம் என்ற இரு பகைமுகாம்களை முதலாளியச் சமுதாயம் உருவாக்குகிறது. இடைத்தரப் பிரிவுகள் இவை இரண்டுக் கும் இடையில் தான் இருந்தாக வேண்டும். இந்த ஊசலாடு வோர் வரலாற்று ரீதியாகத் தவிர்க்க முடியாதவர்கள்; நாளை யார் பக்கம் போராடப் போகிறோம் என்பதைத் தாமே அறிந்து கொள்ளாத இச் சக்திகள் சிலகாலத்துக்கு இருக்கவே செய்யும் என்பது நம் துரதிருஷ்டமே. (லெ.தொ.நூ. 28. 47.1)

சிறு முதலாளி வர்க்கத்தின் விசுவாசத்தைப் பெறுவதற்கான தனது போராட்டத்தில், பாட்டாளி வர்க்கம் தனக்குள்ளேயே இப்போராட்டத்தை நடத்தவேண்டும். ஏனெனில் வரலாற்று ரீதியாக நகர்ப்புற, நாட்டுப்புற சிறுமுதலாளி வர்க்கத்திலிருந்து தான் பாட்டாளி வர்க்கம் உருவாகி வந்துள்ளது. மேலும் அதே ஊற்றுக்கண்ணில் இருந்துதான் தனது எண்ணிக்கையை இடைவி டாது பெருக்கிக் கொண்டும் வருகிறது. பெருமுதலாளி வர்க்கத் துக்கு எதிரான போராட்டம், மூலதனத்துக்கும் உழைப்புக்கும் இடையிலான வெளிப்படையான மோதல் என்ற வடிவத்தை எடுக்கிறது. ஆனால் சிறுமுதலாளியச் சித்தாந்தத்துக்கு எதிரான போராட்டம் என்பது பெரும்பாலும் உழைக்கும் வர்க்கத்தின் அணிகளுக்குள்ளாகவே நடைபெறும் போராட்டமாகும்:

> நடைமுறைத் தந்திரங்கள் பற்றி அவ்வப்போது ஏற்படும் வேறுபாடுகளைத் தோற்றுவிக்கிற மிக ஆழமான காரணங்க ளில் தொழிலாளி வர்க்கத்தில் ஏற்படும் வளர்ச்சியும் ஒன்று ஆகும். இவ்வியக்கமானது ஏதோ ஒரு அதீதக் கற்பனை இலட்சியம் என்ற அளவுகோலால் அளக்கப்படாமல், சாதாரண மக்களின் நடைமுறை இயக்கம் என்று கருதப்படு மானால், கீழ்க்கண்ட உண்மை தெளிவாகும்: மென்மேலும் அதிக எண்ணிக்கையில் 'புதிய உறுப்பினர்கள்' சேர்க்கும் போதே, உழைக்கும் மக்களிலிருந்து புதிய பிரிவுகளைக்

கவர்ந்திழுக்கும் போதே, தவிர்க்க இயலாதவாறு தத்துவம், நடைமுறைத் தந்திரம் ஆகியவற்றில் ஊசலாட்டங்களும், பழைய தவறுகளைத் திரும்ப நிகழ்த்துதலும், காலங்கடந்த கண்ணோட்டங்கள், காலங் கடந்த முறைகள் முதலானவற்றுக்குத் தற்காலிகமாகத் திரும்பிச் செல்லுதலும் கூடவே நிகழும். *(லெ.தொ.நூ. 16. 347)*

ஜோவின் தலையிலிருந்து மினர்வா உதித்ததைப் போல,[2] உலகில் ஓரிடத்திலும் 'ஒரே நேரத்தில்', ஒரு தூய வடிவத்தில், தயார் நிலையில் பாட்டாளி வர்க்க இயக்கம் தோன்றியது இல்லை, தோன்றியிருக்கவும் முடியாது, மிகவும் முன்னேறிய, உணர்வுபெற்ற தொழிலாளிகள் அனைவரின் நீண்ட போராட்டம், கடுமையான உழைப்பு ஆகியவற்றின் மூலமே, சிறுமுதலாளியக் கலப்புகள், வரம்புகள், குறுக்கல்கள், சிதைவுகள் ஆகியவற்றைப் பாட்டாளி வர்க்கத்தில் இருந்து களைந்தெறிந்துவிட்டு, அதன் வர்க்க இயக்கத்தைக் கட்டி அமைப்பதும் அதை வலுப்படுத்துவதும் சாத்தியமாயிற்று. பாட்டாளி வர்க்கமானது சிறு முதலாளி வர்க்கத்தின் அருகருகே வாழ்கிறது; சிறு முதலாளி வர்க்கம் அழிவடையும் போது அது பாட்டாளி வர்க்க அணிகளுக்குப் புதிய உறுப்பினர்களை அதிகரித்த எண்ணிக்கையில் வழங்குகிறது. *(லெ.தொ.நூ. 20. 252)*

உலகம் முழுவதிலும், முதலாளியச் சமுதாயம் ஒவ்வொன்றிலும், பாட்டாளி வர்க்கம் தவிர்க்க இயலாதவாறு ஓராயிரம் பிணைப்புகளால் சிறு முதலாளி வர்க்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வோரிடத்திலும் பாட்டாளிகளின் கட்சிகள் உருவாகின்ற கால கட்டம், அநேகமாக முதலாளி வர்க்கத்தின் நெடிய, இடைவிடாத, சித்தாந்த, அரசியல் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இது முதலாளிய நாடுகள் அனைத்துக்கும் பொதுவானது. ஆனால் வரலாற்று, பொருளாதாரக் காரணிகளைப் பொறுத்து வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு வடிவங்களை மேற்கொள்கிறது. *(லெ.தொ.நூ. 20. 268)*

பாட்டாளிகளின் இயக்கத்துக்குள்ளேயே நடக்கும் இப்போராட்டம், புரட்சிக்கான அவசியமான தயாரிப்பு ஆகும். ஏனெனில் ஒரு புரட்சிச் சூழ்நிலைதான், முன்பு முக்கியமற்றதாகத் தோன்றிய கருத்து வேறுபாடுகள் திடீரென முக்கியமானவையாக மாறும்:

பரந்துபட்ட தொழிலாளர் கட்சிகளின் அணிகளில் சிறு முதலாளிய உலகக் கண்ணோட்டம் மீண்டும் மீண்டும் தலைதூக்குவது மிக இயல்பானதொன்றாகும்... இதை நாம் மார்க்சின் தத்துவத்துக்குத் திருத்தங்கள் தருவதில் ஏற்படும் சர்ச்சைகளாக சித்தாந்தத்துறையில் மட்டும் அடிக்கடி காண் கிறோம். இதுவே புரட்டல்வாதிகளுடன் நடைமுறைத் தந்திரம் குறித்த வேறுபாடுகளாகவும், இதன் அடிப்படை யில் ஏற்படும் பிளவுகளாகவும் தொழிலாளர் இயக்கத்தின் கிளைப் பிரச்சினைகளில் மட்டும் நடைமுறையில் தலை தூக்குகிறது. பாட்டாளி வர்க்கப் புரட்சியானது சர்ச்சைக்குட் படுத்தப்பட்ட எல்லாப் பிரச்சினைகளையும் கூர்மையாக் கும்போது, மக்களின் போக்கைத் தீர்மானிக்கும் அளவு உடனடி முக்கியத்துவம் வாய்ந்த விசயங்கள் அனைத்திலும் உள்ள வேறுபாடுகளை ஒருமுனைப்படுத்தி, எதிரிக்கு மரண அடிகள் கொடுக்கும் பொருட்டு, கடுமையான போராட்டத் தில் பகைவரை நண்பரிடமிருந்து வேறுபடுத்திப் பார்ப்ப தையும், நம்பத்தகாத கூட்டாளிகளைத் தூக்கியெறிவதையும் அவசியமானதாக்கும்போது, சிறு முதலாளியக் கண்ணோட் டம் அனைத்தும் ஒப்பிட முடியாத அளவுக்கு விரிந்த அளவில் முன்வந்து நிற்கும். (லெ.தொ.நூ. 15.39).

புரட்சிக்குப் பிறகு, சிறு முதலாளியச் சித்தாந்தத்துக்கான அடிப்படையாக உள்ள சிறு அளவு உற்பத்தி நீடிக்கும் வரை, சோசலிசக் கட்டுமானக் காலகட்டம் முழுவதிலும், பாட்டாளி வர்க்கம் தனது சித்தாந்தப் போராட்டத்தை நடத்தியாக வேண் டும்.

துரதிருஷ்டவசமாக, சிறு அளவு உற்பத்தியானது உலகில் இன்னும் பரந்து விரிந்துள்ளது. சிறு அளவு உற்பத்தி, முதலாளியத்தையும் முதலாளி வர்க்கத்தையும் தொடர்ச்சியா கவும் தினந்தோறும், ஒவ்வொரு மணிநேரமும், தன்னியல் பாகவும் ஒரு பரந்த அளவில் தோற்றுவிக்கிறது. இக்காரணங் கள் அனைத்தும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அவசிய மானதாக்குகின்றன. ஒரு நீண்ட, விடாப்பிடியான, இறுதி யான ஜீவ-மரணப் போராட்டமில்லாமல் முதலாளி வர்க் கத்தை வெற்றிகொள்வது சாத்தியமில்லை. இப்போராட்டத் துக்குக் கொள்கைபிடிப்பு, கட்டுப்பாடு, ஒரு தனித்த வளைந்து கொடுக்காத மனோவுறுதி ஆகியவை தேவை. (லெ.தொ.நூ. 31.24)

வர்க்கங்களை ஒழித்துக் கட்டுவது என்பதன் பொருள், நிலவுடைமையாளர்களையும் முதலாளிகளையும் அதிகாரத்திலிருந்து இறக்குவது என்பது மட்டுமல்ல — இதை ஒப்பீட்டு நோக்கில் எளிதாக நாம் சாதித்துள்ளோம்; இதன் பொருள் **சிறிய சரக்கு - உற்பத்தியாளர்களை ஒழித்துக் கட்டுதல்** என்பதாகும். அவர்களோடு நாம் **சேர்ந்துவாழக் கற்றுக்கொள்ள வேண்டும்;** அவர்களை இறக்குவதோ நசுக்குவதோ இயலாது; நீண்ட, மெதுவான, எச்சரிக்கை மிகுந்த அமைப்புப் பணியின் மூலமாக மட்டுமே அவர்களை மாற்றவும் அவர்களுக்கு மறுகல்வி புகட்டவும் முடியும்; இப்படித்தான் செய்யவும் வேண்டும். அவர்களது சிறு முதலாளியச் சூழ்நிலை பாட்டாளி வர்க்கத்தைச் சுற்றி வளைத்திருக்கிறது. இந்தச் சூழ்நிலை பாட்டாளி வர்க்கத்துக்குள் ஊடுருவி அதைக் களங்கப்படுத்துகிறது; சிறு முதலாளியக் கோழைத்தனம், ஒற்றுமைக் குலைவு, தனிமனிதக் கொள்கை, பேரார்வம் - உளச்சோர்வு என மாறிமாறிவரும் மனோநிலைகள் ஆகியவற்றில் பாட்டாளி வர்க்கத்தின் அணிகள் சரிந்து விழுவதற்கு இடைவிடாது காரணமாகிறது... பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்றால் இடைவிடாத போராட்டம் என்று பொருள். இது பழைய சமூகத்தின் சக்திகள், மரபுகள் ஆகியவற்றுக்கு எதிரான, இரத்தம் சிந்துகிற மற்றும் இரத்தம் சிந்தாத போராட்டம்; வன்முறையான மற்றும் அமைதியான போராட்டம்; இராணுவரீதியான மற்றும் பொருளாதார ரீதியான போராட்டம். (லெ.தொ.நூ. 31.44, ஒப்: மா.தெ.நூ. 3.215)

### 4. 'இடது' மற்றும் வலது சந்தர்ப்பவாதம்

பாட்டாளி வர்க்க இயக்கத்தில் உள்ள முதன்மையான சிறு முதலாளியப் போக்குகள், அவற்றின் வளர்ச்சியின் வரிசைக் கிரமப்படி கீழ்வருமாறு: அராஜகவாதம்[3], சிண்டிகலியம்[4], சீர்திருத்தவாதம், புரட்டல்வாதம்.

அராஜகவாதம் ரசியாவில் தோன்றிற்று. அதன் தலைவர்களில் ஒருவரான பகூனின், முதலாம் அகிலத்தில் மார்க்சுக்கு எதிரான ஒருவர். 'சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுண்டு கிடக்கும்வரை, வர்க்க ஆட்சியின் கருவியான அரசு அவசியம் நீடிக்கும்; பாட்டாளி வர்க்கத்தின் கடமை அரசை ஒழித்துக் கட்டுவதல்ல; மாறாக முதலாளி வர்க்க அரசின் இடத்தில் பாட்டாளி வர்க்க அரசைக் கொண்டுவருவதுதான். இவ்வழியில்

தான் வர்க்கங்கள் இறுதியில் மறைந்தொழிவதற்கான நிலைமை களை உருவாக்க முடியும்' — மார்க்சின் கருத்துகள் இவை. 'அரசை ஒழித்துக் கட்டுவதுதான் உடனடிக் கடமை; இதைத் தொழிலாளிகள் ஒரு தொழிலாளர் கட்சியைக் கட்டுவதன் மூலமாக அல்லாமல், அரசியல் போராட்டம் மூலமாக அல்லா மல், நேரடி நடவடிக்கையின் மூலமே நிறைவேற்ற வேண்டும்' — பகூனின் கருத்துகள் இவை. அரசை ஒழித்துக் கட்டுதல் என்பது ஒரு எதிர்கால வரலாற்றுக் கட்டத்தைச் சேர்ந்தது என்பதையும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலமே அக்கட்டத்தை அடைய முடியும் என்பதையும் அராஜகவாதிகள் புரிந்துகொள்ளத் தவறினார்கள்:

> அராஜகவாதம் என்பது முதலாளியத் தனிமனிதக் கொள்கை யின் மறுபக்கம். தனிமனிதக் கொள்கை அராஜக உலகக் கண்ணோட்டம் முழுவதற்கும் அடிப்படையாக உள்ளது... சமுதாய வளர்ச்சியை — பெரும்அளவு உற்பத்தியின் பங்கை — முதலாளியத்திலிருந்து சோசலிசம் வரையுள்ள வளர்ச்சியைப் புரிந்துகொள்ளத் தவறுகிறது. அராஜகவாதம் அவநம்பிக்கையின் விளைபொருள். அது ஓரிடத்திலும் நிலைகொள்ளாத அறிவாளியின் அல்லது நாடோடியின் உளப்பாங்கே அன்றி பாட்டாளியின் உளப்பாங்கு அல்ல. (லெ.தொ.நூ. 5.327, ஒப் : 25.484)

சிண்டிகலியம் அராஜகவாதத்துக்கு மிகவும் தொடர்புள்ளது. சிண்டிகலிஸ்டும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை மறுதலிக்கி றான். தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களின் மூலமாக, ஒரு பொது வேலை நிறுத்தத்துக்கு அறைகூவல் விடுத்து, உற்பத்தி மீதுள்ள கட்டுப்பாட்டைக் கைப்பற்றி, முதலாளியத்தைத் தூக்கி யெறிந்துவிட முடியும் என அவன் கருதுகிறான்.

சீர்திருத்தவாதம் பிரிட்டனில்தான் முதன்முதலில் தோன் றிற்று. தொழிற் கட்சிக்கு ஒரு தத்துவ அடிப்படையை வழங்கிய ஃபேபியன்கள் என்பவர்கள், அறிவாளிகளும் உழைக்கும் வர்க் கத்தின் தலைவர்களும் அடங்கிய ஒரு கூட்டத்தினர். 'சோசலிசம் படிப்படியாக உருவாவது தவிர்க்க முடியாதது' என்ற இவர்க ளது கருத்தில்தான் சீர்திருத்தவாதத்தின் சாரம் உருக்கொண்டுள் ளது. எந்த ஒரு பண்புவகை மாற்றமும் இன்றி, அதாவது ஒரு புரட்சியின்றி, அடுத்தடுத்த படிப்படியான மாற்றங்களின் மூலம் முதலாளியத்தை சோசலிசமாக உருமாற்ற முடியும் என்பதே இக் கருத்து.

பிரிட்டனில் இருந்து சீர்திருத்தவாதம் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு, குறிப்பாக ஜெர்மனிக்குப் பரவியது. ஜெர்மனியில் அது புரட்டல்வாதம் என்ற வடிவம் எடுத்தது. புரட்டல்வாதத்தைத் தோற்றுவித்தவன் பெர்ன்ஸ்டின். இவன் ஒரு காலத்தில் மார்க்சியவாதியாக இருந்தவன். இவனது கருத்துகளில் பல ஃபேபியன்களிடமிருந்து கடன் வாங்கப்பட்டவையாகும் (லெ.தொ.நூ. 37.281, ஒப் : 12.370). சீர்திருத்தவாதத்துக்கும் புரட்டல்வாதத்துக்கும் உள்ள ஒரே வேறுபாடு, புரட்டல்வாதக் கருத்துக்கள் மார்க்சியத்துக்கான திருத்தங்கள் என்ற பெயரில் வழங்கப்படுவதுதான். ஜெர்மனியில் மார்க்சியம் புறக்கணிக்கப் பட முடியாத அளவில் தொழிலாளிகளிடம் ஆழமாக வேரூன்றி யிருந்தது. எனவே புரட்சிகர உள்ளடக்கத்தை மார்க்சியத்திலி ருந்து நீக்கிவிடும் வகையில் மார்க்சியத்துக்கு வேறு விளக்கம் தரப்பட்டது:

> பெர்ன்ஸ்டினியர்கள் புரட்சிகர உள்ளடக்கம் நீக்கப்பட்ட மார்க்சியத்தை ஏற்றுக்கொண்டார்கள், ஏற்றுக் கொள்கிறார் கள். பாராளுமன்றப் போராட்டம் என்பது, திட்டவட்ட மான வரலாற்றுக் கட்டங்களுக்கு மட்டுமே குறிப்பாகப் பொருந்தக்கூடிய ஆயுதங்களில் ஒன்று என அவர்கள் கருதுவதில்லை; மாறாக, அதுதான் முதன்மையான, பெரும் பாலும் ஒரே போராட்ட வடிவம் என்று கூறி, 'வன்முறை', 'கைப்பற்றுதல்', 'சர்வாதிகாரம்' ஆகியவற்றைத் தேவையற் றவை ஆக்குகிறார்கள். (லெ.தொ.நூ. 10.249, ஒப் : 19.300)
>
> ஆனால் மார்க்சியம், அதற்குப் பகையான, கிட்டத்தட்ட ஒருங்கிணைந்த கோட்பாடுகள் அனைத்தையும் ஒழித்து விட்ட பிறகு, இக்கோட்பாடுகளில் வெளிப்பட்ட போக்கு கள் வேறு வடிகால்களைத் தேட ஆரம்பித்தன. போராட்டத் தின் வடிவங்களும் காரணங்களும் மாறின. ஆனால் போராட்டம் நீடித்தது. மார்க்சியம் எந்த நூற்றாண்டில் நிலவத் தொடங்கியதோ அதன் பிற்பகுதியில் — ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூறுகளில் — மார்க்சியத்துக்குள் ளேயே மார்க்சியத்துக்குப் பகையாக இருந்த போக்குக்கு எதிரான போராட்டம் தொடங்கியது. ஒருகாலத்தில் நெறிபி றழாத மார்க்சியவாதியாக இருந்த பெர்ன்ஸ்டின், மிகப்பெ ரும் ஆரவாரத்துடன், மார்க்சுக்கான திருத்தங்கள், மார்க் சைப் புரட்டுதல், புரட்டல்வாதம் ஆகியவற்றுக்கான மிக வும் உள்நோக்கம் நிறைந்த சொல்திறத்துடன் முன்வந்து,

இப்போக்குடன் தன் பெயரை இணைத்துக் கொண்டான். (லெ.தொ.நூ. 15.32)

> 'இயக்கம்தான் எல்லாம், இறுதி இலக்கு ஏதுமில்லை' — இது பெர்ன்ஸ்டினின் முழக்கம். இது பல நீண்ட விரிவுரைகளைக் காட்டிலும் சிறப்பான முறையில் புரட்டல்வாதத்தின் சாரத்தை வெளிப்படுத்துகிறது. தனது நடைமுறையை விசயத்துக்கு விசயம் தீர்மானித்துக் கொள்வது; அன்றாட நிகழ்ச்சிகளுக்கு ஏற்பவும், அற்ப அரசியலின் ஊசலாட்டத்துக்கு ஏற்பவும் தன்னை மாற்றிக் கொள்வது; பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படை நலன்களையும் முதலாளிய அமைப்பு முழுவதன் அடிப்படை அம்சங்களையும் மறப்பது; பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படை நலன்களை, அந்தந்த நேரத்தின் உண்மையான அனுகூலங்கள் அல்லது கற்பனையான அனுகூலங்களுக்குப் பலியிடுவது — இது தான் புரட்டல்வாதத்தின் கொள்கையாகும். (லெ.தொ.நூ. 15.37)

1903 ஆம் ஆண்டில் ரசிய சமூக-ஜனநாயகக் கட்சி மாற்றியமைக்கப்பட்டது. அதனுள் துவக்கம் முதலே இரு முரண்பட்ட போக்குகள் இருந்தன. ஒன்று புரட்சிகரப் போக்கு: இதன் பிரதிநிதிகள் போல்சவிக்குகள்; மற்றொன்று சந்தர்ப்பவாதப் போக்கு: இதன் பிரதிநிதிகள் மென்சவிக்குகள்:

> 1905 முதல் 1907 வரையுள்ள கொந்தளிப்பு மிகுந்த இரண்டாண்டுகளில் மென்சவியக் கொள்கை, உழைக்கும் மக்கள் இயக்கத்தில் மிதவாத[5] முதலாளியப் போக்குகளைக் கொண்டுவந்த பூர்சுவா மிதவாதிகளால் ஆதரிக்கப்பட்ட ஒரு சந்தர்ப்பவாதமாகவே இருந்தது. மிதவாதத்துக்கு உகந்தமுறையில் உழைக்கும் மக்கள் போராட்டத்தை மாற்றியதுதான் அதன் சாரமாகும். மற்றோர்புறம், போல்சவியக் கொள்கையோ, மிதவாதிகளின் ஊசலாட்டத்தையும் துரோகத்தையும் பொருட்படுத்தாது, புரட்சிகரப் போராட்டத்துக்காக ஜனநாயக உணர்வுடைய உழவர் வர்க்கத்தைத் தட்டி எழுப்புகிற கடமையை சமூக-ஜனநாயகத் தொழிலாளர்களுக்குமுன் வைத்தது. (லெ.தொ.நூ. 21.332)

'சந்தர்ப்பவாதம்' என்று இங்கு லெனின் குறிப்பிடுவது, மென்சவிக் போக்கின் சீர்திருத்தவாதம் அல்லது புரட்டல்வாதம் என்பதைத்தான். இப்போக்கு முதலாளி வர்க்கத்தக்கு 'வால்பிடிக்கும்'

போக்கு. இதே காலகட்டத்தில் போல்சவிக்குகள், 'துணிச்சல்' போக்குக்கும், 'அராஜகப்' போக்குக்கும் எதிராகப் போராட வேண்டியிருந்தது. இவற்றை 'புரட்சிகரத் துணிச்சல் கொள்கை' என்றும் (லெ.தொ.நூ. 6.186) 'சிறுமுதலாளியப் புரட்சிக் கொள்கை' என்றும் (லெ.தொ.நூ. 31.32, 33.21) லெனின் அழைத்தார். சந்தர்ப்பவாதப் போக்கு, அராஜகப் போக்கு என்ற இந்த எதிரெதிர்ப் போக்குகள், உண்மையில் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல ஒன்றையொன்று செழுமைப்படுத்துபவை:

> பாராளுமன்றத்தில் உள்ள சமூக ஜனநாயக உறுப்பினர்கள் மீது அரா்ஜகவாதிகள் வசைமாரி பொழிகிறார்கள். அவர்களுடன் எந்த உறவும் கொள்ள மறுக்கிறார்கள். ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சி, பாட்டாளி வர்க்கக் கொள்கை, பாட்டாளி வர்க்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியவற்றை வளர்த்தெடுக்க எதையும் செய்ய மறுக்கிறார்கள். நடைமுறையில், அராஜகவாதிகளின் சொற் சிலம்பாட்டம், அவர்களைச் சந்தர்ப்பவாதத்தின் மிக விசுவாசமான கூட்டாளிகளாக, சந்தர்ப்பவாதத்தின் மறுபக்கமாக மாற்றுகிறது. (லெ.தொ.நூ. 15.391)

> உழைக்கும் வர்க்க இயக்கத்தில் இழைக்கப்படும் சந்தர்ப்பவாதப் பாவங்களுக்காக எப்போதாவது கிடைக்கும் தண்டனை அல்ல அராஜகம். இரண்டு வக்கிரங்களும் ஒன்றையொன்று நிறைவுசெய்து கொள்கின்றன. (லெ.தொ.நூ. 31.32)

எனவே, அராஜகவாதம், சீர்திருத்தவாதம் ஆகியவை உழைக்கும் மக்கள் இயக்கத்தில் உள்ள இரு சிறு முதலாளியப் போக்குகள் என நாம் கூறலாம். இவை ஒன்றுக்கொன்று எதிராக இருந்தாலும், மார்க்சியத்தை எதிர்ப்பதில் ஒன்றுபடுகின்றன. இந்த அடிப்படையான ஒற்றுமையை எடுத்துக்காட்டுவதற்காக, மா சேதுங் இரண்டு போக்குகளையும் குறிக்க 'சந்தர்ப்பவாதம்' என்ற பதத்தைப் பயன்படுத்துகிறார். அவற்றை 'இடது' சந்தர்ப்பவாதம் (அராஜகவாதமும் சிண்டிகலியமும்) என்றும், வலது சந்தர்ப்பவாதம் (சீர்திருத்தவாதமும், புரட்டல்வாதமும்) என்றும் இனம் பிரித்துக் காட்டுகிறார்:

> சரியான அரசியல் மார்க்கமும் இராணுவ மார்க்கமும் தன்னியல்பாகவும் அமைதியாகவும் தோன்றுவதில்லை என்

பதையும், அவை போராட்டப் போக்கிலேயே தோன்றுகின்றன என்பதையும் வரலாறு நமக்குக் கூறுகிறது. இந்த மார்க்கங்கள் ஒரு புறம் 'இடது' சந்தர்ப்பவாதத்தையும் மறுபுறம் வலது சந்தர்ப்பவாதத்தையும் எதிர்த்துப் போராட வேண்டும். புரட்சிக்கும் புரட்சிகரப் போருக்கும் சேதம் விளைக்கிற இந்த இடையூறான போக்குகளை எதிர்த்துப் போரிட்டு அவற்றை வெல்லாவிட்டால், சரியான மார்க்கத்தை நிறுவுவதும் இப்போரில் 'வெற்றியை ஈட்டுவதும் சாத்தியமில்லை.' (மா.தெ.நூ. 1.194)

கட்சிக்குள் சந்தர்ப்பவாதப் போக்குகள் பொதுவாக கீழ்க்காணும் இரண்டு வடிவங்களில் தோன்றுகின்றன: எதிரியை மிகையாக மதிப்பிடுவதால் எழும் கோழைத்தனம் அல்லது வால்பிடிக்கும் தன்மை; எதிரியைக் குறைத்து மதிப்பிடுவதால் தோன்றும் கட்டுக்கடங்காத் தன்மை அல்லது 'துணிச்சல் கொள்கை'. வலது சந்தர்ப்பவாதி பின்னால் தேங்கி நிற்கும் போக்கும், 'இடது' சந்தர்ப்பவாதி முன்னுக்கு விரைந்து ஓடும் போக்கும் உள்ளவர்கள்:

பல சமயங்களில் சிந்தனையானது மெய்மைக்கும் பின் தங்கி விடுகிறது. காரணம், எண்ணற்ற சமூக நிலைமைகளால் மனிதனின் அறியும் செயல் வரம்புக்கு உட்படுத்தப் பட்டுள்ளதுதான். புரட்சிகர அணிகளில் உள்ள வறட்டுவாதிகளை நாம் எதிர்க்கிறோம். அவர்களது சிந்தனை, மாறி வருகின்ற புறச் சூழ்நிலைமைகளுக்கு ஏற்ப வளரத் தவறுகிறது. வரலாற்றுரீதியாக அது வலதுசாரி சந்தர்ப்பவாதமாகத் தோற்றமெடுத்துள்ளது. எதிர்மறைகளின் போராட்டமானது ஏற்கனவே புறநிலை இயக்கத்தை முன்னுக்குத் தள்ளியிருக்கிறது என்பதை இவர்கள் பார்க்கத் தவறுகிறார்கள். இவர்களது அறிவோ பழைய கட்டத்திலேயே நின்று விட்டது. இது எல்லா வறட்டுவாதிகளின் சிந்தனைக்கும் உரிய பண்பாகும்... .

நாம் 'இடது' சொல்வித்தையை எதிர்க்கிறோம். 'இடதுசாரி' களின் சிந்தனை புறநிலை இயக்கத்தின் வளர்ச்சியில் உள்ள ஒரு குறிப்பிட்ட கட்டத்தைத் தாண்டிச் செல்கிறது. தமது அதீதக் கற்பனைகளை உண்மை எனச் சிலர் கருதுகிறார்கள், வேறு சிலரோ எதிர்காலத்தில் மட்டுமே நிறைவேற்றப்படக் கூடிய ஒரு இலட்சியத்தை நிகழ்காலத்திலேயே நிறைவேற்றிடக் கடும் முயற்சி செய்கிறார்கள். மக்களில் பெரும்பான்

மையோருடைய தற்போதைய நடைமுறையில் இருந்தும், நடப்பிலுள்ள உண்மைகளில் இருந்தும் தங்களை அந்நிய மாக்கிக் கொள்கிறார்கள். தமது செயல்களில் துணிச்சல் தன்மை உடையவரென்பதை அவர்களே காட்டிக் கொள்கி றார்கள். (மா.தெ.நூ. 1.306, ஒப் : 4.182)

இப்போது தொகுத்துக் கூறுவோம் : சோலிசத்துக்கு ஒரே ஒரு பாதைதான் உள்ளது — பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்கிற, அதன் வழியாகச் செல்கிற பாதை எனக் கூறலாம். மாற்றுப் பாதையாக முன்வைக்கப்படுகிற சந்தர்ப்பவா தப் பாதை, அது வலது பாதையாக இருந்தாலும் சரி, 'இடது' பாதையாக இருந்தாலும் சரி, அது உண்மையில் முதலாளியப் பாதையுடன் — அதாவது முதலாளி வர்க்கச் சர்வாதிகாரத்துடன் இணைந்ததே ஆகும்:

> சோசலிசவாதிகள் புரிந்து கொள்ளத் தவறுகிற முதன்மை யான விசயம் என்னவெனில், முதலாளியச் சமுதாயத்தில் உள்ளார்ந்த வர்க்கப் போராட்டம் எப்போதெல்லாம் தீவிர மான முறையில் கடுமையாகிறதோ, அப்போது முதலாளி வர்க்கச் சர்வாதிகாரம் அல்லது பாட்டாளி வர்க்கச் சர்வாதி காரம் — இதில் ஏதோ ஒன்றுதான் இருக்கமுடியுமே தவிர வேறு மாற்று இருக்கமுடியாது என்பதுதான். இத்தவறே, தத்துவ விசயங்களில் அவர்களுக்கு இருந்த குறுகல் பார்வை களுக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கு அவர்கள் இழைக்கிற அரசியல் துரோகங்களுக்கும் காரணமாக அமைகிறது. மூன்றாவது வழியைப் பற்றிய கனவுகள் அனைத்தும் பிற்போக்குத்தனமான, சிறுமுதலாளி வர்க்கப் புலம்பல் களே. வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலான முதலாளி வர்க்க ஜனநாயகத்தின் வளர்ச்சியும், உழைக்கும் வர்க்க இயக்கத்தின் வளர்ச்சியும் குறிப்பாகக் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள அனுபவமும் இதற்குச் சான்றாக உள்ளன. அரசியல் — பொருளாதார விஞ்ஞானம் முழுவதும்கூட இதற்குச் சான்றாக உள்ளன. இவை கீழ்க்கண்ட உண்மைகளைத் தெரிவிக்கின்றன: சரக் குப் பொருளாதாரம் எங்கெல்லாம் நிலவுகிறதோ, அங்கு முதலாளி வர்க்க சர்வாதிகாரம் பொருளாதார ரீதியாகத் தவிர்க்கப்பட முடியாததாக அமையும்; முதலாளிய வளர்ச்சி யாலேயே வளர்த்தப்பட்டு, பெருக்கப்பட்டு, ஒன்றாக இணைக்கப்பட்டு, வலுப்படுத்தப்படுகிற வர்க்கமான பாட்

*டாளி வர்க்கத்தால் மட்டுமே முதலாளி வர்க்க சர்வாதிகா ரத்தை அகற்றி தனது சர்வாதிகாரத்தை நிறுவ முடியும். (லெ.தொ.நூ. 28.463)*

---

[1] இரண்டாவது அனைத்துலகச் சங்கம் (1889 - 1914). இது உலகத்திலிருந்த சோசலிசக் கட்சிகளை ஒருசேர இணைத்தது; புரட்டல்வாதத்தால் தகர்ந்தது.

[2] கிரேக்க புராணத்தில் இடம்பெறும் நிகழ்ச்சி

[3] அராஜகவாதம்: இது எல்லாவகையான அரசு அதிகாரத்தையும் எதிர்க்கிறது. உழைப்பாளி மக்களின் அரசு அதிகாரத்தையும் எதிர்க்கிறது. உழைப்பாளி மக்கள் அமைப்பு வகையில் ஒன்றுதிரண்டு நடத்துகிற அரசியல் போராட்டத்தை எதிர்க்கிறது.

[4] சிண்டிகலியம்: இப்போக்கை மேற்கொள்பவர்கள் அரசியல் போராட்டத்தின் தேவையையும் சுதந்திரமான பாட்டாளி வர்க்கக் கட்சியின் தேவையையும் ஏற்க மறுக்கிறார்கள். உழைக்கும் மக்கள் அரசு அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டிய தேவையை மறுக்கிறார்கள். வேலைநிறுத்தம், சீர்குலைவு நடவடிக்கைகள் போன்ற 'நேரடி நடவடிக்கை'கள் மூலம் புதிய சமூகத்தைக் கொண்டுவர முடியும் என்கிறார்கள்.

[5] மிதவாதம்: முதலாளியப் பாராளுமன்ற முறை, முதலாளிய உரிமைகள், முதலாளிகளின் சுதந்திரம் ஆகியவற்றின் ஆதரவாளர்களை ஒன்றுபடுத்தும் அரசியல், சித்தாந்தக் கொள்கையாகும்.

அத்தியாயம் — 2

# முதலாளி வர்க்கப் புரட்சியிலிருந்து பாட்டாளி வர்க்கப் புரட்சிவரை

*எந்த அடிப்படை மீது முதலாளி வர்க்கம் உற்பத்தி செய்து, அவ்வுற்பத்திகளைத் தனக்கு உரிமையாக்கிக் கொள்கிறதோ, அந்த அடிப்படைக்கே நவீனத் தொழில் வளர்ச்சியானது குழிபறிக்கிறது. எனவே, எல்லாவற்றுக்கும் மேலாக முதலாளி வர்க்கம் எதை உற்பத்தி செய்கிறது என்றால், தனது புதை குழியைத் தோண்டுபவர்களையே. அதனுடைய வீழ்ச்சி, பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி ஆகிய இரண்டுமே தவிர்க்க முடியாதவை.*

— பொதுவுடைமை அறிக்கை.

**1. நவீன சமுதாயத்தில் வர்க்க உறவு**

*1917* இன் ரசியப் புரட்சியும், *1949* இன் சீனப் புரட்சியும் ஒரே வரலாற்று நிகழ்ச்சிப் போக்கில் உள்ள அடுத்தடுத்த இரண்டு நிகழ்ச்சிகளாகும். முதலாளிய சமுதாயத்தின் துவக்கங்களிலேயே இவ்வரலாற்று நிகழ்ச்சிப்போக்கின் மூலாதாரம் புதைந்துள்ளது. இவை இரண்டுக்கும் உள்ள உறவைப் புரிந்து கொள்வதற்கு, அவற்றை ஒரு முழுமையான நிகழ்ச்சிப் போக்கில் அவற்றுக்குள்ள உறவைக் கொண்டு பார்க்க வேண்டும்.

மா சேதுங் தம்முடைய 'முரண்பாடுகளைப் பற்றி' என்ற கட்டுரையில் எழுதுகிறார்:

> ஒரு பொருளின் வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கில் உள்ள அடிப்படை முரண்பாடும், இந்த அடிப்படை முரண்பாட்டினால் தீர்மானிக்கப்படும் நிகழ்ச்சிப் போக்கின் சாரமும், இந்நிகழ்ச்சிப்போக்கு நிறைவடையும் வரை மறைந்து விடுவதில்லை; ஆனால் ஒரு நீண்ட நிகழ்ச்சிப்போக்கானது, ஒவ்வொரு கட்டத்திலும் நிலைமைகள் வழக்கமாக மாறுபடுகின்றன. இதற்கான காரணம், ஒரு பொருளின் வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கில் உருவாகும் அடிப்படை முரண்பாட்டின் இயல்பும், அந்நிகழ்ச்சிப் போக்கின் சாரமும் மாறாதிருந்த போதும், இந்நீண்ட நிகழ்ச்சிப் போக்கின் ஒரு கட்டத்திலிருந்து மற்றொரு கட்டத்துக்குச் செல்லும் அடிப்படை முரண்பாடு மேலும் மேலும் தீவிரம் அடைகிறது.

*மேலும், அடிப்படை முரண்பாட்டினால் தீர்மானிக்கப்படும் அல்லது செல்வாக்கு செலுத்தப்படும் பல்வேறு பெரிய சிறிய முரண்பாடுகளில், சில தீவிரமடைகின்றன; சில தற்காலிகமாக அல்லது பகுதியளவில் தீர்க்கப்படுகின்றன, அல்லது தீவிரம் குறைக்கப்படுகின்றன; இன்னும் புதிய சில முரண்பாடுகள் தோன்றவும் செய்கின்றன. எனவே இந்நிகழ்ச்சிப் போக்கானது பல கட்டங்களால் குறிக்கப்படுகிறது. ஒரு பொருளின் வளர்ச்சியின் நிகழ்ச்சிப் போக்கில் உள்ள இக்கட்டங்கள் மீது மக்கள் கவனம் செலுத்தாவிடில், அப்பொருளின் முரண்பாடுகளை அவர்களால் சரியாகக் கையாள முடியாது. (மா.தெ.நூ. 1.325)*

*மனித வரலாற்றில், எதிர்மறைகளின் போராட்டத்தின் ஒரு குறிப்பிட்ட வெளிப்பாடாக வர்க்கங்களுக்கு இடையில் உள்ள பகைமை நிலவுகிறது. சுரண்டும் வர்க்கத்துக்கும் சுரண்டப்படும் வர்க்கத்துக்கும் இடையில் உள்ள முரண்பாட்டைப் பரிசிலனை செய்யுங்கள். இத்தகைய முரண்பட்ட வர்க்கங்கள் ஒரே சமுதாயத்தில் — அது அடிமைச் சமுதாயமாகவோ நிலப்பிரபுத்துவ சமுதாயமாகவோ அல்லது முதலாளியச் சமுதாயமாகவோ இருக்கலாம் — நெடுங்காலம் சேர்ந்தே வாழ்கின்றன. இவ்விரு வர்க்கங்களுக்கு இடையே உள்ள முரண்பாடு ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடையும்போதுதான் அது வெளிப்படையான பகை வடிவத்தை அடைந்து, புரட்சியாக வளர்ச்சி பெறுகிறது. (மா.தெ.நூ. 1.343)*

*முதலாளியச் சமுதாயம் சரக்கு உற்பத்தியின் வளர்ச்சியின் மீது நிலைகொண்டுள்ளது. இது உழைப்புச் சக்தியே ஒரு சரக்காக மாறும் கட்டத்தைக் குறிக்கிறது. முதலாளியம் என்ற நிகழ்ச்சிப் போக்கின் சாரம் இதுதான். இதனுடைய பரிணாம வளர்ச்சியானது, இதில் அடங்கியுள்ள அடிப்படை முரண்பாட்டின் வளர்ச்சியால் தீர்மானிக்கப்படுகிறது. உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் உடைமையின் தனியார் தன்மைக்கும் இடையிலுள்ள முரண்பாடுதான் இந்த அடிப்படை முரண்பாடு. இம் முரண்பாடானது, பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளியத்துக்கும் இடையில் உள்ள வர்க்கப் போராட்டத்தில் வெளிப்படுகிறது.*

*நிலப்பிரபுத்துவ சமுதாயம் எளிமையான விவசாயப் பொருளாதாரத்தையே ஆதாரமாகக் கொண்டு உருவாகிறது. நிலத்தின் மிகப்பெரும் பகுதி நிலப்பிரபுக்களின் உடைமையிலுள்ளது.*

இது, இவர்களுக்காக உழவர்களாலோ அடிமைகளாலோ பயிர் செய்யப்படுகிறது. இவ்வுழவர்கள் அல்லது அடிமைகளுக்கு சொந்தக் கருவிகள் உள்ளன; ஆனால் தாங்கள் உற்பத்தி செய்ததில் ஒரு பகுதியை தங்களது எசமானர்களுக்குக் கொடுக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு உள்ளது. இவ்விரண்டு வர்க்கங்களுக்கும் இடையிலுள்ள பகைதான் நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலுள்ள முதன்மையான முரண்பாடாகும். சரக்கு உற்பத்தி வளர்ச்சி பெறுவதால் நிலப்பிரபுத்துவ அமைப்புக்குள் ளேயே இரண்டு புதிய வர்க்கங்கள் தோன்றுகின்றன — வணிகத்திலும் பண்ட உற்பத்தியிலும் ஈடுபடும் பூர்சுவாக்கள் அல்லது முதலாளி வர்க்கம் ஒரு வர்க்கம்; மற்றொன்று பாட்டாளி வர்க்கம். இவர்கள் பஞ்சப்பட்ட உழவர் வர்க்கத்தில் இருந்தே பெரும்பாலும் வருகிறார்கள். இவர்களிடம் உழைப்புச் சக்தி யைத் தவிர வேறெந்த உடைமையும் இல்லை. கூலிக்காக இவ் உழைப்புச் சக்தியை முதலாளிகளிடம் விற்கிறார்கள். இவ்வா றாக முதலாளியம், சரக்கு உற்பத்தியின் வளர்ச்சியைத் தடை செய்யும் நிலப்பிரபுக்களுக்கும், உழைப்புச் சுரண்டலுக்கு உட்ப டுத்தப்படும் பாட்டாளிகளுக்கும் எதிராக நிற்கிறது. நிலப்பிரபுக் களைப் பொருத்தமட்டிலும் புரட்சிகரமானதாகவும், பாட்டாளிக ளைப் பொருத்தமட்டிலும் எதிர்ப் புரட்சிகரமானதாகவும் உள்ள இந்த இரட்டைப் பண்பு, முதலாளியத்தின் இயல்பிலேயே உள்ளதாகும். நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் இறுதிக் கட்டத் தில், உழவர் வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கம் தன்னைத் தலைவனாக அமர்த்திக் கொண்டு அவற்றின் ஆதரவோடு நிலப்பிரபுக்களைத் தூக்கி எறிந்து, தன்னையே ஒரு ஆளும் வர்க்கமாக நிறுவுகிறது. முதலாளி வர்க்கப் புரட்சி என்பது இதுதான்.

முதலாளியச் சமுதாயத்தில், எல்லாவிதமான நிலப்பிரபுத்து வக் கட்டுப்பாடுகளில் இருந்தும் சரக்கு உற்பத்தி விடுவிக்கப்படு கிறது. நிலப்பிரபுக்கள் முதலாளியத்தோடு ஒன்று கலந்து விடுகிறார்கள். உழவர் வர்க்கமோ கிராமப்புற முதலாளிகளாக வும் (பண்ணையாளர்), கிராமப்புற பாட்டாளிகளாகவும் (பண்ணை உழைப்பாளிகள்) பாகுபடுத்தப்படுகிறது. முதலாளி வர்க்கத்துக்கும், பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையில் வளர்ந்து வரும் பகைதான் இப்போது முதன்மை முரண்பாடாகிறது.

முதலாளியச் சமுதாயம் இரண்டு முக்கியமான கட்டங்களின் வழியாக வளர்ச்சி பெறுகிறது — ஒன்று தொழில் மூலதனம்,

மற்றொன்று ஏகபோக மூலதனம் அல்லது ஏகாதிபத்தியம். இவ்விரண்டு கட்டங்களிலும் சரக்கு உற்பத்தி தொடர்ந்து வளர்ச்சி பெறுகிறது; முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள பகை ஆழமடைகிறது. சுதந்திர மான போட்டியையும் காலனி விரிவுபடுத்தலையும் அடிப்படை யாகக் கொண்ட முதல் கட்டத்தில் புதிய முரண்பாடுகள் எழுகின்றன. இவை பெரு முதலாளிகளுக்கும் சிறு முதலாளிக ளுக்கும், நகர்ப்புறத்துக்கும் கிராமப்புறத்துக்கும், மூலதனத்துக் கும் காலனி மக்களுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள். இந்நிலைமைகள் இரண்டாவது கட்டத்துக்கு இட்டுச் செல்கின் றன; இங்கு சுதந்திரமான முதலாளியப் போட்டி, ஏகபோக மூலதனமாக மாறுகிறது; மூலதனம் ஏற்றுமதியாகிறது; மலி வான உழைப்புக்கும் கச்சாப் பொருள்களுக்குமான ஊற்றுக்கண் கள் என்ற வகையில் காலனி நாடுகள் சுரண்டப்படுகின்றன. பெரும் முரண்பாடுகள் அனைத்தும், அதாவது பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும், ஏகாதிபத்தியத்துக்கும் காலனிய மக்களுக்கும், ஒருவருக்கொருவர் பகையாக உள்ள ஏகாதிபத்திய நாடுகளுக்குள்ளேயும் உள்ள முரண்பாடுகள் ஆழ மாகின்றன. இம் முரண்பாடுகள் ஏகாதிபத்தியப் போர்களுக்கு இட்டுச் செல்கின்றன. பாட்டாளி வர்க்கமோ உழவர் பெருந்திர ளின் ஆதரவோடு ஒவ்வொரு நாட்டிலுமாக அதிகாரத்தைக் கைப்பற்றி, தன்னையே ஒரு ஆளும் வர்க்கமாக நிறுவிக் கொள்கிறது. பாட்டாளி வர்க்கப் புரட்சி என்பது இதுதான்.

இங்கிலாந்து புரட்சி (1649), பிரெஞ்சுப் புரட்சி (1789), ஜெர்மானியப் புரட்சி (1848), ரசியப் புரட்சி (1905 - 1917) — இவைதாம் நவீன ஐரோப்பாவின் முதன்மையான முதலாளி வர்க்கப் புரட்சிகளாகும். 1649 இலும் 1789 இலும் முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவத்திடம் இருந்து அதிகாரத்தைக் கைப் பற்றியது; இருப்பினும் அதைத் தொடர்ந்து நிலப்பிரபுத்துவ சக்திகளோடு சமரசமும் செய்து கொண்டது. 1848 இலும் 1905 இலும் அது அதிகாரத்தைக் கைப்பற்றவில்லை; எனினும் சில குறிப்பிட்ட சலுகைகளைப் பெற்றது. 1917 இல் முதலாளியம் அதிகாரத்தைக் கைப்பற்றி விட்டது. ஆயினும் ஒன்பது மாதங்க ளுக்குப் பிறகு பாட்டாளி வர்க்கத்தால் தூக்கியெறியப்பட்டது.

இப் புரட்சிகளை முன்னெடுத்துச் செல்வதில் முதலாளி வர்க்கம் காட்டும் தயக்கம், அதனுடைய இரட்டைப் பண்பிலி ருந்தே தோன்றுகிறது. இப் புரட்சிகளை ஒவ்வொன்றாக நாம் ஆராய்வோமானால், இவை ஒவ்வொன்றும் இதற்கு முன்னால்

ஏற்பட்ட புரட்சியோடு ஒப்பிடுகையில், ஆழமான முரண்பாடுகளால் குறிக்கப்படுவதைக் காணலாம். இம்முரண்பாடுகள், புரட்சியின் தன்மையில் மாற்றத்தைக் கொண்டுவர, படிப்படியாக வழிவகுப்பதைக் காணலாம். 1649 இல் பாட்டாளி வர்க்கம் மிகச்சிறிய பங்கையே வகித்தது. 1789 இல் இது தீவிரமாக இருந்தது; எனினும் சிறு முதலாளி வர்க்கத்தையே இன்னும் சார்ந்திருந்தது. 1848 இல் இது மிகவும் தீவிரமாக இருந்தது, எனவே முதலாளி வர்க்கம் அச்சமடைந்தது. புரட்சியை நிறைவுபடுத்தாமல் அதைக் கைவிட்டு, நிலப்பிரபுக்களிடம் சரணடைந்தது. 1905 இலும் இதே நிலை ஏற்பட்டது.

ஆனால் இப்பொழுது பாட்டாளி வர்க்கம் மிகுந்த வலிமை பெற்றிருந்ததால் சில ஆண்டுகளுக்குப் பின்னர் முதலாளி வர்க்கப் புரட்சியைப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு முன்னெடுத்துச் செல்வதன்மூலம் அதை முழுமையடையுமாறு கட்டாயப்படுத்துவதில் வெற்றி கண்டது.

ஒரு முதலாளி வர்க்கப் புரட்சியில் பங்கு கொள்வதை அலட்சியம் செய்த சிறுமுதலாளிய சோசலிசவாதிகளுக்கு எதிராக வழக்காடிய லெனின், 1905 இன் தொடக்கத்தில் பின்வருமாறு எழுதினார்:

> பாட்டாளி வர்க்கத்தைப் பொறுத்தவரை, முதலாளியச் சமுதாயத்தில் அரசியல் விடுதலைக்காகவும், ஜனநாயகக் குடியரசுக்காகவும் நடத்தும் போராட்டம், முதலாளிய அமைப்பைத் தூக்கி எறியப்போகும் சமுதாயப் புரட்சிக்கான போராட்டத்தின் இன்றியமையாத கட்டங்களில் ஒன்றாக மட்டுமே அமையும். அடிப்படையில் வேறுபட்ட இக்கட்டங்களை திட்டவட்டமாக வேறுபடுத்திப் பார்ப்பதும், எந்த நிலைமைகளில் இக்கட்டங்கள் தம்மை வெளிப்படுத்திக் கொள்கின்றன என்பதை நிதானமாக ஆராய்வதும் ஒருவரது இறுதிக் குறிக்கோளைக் காலவரம்பின்றி ஒத்திவைப்பதாகவோ அல்லது முன்னோக்கிச் செல்லும் ஒன்றின் வளர்ச்சியைத் தாமதப்படுத்துவதாகவோ பொருள்படுவதில்லை. இதற்கு மாறாக, இம்முன்னேற்றத்தை விரைவுபடுத்தும் நோக்கத்துக்காகவும், இறுதிக் குறிக்கோளை இயன்ற மட்டுக்கும் விரைவாகவும் எச்சரிக்கையுடனும் சாதிப்பதற்காகவும், நவீன சமுதாயத்தில் உள்ள வர்க்கங்களின் உறவைப் புரிந்து கொள்வது அவசியமானதாகும். (லெ.தொ.நூ. 8.24, ஒப்: 9.50)

## 2. ரசியப் புரட்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில், முதலாளி வர்க்கப் புரட்சி பெரும்பாலும் நிறைவுபடுத்தப்பட்டுவிட்டது; நிலப்பிரபுத்துவம் ஒழிக்கப் பட்டு விட்டது; ஏகாதிபத்தியம் என்ற கட்டத்துக்குள் முதலாளி யம் நுழைந்து கொண்டிருந்தது. ஆனால் ரசியா இன்னும் ஒரு அரை நிலப்பிரபுத்துவ நாடாகவே இருந்தது.

ரசியாவில் தொழில் முதலாளியத்தின் வளர்ச்சி 1861 இன் விவசாய சீர்திருத்தம் ஏற்பட்ட காலத்தில் இருந்தே தொடங்கிய தாகக் கணிக்கலாம். இது நிலப்பிரபுத்துவ நில உடைமையாளர்க ளின் ஆட்சியாகிய ஜாரிச எதேச்சதிகார ஆட்சியிடமிருந்து, பொருள் உற்பத்தியில் ஈடுபட்ட புதிய முதலாளி வர்க்கம் வென்றெடுத்த சலுகையாகும்; இதன் விளைவாக, பண்ணை அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது. ஆனால் நிலவுடைமையாளர் கள் தமது நிலப்பிரபுத்துவ சலுகைகள் பலவற்றை தக்கவைத்துக் கொள்ள முடிந்தது. உழவர் வர்க்கத்தைக் கடுமையாகச் சுரண்டுவ தற்கு அவர்கள் இச் சலுகைகளைப் பயன்படுத்தினார்கள் (லெ.தொ.நூ. 17.121). சிறிய நிலஉடைமைகளையும் பழமை யான கருவிகளையும் அடிப்படையாகக் கொண்ட வேளாண்மை, பின்தங்கியதாகவும் உற்பத்தி வளமற்றதாகவும் இருந்தது. தொற்று நோய் போலப் பஞ்சம் பரவியது. நலிவடைந்த பல உழவர்கள் இருப்புப் பாதைகளில் வேலை செய்யவும், நகரங்க ளில் புதிதாக உருவாகிய தொழிற்சாலைகளில் தங்கள் உழைப்பை மலிவாக விற்கவும், கிராமங்களைவிட்டுப் போனார் கள் (லெ.தொ.நூ. 2. 99-100). சமுதாய, அரசியல் உரிமைகள் இருக்கவில்லை (லெ.தொ.நூ. 17.121).

விவசாய சீர்திருத்தத்துக்குப் பிறகு மிகவும் வேகமான தொழில் வளர்ச்சிக் காலகட்டம் உருவாயிற்று:

> 1861-க்குப் பிறகு ரசியாவில் முதலாளியம் மிக விரைவாக வளர்ந்தது. இதனால் சில பழைய ஐரோப்பிய நாடுகளில் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் எடுத்துக் கொண்ட மாறு தலை, ரசியாவில் சில பத்தாண்டுகளிலேயே கொண்டு வந்து விட்டது. (லெ.தொ.நூ. 17.122)

எனவே உழவர் வர்க்கம், 'எண்ணற்ற மத்தியகால எச்சங்க ளால் மட்டுமல்லாது, முதலாளியத்தாலும் நசுக்கப்பட்டது' (லெ.தொ.நூ. 18.143). அதே சமயத்தில் முதலாளியம் இரண்டு

வகையான எதிர்ப்புகளுக்கு உள்ளாகியிருந்தது: முதலாளிய வளர்ச்சிக்கு இன்னும் இடையூறாக உள்ள, ஒடுக்குகிற, ஊழல் மிகுந்த எதேச்சாதிகாரம் ஒருபுறம்; மார்க்சியத் தத்துவத்தால் ஆயுதபாணிகளாக்கப்பட்ட ஆற்றல்மிக்க தொழிற்சாலைப் பாட்டாளி வர்க்கம் மறுபுறம். இம்மார்க்சியத் தத்துவம் 1789-இலும் 1848-இலும் 1871-இன் பாரிஸ் கம்யூனிலும் கற்ற படிப்பினைகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது" (லெ.தொ.நூ. 19.539-40)

1905 - புரட்சியில் இம்முரண்பாடுகள் வெளிப்பட்டன. பாட்டாளி வர்க்கத்துக்கும் உழவர் வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கம் தலைமைதாங்கி இருந்திருக்குமேயானால், ஜாரைத் தூக்கியெறிந்து ஒரு முதலாளிய ஜனநாயகக் குடியரசை நிறுவும் அளவுக்கு வலிமையுடையதாக இருந்திருக்கும். ஆனால் அவ்வாறு செய்யாமல் பின்வாங்கியது; ஏனெனில் அது பாட்டாளி வர்க்கத்தைக் கண்டு அஞ்சியது:

> 1789, 1848, 1871 ஆகிய ஆண்டுகளில் இருந்ததைவிட இப்பொழுது பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள பகை மேலும் ஆழமாக உள்ளது. எனவே பாட்டாளி வர்க்கப் புரட்சியைக் குறித்து முதலாளி வர்க்கம் கூடுதலாகவே அஞ்சும்; அது பிற்போக்கிடம் தயக்கமின்றி சரணடைந்துவிடும் (லெ.தொ.நூ. 8.258).
>
> எனவே, சுதந்திரம் பாதியளவே வென்றெடுக்கப்பட்டிருக்கையில், முதலாளி வர்க்கம், பழைய ஆட்சியாளருடனும் நிலவுடைமையாளருடனும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு, முதலாளி வர்க்கப் புரட்சியை, அது சேரவேண்டிய இடத்துக்குப் பாதி வழியிலேயே நிறுத்திவிட கடும் முயற்சி செய்கிறது. இம்முயற்சிக்கு அடிப்படையாக இருப்பவை முதலாளிகளின் வர்க்க நலன்களே. இது 1848-ஜெர்மானிய முதலாளி வர்க்கப் புரட்சியில் மிகவும் தெளிவாக வெளிப்பட்டது. எனவே 'சமரசம்' (இது மார்க்சின் வார்த்தை) செய்து கொள்ளும் மிதவாத முதலாளி வர்க்கத்துக்கு எதிராக, பாட்டாளி வர்க்கக் கொள்கை என்ற ஈட்டிமுனைத் தாக்குதலை பொதுவுடைமையாளரான மார்க்ஸ்தான் தொடுத்தார். நம்முடைய ரசிய முதலாளி வர்க்கமோ மேலும் கோழைத்தனமானது; நம்முடைய பாட்டாளி வர்க்கமோ 1848-இன் ஜெர்மானியப் பாட்டாளி வர்க்கத்தைவிட கூடுதலான வர்க்க உணர்வும் சிறப்பான அமைப்பும் பெற்றுள்ளது. முழுமையான சுதந்திரத்திற்காக

வும் நிலம் அனைத்துக்காகவும் நடக்கும் போராட்டத்தில், பெருந்திரளான ஜனநாயக உழவர் வர்க்கம், பாட்டாளி வர்க்கத்தைப் பின்பற்றும்போது மட்டும்தான், 'சமரசம் செய்துகொள்ளும்' மிதவாத முதலாளி வர்க்கத்தையும்மீறி, முதலாளிய ஜனநாயகப் புரட்சி இயக்கத்தின் முழுவெற்றி யும் நமது நாட்டில் சாத்தியமாகும் (லெ.தொ.நூ. 12.355).

எனவே, முதலாளி வர்க்கம் தனது புரட்சிகர நோக்கங்க ளைக் கைவிட்டு, எதேச்சதிகாரத்துடன் சமரசம் செய்து கொள்ள முன்வந்தது. நிலப்பிரபுத்துவ உரிமைக்கும் முதலாளியத் தொழில் முயற்சிக்கும் இடையிலுள்ள முரண்பாடு தீர்க்கப்படா மலே இருந்தது (லெ.தொ.நூ. 13.442, 18.143, 20.375). இதற்கி டையில் ரசியத் தொழில்களில் ஏற்கனவே முதலீடு செய்யத் தொடங்கிவிட்ட மேற்கு நாடுகளின் ஏகபோக முதலாளிகள், ஜாரை ஆதரித்துக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் அவர்களும் பாட்டாளி வர்க்கத்தைக் கண்டு அஞ்சினார்கள்:

வெளிப்படையாகவே ஒட்டாண்டியாகிவிட்ட ஜாருக்கு உலக முதலாளி வர்க்கம் கோடிக்கணக்கில் கடன் கொடுத் துக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம், பெருத்த இலாபத்தை எதிர்பார்க்கும் எல்லா லேவாதேவிக்காரர்களை யும் போல அது ஆசை காட்டப்படுவது மட்டுமல்ல, ரசியாவில் புரட்சியை பழைய அரசு வெற்றி கொள்வதில் தான் தனது சொந்த நலனும் அடங்கியுள்ளது என்பதை அது புரிந்து கொண்டிருப்பதுமே ஆகும். ஏனெனில் பாட் டாளி வர்க்கம் அல்லவா இந்தப் புரட்சிக்கு தலைமை தாங்குகிறது! (லெ.தொ.நூ. 13.434).

1905 - அனுபவத்தில் இருந்து, முதலாளி வர்க்கத்தின் தலைமையில் இருக்கிறவரை, ரசியாவில் முதலாளி வர்க்கப் புரட்சி வெற்றிபெற முடியாது என்ற முடிவுக்கு லெனின் வந்தார்:

முதலாளிய ஜனநாயகப் புரட்சியை அதனுடைய நிறை வுக்கு கொண்டுசென்று, அதற்குத் தலைமை தாங்கும் கடமையை பாட்டாளி வர்க்கம் தானே எடுத்துக் கொண்டுள் ளது. இதற்குக் காரணியாக இருப்போர் போல்சவிக்குகள். எதேச்சதிகாரத்துக்கும் துரோகத்தனமான மிதவாத முதலாளி வர்க்கத்துக்கும் எதிரான போராட்டத்தில், பாட்டாளி வர்க் கம் தன்னுடன் பெருந்திரளான ஜனநாயக சிறு முதலாளி

வர்க்கத்தை, சிறப்பாக உழவர் வர்க்கத்தை முன் நடத்திச் செல்ல முடிந்தால் மட்டுமே இது சாத்தியப்படும். (லெ.தொ.நூ. 12.490).

நமது நாட்டில் முதலாளி வர்க்கம் வெற்றியடைவது எப்படிச் சாத்தியமில்லையோ அதுபோல முதலாளி வர்க்கப் புரட்சியின் வெற்றியும் சாத்தியமில்லை. இது புதிர்போலத் தோன்றலாம்; ஆனால் உண்மை இதுதான். உழவர் வர்க்கத்தினரின் தொகை மேலோங்கியதாக இருக்கும் நிலை, அரை நிலப்பிரபுத்துவ் பெருநில உடைமை முறையினால் இதன் மீது தொடுக்கப்படும் பயங்கரமான ஒடுக்குமுறை, ஒரு சோசலிஸ்டுக் கட்சியில் ஏற்கனவே அமைப்புக்கு உட்படுத்தப்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் வலிமை, அதன் வர்க்க உணர்வு — இத்தகைய சூழ்நிலைமைகள் எல்லாம் நம்முடைய முதலாளி வர்க்கப் புரட்சிக்கு ஒரு குறிப்பிட்ட தன்மையை வழங்குகின்றன. இக்குறிப்பிட்ட தனித்தன்மை, புரட்சியின் முதலாளியப் பண்பை நீக்கி விடுவதில்லை. முதலாளி வர்க்கத்தின் எதிர்ப் புரட்சித் தன்மையும், இத்தகைய ஒரு புரட்சியில் வெற்றி பெறுவதற்காக பாட்டாளி வர்க்கம், உழவர் வர்க்கம் ஆகியவற்றின் சர்வாதிகாரத்தின் அவசியத்தையும் மட்டுமே இது தீர்மானிப்பதாக அமையும். (லெ.தொ.நூ. 15.56)

இவ்வாறாக, இரண்டு கட்டங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு புரட்சிக்கான தெளிவான திட்டம் ஒன்றை லெனின் முன்வைக்கிறார்: முதலில், பாட்டாளி வர்க்கம் மற்றும் உழவர் வர்க்கத்தின் புரட்சிகர ஜனநாயக - சர்வாதிகாரம்; பிறகு ஏழை உழவர் வர்க்கத்தின் ஆதரவு பெற்ற பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம். முதல் கட்டத்தில், நிலப்பிரபுத்துவத்தின் எச்சங்கள் ஒழித்துக் கட்டப்படுவதன் மூலம் முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சி நிறைவு செய்யப்படுகிறது; இரண்டாவது கட்டத்தில், சோசலிசத்துக்கான போராட்டம் தொடங்குகிறது. இந்த வகையில் இவ்விரு கட்டங்களையும் வேறுபடுத்திப் பார்ப்பதன்மூலம், முதல் கட்டத்தில் பாட்டாளி வர்க்கம் உழவர் வர்க்கம் முழுவதன் ஆதரவையும் பெற முடியும். இரண்டாவது கட்டத்தில், ஏழை உழவர் வர்க்கத்தின் தொடர்ச்சியான ஆதரவை உறுதிப்படுத்திக் கொள்ளவும் முடியும். இவ்விரண்டையும் வேறுபடுத்திப் பார்ப்பதன் தேவையை வலியுறுத்தும்பொழுதே, உண்மையான போராட்டத்தில் இவ்விரண்டு கட்டங்களும்

ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்து கிடக்கக்கூடும் என்பதையும், அந்த நிலையில் முதல் கட்டத்தில் இருந்து இரண்டாவது கட்டத்துக்கு எவ்விதத் தாமதமும் இன்றி முன்னேறுவதற்கு பாட்டாளி வர்க்கம் தயாராக இருக்க வேண்டும் என்பதையும் லெனின் ஏற்றுக் கொண்டார்:

> கடுமையான உழவர் பிரச்சினையே இந்தப் புரட்சியை வேறுபடுத்திக் காட்டும் முக்கியமான அம்சமாகும். இதே போன்ற நிலைமைகளில் உள்ள வேறு எந்த நாட்டைக் காட்டிலும் ரசியாவில் இப்பிரச்சினை மேலும் கடுமையாக உள்ளது. 1861 இன் விவசாய சீர்திருத்தம் என்று கூறப்படுவது மிகவும் உறுதியற்ற வகையிலும் ஜனநாயகமற்ற வகையிலும் நிறைவேற்றப்பட்டது; அதனால் நிலப்பிரபுத்துவ நில உடைமை ஆதிக்கத்தின் முக்கியமான அடிப்படை அசைக்கப்படாமல் இருந்தது. இக்காரணத்தினாலேயே உழவர் பிரச்சினை, அதாவது நிலத்துக்காக நிலவுடைமையாளர்களை எதிர்த்து உழவர்கள் நடத்தும் போராட்டம், இப்போதைய புரட்சியின் உரைகற்களில் ஒன்றாக நிரூபிக்கப்பட்டுள்ளது...
>
> வர்க்க சக்திகளின் நிலை, பின்வரும் முடிவுக்கு தவிர்க்கவியலாத வகையில் இட்டுச் செல்கிறது: முதலாளி வர்க்கம் புரட்சியின் உந்து சக்தியாகவோ, அல்லது தலைவனாகவோ இருக்க முடியாது; பாட்டாளி வர்க்கத்தால் மட்டுமே புரட்சியை நிறைவுபடுத்த முடியும்; அதாவது, முழுமையான வெற்றியைச் சாதிக்க முடியும். உழவர் வர்க்கத்தின் பெருவாரியான பிரிவை தன்னைப் பின்பற்றச் செய்வதில் பாட்டாளி வர்க்கம் வெற்றி பெற்றால் மட்டுமே இந்த வெற்றியைச் சாதிக்க இயலும். பாட்டாளி வர்க்கம், உழவர் வர்க்கம் ஆகியவற்றின் புரட்சிகர ஜனநாயக - சர்வாதிகாரமாக மட்டுமே ரசியாவின் இப்போதைய புரட்சியின் வெற்றி சாத்தியப்படும். (லெ.தொ.நூ. 12.458)
>
> முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சியின் தொடக்கத்தில் இருந்து முடிவுவரை எல்லா உழவர்களையும் சேர்த்துக் கொள்ளுதல்; உழவர் வர்க்கத்திலுள்ள ஏழைகள், பாட்டாளிகள், அரைப் பாட்டாளிகள் ஆகிய பிரிவுகளுடன் சோசலிசப் புரட்சியை நோக்கிச் செல்லுதல் - இதுதான் போல்சவிக்குகளின் கொள்கையாக இருந்து வருகிறது; இது மட்டுமே மார்க்சியக் கொள்கையாகும். (லெ.தொ.நூ. 28.310)

உலகில் உள்ள ஒவ்வொன்றையும் போல, பாட்டாளி வர்க்கம், உழவர் வர்க்கம் ஆகியவற்றின் புரட்சிகர ஜனநாயக - சர்வாதிகாரத்துக்கும், ஒரு கடந்த காலமும் ஒரு எதிர்காலமும் உண்டு. எதேச்சதிகாரம், பண்ணை அடிமைத்தனம், முடியாட்சி, சலுகை என்பன இதன் கடந்த காலம்; இந்த கடந்த காலத்துக்கு எதிரான போராட்டத்தில்.... பாட்டாளி வர்க்கம், உழவர் வர்க்கம் ஆகிய இரண்டுக்கும் 'ஒரே மனவிருப்பம்' இருப்பது சாத்தியமே... ஏனெனில் இங்கே நலன்கள் ஒன்றுபடுகின்றன.

இதனுடைய எதிர்காலம் என்பது தனிச்சொத்துக்கு எதிரான போராட்டம்; முதலாளிக்கு எதிராகக் கூலி வாங்குபவன் நடத்தும் போராட்டம்; சோசலிசத்துக்கான போராட்டம். இங்கே ஒரே மன விருப்பம் என்பது இயலாத காரியம். இங்கே நமக்கு முன்னால் விரியும் பாதை எதேச்சதிகாரத்தில் இருந்து குடியரசை நோக்கிச் செல்வதல்ல, மாறாக ஒரு சிறு முதலாளிய ஜனநாயகக் குடியரசில் இருந்து சோசலிசத்துக்குச் செல்வதாகும்.

உண்மையான வரலாற்றுச் சூழல்களில், கடந்த காலத்தின் கூறுகள் எதிர்காலக் கூறுகளோடு பின்னிக் கிடக்கத்தான் செய்கின்றன; இவ்விரு பாதைகளும் சந்திக்கின்றன... நாம் அனைவரும் முதலாளி வர்க்கப் புரட்சியையும் சோசலிசப் புரட்சியையும் எதிர் நிறுத்துகிறோம். இவற்றுக்கிடையே கறாராக வேறுபடுத்துவதன் முழுமையான அவசியத்தை நாம் அனைவரும் வற்புறுத்துகிறோம். இது எவ்வாறு இருப்பினும், வரலாற்றின் போக்கில் இவ்விரு புரட்சிகளுக்கும் உரிய தனித்த, சிறப்பான கூறுகள் ஒன்றுடன் ஒன்று பிணைந்துகொள்கின்றன என்பதை மறுப்பதற்கு முடியுமா? *(லெ.தொ.நூ. 9.84-5)*

சரியாகச் சொல்லப்போனால், நம்முடைய வலிமையின் அளவுக்கு ஏற்ப, அதாவது உணர்வுபெற்ற, அமைப்புரீதியாக திரட்டப்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் வலிமைக்கு ஏற்ப, நாம் ஜனநாயகப் புரட்சியில் இருந்து உடனடியாக சோசலிசப் புரட்சியை நோக்கிச் செல்லத் தொடங்குகிறோம். நாம் தடைகளற்ற புரட்சிக்காக நிற்கிறோம். நாம் பாதிவழியில் நின்றுவிட மாட்டோம். *(லெ.தொ.நூ. 9. 236-7)*

*1917* ஆம் ஆண்டு பிப்ரவரியில் இரண்டரை ஆண்டுகால ஏகாதிபத்திய யுத்தத்துக்குப் பிறகு, ரசியத் தொழிலாளர்களும், உழவர்களும், போர் வீரர்களும் அமைதி, நிலம், உணவு வேண்டும் என்று கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். தனிமைப்பட்டு, முழுக்கமுழுக்க மதிப்பு இழந்த ஜாரிச ஏகாதிபத்தியம், தனக்கு மட்டும் தனியாக சமாதானம் வேண்டி, ஜெர்மனியுடன் ரகசியப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது. ரசியாவைப் போரில் ஈடுபடுத்துவதில் உறுதி கொண்டிருந்த பிரிட்டன், பிரான்சு முதலிய நாடுகளின் வற்புறுத்தலின்பேரில் முதலாளி வர்க்கத் தலைவர்கள், ஜாரை முடிதுறக்குமாறும், ஒரு ஜனநாயகக் குடியரசைப் பிரகடனம் செய்யுமாறும் வற்புறுத்தினார்கள். ஆனால் இவ்விசயத்தில் செயல்பட்டது அவர்களின் வலிமை அல்ல, மாறாக பலவீனமே. மக்களுடைய கோரிக்கைகளைச் சந்திக்கும் நோக்கம் ஏதும் அவர்களுக்கு இல்லை என்பது தெளிவாகியது. பெற்றதை இழந்துவிடாதிருக்க வேண்டுமானால், புரட்சியை இரண்டாவது கட்டத்துக்கு உடனடியாகக் கொண்டுசெல்ல வேண்டியது அவசியமென லெனின் உணர்ந்தார்:

> ரசியாவில் இப்போதுள்ள சூழ்நிலையின் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், இந்த நாடு புரட்சியின் முதல் கட்டத்திலிருந்து இரண்டாவது கட்டத்துக்குச் சென்றுகொண்டிருக்கிறது என்பதாகும். முதல் கட்டம், பாட்டாளி வர்க்கத்துக்குப் போதுமான வர்க்க உணர்வும், அமைப்பும் இல்லாமையினால் முதலாளி வர்க்கத்தின் கைகளில் அதிகாரத்தை வழங்கியது. இரண்டாவது கட்டம், பாட்டாளி வர்க்கத்தின் கையிலும் உழவர் வர்க்கத்தின் மிகவும் வறிய பிரிவினரின் கையிலும் அதிகாரத்தை வழங்கவேண்டும். *(லெ.தொ.நூ. 24.22)*

> முன்னேறுவதா அல்லது பின்வாங்குவதா என்பதுதான் கேள்வி. புரட்சியில் யாரும் ஸ்தம்பித்து நின்றுவிடுவதில்லை... வறிய உழவர்களால் ஆதரிக்கப்படும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்திடம் அதிகாரம் மாற்றப்படுவதன் என்பதன் பொருள், நிச்சயமான, இதுவரை மனித சமுதாயத்துக்குத் தெரிந்தவற்றில் மிகவும் உறுதியான, மிகவும் வேதனை குறைந்த வடிவங்களில், சமாதானத்துக்கான ஒரு புரட்சிகரப் போராட்டத்துக்கு மாறுவது என்பதாகும். *(லெ.தொ.நூ. 25.28)*

ஓராண்டுக்குப் பின்னர் அக்டோபர் புரட்சியை திரும்பிப் பார்த்த லெனின் எழுதினார்:

நமது கருத்தின் சரியான தன்மையை புரட்சி மேற்கொண்ட பாதை உறுதி செய்திருக்கிறது. முதலாவதாக 'அனைத்து' உழவர்களையும் ஒருங்கிணைத்து, முடியரசுக்கும் நிலவுடைமையாளர்களுக்கும் மத்தியகாலத் தன்மைக்கும் எதிராக நடத்திய போராட்டம்; இந்த அளவுக்கு முதலாளி வர்க்க ஜனநாயகப் போக்குடையதாக புரட்சி அமைந்திருந்தது. பிறகு கிராமப்புற பணக்காரர்கள், குலாக்குகள், கொள்ளை இலாபக்காரர்கள் ஆகியோரை உள்ளடக்கிய முதலாளியத்துக்கு எதிராக ஏழை உழவர்கள், அரைப் பாட்டாளிகள் மற்றும் சுரண்டப்பட்ட அனைவரையும் ஒன்றிணைத்து நடத்திய போராட்டம்; இந்த அளவுக்கு புரட்சி ஒரு சோசலிசப் போக்குடையதாக அமைகிறது. முதல் கட்டத்துக்கும் இரண்டாவது கட்டத்துக்கும் இடையில் ஒரு செயற்கையான சீனச் சுவரை எழுப்ப முயல்வதும், பாட்டாளி வர்க்கத்தின் ஆயத்த நிலைமை, பாட்டாளி வர்க்கம் ஏழை உழவர்களோடு கொண்டிருந்த ஐக்கியத்தின் அளவு என்பதை விடுத்து வேறு எதனைக் கொண்டும் இவ்விரண்டையும் பிரித்துப்பார்க்க முயல்வதும் மார்க்சியத்தை அபாயகரமான வழியில் சிதைப்பதாகும்; அதைக் கொச்சைப்படுத்துவதாகும்; அதற்குப் பதிலாக மிதவாதத்தைக் கொண்டுவருவதாகும். *(லெ.தொ.நூ. 28.300)*

புரட்சியின் நான்காவது ஆண்டு விழாவில் உரையாற்றுகையில் லெனின் குறிப்பிட்டார்:

ரசியாவில் புரட்சியின் நேரடியான, உடனடியான குறிக்கோள் முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சியாக இருந்தது; அதாவது மத்திய காலத்தின் எச்சங்களை ஒழிப்பது, அவற்றைத் துப்புரவாகத் துடைத்தெறிவது, ரசியாவில் இருந்து இந்த காட்டுமிராண்டித்தனத்தை, இந்த வெட்கக்கேட்டை நீக்குவது, நம்முடைய நாட்டின் எல்லாவிதமான பண்பாட்டுக்கும், முன்னேற்றத்துக்கும் குறுக்கே நிற்கும் இத்தடையை அப்புறப்படுத்துவது என்பதாகும். இத் துப்புரவு இயக்கத்தை மேலும் அதிக உறுதியுடனும், விரைவாகவும், தைரியமாகவும், வெற்றிகரமாகவும் நிறைவேற்றியது குறித்து — நூற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முந்திய மகத்தான பிரெஞ்சுப் புரட்சியைக் காட்டிலும் அதிகமாக

அகலத்திலும் ஆழத்திலும் இவ்வியக்கம் மக்கள்மீது ஏற்ப டுத்திய விளைவுகளின் நிலைப்பாட்டில் இருந்து — நமக்கு நாமே பெருமை பாராட்டிக் கொள்வதில் நியாயமுண்டு. நாம் முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சியை நிறைவு செய்திருக்கிறோம்; இதற்குமுன் இதைச் செய்தவர் யாரு மில்லை. நாம் சோசலிசப் புரட்சியை நோக்கி உணர்வுபூர்வ மாக, உறுதியாக, தடுமாற்றமில்லாத வகையில் முன்னேறிக் கொண்டிருக்கிறோம்; முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சியி னின்றும் சோசலிசப் புரட்சி எந்த ஒரு சீனச் சுவராலும் பிரிக்கப்படவில்லை என்பதை அறிந்துகொண்டே முன்னே றுகிறோம். இறுதியான பகுப்பாய்வில், எவ்வளவு தூரம் நாம் முன்னேற முடியும், இம் மாபெரும் உன்னதமான பணியில் எப்பகுதியை நாம் சாதிக்க முடியும், நம்முடைய வெற்றிகளை ஒன்று திரட்டுவதில் நாம் எந்த அளவுக்கு வெற்றிபெற முடியும் என்பதை போராட்டம் மட்டுமே தீர்மானிக்கிறது என்பதையும் புரிந்துகொண்டே நாம் முன் னேறுகிறோம். காலம் இதை நிரூபிக்கும். ஒரு மகத்தான முயற்சி — அழிந்த, சோர்ந்துபோன பிற்பட்ட ஒரு நாட்டுக்கு இது மகத்தானதுதான் — சமுதாயத்தின் சோசலிச மாற்றத்துக்காகச் செய்யப்பட்டு விட்டது என்பதை இப்பொ ழுதுகூட நாம் காணலாம். (லெ.தொ.நூ. 33.51)

3. சீனப் புரட்சி

*1940* இல் மா சேதுங் எழுதினார்:

முதல் ஏகாதிபத்திய உலகப் போரும், முதல் வெற்றிகரமான சோசலிசப் புரட்சியும் உலக வரலாற்றுப் போக்கு முழுவ தையும் மாற்றியமைத்து, அதை ஒரு புதிய சகாப்தத்தில் பிரவேசிக்க வைத்துள்ளன. அது உலக முதலாளிய அணி ஒரு பகுதியில் வீழ்ந்துவிட்ட சகாப்தம்; மற்ற இடங்களில் எல்லாம் உலக முதலாளியம் தனது நசிவுத் தன்மையை வெளிப்படுத்தியுள்ள சகாப்தம்; எஞ்சியுள்ள முதலாளியப் பகுதிகள் முன்பைக் காட்டிலும் அதிகமாக காலனி மற்றும் அரைக் காலனிகளில் உள்ள விடுதலை இயக்கங்களுக்குத் தனது தீவிர ஆதரவைத் தரத் தயார் என அறிவித்துள்ள சகாப்தம்... இந்த சகாப்தத்தில், ஒரு காலனியிலோ அல்லது அரைக் காலனியிலோ ஏகாதிபத்தியத்துக்கு, அதாவது அனைத்துலக முதலாளியத்துக்கு எதிராக நடத்தப்படும் எந்தப் புரட்சியும், இனி ஒருபோதும் முதலாளி வர்க்க

*ஜனநாயக உலகப் புரட்சி என்ற பழைய வகையினத்தில் அடங்கப் போவதில்லை; அது இனிமேல் ஒருபோதும் பழைய பூர்சுவா அல்லது முதலாளிய உலகப் புரட்சியின் பகுதியாக இருக்கப் போவதில்லை; மாறாக அது புதிய உலகப் புரட்சியின், பாட்டாளி வர்க்க சோசலிச உலகப் புரட்சியின் பகுதியாக அமைகிறது. (மா.தெ.நூ. 2. 343-4, ஒப்: ஸ்.தொ.நூ. 10.244-45)*

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சீனா ஒரு அரை நிலப்பிரபுத்துவ - அரைக்காலனிய நாடாக இருந்தது. சீனாவில் உழவர் வர்க்கத்தைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் நிலப்பிரபுத் துவ நில உடைமையாளர்களாலும், பல்வேறு காலனியச் சக்திகளாலும் சுரண்டப்பட்டனர். இச்சக்திகள் சீனாவின் துறைமு கங்களை ஆக்கிரமித்தன. வங்கிகளின் அதிகாரத்தைக் கைப்பற் றின. தேசத்தைக் கொள்ளையடிப்பதற்கு வர்த்தக வலைப்பின் னலை உருவாக்கின. இச்செயலில் அவர்கள் பணக்கார வணிகர்க ளாலும், லேவாதேவிக்காரர்களாலும், நிதி முதலீட்டுக்காரர்களா லும் ஆதரிக்கப்பட்டனர். இவர்களே பெரு முதலாளிகள் - தரகு முதலாளிகள் அல்லது அதிகார வர்க்க முதலாளிகள் ஆவர். நிலப்பிரபுத்துவ நில உடைமையாளர்கள், தரகு முதலாளிகள் என்ற இவ்விரண்டு வர்க்கங்களே சீனாவில் ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்குச் சமுதாயக் களம் அமைத்துத் தந்தவர்கள் ஆவர்.

இவ்விரண்டு சுரண்டும் வர்க்கங்களுக்கும் மக்கள் திரளின ருக்கும் இடையில் மத்தியதர அல்லது தேசிய முதலாளிகள் நின்றனர். இவர்கள் தொழில் முதலாளிகள்; தேசியத் தொழிற்சா லைகளை உருவாக்க இவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் நிலப்பிரபுத்துவத்தாலும் ஏகாதிபத்தியத்தாலும் சிதறடிக்கப்பட் டன. இக்காரணத்தினால் இவர்கள் மக்களைச் சார்ந்து நிற்கும் நிலையில் இருந்தார்கள். ஆனால் அதே கட்டத்தில் இவர்களே சுரண்டுபவர்களாகவும் இருந்தனர். அதனால் பாட்டாளி வர்க் கத்தை எண்ணி அஞ்சினார்கள்; எனவே ஊசலாட்டப் போக்கு டையவர்களாகவும் இருந்தார்கள்.

நிலப்பிரபுத்துவத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிராக உறுதியாக இருந்த வர்க்கங்கள் உழவர் வர்க்கம், பாட்டாளி வர்க்கம் என்ற இரண்டு வர்க்கங்கள் மட்டுமே. உழவர் வர்க்கத் தில் பெரும்பான்மையினர் ஏழை உழவர்கள் — அதாவது கிராமப்புறப் பாட்டாளிகளும் அரைப் பாட்டாளிகளும் ஆவர்.

தொழிற்சாலைப் பாட்டாளி வர்க்கம் சிறியதாகவே இருந்தது; ஆனால் முதல் உலகப் போருக்குப் பிறகு, சிறப்பாக அக்டோபர் புரட்சிக்குப் பிறகு இது எண்ணிக்கையிலும் செல்வாக்கிலும் விரைவாக வளர்ச்சி பெற்றது:

> புதிய தொழிற்சாலைப் பாட்டாளி வர்க்கத்தின் தொகை கிட்டத்தட்ட இருபது லட்சம் ஆகும். இது பெருந்தொகை அல்ல; ஏனெனில் சீனா பொருளாதாரத்தில் பிற்பட்ட நிலையிலேயே உள்ளது. இந்த 20 லட்சம் தொழிலாளிகளும் இரயில்பாதைத்துறை, சுரங்கம், கப்பல் போக்குவரத்து, நெசவாலைகள், கப்பல் கட்டுமானம் — என்ற ஐந்து தொழில்களிலேயே முதன்மையாக வேலைக்கு அமர்த்தப் பட்டுள்ளார்கள்; பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளி கள் அயல்நாட்டு முதலாளிகளுக்குச் சொந்தமான தொழில் நிறுவனங்களில் அடிமையாக்கப்பட்டுள்ளார்கள். எண்ணிக் கையில் பெரியதாக இல்லாவிட்டாலும், இத்தொழிற்சா லைப் பாட்டாளி வர்க்கம் சீனாவின் புதிய உற்பத்திச் சக்திகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. புதிய சீனாவில் இதுவே மிகவும் முற்போக்கான வர்க்கமாகும். புரட்சிகர இயக்கத்தில் இதுவே தலைமை தாங்கும் சக்தியாக உருவாகி யுள்ளது. (மா.தெ.நூ. 1.18)

இவ்வாறாக, புரட்சிகர இயக்கத்தில் உழவர் வர்க்கம் முதன்மையான அங்கமாகவும், பாட்டாளி வர்க்கம் தலைமைச் சக்தியாகவும் அமைந்தன:

> பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழேதான் ஏழை உழவர்களும் நடுத்தர உழவர்களும் தங்கள் விடுதலையைச் சாதிக்க முடியும்; ஏழை உழவர்களுடனும் நடுத்தர உழவர்க ளுடனும் ஓர் உறுதியான கூட்டை உருவாக்குவதனால் மட்டுமே பாட்டாளி வர்க்கம் புரட்சியை வெற்றிக்கு வழிநடத்திச் செல்ல முடியும். (மா.தெ.நூ. 2.324)

1911 லிருந்து 1927 வரை, நிலப்பிரபுத்துவத்துக்கும் ஏகாதிபத் தியத்துக்கும் எதிராகப் பல புரட்சிகர எழுச்சிகள் தோன்றின; ஆனால் இவற்றில் எதுவுமே வெற்றி பெறவில்லை:

> கறாராகக் கூறுவதெனில், ஏகாதிபத்தியத்துக்கும் நிலப்பிர புத்துவத்துக்கும் எதிரான சீனாவின் முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சி, டாக்டர் சன் யாட்-சென்னால் தொடங்

கப் பெற்றது; இது ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து கொண்டிருக்கிறது... டாக்டர் சன்யாட்-சென்னால் தொடங்கப் பெற்ற புரட்சி வெற்றிகரமானதா? இது பேரரசனை முழுமையாகத் தூக்கியெறிந்த போதிலும், சீனாவை நிலப்பிரபுத்துவ ஏகாதிபத்திய ஒடுக்குமுறையின் கைகளிலேதான் விட்டுச் சென்றது; இப்பொருளில் அது ஒரு தோல்விதான்; எனவே ஏகாதிபத்தியத்துக்கும் நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிரான புரட்சிகரப் பணி நிறைவேற்றப் படாமலே நீடித்தது. *(மா.தெ.நூ. 2.243)*

குவாங்டுங்கில் தொடங்கிய முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சி, பாதி வழியிலேயே நின்றுவிட்டது. ஏனெனில் தரகு வர்க்கமும், நிலப்பிரபுத்துவ வர்க்கமும் தலைமையைக் கைப்பற்றி, புரட்சியை எதிர்ப் புரட்சிப் பாதைக்கு மாற்றின. *(மா.தெ.நூ. 1.63)*

முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சியின் குறிக்கோள்களை அவ்வர்க்கத்தின் தலைமையின் கீழ் அடைய இயலாது என்பதை இத்தோல்விகள் மெய்ப்பித்தன:

சீனப் புரட்சியின் தன்மை என்ன? இன்று நாம் எந்த வகையான புரட்சியைச் செய்துகொண்டிருக்கிறோம்? இன்று நாம் செய்வது முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சி; நாம் செய்வது எதுவும் இந்த எல்லைக்கு அப்பால் செல்வதில்லை. இப்போதைக்கு நாம் பெரும்பாலும் தனிச் சொத்துடைமையைக் கொண்ட முதலாளிய அமைப்பை ஒழித்துவிடக் கூடாது. நாம் ஒழித்துக் கட்ட விரும்புவது ஏகாதிபத்தியத்தையும் நிலப்பிரபுத்துவத்தையுமே. முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சி என்று நாம் கருதுவது இதுதான். ஆனால் இதைச் சாதிப்பது ஏற்கனவே முதலாளி வர்க்கத்தின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டதாகி விட்டது; இது பாட்டாளி வர்க்கத்தின், பரந்துபட்ட மக்களின் முயற்சிகளையே சார்ந்திருக்க வேண்டும். *(மா.தெ.நூ. 2.242)*

எனவே முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சி, ஏகாதிபத்தியத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் எதிர்க்கும் தேசிய முதலாளியம் உட்பட அனைத்து வர்க்கங்களின் ஆதரவுடன் பாட்டாளி வர்க்கத்தால் நடத்தப்பட வேண்டும் என மாவோ கூறினார். இது ஒரு புதுவகை முதலாளிய ஜனநாயகம்; இதைப் பழைய வகையிலான புரட்சியில் இருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்

காக, இதற்குப் 'புதிய ஜனநாயகம்' என அவர் பெயர் சூட்டினார். 1939 இல் அவர் எழுதினார்:

> இப்போதைய கட்டத்தில் சீனப் புரட்சியின் தன்மை உண்மையிலேயே என்னவாக உள்ளது? இது முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சியா அல்லது பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியா? பிந்தியதல்ல, மாறாக முந்தியதுதான் என்பது வெளிப்படை. ஆயினும் இன்றைய சீனாவின் முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சி, பழைய பொதுவகையில் அடங்கியதல்ல; அது இப்போது காலாவதியாகிவிட்டது. ஆனால் புதிய சிறப்பான வகைகளில் ஒன்று. நாம் இந்த வகையை புதிய ஜனநாயகப் புரட்சி என அழைக்கிறோம். இது சீனாவிலும் அதேபோல மற்ற காலனிய, அரைக்காலனிய நாடுகளிலும் வளர்ந்து கொண்டு இருக்கிறது. இப்புதிய ஜனநாயகப் புரட்சி, உலகப் பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் பகுதியாகும். ஏனெனில் இது ஏகாதிபத்தியத்தை அதாவது அனைத்துலக முதலாளியத்தைத் தீர்மானகரமாக எதிர்க்கிறது... ஒரு புதிய ஜனநாயகப் புரட்சி என்பது, ஏகாதிபத்தியத்துக்கும், நிலப்பிரபுத்துவத்துக்கும் எதிராக பாட்டாளி வர்க்கத் தலைமையின்கீழ் பரந்துபட்ட மக்கள் நடத்தும் புரட்சியாகும். இத்தகைய ஒரு புரட்சியின் வழியாக மட்டுமே சீனச் சமுதாயம் சோசலிசத்தை நோக்கி முன்னேற முடியும். வேறுவழி ஏதுமில்லை. (மா.தெ.நூ. 2.326-7, ஒப்: 1.290).

1949 இல் சீனாவில் நிறுவப்பட்ட மக்கள் ஜனநாயகப் புரட்சியின் பரிணாம வளர்ச்சி இந்த வகையிலேதான் அமைந்தது. அது முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சியின் நிறைவையும், பாட்டாளி வர்க்க சோசலிசப் புரட்சியின் துவக்கத்தையும் குறித்தது. சீன மக்களின் ஜனநாயக சர்வாதிகாரம் பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரமாகும். அக்டோபர் புரட்சியினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய சகாப்தத்தில், ஒரு அரைக் காலனிய நாட்டில் நிலவும் நிலைமைகளுக்கு ஏற்ப ஒரு புதிய வடிவில் அமைந்துள்ள பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாகும். இது தொழிலாளிகளையும் உழவரையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு நேச அணியை — அதாவது பாட்டாளி வர்க்கத் தலைமையின்கீழ் பாட்டாளி வர்க்கமும், உழவர் வர்க்கமும் ஒன்றுபட்ட ஒரு நேச அணியை — அடிப்படையாகக் கொண்

டது; இந்த விதத்தில் இது சோவியத் வடிவத்தை ஒத்துள்ளது. ஆனால் இந்த நேச அணியில் அடிப்படையாக இருப்பது, முழு உழவர் வர்க்கத்தையும் தேசிய முதலாளி வர்க்கத்தையும் உள்ள டக்கிய ஒரு பரந்த நேச அணி என்ற உண்மையின் காரணமாக சோவியத் அமைப்பிலிருந்து மாறுபட்டதும் ஆகும். சீனாவில் 1949 இன் புதிய ஜனநாயகப் புரட்சியில், பாட்டாளி வர்க்கத்தின் தலைமையை தேசிய முதலாளி வர்க்கம் ஒப்புக் கொள்ளும் வகையில், பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடு கையாளப்பட்டது.

லெனினின் இடையறாத புரட்சி பற்றிய தத்துவத்தால் பாட்டாளி வர்க்கம் வழிகாட்டப்பட்டதாலேயே இது சாத்தியமா யிற்று. இத்தத்துவம் சீனாவின் திட்டவட்டமான நிலைமைக ளுக்கு ஏற்ப மா சேதுங்கால் பிரயோகப்படுத்தப்பட்டது.

அத்தியாயம் — 3

# பாட்டாளி வர்க்கமும் உழவர் வர்க்கமும்

*முந்திய வரலாற்று இயக்கங்கள் அனைத்தும் சிறுபான்மை யினரின் இயக்கங்களாக அல்லது சிறுபான்மையினரின் நலன்களுக்காக நடத்தப்பட்ட இயக்கங்களாக இருந்தன. பாட்டாளி வர்க்க இயக்கமோ மிகப் பெரும்பான்மையினரின் தன்னுணர்வு மிக்க சுதந்திரமான இயக்கமாகும். நமது இன்றைய சமுதாயத்தில் மிகவும் அடிமட்டத்தில் உள்ள பாட்டாளி வர்க்கம், அதிகார சமுதாயத்தில் உள்ள மேலாண் மைப் பிரிவினர் அனைவரையும் தூக்கி எறியாமல் கிளர்ந்தெ ழவோ, தன்னை மேலே உயர்த்திக் கொள்ளவோ இயலாது.*

— பொதுவுடைமை அறிக்கை.

## 1. பாட்டாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம்

நவீன சமுதாயத்தில் ஒரே ஒரு புரட்சிகர வர்க்கம்தான் உள்ளது:

*முதலாளியச் சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கம் மட்டும்தான் உண்மையிலேயே புரட்சிகரமான வர்க்கம் என்ற மறுக்க முடியாத உண்மையைத்தான் 'பொதுவுடைமை அறிக்கை' தொட்டு நவீன சோசலிச இயக்கம் அனைத்தும் அடிப்படை யாகக் கொண்டுள்ளது. மற்ற வர்க்கங்கள் ஓரளவுக்கும், குறிப்பிட்ட சில நிலைமைகளின் கீழும் புரட்சிகரமானவை யாக மாறலாம், மாறுகின்றன. (லெ.தொ.நூ. 6.197, ஒப்: 16.356)*

பாட்டாளி வர்க்கம் இந்த இடத்தைப் பெற்றது எவ்வாறு என்பதை அறிந்து கொள்ள வேண்டியது முக்கியமானது.

பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடை யிலுள்ள பகை, முதலாளிய சமுதாயத்தின் அடிப்படையான முரண்பாட்டை வெளிப்படுத்துகிறது. அதாவது உற்பத்தியின் சமுதாயத் தன்மைக்கும், உடைமையின் தனியார் தன்மைக்கும் இடையிலுள்ள முரண்பாடாக வெளிப்படுகிறது. சிறு அளவு உற்பத்தி, பெரும் அளவு உற்பத்திக்கு இடம்விட்டு முதலாளியம் வளர வளர, உற்பத்திக்கும் உடைமைக்கும் இடையே உள்ள முரண்பாடு கடுமையாகிறது, தனி உடைமை முறை தகர்க்கப் பட்டு பொதுவுடைமை முறைக்கு அதாவது சோசலிசத்துக்கு இடமளிக்கப்படுகிற வரையில் இத்தீவிர நிலை நீடிக்கிறது.

முதலாளிய உற்பத்தியின் அலகு தொழிற்சாலையாகும்; இங்கு தொழிலாளிகள் ஏராளமான எண்ணிக்கையில் ஒன்று சேர்க்கப்படுகிறார்கள். இந்தத் தொழிலாளிகளுக்கு தங்களுடைய உழைப்புச் சக்தியைத் தவிர வேறு உடைமை ஏதுமில்லை. உயிர் வாழ்வதற்காக இதை அவர்கள் முதலாளிகளுக்கு விற்கிறார்கள். உழைப்பாளிகள் அனைவரிலும் மிகக் கடுமையாக சுரண்டப்படு கிறவர்கள் இவர்கள்தான். ஆனால் ஒன்றுசேர்ந்து உழைப்பத னால், தற்காப்புக்காக தங்களை அமைப்புக்குட்படுத்திக் கொள் ளும் நிலையைப் பெற்றுள்ளனர். தங்களுடைய பொது எதிரிக்கு எதிராக அவர்கள் ஒன்றுபட்ட நிலைபாட்டை எடுக்கிறார்கள், வர்க்க உணர்வுடையவர்களாகிறார்கள்: தொழிற்சங்கங்களை நிறு வுகிறார்கள்; சுதந்திரமான பாட்டாளி வர்க்கக் கட்சி ஒன்றை உருவாக்குகிறார்கள். தங்களுடைய போராட்டத்தின் விளைவா கிய மார்க்சிய சித்தாந்தத்தையே தங்களது ஆயுதமாக தரித்துக் கொள்கிறார்கள்:

> தொழிலாளிகளின் சொந்த வாழ்க்கை நிலைமையே அவர்க ளைப் போராடும் ஆற்றலுடையவர்கள் ஆக்குகிறது; அவர்க ளைப் போராடும்படி தூண்டுகிறது. பெரு நகரங்களில் மூலதனம், தொழிலாளிகளை மாபெரும் அளவில் சேர்க்கி றது. அவர்களை இணைக்கிறது; ஒன்றுபட்டு செயல்படும் படி கற்பிக்கிறது. தங்களுடைய பொது எதிரியாகிய முத லாளி வர்க்கத்தை ஒவ்வொரு கட்டத்திலும் அவர்கள் நேருக்கு நேர் சந்திக்கிறார்கள். இந்த எதிரியுடன் நடத்தும் போரில், தொழிலாளி ஒரு சோசலிசவாதி ஆகிறார்; இச்சமு தாயம் அனைத்தையுமே முழுமையாக மறுகட்டுமானம் செய்ய வேண்டிய அவசியத்தையும், எல்லாவிதமான வறு மையையும் ஒடுக்குமுறையையும் முற்றாக ஒழித்துக்கட்ட வேண்டிய தேவையையும் உணர்கிறார். (லெ.தொ.நூ. *16.301*, ஒப்: *7.415*)

முதலாளியச் சமுதாயம் பற்றி அறிந்து கொள்வதில் பாட் டாளி வர்க்கம், தனது நடைமுறையின் முதலாவது கட்டத் தில் — அதாவது புலனறிவுக் கட்டத்திலேயே இருந்தது; அதாவது பாட்டாளி வர்க்கம் எந்திரங்களை உடைத்தெறிந்த கட்டம், தன்னெழுச்சியான போராட்டங்களை நடத்திய கட்டம். முதலாளியத்தின் சில கூறுகளையும் அதன் புற உறவுகளையும் மட்டுமே இது அறிந்திருந்தது. அப்பொ ழுது, பாட்டாளி வர்க்கம் இன்னும் 'தனக்குள்ளேயே

இருந்த வர்க்கமாகவே' இருந்தது. ஆனால் அது நடைமுறையின் இரண்டாவது கட்டத்தை, அதாவது உணர்வுபெற்ற, அமைப்பு ஒழுங்குக்கு உட்பட்ட பொருளாதார அரசியல் போராட்டங்கள் நடத்திய கட்டத்தை அடைந்தபொழுது, முதலாளியச் சமுதாயத்தின் சாரத்தையும், சமுதாய வர்க்கங்களுக்கு இடையில் உள்ள சுரண்டல் உறவுகளையும், தனக்குரிய வரலாற்றுக் கடமையையும் புரிந்து கொண்டது; அது தனது சொந்த நடைமுறையின் காரணமாகவும், தனது நீண்ட போராட்ட அனுபவத்தினாலும் இதைப் புரிந்து கொள்ள இயன்றது. பாட்டாளி வர்க்கத்தின் கல்விக்கான மார்க்சியத் தத்துவத்தை உருவாக்குவதற்காக இவ் அனுபவங்களின் அனைத்து வகைகளையும் மார்க்சும் ஏங்கல்சும் விஞ்ஞான வகையில் தொகுத்தார்கள். இதற்குப் பிறகுதான் பாட்டாளி வர்க்கம் 'தனக்காக ஆன'தொரு வர்க்கமாகியது. *(மா.தெ.நூ. 1.301, ஒப்: 3.12)*

இவ்வாறாக, முதலாளிய சமுதாயத்தில் உள்ள முதன்மையான முரண்பாட்டின் முதன்மையான கூறுடன் உணர்வோடு ஒன்றுபடுவதன் காரணமாகவே, பாட்டாளி வர்க்கம் தனது தலைமைப் பாத்திரத்தை ஏற்கிறது என சொல்லலாம். இது மனித சமுதாயத்தின் மிக நீண்ட கால நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. முதலாளிய உற்பத்திச் சக்திகளின் முழுமையான வளர்ச்சிக்குக் குறுக்கீடாக நிற்கும் நிலப்பிரபுத்துவத்தை முதலாளியம் தூக்கி எறிவது போலவே, உற்பத்திச் சக்திகளை விடுவித்து, அவற்றை மேற்கொண்டும் வளர்ப்பதற்காக, பாட்டாளி வர்க்கம் முதலாளிய அமைப்பு முறையைத் தூக்கி எறிகிறது. இவ்வளர்ச்சி, வர்க்கங்களாகப் பிரிவுபடும் சமுதாயப் பிரிவினைக்கும், மனிதனை மனிதன் சுரண்டுவதற்கும் முற்றுப் புள்ளி வைக்கும்.

## 2. தொழிலாளர் - உழவர் நேச அணி

பாட்டாளி வர்க்கத்துக்கு மாறாக, உழவர் வர்க்கம் சிறு அளவு உற்பத்தியோடும் தனியார் உடைமையோடும் பிணைந்துள்ளது:

தொழிலாளிக்கு என்று சொந்தமாக உற்பத்திச் சாதனங்கள் ஏதுமில்லை; அவன் தன்னை, தன்னுடைய கைகளை, தனது உழைப்புச் சக்தியை விற்பனை செய்கிறான். உழவனுக்கோ, கருவிகள், ஆடுமாடுகள், சொந்த நிலம் அல்லது குத்தகை நிலம் என உற்பத்திச் சாதனங்கள் சொந்தமாக இருக்கின்

றன. அவன் சிறு உடைமையாளனாக, சிறு முதலீட்டுக்கார னாக, சிறு முதலாளியாக இருந்து தனது பண்ணை உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்கிறான். (லெ.தொ.நூ. 18.37, ஒப்: 22. 95). சிறு உடைமையாளர்கள் என்ற வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் உழவர்கள். விடுதலைக் கான போராட்டத்திலும், சோசலிசத்துக்கான போராட்டத்தி லும் இந்த வர்க்கம், தொழிலாளிகளைக் காட்டிலும் மிகவும் சாதகக் குறைவான நிலையிலேயே அமைந்துள்ளது; பெரிய தொழில் நிறுவனங்களில் உழைக்கும் வாய்ப்பு அவர்க ளுக்கு இல்லாததனால் அவர்கள் ஒன்றுபடுவதற்கில்லை; மாறாக, சிறிய, தனித்தனியான பண்ணைத் தொழிலால் அவர்கள் சிதறுபடுகிறார்கள். முதலாளி என்ற உருவில் வெளிப்படையான, தெளிவான ஒரே தனி எதிரியைத் தொழிலாளிகள் காண்பதுபோல, அவர்கள் தங்களுக்கு முன்பாக ஒரே பொது எதிரியைக் காண்பதில்லை. குறிப் பிட்ட அளவுக்கு அவர்கள் தாங்களே ஆண்டைகளாகவும் உடைமையாளர்களாகவும் உள்ளனர். (லெ.தொ.நூ. 11. 394, ஒப்: 29. 365)

இவ்வாறு இருந்த போதிலும், முதலாளியத்தின் ஏற்றத் தாழ்வான வளர்ச்சி காரணமாக, உழவர் வர்க்கத்தின் பெருந்திர ளானவர்களை பாட்டாளி வர்க்கம் தனது பக்கத்துக்கு வென்றெ டுக்கும் சில குறிப்பிட்ட நிலைமைகள் இருக்கவே செய்கின்றன.

மேற்கு ஐரோப்பாவில் வளர்ச்சியடைந்ததற்குப் பின்பு தான் முதலாளியம் ரசியாவில் வளர்ச்சியுற்றது. இந்த ஒரு காரணத்தி னாலேயே மேற்கு நாட்டு மூலதனத்தினால் ஓரளவு ஆதரவளிக் கப்பட்டு, இங்கு அது மிகவும் வேகமாக வளர்ந்தது. இதன் விளைவாக, நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் முதன்மையான முரண்பாடாகிய உழவர் வர்க்கத்துக்கும் நிலப்பிரபுக்களுக்கும் இடையிலுள்ள பகை தீர்க்கப்படுவதற்கு முன்பே - முதலாளிய சமுதாயத்தின் முதன்மையான முரண்பாடாகிய பாட்டாளி வர்க் கத்துக்கும் முதலாளியத்துக்கும் இடையிலுள்ள பகை ஒரு புரட்சிகரமான கட்டத்தை அடைந்தது. இவ்விரண்டு முரண்பாடு களும் பின்னிப் பிணைந்தன. இந்த நிலைமைகளில், பெருமுத லாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் இடையே ஏற்பட்ட நேச அணியை எதிர்கொண்ட பாட்டாளி வர்க்கம், உழவர் வர்க்கத்து டன் சேர்ந்து நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு நேச அணியை உருவாக்கி யது. அப்படி உருவாக்கி, மக்களில் பெருந்திரளானவர்களைத்

தனது பக்கம் அணிசேர்த்தது. தொழிலாளிகளுக்கும், உழவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட இந்த நேச அணி, புரட்சி இயக்கத்தின் அடிப்படையாக அமைந்தது:

பாட்டாளி வர்க்கம் வெற்றி பெறுவதற்கு தன்னளவிலேயே போதுமான வலிமை உடையதாக இல்லை. நகர்ப்புற ஏழைகள் தனிப்பட்ட நலன்கள் எதையும் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை; பாட்டாளி வர்க்கத்துடனும் உழவர் வர்க்கத்துடனும் ஒப்பிடுகையில் அவர்கள் ஒரு சுதந்திரமான சக்தியும் அல்லர். கிராமப் புற மக்களுக்கு தீர்மானகரமான பாத்திரம் உண்டு. அவர்களே போராட்டத்துக்கு தலைமை வகிக்கக் கூடியவர்கள் என்பதல்ல இதன் பொருள் — இதில் பிரச்சினைக்கே இடமில்லை — வெற்றியை உறுதி செய்யக் கூடிய நிலையில் இருந்தார்கள் என்பதே இதன் பொருள். (லெ.தொ.நூ. 11. 343)

பாட்டாளி வர்க்கம் மட்டுமே ஜனநாயகப் புரட்சியை நிறைவுபடுத்த முடியும்; இதற்குரிய நிபந்தனை என்னவெனில், நவீன சமுதாயத்தில் பாட்டாளி வர்க்கம் மட்டுமே முற்றுமுழுக்கப் புரட்சிகரமான வர்க்கமாக இருக்கின்ற காரணத்தால், நில உடைமையை எதிர்த்தும் நிலப்பிரபுத்துவ அரசை எதிர்த்தும் போராட்டம் நடத்தும் உழவர் வர்க்கத்தின் பெருந்திரளானவர்களுக்கு அது தலைமை தாங்குகிறது; அவர்களுக்கு அரசியல் உணர்வைப் புகட்டுகிறது. (லெ.தொ.நூ. 12. 130).

முதலாளியம், ரசியாவில் வளர்ச்சியுற்றதற்கு மிகவும் பின்னால்தான் சீனாவில் வளர்ந்தது. இது ஏகாதிபத்திய ஒடுக்குமுறையின் பாதிப்பின் கீழ், நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் உள்முரண்பாடுகளில் இருந்தே வளர்ச்சியுற்றது:

வணிகர்கள், நிலப்பிரபுக்கள், அதிகாரிகள் ஆகியோரின் ஒரு பிரிவினர் சீன முதலாளி வர்க்கத்தின் முன்னோடிகளாக இருந்ததைப் போலவே, உழவர், கைவினைஞர்கள் ஆகியோரின் ஒரு பிரிவினர் சீனப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னோடிகளாக இருந்தனர். இரு முற்றிலும் வேறான சமூக வர்க்கங்களாகிய சீன முதலாளி வர்க்கமும் பாட்டாளி வர்க்கமும் புதிதாகப் பிறந்தவை; சீன வரலாற்றில் இதற்கு முன்பு ஒருபோதும் நிலவியிராதவை. நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் கருப்பையிலிருந்த அவை, புதிய வர்க்கங்க

ளாகப் படிப்படியாக வளர்ச்சி பெற்றன. அவை, சீனாவின் பழைய (நிலப்பிரபுத்துவ) சமுதாயத்தில் இருந்து பிறந்த இரட்டையர்கள்; பிறந்தபோதே ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டவையாகவும், ஒன்றுக்கொன்று பகைமை கொண்டவையாகவும் இருப்பவை. எவ்வாறு இருப்பினும், சீனப் பாட்டாளி வர்க்கம் சீனத் தேசிய முதலாளி வர்க்கத்துடன் மட்டுமல்லாது, ஏகாதிபத்தியவாதிகளால் சீனாவில் நேரடியாக இயக்கப்பட்ட தொழில் நிறுவனங்களுடனும் ஒன்றாகத் தோன்றி வளர்ந்தது. எனவே சீனப் பாட்டாளி வர்க்கத்தின் ஒரு பெரும் பிரிவு, சீன முதலாளி வர்க்கத்தைக் காட்டிலும் முதியதும், கூடுதலான அனுபவம் உடையதும் ஆகும். எனவே, அது சீன முதலாளி வர்க்கத்தைக் காட்டிலும் பெரிய, பரந்த அடிப்படையைக் கொண்ட சமூக சக்தியாகும். (மா.தெ.நூ. 2. 310)

இந்த நிலைமைகளில் தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்கள், ஏகாதிபத்தியவாதிகள் ஆகியோரது நேச அணியை எதிர்கொண்ட பாட்டாளி வர்க்கம், உழவர் வர்க்கத்துடன் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு - ஏகாதிபத்திய எதிர்ப்பு நேச அணி ஒன்றை உருவாக்கியது; அதன் காரணமாக, தேசிய முதலாளிகளையும் சேர்த்து பரந்துபட்ட மக்களைத் தனது பக்கம் அணிதிரட்டியது:

சீனப்பாட்டாளி வர்க்கம், மிக உயர்ந்த அரசியல் உணர்வும் அமைப்பு உணர்வும் பெற்ற ஒரு வர்க்கமாக இருந்தபோதிலும், தனது சொந்த பலத்தினால் மட்டுமே அது வெற்றிபெற முடியாது என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். வெற்றி பெறுவதற்காக, மாறிவரும் சூழ்நிலைமைகளுக்கு ஏற்ப, புரட்சியில் பங்கேற்கக் கூடிய எல்லாவித வர்க்கங்களுடனும் சமூகத் தட்டுகளுடனும் ஒன்றுபட்டு, ஒரு புரட்சிகர ஐக்கிய முன்னணியை அது அமைக்கவேண்டும். சீனச் சமுதாயத்தில் உள்ள அனைத்து வர்க்கங்களிலும், உழவர் வர்க்கம் தான் உழைக்கும் வர்க்கத்தின் உறுதியான கூட்டாளி; நகர்ப்புறச் சிறு முதலாளி வர்க்கமும் நம்பகமான கூட்டாளி; தேசிய முதலாளி வர்க்கம், குறிப்பிட்ட காலங்களில் குறிப்பிட்ட அளவுக்கு உடன்வரும் கூட்டாளி. இது சீனாவின் நவீன புரட்சிகர வரலாற்றினால் உருவாக்கப்பட்ட அடிப்படை நியதிகளில் ஒன்றாகும். (மா.தெ.நூ. 2. 325)

சீனாவில் உழவர் வர்க்கத்துக்கென்று எந்த ஒரு அரசியல் கட்சியும் இல்லை என்ற உண்மையே, உழவர் வர்க்கத்தின் மீது பாட்டாளி வர்க்கத்தின் செல்வாக்கை அதிகரித்தது:

> உழவர்களுக்கென்று தனியாக அரசியல்கட்சி எதுவும் சீனாவில் இல்லை; தேசிய முதலாளிகளின் அரசியல் கட்சிகளுக்கோ முழுமையான நிலச்சீர்திருத்தத் திட்டம் எதுவும் இல்லை. எனவே, உழவர்களுக்கும் மற்றுமுள்ள அனைத்துப் புரட்சிகர ஜனநாயகவாதிகளுக்கும் சீனப் பொதுவுடைமைக் கட்சி தலைவனாகியது. ஏனெனில் சீனப் பொதுவுடைமைக் கட்சி மட்டும்தான் முழுமையான நிலச்சீர்திருத்தத் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தியது; உழவர்களின் நலன்களுக்காக மனப்பூர்வமாகப் போராடியது; இவ்வாறு உழவர்களில் மிகப் பெரும்பான்மையினரை தனது மகத்தான கூட்டாளியாக வென்றெடுத்தது. (மா.தெ.நூ. 3. 298)

எனவே, ரசியாவில் இருந்ததைப் போல் சீனாவிலும் தொழிலாளர் - உழவர்களின் நேச அணியே புரட்சிகர இயக்கத்தின் அடிப்படையாக அமைந்தது:

> நமது அனுபவங்களைத் தொகுத்து, அவை அனைத்தையும் ஒரு புள்ளியில் மையப்படுத்திக் கூறுவதெனில், இது பாட்டாளி வர்க்கத்தின் (பொதுவுடைமைக் கட்சியின் வழியாக) தலைமையின் கீழ் அமைந்த மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் ஆகும்; இது தொழிலாளர் - உழவர்களின் நேச அணியை அடிப்படையாகக் கொண்டது. (மா.தெ.நூ. 4. 422)

இவ்விரண்டு நாடுகளிலும் பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கிய இயக்கங்களில் இவ்வர்க்கம் சிறுபான்மையானதாக மட்டுமே இருந்தது; ஆனால் லெனினது பார்வையின் படி, பாட்டாளி வர்க்கத்தின் வலிமை அதனுடைய எண்ணிக்கையைக் கொண்டு அளவிடப்படக்கூடியதல்ல;

> எந்த ஒரு முதலாளிய நாட்டிலும் மொத்த மக்கள் தொகையில், பாட்டாளி வர்க்கம் பிரதிநிதித்துவப்படுத்தும் விகிதாச்சாரத்தைவிட அதன் வலிமை மிகவும் பெரியதாக இருக்கும். ஏனெனில் பாட்டாளி வர்க்கம், முதலாளியப் பொருளாதார அமைப்பு முழுவதன் உயிர் நாடியாக விளங்குகிறது; மேலும் முதலாளியத்தின் கீழுள்ள மிகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் உண்மையான நலன்களைப்

பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அது வெளியிடுகிறது. (லெ.தொ.நூ. 30. 274, ஒப்: 3.31)

அதுமட்டுமல்லாமல், ரசியாவிலும் சீனாவிலும் பாட்டாளி வர்க்கம் எண்ணிக்கையில் சிறியதாக இருந்த போதிலும், சீர்திருத் தவாதச் செல்வாக்கிலிருந்து ஒப்பீட்டு நோக்கில் விடுபட்டிருந் தது. ரசியத் தொழிலாளிகளைப் பற்றி லெனின் குறிப்பிட்டார்:

> ரசியாவில் அறிவாளிகள், சிறுமுதலாளிகள் ஆகியோரிடை யில் சந்தர்ப்பவாதம், சீர்திருத்தவாதம் முதலியவை தொடர்ச்சியாய் நிழல் விரித்ததை நாம் கண்டோம்; ஆனால் தொழிலாளிகளில், அரசியலில் தீவிரமாகச் செயலாற்றிய பிரிவுகளில் மிகவும் அற்ப சொற்பமான சிறுபான்மையி னரை மட்டும்தான் இவை பாதித்தன. நமது நாட்டில் தொழிற்சாலைத் தொழிலாளிகள், மற்றும் எழுத்தர்கள் மத்தியில் சிறப்புச்சலுகை பெற்ற பிரிவு மிகவும் சிறியது. சட்டத்தை வழிபடும் போக்கு இங்கு தோன்றவே முடிய வில்லை. (லெ.தொ.நூ. 21. 319, ஒப்: 19. 160)

சீனத் தொழிலாளிகளைப் பற்றி மா சேதுங்கும் இதையே கூறுகிறார்:

> சீர்திருத்த வாதத்துக்கான பொருளாதார அடித்தளம், ஐரோப் பாவில் இருப்பதைப்போல, காலனிய அரைக் காலனிய சீனாவில் ஏதும் இல்லை; எனவே விதிவிலக்காக அமைந்த மிகச்சில கருங்காலிகளைத் தவிர பாட்டாளி வர்க்கம் முழுவதுமே மிகுந்த புரட்சிக் குணமுடையதாக இருக்கி றது. (மா.தெ.நூ. 2. 324)

எனவே, பாட்டாளி வர்க்கத்துக்குரிய பாத்திரத்தில் தீர்மான மான காரணியாக இருப்பது, அதனுடைய எண்ணிக்கை, வலு வல்ல, மாறாக அதனுடைய அரசியல் வலிமையே.

### 3. உழவர் வர்க்கத்தைப் பாகுபடுத்திப் பார்த்தல்

1861-இன் விவசாயச் சீர்திருத்தத்துக்கும் முன்னால் ரசிய நாட்டுப்புறங்களில் இருந்த உற்பத்தி உறவுகள் முதன்மையாக நிலப்பிரபுத்துவ உறவுகளாகும். கிராமம் அல்லது ஒரு சில கிராமங்களின் தொகுதி, உற்பத்திப் பிரிவாக இருந்து வந்தது; அப்பிரிவு பொருளாதார ரீதியாகத் தன்னிறைவு பெற்றிருந்தது. உற்பத்தி செய்தவற்றையெல்லாம் ஒன்று, உற்பத்தி செய்தவர் களே நுகர்ந்தார்கள், அல்லது நிலவுடைமையாளர்கள் நுகர்ந்தார்

கள். அந்நிலவுடைமையாளர்களுக்கு அவர்கள் கொத்தடிமைக ளாக இருந்தனர். விளைச்சலில் உபரி இருந்தால், அது அங்குள்ள சந்தையில் விற்கப்பட்டது. நல்ல விளைச்சல் இன்மை, கடன்கள் ஆகியவற்றால் உழவர்களில் பலர் வறுமையுற்றனர்.

1861-க்குப் பிறகு, சரக்கு உற்பத்தியில் விரைவான வளர்ச்சி ஏற்பட்டதன் காரணமாக, மேலே கண்ட நிலவுடைமை உறவுகள் முதலாளிய உறவுகளாகப் பெரிய அளவில் மாறுதலடைந்தன. ஆனால் அதே சமயத்தில் பெருநில உடைமையாளர்கள், தங்களு டைய நிலப்பிரபுத்துவ உரிமைகளில் பலவற்றைத் தக்கவைத்துக் கொண்டார்கள். இவ்வாறாக அவை முதலாளியத்தின் தொடர்ந்த வளர்ச்சிக்குத் தடையாக அமைந்தன. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தின் போது, கிராமப்புற மக்களில் 15 சதவீதம் பணக்கார உழவர்களாக இருந்தனர், அதாவது கூலி உழவர்களை வேலைக்கமர்த்திய முதலாளியப் பண்ணையாளர்களாவர். 65 சதவீதத்தினர் ஏழை உழவர்களாக, அதாவது கிராமப்புறப் பாட்டாளிகள் அல்லது அரைப் பாட்டாளிகளாக இருந்தனர். அவர்களுக்கென்று அற்பசொற்ப நிலங்கள் இருந்தன, அல்லது நிலமே இல்லாமல் இருந்தது. தங்களது உழைப்புச் சக்தியை விற்றே அவர்கள் வாழ்க்கை நடத்தினார்கள். எஞ்சி இருந்தவர் கள் நடுத்தர உழவர்கள், அதாவது சிறுநில உடைமையாளர்கள். இவர்கள் தொடர்ச்சியாகப் பாட்டாளி வர்க்கத்துக்குள் தள்ளப் பட்டார்கள். (லெ.தொ.நூ. 6. 389, 28.56)

நிலப்பிரபுத்துவ உறவுகளை முழுமையாக ஒழிப்பதில் உழவர் வர்க்கத்தின் எல்லாப் பிரிவினருக்கும் ஒரு பொது நலன் இருந்தது. ஆனால் உழவர் வர்க்கத்துக்கும் நிலப்பிரபுத்துவ நிலவுடைமையாளர்களுக்கும் இடையில் உள்ள இந்த முரண் பாட்டோடு, உழவர் வர்க்கத்துக்குள்ளேயே ஆழமடைந்து வந்த பிளவு ஒன்று இருந்தது. இது சிறப்பாக 1905-க்குப் பிறகு கிராமப்புற முதலாளி வர்க்கமாகவும் (குலாக்குகள்), கிராமப்புற பாட்டாளி வர்க்கமாகவும் விரைவாகப் பிளவுபட்டது. (லெ.தொ.நூ. 15. 42). இவ்வாறு பாட்டாளி வர்க்கத்தின் கட்சியாகிய சமூக - ஜனநாயகக் கட்சி[1] முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சிக்கு ஆதரவாக அனைத்து உழவர் வர்க்கத்தை யும் ஒன்று சேர்க்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. அதே சமயத்தில், சோசலிசத்துக்காகப் போராடும் தொழிற்சா லைப் பாட்டாளிகளோடு ஒன்றுபடும் சக்திகளாக இணைவதில் தான், ஏழை மற்றும் நடுத்தர உழவர்களின் நீண்டகால நலன்கள்

அடங்கி இருக்கின்றன என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்தியது:

> தங்கள் முன்பு உழவர் இயக்கம் இரண்டம்சப் பணியை முன் வைக்கிறது என சமூக ஜனநாயகவாதிகள் திரும்பத் திரும்பச் சுட்டிக் காட்டினர். கேள்விக்கிடம் இல்லாதபடி நாம் இந்த இயக்கத்தை, இது ஒரு புரட்சிகர ஜனநாயக இயக்கமாக இருக்கின்ற காரணத்தால், ஆதரிக்க வேண்டும்; இதை மேலும் மேலும் தூண்டவேண்டும். அதே சமயத்தில் தடுமாற்றமில்லாத வகையில் நாம் நமது பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தைப் பராமரிக்க வேண்டும். நாம் நகர்ப்புறப் பாட்டாளி வர்க்கத்தை அமைப்புவகைப் படுத்துவது போல கிராமப்புற பாட்டாளி வர்க்கத்தையும் அமைப்புக்குள் கொண்டு வந்து, நகர்ப்புறப் பாட்டாளி வர்க்கத்துடன் அதை இணைத்து சுதந்திரமான வர்க்கக் கட்சி ஒன்றை அமைக்க வேண்டும். அதனுடைய நலன்கள் முதலாளிய உழவர் வர்க்க நலன்களுக்கு எதிரானவை என்பதை நாம் அதனிடம் விளக்கவேண்டும். சோசலிசப் புரட்சிக்காகப் போரிடும்படி நாம் அதற்கு அறைகூவல் விடுத்தாக வேண்டும்; உழவர் வர்க்கத்தின் பல்வேறு பிரிவுகளை சிறுமுதலாளி வர்க்கமாக மாற்றுவதால், ஒடுக்குமுறையிலிருந்தும் வறுமையிலிருந்தும் அதற்கு விடுதலை வரப்போவதில்லை, மாறாக முதலாளிய அமைப்பு முழுவதையுமே அகற்றி சோசலிச அமைப்பை நிறுவுவதில் மட்டுமே அதன் விடுதலை அடங்கி இருக்கிறது என்பதை நாம் சுட்டிக்காட்டியாக வேண்டும். (லெ.தொ.நூ. 8.231, ஒப்: 4.422, 9.237, 10.438)

விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் ஏற்படும் ஒவ்வொரு முன்னேற்றமும் முதலாளிய சமுதாயத்தில் உள்ள சிறு அளவு உற்பத்தியின் அடிப்படைகளைத் தவிர்க்க முடியாதபடியும், தொடர்ச்சியாகவும் பலவீனப்படுத்துகிறது. சோசலிச அரசியல் பொருளாதாரத்துக்கு பின்வரும் பணிகள் உண்டு: பெரும்பாலும் சிக்கலான, நுணுக்கமான இந்நிகழ்ச்சிப் போக்கை அதனுடைய எல்லா வடிவங்களிலும் ஆய்வு செய்வதும், முதலாளியத்தின் கீழ், சிறு உற்பத்தியாளன் தனக்குரிய சொத்தை தக்க வைத்துக் கொள்ள இயலாது என்பதை அவனுக்கு உணர்த்துவதும், முதலாளியத்தின் கீழ், பண்ணைத் தொழில் செய்வதன்

பயனற்ற தன்மையை உழவர்க்கு உணர்த்துவதும், பாட்டாளி வர்க்க நிலைபாட்டை உழவர் ஏற்கவேண்டிய தேவையை தெளிவுபடுத்துவதுமே அப்பணிகள். (லெ.தொ.நூ. 15. 35)

சிறு உழவனுக்கு பாட்டாளி கூறுகிறான்; நீ ஒரு அரைப்பாட்டாளி; எனவே தொழிலாளர்களின் தலைமையைப் பின்பற்று. அது ஒன்றே உனக்கு விமோசனம். சிறு உழவனுக்கு முதலாளி சொல்கிறான்: நீ ஒரு சிறு உடைமையாளன்; 'உழைக்கும் பண்ணையாளன்'. முதலாளியத்தின் கீழும் உழைப்பாளியின் பொருளாதாரம் நன்றாக 'வளர்கிறது'. நீ இருக்க வேண்டியது உடைமையாளர்களுடன் தான் — பாட்டாளிகளுடன் அல்ல.

சிறு உடைமையாளனுக்கு இரண்டு மனங்கள். ஒன்று பாட்டாளி வர்க்க மனம்; மற்றொன்று 'சொத்துடைமை' மனம். (லெ.தொ.நூ. 20. 216)

தனிப்பட்டவர் சாகுபடி ரசியாவில் நிறுவப்படுவதற்கு நெடுங்காலத்துக்கு முன்னரே சீனாவில் நிறுவப்பட்டுவிட்டது. ஆயினும் சீனாவில் 1949 வரைக்கும் உற்பத்திமுறை முதன்மையாக நிலப்பிரபுத்துவ முறையாகவே இருந்தது என்பதைப் பார்க்கிறோம்:

பெருந்திரளான உழவர் வர்க்கங்களிடையே ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, தனிப்பட்டவர் பொருளாதார அமைப்பே நிலவி வந்துள்ளது. ஒவ்வொரு குடும்பமும் அல்லது வீடும் ஒரு உற்பத்திப் பிரிவாக இருக்கிறது. இப்படிச் சிதறிக் கிடந்த தனிப்பட்டவர் உற்பத்தி வடிவம், நிலப்பிரபுத்துவ ஆட்சியின் பொருளாதார அடிப்படையாக இருக்கிறது; இது உழவர்களை நிரந்தரமாக வறுமையிலேயே வைத்திருக்கிறது. (மா.தொ.நூ. 3.156, ஒப்: 1. 16)

1939 இல் உழவர் வர்க்கத்தைப் பற்றி பின்வரும் மதிப்பீடு செய்யப்பட்டது.

சீனாவின் மொத்த மக்கள் தொகையில் ஏறத்தாழ 80 சதவீதமாக உழவர் வர்க்கம் அமைந்துள்ளது. சீனாவின் இன்றைய தேசிய பொருளாதாரத்தில் இதுவே முதன்மையான சக்தியாகும்.

உழவர் வர்க்கத்திடையில் இரு எதிரெதிர்ப் பிரிவுகள் கூர்மையாகப் பிளவுபடும் இயக்கம் நடந்தேறி வருகிறது. முதலாவதாக, பணக்கார உழவர்கள். இவர்கள் கிராமப்

புற மக்கள் தொகையில் 5 சதவீதமாக (அல்லது நிலப்பிரபுக் களுடன் சேர்த்து மதிப்பிடப்படுகையில் 10 சதவீதமாக) அமைந்துள்ளார்கள்; இவர்கள் கிராமப்புற முதலாளி வர்க் கத்தை உருவாக்குகிறார்கள். சீனாவின் பெரும்பாலான பணக்கார உழவர்கள் அரை நிலப்பிரபுத்துவத்தன்மை வாய்ந்தவர்கள். ஏனெனில் இவர்கள் தங்கள் நிலத்தின் ஒரு பகுதியைக் குத்தகைக்கு விடுகிறார்கள்; வட்டித் தொழில் நடத்துகிறார்கள்; பண்ணை உழவர்களை ஈவிரக்கம் இல்லா மல் சுரண்டுகிறார்கள். ஆனால் இவர்களே பொதுவாக உழைப்பிலும் ஈடுபடுகிறார்கள். இந்தவகையில் இவர்கள் உழவர் வர்க்கத்தின் ஒரு பகுதியினரும் ஆவர். பணக்கார உழவர்களின் உற்பத்தி வடிவம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பயனளிப்பதாகவே இருக்கும். பொதுவாகச் சொல்வதெ னில் பெருந்திரளான உழவர்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில், இவர்கள் ஒரு பயன்மிக்க பங்களிப்பைத் தர முடியும். நிலப்பிரபுக்களுக்கு எதிரான உழவரின் புரட்சிகரப் போராட்டத்தில் இவர்கள் நடுநிலைவகிப்பார் கள்...

இரண்டாவதாக, நடுத்தர உழவர்கள். இவர்கள் சீனாவின் கிராமப்புற மக்கள் தொகையில் 20 சதவீதமாவர். பொருளா தார அடிப்படையில் இவர்கள் தன்னிறைவு பெற்றவர்கள்... பொதுவாக இவர்கள் பிறரைச் சுரண்டுவதில்லை; ஆனால் ஏகாதிபத்தியத்தாலும், நிலப்பிரபுத்துவத்தாலும், முதலாளி யத்தாலும் இவர்கள் சுரண்டப்படுகிறார்கள். இவர்களுக்கு அரசியல் உரிமைகள் இல்லை... நடுத்தர உழவர்கள், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரில் இணைந்து கொள்வது மட்டுமல்ல, இவர்கள் சோசலிசத்தை ஏற்றுக் கொள்ளவும் முடியும். எனவே பாட்டாளி வர்க்கத்துக்கு நடுத்தர உழவர் வர்க்கம் முழுவதும் நம்பிக்கைக்குரிய கூட்டாளியும் புரட்சி யின் முக்கியமான உந்து சக்தியும் ஆகும்...

மூன்றாவதாக, ஏழை உழவர்கள். சீனாவில் உள்ள ஏழை உழவர்களும் பண்ணை உழைப்பாளிகளும் சேர்ந்து, கிரா மப்புற மக்கள் தொகையில் 70 சதவீதமாக அமைகிறார்கள். இவர்கள் பரந்துபட்ட பெருந்திரளான உழவர்கள்; இவர்கள் நிலமில்லாதவர்கள் அல்லது போதுமான நில்மில்லாதவர் கள்; கிராமப் புறத்தின் அரைப் பாட்டாளிகள்; சீனப் புரட்சியின் மிகப்பெரிய உந்து சக்தியாவர். பாட்டாளி வர்க்கத்துக்கு இயல்பான, மிகவும் நம்பிக்கைக்குரிய கூட்

*டாளியாவர்; சீனப் புரட்சிகர சக்திகளின் முதன்மையான படையாவர். (மா.தெ.நூ. 2. 323)*

ரசிய உழவர் வர்க்கத்தைப் பற்றிய லெனினது ஆய்வை, சீன உழவர் வர்க்கத்தின் இந்த ஆய்வோடு ஒப்பிடுகையில், சீனாவில் தொழிலாளர் - உழவர் நேச அணி, மேலும் பரந்த அடித்தளம் கொண்டிருந்தது என்பதையும், இந்த வேறுபாட்டுக்குக் காரணம், ஒரு புதிய முரண்பாடு - அதாவது சீனமக்களுக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையில் உள்ள முரண்பாடு - உருவாகியதே என்பதையும் நம்மால் பார்க்க முடிகிறது. ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தில் தனது தலைமையை நிறுவியதன் மூலம், வர்க்க சக்திகளின் பலாபலத்தில் ஒரு மாறுதலை உருவாக்கவும், கிராமப்புறத்தில் உள்ள முதன்மையான எதிரியாகிய நிலப்பிரபுத்துவ நிலஉடைமையாளர்களை தனிமைப்படுத்தவும் சீனப் பாட்டாளி வர்க்கத்துக்கு முடிந்தது. பொதுவுடைமைக் கட்சியின் மூலம், சீனாவுக்கு உகந்த வகையில் மா சேதுங்கால் கையாளப்பட்ட, தொழிலாளர் - உழவர் நேச அணி பற்றிய லெனினின் தத்துவத்தால் வழிகாட்டப்பட்டதாலேயே சீனப்பாட்டாளி வர்க்கத்துக்கு இது சாத்தியம் ஆயிற்று.

**4. உதிரிப் பாட்டாளிகள்**

இவ்வாறாக, தொழிலாளர் - உழவர் நேச அணி என்பது அடிப்படையில் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கும் ஏழை உழவர்களுக்கும், அதாவது நகர்ப்புற மற்றும் கிராமப்புற பாட்டாளிகளுக்கும் அரைப்பாட்டாளிகளுக்கும் இடையில் உள்ள நேச அணியாக இருந்தது. இனி, உதிரிப் பாட்டாளி வர்க்கத்தைப் பற்றி ஆய்வு செய்தல் வேண்டும்.

இந்தப் பிரிவு, வர்க்கத் தன்மை இழந்த, ஒழுக்கக் கேடான வர்களைக் கொண்டது. இவர்கள் உற்பத்தியில் முறையாக ஈடுபடாதவர்கள்; அமைப்பில்லாதவர்கள்; பெரும்பாலும் அமைப்பை ஏற்படுத்தவும் இயலாதவர்கள். உழைக்கும் வர்க்க இயக்கத்தின் ஆரம்ப நாட்களில், தொழிலாளி வர்க்கம் தான் தனித்த ஒரு வர்க்கம் என்ற உணர்வைப் பெற்று, தொழிற்சங்கங்களை உருவாக்குவதற்குத் தேவையான ஒருமைப்பாட்டையும் கட்டுப்பாட்டையும் வளர்த்துக் கொள்வதற்குப் போராடிக் கொண்டிருந்த பொழுது, இந்த உதிரிப் பாட்டாளி வர்க்கம், உழைக்கும் வர்க்க இயக்கத்துக்கு அபாயமாகத்தான் இருந்ததே ஒழிய உள்ளார்ந்த ஆதரவாக இல்லை.:

*பழைய சமுகத்தின் மிக அடிமட்டத் தட்டுகள் உதிர்த்தெறிந்த இந்த 'அபாயகரமான வர்க்கம்' இந்த சமுதாய*

> அழுக்கு, மெல்ல மெல்ல அழுகிக் கொண்டிருக்கும் இந்தத் திரள், ஓரோர் இடங்களில் பாட்டாளி வர்க்கத்தினால் நடத்தப்படும் இயக்கங்களுக்குள் அடித்துவரப்படலாம். ஆயினும் இந்த வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைகள், பிற்போக்குச் சதியின் கையூட்டுப் பெற்ற கருவியாகப் பங்கு வகிப்பதற்கே இதனை மிகவும் அதிகமாகத் தயார் செய்கின்றன. (மா.ஏ. 1.118, ஒப்: 219)

போரால் உருவாக்கப்பட்ட குழப்பமான நிலைமைகளில், உற்பத்தியை மறு ஒழுங்குக்கு உட்படுத்த ரசியத் தொழிலாளிகள் போராடிய பொழுது, 1918-இல் இது போன்ற ஓர் எச்சரிக்கையை லெனின் விடுத்தார்:

> சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில், போரானது போர்க் களத்தின் முன்னணியில் நிற்பவர்களையும் பின்னால் இருப்பவர்களையும் கெடுத்துக் கொண்டிருக்கிறது. போருக்குத் தேவையான பொருள்களை வழங்குவதில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு அப்பொருள்களின் விலைகளைக் காட்டிலும் கூடுதலாகப் பணம் கொடுக்கப்படுகிறது. போரில் கலந்து கொள்ளாமல் ஒளிந்திருப்பவர்களையும் இந்த வருமானம் கவர்ந்திழுக்கிறது. இவர்கள் ஊர்சுற்றிகளும் அரைகுறை ஊர்சுற்றிகளும் ஆவர்; எதையாவது 'பறித்துக் கொண்டு' ஓடி விடவேண்டும் என்ற ஒரே ஒரு ஆசைதான் அவர்களுக்கு. பழைய முதலாளிய சமுதாயத்தின் எச்சத்தில் மிக மோசமானவர்கள் இவர்கள்தான். பழைய தீமைகள் அனைத்துக்கும் வாகனமாகி இருப்பவர்கள். இவர்களை நாம் உதைத்துத் தள்ளி அப்புறப்படுத்த வேண்டும். மிகச்சிறந்த பாட்டாளி வர்க்க நபர்கள் அனைவரையும் தொழிற்சாலைகளில் அமர்த்தி, எதிர்கால சோசலிச ரசியாவுக்கான கருவாக அவர்களை உருவாக்க வேண்டும். (லெ.தொ.நூ. 26. 468)

இத்துடன் மா சேதுங்கின் பின்வரும் மதிப்பீட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்:

> இவை தவிர கணிசமான அளவில் பெரும் எண்ணிக்கையுள்ள உதிரிப் பாட்டாளி வர்க்கம் இருக்கிறது. நிலம் இழந்த உழவர்கள், வேலை கிடைக்கப் பெறாத கைவினைஞர்கள் ஆகியோரை உள்ளடக்கியது இந்த வர்க்கம். இவர்கள், மற்ற அனைவரையும் விட மிகவும் நிச்சயமற்ற வாழ்க்கையை நடத்துகிறார்கள். இவர்களை எப்படிக் கையாளுவது என்பது சீனாவின் சிக்கலான பிரச்சினைகளில்

*ஒன்றாக இருக்கிறது. தைரியமான போராளிகள் இவர்கள்; ஆனால் அழிவு வேலையில் நாட்டம் கொண்டவர்கள். சரியான முறையில் வழிகாட்டப்படுவார்களாயின், இவர்கள் ஒரு புரட்சிகரச் சக்தியாக மாறமுடியும். (மா.தொ.நூ. 1.19)*

*காலனியாகவும் அரைக்காலனியாகவும் இருக்கிற சீனாவின் நிலை, கிராமப் புறத்திலும் நகர்ப்புறத்திலும் வேலையற்றவர்களின் எண்ணிக்கை ஏராளமாகப் பெருக வழி வகுத்துள்ளது. வாழ்வதற்கான சரியான வழிமுறைகள் மறுக்கப்பட்டதனால், இவர்களில் பலர், நெறி தவறிய வாழ்க்கைக்குத் தள்ளப்பட்டார்கள். எனவே கொள்ளையர்கள், கலகக்காரர்கள், திருடர்கள், விபசாரிகள், மூடத்தொழில் செய்து வாழும் ஏராளமானவர்கள் உருவானார்கள். இந்த சமூகத் தட்டு நிலையற்றது. இவர்களில் சிலர் பிற்போக்கு சக்திகளால் விலைக்கு வாங்கப்படலாம்; மற்றவர்கள் புரட்சியில் சேரலாம். இவர்கள் ஆக்கரீதியான பண்புகள் அற்றவர்கள்; ஆக்க நோக்கில்லாமல் அழிவு நோக்கு உடையவர்கள். புரட்சியில் சேர்ந்த பிறகு புரட்சிகர அணிகளுக்குள், சுற்றித் திரியும் கலக உணர்வையும் அராஜகச் சிந்தனையையும் ஏற்படுத்தும் தோற்றுவாயாக மாறுகிறார்கள். எனவே அவர்களை எப்படி மறு - வார்ப்புச் செய்யவேண்டும் என்பதையும், அவர்களது அழிக்கும் பண்பில் இருந்து எப்படிப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும் என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். (மா.தெ.நூ. 2. 325)*

*இந்த மேலும் கூடுதலான உடன்பாட்டு வகை மதிப்பீடானது உலகப் புரட்சியின் முன்னேற்றத்தை எதிரொளிக்கிறது. ஏகாதிபத்தியச் சுரண்டல் மேலும் கடுமையாகும் பொழுது, நிரந்தரமாக வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கையில் அதிகரிக்கிறது. ஆனால் இதேசமயத்தில் புரட்சிப் போராட்டம் வளர்வதனால், ஏகாதிபத்தியத்தினால் கதியற்றுப் போன அனைத்து சக்திகள் மீதும் அனைத்துலகப் பாட்டாளி வர்க்கம் தனது செல்வாக்கை விரிக்கிறது.*

## 5. மேற்கு நாடுகளில் பாட்டாளி வர்க்கம்

*பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சி, முதலாளியத்தின் வளர்ச்சியால் தீர்மானிக்கப்படுகிறது. மேற்கில் உள்ள முன்னேறிய நாடுகளில் எல்லாம் முதலாளியம் மிக உயர்ந்த வளர்ச்சியடைந்துள்ளது. எனவே, இந்த நாடுகளில் எல்லாம் இன்னும் எந்த ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியும் நடக்காதது ஏன் என்ற*

கேள்வி பொருத்தமானதே ஆகும். முதல் பாட்டாளி வர்க்கப் புரட்சி, ஜெர்மனியில் வெடிக்கும் என மார்க்சும் ஏங்கல்சும் தங்கள் ஆரம்பகால ஆண்டுகளில் எதிர்பார்த்தார்கள்; ஆனால் இந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. 1871-இல் பிரெஞ்சுத் தொழிலாளிகள் அதிகாரத்தைக் கைப்பற்றவே செய்தார்கள்; எனினும் அவர்களால் அதைத் தக்க வைத்துக் கொள்ள இயல வில்லை. அக்டோபர் புரட்சிக் காலத்தில் ஐரோப்பாவிலேயே ரசியா தான் மிகவும் பிற்பட்டதோர் அரசாக இருந்தது. இரண்டா வது உலகப் போரின் இறுதியில், மத்திய ஐரோப்பாவில் பல புரட்சிகள் நடைபெற்றன. ஆனால் மேற்கில் நடக்கவில்லை. 1917-இல் ரசியா இருந்ததைக் காட்டிலும் மிகவும் பிற்பட்ட நாடாக 1949-இல் சீனா இருந்தது.

ரசியாவிலும் சீனாவிலும் இவ்வளவு சீக்கிரம் இப்புரட்சிகள் ஏன் நடந்தேறின என்ற எதிர்க்கேள்வியோடு தொடர்பு படுத்தி, மேலே குறிப்பிட்ட கேள்வி பரிசீலிக்கப்படுவது அவசியம். நாம் பார்த்தபடி, இதற்கான பதில் முதலாளியத்தின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியில் அடங்கியுள்ளது. மேற்கு நாடுகளில் முதலாளியம், ஏகாதிபத்தியம் என்ற கட்டத்தில் பிரவேசித்ததே, அப்போது கூட ரசியாவிலும் சீனாவிலும் இருந்த முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவத் தளைகளைக் கழற்றி எறியப் போராடிக் கொண்டுதான் இருந்தது; ரசியாவில் அது மேற்கு நாடுகளின் மூலதனத்தைச் சார்ந்திருந்த காரணத்தாலும் (லெ.தொ.நூ. 20. 399), சீனாவில் ஏகாதிபத்திய ஒடுக்கு முறைக்கு ஆட்பட்டிருந்த தாலும் அது இன்னும் பலவீனப்பட்டுப் போனது. இதற்கு மாறாக, ரசியப் பாட்டாளி வர்க்கம் மேற்கு நாடுகளின் அனுப வத்தைக் கிரகித்துக் கொண்டதனால் பலப்படுத்தப்பட்டது. சீனப் பாட்டாளி வர்க்கம், அக்டோபர் புரட்சியின் எடுத்துக் காட்டாலும், சோவியத் யூனியனின் ஆதரவினாலும் பலப்படுத் தப்பட்டது. இப்புறக் காரணிகள் இணைந்து உள் முரண்பாடுக ளைத் தீவிரப்படுத்தி வர்க்க சக்திகளின் பலாபலத்தை பாட்டாளி வர்க்கத்துக்குச் சாதகமான முறையில் மாற்றின.

முதலாளிய வளர்ச்சியானது மிகவும் முன்னதாகவே தொடங்கிய மேற்கு நாடுகளில், நிலப்பிரபுத்துவம் கிட்டத்தட்ட முழுமையாக நீக்கப்பட்டு விட்டது; தொடக்கத்தில் இருந்தே இந்நாடுகளில் இருந்த முதலாளிகள், அமெரிக்காவிலும் ஆசியா விலும் அடித்த கொள்ளையால் தங்களை வளப்படுத்திக் கொண்டே வந்தார்கள். இந்த வழியில் தங்கள் சொந்த நாடுகளில்

அவர்கள் தங்களைப் பலப்படுத்திக் கொண்டார்கள். காலனியச் சுரண்டலில் இருந்து பெற்ற அளவிடற்கரிய இலாபங்களால், தொழிற்சாலைப் பாட்டாளிகளுக்கு அவர்கள் கணிசமான சலுகைகளைத் தந்தார்கள். அவர்களுடைய தலைவர்கள் பலரை விலைக்கு வாங்கவும் செய்தார்கள். எனவே ஆதிக்க நாடுகளின் பாட்டாளி வர்க்கத்துக்கும் காலனி நாடுகளின் தொழிலாளர் - உழவருக்கும் இடையில் உள்ள இடைவெளி ஒருபுறம் இருக்க, அதற்கும் மேலாக, ஆதிக்க நாடுகளின் பாட்டாளி வர்க்கமே பிளவுபட்டுப் போனது மட்டுமல்லாமல், முதலாளியச் சித்தாந்தத்தினால் கணிசமான அளவு பாதிக்கப்பட்டும் இருந்தது. ஏகாதிபத்தியத்தால் ஏற்பட்ட விளைவு, இந்த நாடுகளின் உள்முரண்பாடுகளை சமனப்படுத்தியதும், இதன் மூலம் வர்க்க சக்திகளின் பலாபலத்தில் முதலாளியத்துக்குச் சாதகமான ஒரு மாறுதலை ஏற்படுத்தியதும் ஆகும்.

லெனினின் படைப்புகளில் உள்ள பல பகுதிகள், இது லெனினின் அபிப்பிராயம்தான் என்பதைத் தெளிவாக்குகின்றன:

> *சமுதாயம் முழுவதையும் பராமரிக்கிற பாட்டாளி வர்க்கம் மட்டுமே சமூகப் புரட்சியைக் கொண்டுவர முடியும். ஆயினும் காலனியக் கொள்கையின் விளைவாக, சமுதாயம் முழுவதும் காலனிகளில் நடைமுறையில் அடிமைப்படுத்தப் பட்டிருக்கிற சுதேசிகளின் உழைப்பால் பராமரிக்கப்படுகிறது. இதற்கு ஐரோப்பியப் பாட்டாளியுமே ஓரளவு காரணமாகிறான்... இந்நிலை சில குறிப்பிட்ட நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தைக் காலனியாதிக்க வெறி பாதிப்பதற்கான பொருண்மை அடிப்படையையும் பொருளாதார அடிப்படையையும் வழங்குகிறது. (லெ.தொ.நூ. 13.77. ஒப்: 21. 243)*

தேசியப் பிரச்சினை என்ற கண்ணோட்டத்தில் இருந்து பார்க்கும் பொழுது, ஒடுக்குகிற தேசங்களிலும் ஒடுக்கப்படுகிற தேசங்களிலும் உள்ள தொழிலாளிகளின் உண்மை நிலை ஒரே மாதிரியாகவா இருக்கிறது? இல்லை; ஒரே மாதிரியாக இல்லை.

1. பொருளாதார ரீதியான வேறுபாடு என்னவெனில் ஒடுக்கும் தேசங்களில் உள்ள முதலாளிகள் ஒடுக்கப்படுகிற தேசங்களில் உள்ள தொழிலாளிகளைக் கூடுதலாகச் சுரண்டுவதன் மூலம் பெறும் கொள்ளை லாபத்தில் இருந்து சில

துணுக்குகளை ஒடுக்கும் தேசங்களில் உள்ள தொழிலாளிகள் பெறுகிறார்கள்; மேலும் பொருளாதாரப் புள்ளி விவரங்கள் கீழ்க்கண்டவற்றை எடுத்துக் காட்டுகின்றன: ஒடுக்கும் தேசங்களில் 'குட்டி எசமானர்'களாகிற தொழிலாளிகளின் சதவீதமும் மேட்டுக்குடி வர்க்கமாகிற தொழிலாளிகளின் சதவீதமும், ஒடுக்கப்படும் தேசங்களில் இப்படி ஆகிற தொழிலாளிகளின் சதவீதத்தைக் காட்டிலும் அதிகம். இது ஒரு உண்மை. ஒடுக்கப்படும் தேசங்களில் உள்ள தொழிலாளிகளை — உழைக்கும் மக்கள் திரளினரை — கொள்ளையடிக்கும் ஒடுக்கும் தேசங்களின் முதலாளிகளுக்கு அந்த நாடுகளின் தொழிலாளிகளே குறிப்பிட்ட அளவுக்குப் பங்காளிகளாகவும் உள்ளனர்.

2. அரசியல் ரீதியான வேறுபாடு என்னவெனில், ஒடுக்கப்படும் தேசங்களில் உள்ள தொழிலாளிகளுடன் ஒப்பிடுகையில், இவர்கள் அரசியல் வாழ்வின் பல துறைகளில் உரிமைபெற்ற நிலையிலுள்ளார்கள்.

3. சித்தாந்த ரீதியாக அல்லது சிந்தனை ரீதியாக, பள்ளிகளிலும் வாழ்க்கையிலும், இவர்கள் ஒடுக்கப்படும் தேசங்களில் உள்ள தொழிலாளிகளை அவமதிக்கவும் வெறுக்கவுமே கற்றுத்தரப்படுகிறார்கள். *(லெ.தொ.நூ. 23.55, ஒப்: 22.283)*

காலனி நாடுகளையும் பலவீனமான நாடுகளையும் கொள்ளையடித்ததன் மூலம் ஒட்டுண்ணி வாழ்வில் திளைக்கிற ஒரு சில மிகவளமான ஏகாதிபத்தியங்கள் பெற்றுள்ள உயர்வை நமது திட்டத்தில் மேலும் வலுவோடும் தெளிவோடும் அழுத்தம் திருத்தமாகக் கூறுவது பொருத்தமானதே. இப்படிக் கொள்ளையடிப்பது, ஏகாதிபத்தியத்தின் மிகமிக முக்கியமான அம்சம். ஏகாதிபத்தியக் கொள்ளைக்கு உள்ளான, ஏகாதிபத்திய அரக்கர்களால் (ரசியா போன்றவை) நசுக்கப்பட்டுத் துண்டாடப் படக்கூடிய அபாயத்திலிருக்கிற நாடுகளில் சக்திவாய்ந்த புரட்சிகர இயக்கங்கள் தோன்றுவதை இது குறிப்பிட்ட அளவு எளிதாக்குகிறது. மறுபுறம், பல காலனிகளையும் அயல் நாடுகளையும் ஏகாதிபத்திய முறைகளின் மூலம் கொள்ளையடிக்கும் நாடுகளில் ஆழமான புரட்சிகர இயக்கங்களை ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தடுக்கவும் செய்கிறது. இவ்வாறு இந்நாடுகளின் மக்கள் தொகையில் கணிசமான ஒரு பகுதியினரை, இந்த ஏகாதிபத்தியக் கொள்ளையைக் கூறுபோட்டுக் கொள்ளும்

*கூட்டாளிகளாகவும் மாற்றிவிடுகிறது. (லெ.தொ.நூ. 26.168, ஒப்: 29.123, 31.191,230)*

*இருப்பினும் பிரிட்டனைப் பொறுத்தவரை, சிறுமுதலாளிய வாழ்க்கைத்தரத்தை அனுபவிக்கிற தொழிலாளிகளின், அலுவலக ஊழியர்களின் சதவீதம் அசாதாரணமான அளவு உயர்வானதாக இருக்கிறது; இதற்குக் காரணம் பிரிட்டனின் காலனிய நாடுகளில் லட்சோப லட்சம் மக்கள் உண்மையாகவே அடிமைப்பட்டிருப்பது தான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. (லெ.தொ.நூ. 32.456)*

எனவே, ஏகாதிபத்திய நாடுகளில், வர்க்கங்கள் அனைத்திலும் மிகவும் புரட்சிகரமான பாட்டாளி வர்க்கம் கூட புரட்சித் தன்மையை இழந்துவிடக் கூடும் என்பதை நாம் பார்க்கிறோம்.

உலகு முழுவதிலும் உள்ள ஒடுக்கப்படும் மக்கள் புரட்சியில் ஈடுபட்டுள்ள இன்று, ஏகாதிபத்தியம் ஒட்டுமொத்தமாக நிலைகுலைந்து வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இன்று, மேற்கு நாடுகளில் உள்ள நிலைமை மாறத் தொடங்கி வருகிறது. அந்நாடுகளில் உள்ள தொழிலாளிகள் அனுபவிக்கும் ஒப்பளவில் உயர்ந்த வாழ்க்கைத் தரமானது, காலனியச் சுரண்டலை அடிப்படையாகக் கொண்டே பெறப்பட்டது எனில் இந்த அடிப்படை தகரும்பொழுது அவர்கள் தங்களது சீர்திருத்தவாதப் பிரமைகளை உதறியெறியும் கட்டாயத்துக்கு உள்ளாவார்கள். பிறகு தங்களது புரட்சி உணர்வை திரும்பப் பெறுவார்கள்.

இறுதியாக, மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்பொழுது முன்னேற்றமடைந்த இம் முதலாளிய நாடுகளில் உள்ள தொழிலாளிகள், மொத்த மக்கள் தொகையில் மேலும் அதிக சதவீதத்தினராய் அமைகின்றனர் என்பது குறித்துக் கொள்ளப்பட வேண்டும். பாட்டாளி வர்க்கத்தின் வலிமை அதனுடைய எண்ணிக்கையைக் கொண்டு அளக்கப்படுவதல்ல என்பதை நாம் மீண்டும் காண்கிறோம்.

---

[1] ரசியப் பொதுவுடைமைக் கட்சிக்கு முதலில் இருந்த பெயர். அனைத்துலகத் தொழிலாளிவர்க்க இயக்கத்தில் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய ஓர் அரசியல் போக்கு சமூக ஜனநாயகம் என்பதாகும். இன்று இப்பெயர் தொழிலாளர் இயக்கத்திலுள்ள கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதத்தைக் குறிக்கிறது.

அத்தியாயம் 4

# தேசியப் பிரச்சினை

*ஒரு தனிமனிதன் மற்றொருவனைச் சுரண்டுவதற்கு எந்த அளவு முடிவு கட்டப்படுகிறதோ, அந்த அளவுக்கு ஒரு தேசத்தை மற்றொரு தேசம் சுரண்டுவதற்கும் முடிவு கட்டப்படும். ஒரு தேசத்துக்குள் வர்க்கங்களுக்கிடையிலுள்ள பகைமை எந்த அளவுக்கு மறைகிறதோ அந்த அளவுக்கு ஒரு தேசத்துக்கும் மற்றொரு தேசத்துக்கும் இடையில் உள்ள பகைமையும் மறையும்.*

— பொதுவுடைமை அறிக்கை

## 1. நவீன சமுதாயத்தில் தேசம்

தேசம் என்பது ஒரு சமூக அமைப்பாகும். இது நிலப்பிரபுத்துவத்தில் இருந்து முதலாளியத்துக்கு வளர்ச்சி மாற்றம் ஏற்பட்ட போது சரக்கு உற்பத்தியின் வளர்ச்சியுடன் முதலில் உருவெடுத்தது. தேசிய விடுதலை என்பது, முதலாளி வர்க்க ஜனநாயகப் புரட்சியின் குறிக்கோள்களில் ஒன்றாகும். முதலாளிய சமுதாயத்தின் பரிணாம வளர்ச்சியில், தேசிய இயக்கம் என்றழைக்கப்படும் தேச விடுதலைக்கான போராட்டம் என்பது அடிமைப்பட்ட மக்களிடையே உள்ள முதலாளி வர்க்கம், மக்களின் இதர பகுதிகளையும் ஒன்று திரட்டி, அந்நிய அரசின் ஆட்சியைத் தூக்கி எறியவும், தனது சொந்த அரசை நிறுவவும் மேற்கொள்ளும் முயற்சியில் தோன்றுகிறது. இங்கு 'மக்கள்' என்பவர்கள், ஒரு பொதுவான நிலப்பரப்பில் இருந்துகொண்டு பொதுவான மொழியைப் பேசும் மனித சமூகமேயாகும். அத்தகைய சமூகங்கள் பன்னெடுங்காலமாக இருந்து வந்த போதிலும், நவீன சமுதாயத்திலேதான் அவை தேசங்களாகின்றன.

தேசிய இயக்கங்களின் பொருளாதார அடிப்படையைப் பற்றி லெனின் பின்வருமாறு விளக்குகிறார்:

> சரக்கு உற்பத்தி முழுமையான வெற்றியடைய வேண்டுமானால், முதலாளி வர்க்கம் உள்நாட்டு சந்தையைக் கைப்பற்றியாக வேண்டும். மேலும் ஒரு தனிமொழியைப் பேசக்கூடிய மக்கள் தொகையைக் கொண்ட, அரசியல் வகையில் ஒன்றுபட்ட நிலப்பரப்பு இருக்கவேண்டும். அம்மொழியின் வளர்ச்சிக்கு எதிரான தடைகளும், அம்மொழியின் வளர்ச்சி, இலக்கியத்தில் திரட்சி பெறுவதற்கான தடைகளும் ஒழிக்

கப்பட்டிருக்கவேண்டும். இதுதான் தேசிய இயக்கங்களுக்கு ரிய பொருளாதார அடிப்படை.

மொழி என்பது மனிதத் தொடர்புகளுக்கான மிக முக்கிய மான சாதனமாகும். நவீன முதலாளியத்துக்கு ஏற்ற அளவில் உண்மையில் சுதந்திரமான, விரிவான வர்த்தகம் நடைபெறு வதற்கும், பல்வேறு வர்க்கத்தினராக உள்ள மக்கள் தொகை யினர் ஒரு பரந்த, தடை நீங்கப்பெற்ற ஒரே மக்கள் கூட்டமாக அமையவும், சந்தைக்கும் பெரிய சிறிய உடை மையாளர் அனைவர்க்கும் இடையிலும், வாங்குபவனுக் கும் விற்பவனுக்கும் இடையிலும் ஒரு நெருக்கமான தொடர்பை ஏற்படுத்தவும், வட்டார வேறுபாடுகள் நீங்கிய ஒரே சீரான மொழியும், அதன் தங்குதடையற்ற வளர்ச்சியும் மிக முக்கியமான நிபந்தனைகளாக அமைகின்றன. (லெ.தொ.நூ. 20 396)

முதல் தேசிய இயக்கங்கள் மேற்கு ஐரோப்பாவில் எழுந் தன. நிலப்பிரபுத்துவ சகாப்தத்தின் நிலையற்ற, பல்வேறு வகைப்பட்ட அரசாட்சிகளில் இருந்து, முக்கியமாக பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில், பன்னிரண்டு சுதந்திர அரசுகள் தோன்றின. இவற்றில் பெரும்பாலானவை தனி - தேசிய அரசுகளாக உருவாயின; அதாவது ஒவ்வொரு நாடும் ஒரு பொதுமொழியைப் பேசிய தனி மக்களைக் கொண்டிருந்தது. சுதந்திரத்துக்கான போராட்டத்தைத் தோற்றுவிக்கும் அளவுக்கு பெரியதாக இருந்த ஒரு தேசிய சிறுபான்மை பிரிட்டிசு தீவுகளில் மட்டுமே இருந்தது. அயர்லாந்தின் மீதான வெற்றியை ஆங்கிலே யர்கள் திரட்சிசெய்து கொள்வதில் தவறினார்கள். பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரிஷ் தேசிய இயக்கம் எழுந்தது.

ஆயினும், இந்த நாடுகளைத் தனி - தேசிய அரசுகள் என்று சொல்லும்போது, இவற்றில் பெரும்பாலானவை துவக்கம் முதலே வெளிநாடுகளில் காலனியப் பேரரசுகளை உருவாக்கிக் கொள்வதில் ஈடுபட்டிருந்தன என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இவ்வாறு, முன்பு ஒடுக்கப்பட்டிருந்த தேசங்களே மற்ற மக்களை ஒடுக்குபவையாக மாறின. இதன் விளைவாக காலனி நாட்டு மக்களிடையே தேசிய இயக்கத்தின் வளர்ச்சி மேம்படுத்தப்பட்டது. மூன்றாம் அத்தியாயத்தில் விளக்கப்பட் டதுபோல், ஒடுக்கும் நாட்டிலுள்ள பாட்டாளி வர்க்கம், அங்கு முதலாளி வர்க்கத்துக்கு எதிராக நடத்தும் போராட்டம் தாமதப் பட்டது.

*மற்ற தேசங்களை ஒடுக்கும் எந்தத் தேசமும் சுதந்திரமான தேசமாக இருக்க முடியாது (மார்க்சும், ஏங்கல்சும்). தனது 'சொந்த' தேசம் மற்ற தேசங்கள் மீது தொடுக்கும் மிகச்சிறிய அடக்குமுறையைக்கூடப் பொறுத்துக் கொள்ளும் பாட்டாளி வர்க்கம் ஒரு சோசலிசப் பாட்டாளி வர்க்கமாக இருக்க முடியாது. (லெ.தொ.நூ. 21.317)*

*முதல் உலகப்போர் துவங்கும் சமயத்தில் இருந்த கிழக்கு ஐரோப்பாவைப் பார்ப்போம். இங்கு ஆறு சிறிய அரசுகள் (இவற்றில் பல, கணிசமான தேசிய சிறுபான்மையினரைக் கொண்டிருந்தன) இருந்த பால்கன் நாடுகளுக்கு வெளியே, தனி - தேசிய அரசுகள் ஏதும் இருக்கவில்லை. அப்பிரதேசம் முழுவதும் இரு அரசுகளின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. இவ்விரு அரசுகளும் நிலப்பிரபுத்துவத்தால் உருவாக்கப்பட்டவையாகவும் பல தேசிய இனங்களைக் கொண்டவையாகவும் இருந்தன. தேசிய முரண்பாடுகளால் இங்கு அமைதி குலைந்து கொண்டிருந்தது. போரின் முடிவில் ஆஸ்திரிய - ஹங்கேரியப் பேரரசு பல சுதந்திரமான முதலாளி வர்க்கத் தேசிய - அரசுகளாக உடைபட்டது. இதற்கிடையில் ரசியப் பேரரசு தேசியச் சிறுபான்மையோர் வாழ்கிற சின்னச் சின்ன சுயேச்சைப் பிரதேசங்களைக் கொண்ட சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியமாக மாற்றப்பட்டது. இப்பிரதேசங்களில் போல்சவிக்குகளின் வெற்றிக்குப் பங்களிப்பு செலுத்திய முக்கிய காரணி, தேசியப் பிரச்சினை பற்றிய அவர்களது மார்க்கம் தான். (ஸ்.தொ.நூ. 6.152)*

*இச்சித்திரத்தைப் பூர்த்தி செய்ய, நாம் ஐரோப்பாவுக்கு வெளியே உள்ள இருபெரும் தேசிய - அரசுகளைச் சேர்க்கவேண்டும்.*

*மேற்கு ஐரோப்பாவிலிருந்து குடியேறியவர்களால் நிறுவப்பட்ட காலனிகளின் தொகுப்பிலிருந்து அமெரிக்க ஐக்கிய நாடுகள் உருவாக்கப்பட்டது. இவர்கள் பிரிட்டிசு ஆட்சியில் இருந்து தாம் சுதந்திரம் பெற்றுவிட்டதாக 1776-ஆம் ஆண்டில் அறிவித்தார்கள். ஐரோப்பாவின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் தொடர்ந்து ஏற்பட்ட பேரளவிலான குடியேற்றத்தால் மக்கள் தொகை அதிகரிக்கப்பட்ட போதிலும் (நீக்ரோக்கள், அமெரிக்க இந்தியர்கள் ஆகியோர் தவிர்த்த) மக்கள் தொகையினர் அனைவரும் முதலாளி வர்க்க சமத்துவம், பொது மொழியைப் பயன்படுத்துதல் என்ற அடிப்படையில் ஐக்கியப்படுத்தப்பட்டனர்:*

> முதலாளிய வளர்ச்சிக்கு அமெரிக்காவில் இருந்த சிறப்பான சாதகமான நிலைமைகளும், இவ்வளர்ச்சியின் வேகமும் ஒரு சூழலை உருவாக்கியுள்ளது. இச்சூழலில், உலகில் வேறு எங்கும் இல்லாத வகையில், பெரும் தேசிய வேறுபாடுகள் விரைவாகவும், அடிப்படையிலும் நீக்கப் பட்டு, ஒரே 'அமெரிக்க' அரசு ஏற்படுத்தப்படுகிறது. *(லெ.தொ.நூ. 23.276)*

ஜப்பானில் முதலாளியத்தின் வளர்ச்சி, ரசியாவில் நிகழ்ந்த துபோல மிகவும் தாமதமாகவே ஏற்பட்டது. இவ்வளர்ச்சி மிகவும் விரைவானதாக இருந்ததனால் இங்குள்ள முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவ மேட்டுக்குடியினருடன் பிளவு ஏது மின்றி இணைந்தது. ஜப்பான் ஒன்றுதான் ஒரு முக்கியமான ஏகாதிபத்தியச் சக்தியாக உருவாகிய ஐரோப்பா அல்லாத நாடா கும்:

> ஆசியாவிலேயே சரக்கு உற்பத்தியின் முழுமையான வளர்ச் சிக்கு உரிய நிலைமைகளும், முதலாளியத்துக்கான மிகச் சுதந்திரமான, பரந்த விரைவான வளர்ச்சிக்கான நிலைமைக ளும் உருவாக்கப்பட்டது ஜப்பானில் மட்டுமே; அதாவது ஒரு சுதந்திரமான தேசிய அரசில் மட்டுமே. ஜப்பான் ஒரு முதலாளிய அரசு; இந்தக் காரணத்தினாலேயே அதுவுமே மற்ற தேசங்களை ஒடுக்கவும் காலனிகளை அடிமை கொள்ளவும் தொடங்கியது. ஐரோப்பாவைப் போல, முத லாளியத்தின் வீழ்ச்சிக்கு முன்பே, சுதந்திரமான தேசிய அரசுகளைக் கொண்டதாக வளர்ச்சி பெறுவதற்கு ஆசியா வுக்கு அவகாசம் கிடைக்குமா என்பதை நம்மால் கூற முடியாது. ஆனால் ஆசியாவை உறக்கத்தில் இருந்து எழுப்பிய முதலாளியம், அக்கண்டம் முழுக்கவும் தேசிய இயக்கங்களுக்கு காரணமாக உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. *(லெ.தொ.நூ. 20.399)*

1916-இல் தாம் கண்ட சூழ்நிலைகளைத் தொகுத்து லெனின் தேசிய இயக்கங்களை மூன்று வகையாக வேறுபடுத்தினார்:

> முதலாவது வகை: தேசிய இயக்கங்கள் கடந்த கால விசயமாகிவிட்ட மேற்கு ஐரோப்பாவின் முன்னேறிய நாடுக ளும் (மற்றும் அமெரிக்காவும்). இரண்டாவது வகை: தேசிய இயக்கங்கள் நிகழ்கால விசயமாகிற கிழக்கு ஐரோப்

பான்மையினரின் உரிமைகள் மீது கை வைப்பதையும் தடை செய்கிற சட்டமாக இருக்கவேண்டும். (லெ.தொ.நூ. 19. 427).

எல்லா தேசிய இனங்களுக்கும் சமஉரிமை என்கிற முதலாளிய ஜனநாயக கோட்பாட்டுக்குப் பாட்டாளி வர்க்கம் ஆதரவு தருகிறது. அதே சமயத்தில் முதலாளி வர்க்கத்துக்கு மாறாக, தேசியப் போராட்டம் என்பது வர்க்கப் போராட்டத்துக்கு கீழ்ப்பட்டது என்பதை பாட்டாளி வர்க்கம் வற்புறுத்தவும் செய்கிறது:

முதலாளி வர்க்கம் தனது தேசிய கோரிக்கைகளை எப்போதும் ஆணித்தரமாக முன்னணியில் நிறுத்துகிறது. பாட்டாளி வர்க்கத்தைப் பொறுத்த மட்டிலும், இந்த கோரிக்கைகள் வர்க்கப் போராட்டத்தின் நலன்களுக்குக் கீழ்ப்பட்டதாகவே ஆக்கப்படுகின்றன. (லெ.தொ.நூ. 20. 410)

சுரண்டலுக்கு எதிரான போராட்டம் வெற்றிபெற வேண்டுமானால் பாட்டாளி வர்க்கம் தேசியவாதத்தில் இருந்து விடுபடவேண்டும். சொல்லப் போனால் பல்வேறு தேசங்களின் முதலாளி வர்க்கங்களுக்கு இடையில் மேலாதிக்கத்துக்காக நடைபெறும் சண்டையில் பாட்டாளி வர்க்கம் முற்றான நடுநிலை வகிக்கவேண்டும். ஏதாவது ஒரு தேசத்தின் பாட்டாளி வர்க்கம், 'தனது சொந்த' தேசிய முதலாளி வர்க்கத்தின் தனிப்பட்ட உரிமைகளுக்காக, மிகக்குறைந்த ஆதரவு தருவதாக இருந்தால் கூட, அது மற்றொரு நாட்டுப் பாட்டாளி வர்க்கத்தின் மத்தியில் தவிர்க்க முடியாதபடி அவநம்பிக்கையைத் தட்டியெழுப்பிவிடும்; முதலாளி வர்க்கத்துக்கு மகிழ்ச்சியூட்டும் வகையில் தொழிலாளிகளின் அனைத்துலக வர்க்க ஒருமைப்பாட்டை பலவீனப்படுத்தும். (லெ.தொ.நூ. 20. 424)

தேசியவாதத்தைப் புனிதமாக்க முயலும் எந்த முயற்சியையும் பாட்டாளி வர்க்கத்தால் ஆதரிக்க முடியாது; இதற்கு மாறாக, தேசிய வேறுபாடுகளைத் துடைத்தெறிய உதவும் ஒவ்வொன்றையும், தேசியத் தடைகளை நீக்கும் ஒவ்வொரு முயற்சியையும் பாட்டாளி வர்க்கம் ஆதரிக்கிறது. தேசிய இனங்களுக்கு இடையில் உள்ள பிணைப்புகளை இன்னும் நெருக்க மடையச் செய்யும், அல்லது தேசங்களை ஒன்றிணைக்கும் போக்குடைய ஒவ்வொரு முயற்சியையும் அது ஆதரிக்கிறது. (லெ.தொ.நூ. 20. 35)

மெய்ப்பிக்கிறது. ஒருபுறம், ஒரு குறிப்பிட்ட வரலாற்றுக் காலத்துக்கு பல்வேறு வர்க்கங்களின் பொருளாதார, அரசியல் கோரிக்கைகள் கூட்டுறவைச் சிதைக்கா வண்ணம் அமைந்திருத்தல் வேண்டும்; மறுபுறம், தேசியப் போராட்டத்தின் கோரிக்கைகள் (ஜப்பானை எதிர்க்க வேண்டிய தேவை) வர்க்கப் போராட்டங்கள் அனைத்துக்குமான துவக்க முனையாக இருக்கவேண்டும். இவ்வாறு, ஐக்கிய முன்னணியில் ஐக்கியம் - சுதந்திரம் ஆகியவற்றுக்கு இடையிலும், தேசியப் போராட்டம் - வர்க்கப் போராட்டம் ஆகியவற்றுக்கு இடையிலும் ஒத்த தன்மை இருக்கிறது. *(மா.தெ.நூ. 2. 215)*

ஒவ்வொரு நாட்டிலும், குறிப்பாக வியட்நாமில், அண்மையில் மெய்ப்பிக்கப்பட்டது என்னவென்றால், பொதுவுடைமைக் கட்சியின் கீழ் ஒன்றுதிரட்டப்பட்டு, மா சேதுங்கின் மக்கள் போர் என்ற யுத்த தந்திரத்தால் வழிகாட்டப்படக்கூடிய சிறிய மற்றும் பொருள் வகையில் பின்தங்கியுள்ள தேசமும் கூட, ஏகபோக முதலாளியம் தனது செல்வம் அனைத்தையும் கொட்டியுள்ள ஒரு பெரும் ராணுவ யந்திரம் தரித்த ஏகாதிபத்திய அரசுகளிலேயே மிகச் சக்திவாய்ந்த அரசைத் தோற்கடிக்க முடியும் என்பதாகும்.

வியட்நாமில் நடந்த விடுதலைப் போர் உலகளாவிய ஆதரவைப் பெற்றுள்ளது. இவ்வகையில் ஒரு தனி மக்களின் தேசியப் போராட்டம் ஒரு அனைத்துலகப் போராட்டமாகியுள்ளது. இந்த அனைத்துலகப் போராட்டம் தன் பங்குக்கு ஐக்கிய அமெரிக்க நாடுகள் உள்ளிட்ட இதர நாடுகளில் புதிய தேசியப் போராட்டங்களைத் தட்டி எழுப்பியுள்ளது. லெனின் ஏற்றுக் கொண்டதைப் போல, சுதந்திரத்துக்கும் சம உரிமைக்குமான அமெரிக்க நீக்ரோக்களின் போராட்டமே ஒரு தேசிய இயக்கம் தான்:

> அமெரிக்க ஐக்கிய நாடுகளில், நீக்ரோக்கள்... ஒரு ஒடுக்கப் பட்ட தேசிய இனம் என வகைப்படுத்தப்படவேண்டும் ஏனெனில் 1861-65 ஆம் ஆண்டுகளின் உள்நாட்டுப் போரி ஈட்டப்பட்டதும், குடியரசின் அரசியல் சட்டத்தில் உத்தி வாதம் செய்யப்பட்டதுமான சமத்துவம், பலவகைகளிலு அதிகரித்த அளவில், முதன்மையான நீக்ரோப் பகுதிகள் (தென்பகுதியில்) குறைக்கப்பட்டே வந்தது. இது, 186 70 ஆம் ஆண்டுகளில் இருந்த முற்போக்கான, ஏகபோ

தேசங்கள் ஒன்றுபடுவதைப் பாட்டாளி வர்க்கம் ஆதரிக்கிறது. அப்படியானால் அது தேசங்கள் சுதந்திரம் பெறும் உரிமையை அங்கீகரிப்பானேன் என்று கேட்கலாம். தேசிய வேட்கைகளை நிறைவு செய்வதன் மூலமாகத் தான் தேசியப் பிரிவுகளைக் கடக்க முடியும் என்பதற்காகத்தான் அவ்வுரிமையை அது அங்கீகரிக்கிறது:

> நாம் சுதந்திரமாக ஒன்றுபடுவதை விரும்புகிறோம்; அதனால்தான் நாம் பிரிந்து செல்லும் உரிமையை அங்கீகரிக்க வேண்டும். பிரிந்து செல்வதற்கான சுதந்திரமில்லாமல் ஏற்படும் ஒன்றிணைப்பைச் சுதந்திரமானது என்று சொல்ல முடியாது. *(லெ.தொ.நூ. 26.176)*

### 3. தேசிய விடுதலைப் போர்கள்

பொதுவுடைமை அகிலத்தின் மூன்றாவது பேரவையில் *(1921)* லெனின் கூறினார்:

> வரப்போகிற உலகப் புரட்சியின் தீர்மானமான போர்களில், தேசிய விடுதலை என்பதை முதல் குறிக்கோளாகக் கொண்டுள்ள உலக மக்களில் பெரும்பான்மையோரது இயக்கம், முதலாளியத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் எதிரானதாகத் திரும்பும் என்பதும், நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் மிகக் கூடுதலான புரட்சிகரப் பங்கை வகிக்கக் கூடும் என்பதும் தெளிவாகிவிட்டது. உழைக்கும் மக்கள் திரளினர் - காலனி நாடுகளில் உள்ள உழவர்கள் - இன்னும் பிற்பட்டவர்களாக இருந்த போதிலும் உலகப் புரட்சியின் இனி வருகிற கட்டங்களில் அவர்கள் மிகவும் முக்கியமான புரட்சிகரப் பங்கினை வகிப்பார்கள். *(லெ.தொ.நூ. 32. 482)*

)க்கருத்தை அவர் வெளியிட்ட நாள்தொட்டு காலனி, காலனி உலகு முழுவதிலும் வர்க்கப் போராட்டம் ் போராட்ட வடிவத்தைப் பெற்று, இரண்டாம் அத்தியா விவாதிக்கப்பட்ட தேசிய விடுதலைப் போர்கள், 'புதிய க' வகைப் புரட்சிகள் ஆகியவற்றைத் தோற்றுவித்துள் ாவில் ஜப்பானிய எதிர்ப்புப் போரின் போது மா சேதுங்

பத் தன்மை வாய்ந்த ஒரு போராட்டத்தில் வர்க்கப் ாட்டம், தேசியப் போராட்டம் என்ற வடிவத்தை ]காள்கிறது. இது வர்க்கப் போராட்டம் தேசியப் ட்டம், இரண்டுக்கும் உள்ள ஒத்த தன்மையை

*துக்கு - முந்திய முதலாளியம், புதிய சகாப்தத்தின் பிற்போக்குத்தனமான ஏகபோக முதலாளியத்துக்கு (ஏகாதிபத்தியத்துக்கு) மாற்றம் அடைந்ததன் தொடர்பாக நேரிட்டது... (லெ.தொ.நூ. 23. 275)*

அதேபோல, இவ்வியக்கத்துக்குத் தனது ஆதரவை அறிவித்த மா சேதுங் அது ஒரு தேசியப் போராட்டமும், அதேபோல வர்க்கப் போராட்டமும் ஆகும் என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்:

அமெரிக்க நீக்ரோக்களின் போராட்டத்தின் விரைவான வளர்ச்சியானது, அமெரிக்க ஐக்கிய நாடுகளில் கூர்மையடைந்து வரும் வர்க்கப் போராட்டம், தேசியப் போராட்டம் ஆகியவற்றின் ஒரு வெளிப்பாடாகும்...

இறுதிப் பகுப்பாய்வில், தேசியப் போராட்டம் என்பது வர்க்கப் போராட்டம்தான்... நீக்ரோக்களை அடிமைப்படுத்துதல், அவர்களை வர்த்தகப் பொருள்கள் ஆக்குதல் என்ற அடிப்படைமீதே காலனி ஆதிக்கம், ஏகாதிபத்தியம் என்ற தீய அமைப்பு எழுந்து நிலைத்தது. கருப்பு மக்களின் முழுமையான விடுதலையுடன் இவ்வமைப்பு நிச்சயமாக முடிவுக்குக் கொண்டுவரப்படும். *(பீரி. 63 - 33)*

தேசிய விடுதலைக்கான போராட்டங்கள் விரிய விரிய, ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் இன்னும் எஞ்சியுள்ள பகுதி சுருங்கி வரும்; அப்பகுதி சுருங்க சுருங்க, அதைச் சுரண்டுவதும் கடுமையாகி வரும். இது தேசிய விடுதலைக்கான புதிய போராட்டங்களைத் தூண்டிவிடும்; இது ஒரு நச்சுச் சுழல். இதிலிருந்து ஏகாதிபத்தியம் தப்பமுடியாது:

ஒரு பெரும் அரக்கன் போலக் காட்சியளிக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம், சாரத்தில் ஒரு காகிதப் புலிதான். இப்போது அது தனது மரணப் போராட்ட வேதனையில் உள்ளது. இன்றைய உலகில் யார் யாரைக் கண்டு உண்மையில் அஞ்சுகிறார்கள்? அமெரிக்க ஏகாதிபத்தியத்தைக் கண்டு அஞ்சுவது வியட்நாமிய மக்களோ, லாவோ நாட்டு மக்களோ, பாலஸ்தினிய மக்களோ, அரபு மக்களோ அல்லது மற்ற நாடுகளின் மக்களோ அல்லர்; அமெரிக்க ஏகாதிபத்தியம் தான் உலக மக்களைக் கண்டு அஞ்சுகிறது; காற்றில் இலைகள் சலசலத்தால் கூட அது பீதியடைகிறது. ஒரு நியாயமான லட்சியம் அளவற்ற ஆதரவைப் பெறுகிறது

என்பதையும், ஒரு நியாயமற்ற லட்சியம் எவ்வித ஆதரவை யும் பெறுவதில்லை என்பதையும் எண்ணற்ற உண்மைகள் மெய்ப்பிக்கின்றன. ஒரு வலுக்குறைந்த நாடு, வலுவுள்ள

> நாட்டைத் தோற்கடிக்க முடியும்; ஒரு சிறிய நாடு ஒரு பெரிய நாட்டைத் தோற்கடிக்க முடியும். ஒரு சிறிய நாட்டின் மக்கள் போராட்டத்தில் வெகுண்டெழத் துணிவார் களேயானால், ஆயுதங்களை எடுக்கவும் தமது நாட்டின் விதிமார்க்கத்தைத் தம் சொந்தக் கரங்களில் கைப்பற்றவும் துணிவார்களேயானால், ஒரு பெரிய நாட்டின் ஒடுக்கு முறையை அவர்களால் நிச்சயம் தோற்கடிக்க முடியும். இது ஒரு வரலாற்று நியதியாகும். *(பீரி. 70 - 22)*

### 4. தேசியத் தன்னாட்சியும் பிரதேசத் தன்னாட்சியும்

பிரிந்து செல்லவும், ஒரு சுதந்திர அரசை உருவாக்கவும் ஒவ்வொரு தேசத்துக்கும் உரிமை உண்டு என்பதை லெனின் உறுதிப்படுத்திய போது, எல்லா இடங்களிலும் எல்லாச் சமயங்க ளிலும் இவ்வுரிமையைப் பயன்படுத்த வேண்டும் என்று வாதிட பாட்டாளி வர்க்கக் கட்சி கடமைப்பட்டிருக்கிறது என்ற பொரு ளில் அவர் சொல்லவில்லை. மாறாக சில சமயங்களில் பிரி வினை என்பது தகாத ஒன்றாக இருக்கும் என்பதை அவர் ஏற்றுக் கொண்டார்:

> தேசங்களுக்குத் தன்னாட்சி உரிமை (அதாவது பிரிவினை என்ற பிரச்சினையைத் தீர்மானிப்பதில் ஒரு முற்றிலும் சுதந்திரமான, ஜனநாயகத் தன்மை வாய்ந்த முறையை அரசியல் சட்ட வகையில் உத்திரவாதம் செய்தல்) என் பதை, எச்சூழ்நிலையிலும், ஒரு குறிப்பிட்ட தேசத்துக்கு பிரிந்து செல்வதற்கான தகுதி உண்டு என்பதுடன் சேர்த்துக் குழப்பக் கூடாது. பிரிவினைப் பிரச்சினை ஒவ்வொன்றை யும், சமூக வளர்ச்சி முழுவதன் நலன்கள், சோசலிசத்துக் கான பாட்டாளி வர்க்கப் போராட்டத்தின் நலன்கள் ஆகிய வற்றுடன் அது பொருந்துகிறதா என்ற தகுதியை மட்டுமே கொண்டு சமூக ஜனநாயகக் கட்சி தீர்மானிக்க வேண்டும். *(லெ.தொ.நூ. 19. 429)*

புற நிலையானது பிரிவினையைச் சாத்தியமற்றதாக்கி விட லாம். சுதந்திரமான அரசுகளை உருவாக்கிக் கொள்ள இயலாத வகையில் சில தேசிய இனங்கள் மிகவும் சிறியவையாகவோ அல்லது சிதறுண்டு கிடப்பவையாகவோ இருக்கலாம். அப்படி

யானால், பிரிவினை என்பது உசிதமானது அல்ல என்றோ, நடைமுறை சாத்தியமானது அல்ல என்றோ கருதப்பட கூடிய இடங்களில் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பது எவ்வாறு?

லெனின் சுட்டிக் காட்டுவது போல, இப்பிரச்சினைக்கு இரு எதிரெதிரான தீர்வுகள் உள்ளன: பண்பாட்டு - தேசியத் தன்னாட்சி என முதலாளி வர்க்கம் சொல்லும் தீர்வு ஒன்று; பிரதேச மற்றும் வட்டாரத் தன்னாட்சி என்ற பாட்டாளி வர்க்கத் தீர்வு மற்றொன்று.

பண்பாட்டு - தேசியத் தன்னாட்சி என்ற கோட்பாட்டின் படி, ஒவ்வொரு தேசிய இனத்தின் உறுப்பினர்களும் ஒரு 'தேசியக் கழகத்தை' உருவாக்கிக் கொள்வர். இது கல்வி உள்ளிட்ட அவர்களது சமூக, பண்பாட்டு வாழ்வைக் கட்டுப்ப டுத்தும். இவ்வகையில், பள்ளிகள் தேசிய இனத்தின் அடிப்ப டையில் வேறுபடுத்தப்படும். லெனின் கேட்கிறார்:

> இத்தகைய ஒரு பிரிவு, பொதுவாக ஜனநாயகம் என்ற நிலைப்பாட்டில் இருந்தும், குறிப்பாக பாட்டாளிய வர்க்கப் போராட்டத்தின் நலன்கள் என்ற நிலைபாட்டில் இருந்தும் அனுமதிக்கப்படக் கூடியதா எனக் கேட்கப்படலாம்.
>
> 'பண்பாட்டு - தேசிய' தன்னாட்சித் திட்டம் என்பதன் சாரத்தைத் தெளிவாக கிரகித்துக் கொள்வது, தயக்கமின்றி ஒருவர் பதில் சொல்வதற்குப் போதுமானது; 'அது முற்றி லும் அனுமதிக்கத் தக்கதல்ல'...
>
> ஒரு தனி அரசில் வாழ்கிற பல்வேறு தேசிய இனங்கள் பொருளாதாரத் தொடர்புகளால் பிணைக்கப்பட்டிருப்பார்க ளேயானால், அவர்களைப் 'பண்பாட்டு' விசயங்களில், குறிப்பாக 'கல்வி' விசயங்களில் நிரந்தரமாகப் பிரித்து வைப்பதற்கான எந்த ஒரு முயற்சியும் மடத்தனமானதும் பிற்போக்குத்தனமானதும் ஆகும். இதற்கு மாறாக, உண்மை வாழ்வில், நடைமுறையில் என்ன நடக்கிறதோ, அதற்கான தயாரிப்பாக பள்ளிகள் இருப்பதற்காக, கல்வி விசயங்களில் தேசிய இனங்களை ஐக்கியப்படுத்த முயற்சிகள் செய்யப்ப டவேண்டும். தற்சமயத்தில் பல்வேறு தேசிய இனங்கள் கொண்டுள்ள உரிமைகளும், அவர்களது வளர்ச்சி அளவும் சரிசமமாக இல்லை. இச்சூழ்நிலைகளில், தேசிய இனத்தின் அடிப்படையில் பள்ளிகளை வேறுபடுத்துவது, உண்மை

யில் தவிர்க்க முடியாதவாறு, அதிகம் பின்தங்கிய தேசிய இனங்களின் நிலைமைகளை மேலும் மோசமாக்கும்...

தேசிய இன அடிப்படையில் பள்ளிகளைப் பிரித்து விடுவது கேடுவிளைவிக்கக் கூடிய திட்டம் மட்டுமல்ல, முதலாளிகளின் அப்பட்டமான மோசடியும் ஆகும். இத்தகைய ஒரு கருத்தை முன்வைப்பதன் மூலம் உழைப்பாளிகளைப் பிளவுபடுத்தி, பிரிவு செய்து, வலுக்குறைக்க முடியும். தேசிய இனத்தின் அடிப்படையில் சாதாரண மக்களின் பள்ளிகளைப் பிரிப்பது என்பதன் மூலம் இது கூடுதலாக நிகழும்; வசதிமிக்க, தனிப்பட்ட பள்ளிகளிலும் சிறப்பாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களைக் கொண்டும் தம் பிள்ளைகளுக்கு கல்வி வசதி ஏற்படுத்திக் கொள்ளும் முதலாளிகளோ, 'பண்பாட்டு - தேசியத் தன்னாட்சி' என்பதன் மூலம் ஏற்படும் பிரிவு அல்லது பலவீனப்படுதல் ஆகியவற்றால் எவ்வகையிலும் அச்சுறுத்தப்படுவது இல்லை. *(லெ.தொ.நூ. 19.503-5)*

இவ்வாறு, பண்பாட்டு - தேசியத் தன்னாட்சி என்பது, உழைப்பாளிகளைப் பிளவுபடுத்துவதும், முதலாளி வர்க்கத்தின் கட்டுப்பாட்டில் மேலும் உறுதியாக வைத்துவிடுவதும் ஆகும்.

இதற்கு மாறாக, பிரதேச மற்றும் வட்டாரத் தன்னாட்சி என்பதை லெனின் முன்வைத்தார். அவர் வழக்காடினார்: உண்மையான தேசிய சமத்துவம் என்பதற்குத் தேவையானது,

> பரந்த பிரதேசத் தன்னாட்சியும் முழுமையான ஜனநாயக சுயநிர்வாகமும் ஆகும். தன்னைத் தானே ஆள்கிற தன்னாட்சிப் பிரதேசங்களின் எல்லைகள் பொருளாதார சமூக நிலைமைகள், மக்கள் தொகையின் தேசிய இயல்பு முதலியவற்றைக் கொண்டு அவ்வட்டார மக்களால் தீர்மானிக்கப்படும். (லெ.தொ.நூ. 19.427)

தேசிய ஒடுக்குமுறையைத் துடைத்தெறிய, தன்னாட்சிப் பகுதிகளை உருவாக்குவது மிகவும் முக்கியம் அவை எவ்வளவு சிறியதாகவும் இருக்கலாம். இவை முற்றிலும் ஓரின மக்கள் தொகையினரைக் கொண்டவையாக இருக்க வேண்டும். நாடு முழுவதிலும் - ஏன் - உலகம் முழுவதிலுமே கூட சிதறிக்கிடக்கிற அந்தந்த தேசிய இன மக்களை ஈர்க்கக்கூடிய பகுதிகளாக இருக்கவேண்டும். அவர்கள்

எல்லாவகை உறவுகளையும் சுதந்திரமான இணைப்புகளையும் ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய தன்னாட்சிப் பகுதிகளாக அவை இருக்க வேண்டும். (லெ.தொ.நூ. 20.50)

வட்டாரத் தன்னாட்சிக் கோட்பாடு கீழ்க்கண்டவற்றையும் உள்ளடக்கியது:

> மக்கள் தொகையினர், பள்ளிகளில் தமது சொந்த மொழியில் கல்வி பெறும் உரிமை; இதற்காக அமைக்கப்படும் பள்ளிகளுக்கான செலவை அரசு உறுப்பும் சுயநிர்வாக வட்டார உறுப்பும் ஏற்றுக் கொள்ளும். கூட்டங்களில் தனது சொந்த மொழியைப் பயன்படுத்த ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை, வட்டார, பொது அரசு நிறுவனங்கள் அனைத்திலும் சொந்த மொழியைப் பயன்படுத்துதல்; கட்டாய ஆட்சிமொழியை ஒழித்துக் கட்டுதல். (லெ.தொ.நூ. 24. 472)

கடைசி அம்சத்தைப் பொறுத்தவரை, லெனின் கீழ் வருமாறு கூறினார்:

> வர்த்தக உறவுகளின் நலன்களுக்காக, ஒரு குறிப்பிட்ட நாட்டின் எந்த மொழியைத் தெரிந்து கொள்வது பெரும்பான்மையினருக்கு அனுகூலமானது என்பதை பொருளாதாரப் பரிவர்த்தனையின் தேவைகளே தீர்மானித்துக் கொள்ளும். (லெ.தொ.நூ. 19. 355)
>
> ஒரு 'ஆட்சிமொழி' என்பது ரசிய மொழியிலிருந்து மக்களை அடித்து விரட்டும் ஒரு தடி அல்லவா? 'மன நிலை' என்பது தேசியப் பிரச்சினையில் மிக முக்கியமானதாக உள்ள ஒன்று. மையப்படுத்துதல், பரந்த அரசுகள், ஒரு பொதுமொழி ஆகியன ஐயத்துகிடமற்ற முக்கியத்துவம் கொண்டிருப்பன. மிகச்சிறிய நிர்ப்பந்தம் பிரயோகிக்கப்பட்டாலும் இவற்றுக்குள்ள முக்கியத்துவத்தை இந்த 'மனநிலை' என்பது களங்கப்படுத்தி, கறைப்படுத்தி செல்லத்தகாததாக்கிவிடும். இதனை ஏன் புரிந்து கொள்ளாமல் இருக்கிறீர்கள்? (லெ.தொ.நூ. 19. 499)

இதுபோக, பெரிய தொழில் மையங்களில் வேறு ஒரு பிரச்சினை உள்ளது. இம்மையங்களின் மக்கள் தொகையில் கட்டாயம் பல இனங்கள் கலந்திருக்கும். இது நாட்டின் எல்லாப் பாகங்களில் இருந்தும், அயல்நாடுகளில் இருந்தும் வந்தவர்களால் உருவானது. அதேநேரத்தில், இங்கு வட்டாரத் தன்னாட்சி

என்பதுகூட, முழுமையான தேசிய இன சமத்துவத்தை உறுதி செய்யப் போதுமானதாக இராது. ஏனெனில் அந்த அளவுக்கு மக்கள் தொகையில் நெருக்கமான கலப்பு ஏற்பட்டுவிட்டது. இது லெனின் காலத்திலேயே ஒரு உலகு தழுவிய பிரச்சினை யாக இருந்தது:

> கடும் வறுமையால் மட்டுமே மக்கள் தமது சொந்த நாட்டை விட்டுச் செல்லுமாறு கட்டாயப் படுத்தப்படுகிறார்கள் என்பதில் ஐயமில்லை; முதலாளியம் மிகவும் வெட்கமற்ற முறையில் வெளிநாட்டில் இருந்து வந்து குடியேறிய தொழிலாளிகளைச் சுரண்டுகிறது என்பதிலும் ஐயமில்லை. ஆனால் பிற்போக்குவாதிகள் மட்டுமே தேசிய இனங்களின் இந்த நவீனக் குடியேற்றத்தின் முற்போக்கான முக்கியத்து வத்தைப் பார்க்காமல் கண்களை மூடிக் கொள்வர். *(லெ.தொ.நூ. 19.454)*

*1911* ஆம் ஆண்டு பள்ளிகள் கணக்கெடுப்பைப் பற்றி லெனின் குறிப்பிட்டார்:

> செயிண்ட் பீட்டர்ஸ்பர்க் என்ற பெரிய நகரத்தின் மக்கள் தொகையில் மிகமிக அதிகமாக தேசிய இனங்களின் கலப்பு ஏற்பட்டுள்ளது தெளிவாகப் புலப்படுகிறது. இது ஒரு தற்செயல் நிகழ்ச்சி அல்ல, முதலாளிய நியதி ஒன்றின் விளைவுதான். இந்நியதி, உலகின் எல்லாக் கண்டங்களிலும் எல்லாப் பகுதிகளிலும் செயல்படுகிறது. பெருநகரங்கள், தொழிற்சாலை மையங்கள், ரயில்வே மையங்கள், வர்த்தக மற்றும் தொழில் மையங்கள் ஆகியவை பொதுவாக மற்ற இடங்களைக் காட்டிலும் மிகவும் கலப்படமான மக்கள் தொகையைக் கொண்டிருப்பது நிச்சயம். இம்மையங்கள் தான் மற்றவற்றைக் காட்டிலும் வேகமாக வளர்ந்து, பின்தங் கிய கிராமப் பகுதிகளில் இருப்பவர்களை இடைவிடாது அதிகரித்த எண்ணிக்கையில் கவர்ந்திழுக்கின்றன. *(லெ.தொ.நூ. 19.352)*

'பண்பாட்டு - தேசிய இனத் தன்னாட்சி' என்ற கோட்பாடு செயிண்ட் பீட்டர்ஸ் பர்க்கில் கையாளப்படுமானால் அங்கு இருபத்துமூன்று 'தேசிய இனக் கழகங்களுக்கு' குறையாததவை இருக்கவேண்டும்; ஒவ்வொன்றும் தமது சொந்தக் கல்வி நிறுவ னங்களைக் கொண்டிருக்க வேண்டும் என லெனின் சுட்டிக் காட்டுகிறார். அவர் மேலும் கூறியதாவது:

*பொதுவாக ஜனநாயகத்தின் நலன்களும், குறிப்பாக பாட்டாளி வர்க்கத்தின் நலன்களும் இதற்கு நேர் எதிரானவற்றையே கோருகின்றன. ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள பொதுவான கல்வி நிறுவனங்களில் எல்லாத் தேசிய இனத்தவரின் குழந்தைகளும் கலப்பதை உத்திரவாதம் செய்ய நாம் கடும்முயற்சி செய்ய வேண்டும்... எவ்வகையிலும் கல்வி விசயங்களில் தேசிய இனங்களைப் பிரித்து வைப்பது நம் பணி அல்ல; மாறாக சரிசமமான உரிமைகளின் அடிப்படையில் தேசிய இனங்கள் அமைதியாக சேர்ந்து வாழ்வதற்கான அடிப்படையான ஜனநாயக நிலைமைகளை உருவாக்க நாம் கடும் முயற்சி செய்யவேண்டும். (லெ.தொ.நூ. 19.532)*

இங்குமே, பிரச்சினைக்குள்ள தீர்வு, ஜனநாயகத்தை மிக முழுமையாக விரிவுபடுத்துவதுதான். ஒரு அசாதாரணமான உதாரணம் கொண்டு லெனின் இதை விளக்குகிறார். செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரப்பள்ளிகளின் மாணவர் தொகை, ஒரு ஜார்ஜியக் குழந்தையையும் உள்ளடக்கியது என்பதைக் குறிப்பிட்டு லெனின் சொல்கிறார்:

*48,076 பள்ளிச் சிறுவர்களிடையே உள்ள ஒரு ஜார்ஜியக் குழந்தையின் நலன்களை சரிசமமான உரிமைகளின் அடிப்படையில் பாதுகாப்பது இயலுமா என்று நம்மைக் கேட்கக்கூடும். ஜார்ஜிய 'தேசியப் பண்பாட்'டின் அடிப்படையில் ஒரு தனி ஜார்ஜியப் பள்ளியை அமைப்பது இயலாது என்பதுதான் நமது பதில். ஆனால் இந்தக் குழந்தைக்கு ஜார்ஜிய மொழி, ஜார்ஜிய வரலாறு முதலானவற்றைப் பற்றிய விரிவுரைகள் பெற இலவசமான அரசாங்க இடங்கள், இக்குழந்தைக்கு மத்திய நூலகத்தில் இருந்து ஜார்ஜிய நூல்கள் வழங்குதல், ஜார்ஜிய ஆசிரியரின் கட்டணத்துக்கான ஒரு அரசு நன்கொடை முதலானவற்றை நாம் கோருவோமானால் அது கேடு விளைவிக்கிற ஏதோவொன்றை நாம் கட்டிக் காப்பதாகவோ, சாத்தியமில்லாத ஏதோ ஒன்றுக்கு முயற்சி செய்வதாகவோ ஆகாது. உண்மையான ஜனநாயகத்தில் மக்கள் இதை எளிதாகச் சாதித்து விடலாம். ஆனால் எல்லாத் தேசிய இனங்களையும் சேர்ந்த தொழிலாளிகள் ஐக்கியப்படும் போதுதான் இந்த உண்மையான ஜனநாயகம் சாதிக்கப்பட முடியும். (லெ.தொ.நூ. 19. 533)*

## 5. தேசியப் பண்பாடும் அனைத்துலகப் பண்பாடும்

முதலாளி வர்க்கத்துக்கு எப்போதுமே ஒரு இரட்டைத் தன்மை உள்ளது. கடந்த காலத்தைப் பொறுத்தவரை புரட்சிகர மானது. எதிர்காலத்தைப் பொறுத்தவரை எதிர்ப் புரட்சிகரமா னது. முதலாளியத்தின் இறுதிக் கட்டத்தில் எதிர்மறை அம்சம் மேலோங்குகிறது. ஒரு காலத்தில் தேசிய விடுதலைக்கான போராட்டத்துக்கு தலைமை தாங்கிய வர்க்கம், இப்போது மற்ற தேசங்கள் மீது தனது ஆட்சியைத் திணிக்கிறது; ஒரு காலத்தின் ஜீவனும் உணர்வும் நிரம்பியிருந்த பண்பாடு, இப்போது ஆளு கைக்குட்பட்ட மக்களின் வேட்கைகளை நசுக்கும் பெரும் பாராமாகிறது. சில இடங்களில் மக்களே ஒழித்துக் கட்டப்படு கின்றார்கள்; அமெரிக்க இந்தியர்களும், ஆஸ்திரேலியப் பூர்வகு டிகளும் இதற்கு எடுத்துக்காட்டு. வேறு இடங்களில், மக்கள் அடிமைப்படுத்தப்பட்டு, அவர்களது பண்பாடு துடைத்தெறியப் படுகிறது. தென் ஆப்பிரிக்க பண்டுகளின் பண்பாடு இதற்கு எடுத்துக்காட்டு. வேறு சில இடங்களிலோ மேலும் நுட்பமான முறைகள் கையாளப்படுகின்றன:

> *சீன மக்களின் உள்ளங்களில் நஞ்சேற்றுவதில் தாம் மேற் கொண்ட முயற்சிகளை ஏகாதிபத்தியவாதிகள் ஒரு போதும் தளர்த்தவில்லை. இது அவர்களது பண்பாட்டு ஆக்கிரமிப் புக் கொள்கை. இது கிறித்துவப் பிரச்சாரப் பணியின் மூலமும், மருத்துவமனைகள், பள்ளிகள் ஆகியவற்றை நிறுவுவதன் மூலமும், செய்தித்தாள்களைப் பிரசுரிப்பதன் மூலமும், வெளிநாடுகளில் கல்வி கற்குமாறு சீன மாணவர்க ளைத் தூண்டுவதன் மூலமும் மேற்கொள்ளப்பட்டது. அவர் களது நலன்களுக்குச் சேவை செய்கிற, மக்களை ஏமாற்று கிற அறிவாளிகளைப் பயிற்றுவிப்பதுதான் அவர்களது நோக்கமாகும். (மா.தெ.நூ. 2.312)*

ஒடுக்கப்படும் தேசத்தில் உள்ள முதலாளி வர்க்கத்திலும் இதே இரட்டைத் தன்மை வெளிப்படுகிறது. இவ்வர்க்கம் தேசிய விடுதலை என்ற தனது ஆர்வம், சோசலிசத்தின் மீது அதற்குள்ள அச்சம் ஆகிய இரண்டுக்கும் இடையில் ஊசலாடுகிறது. எனவே, கிரீஸிலும் அயர்லாந்திலும் நடந்தது போல், தனது பண்பாட்டுப் பாரம்பரியத்தை விற்றுவிட எப்போதும் அது தயாராக உள்ளது:

> *சுதந்திரம், தாய்நாடு மொழி, தேசம் ஆகியவற்றின் நலன் களை முதலாளி வர்க்கம், புரட்சிகரப் பாட்டாளி வர்க் கத்தை அது எதிர்கொண்ட பொழுது, கணக்கற்ற முறை*

விற்றுள்ளதை பாட்டாளி வர்க்கத்தினராகிய 'நாம்' பார்த்துள்ளோம். (லெ.தொ.நூ. 6.462, ஒப்: 23.61)

இதிலிருந்து தெரிவது என்னவென்றால் தேசியப் பண்பாடுகளின் கூட்டுத் தொகையான உலகப் பண்பாட்டின் எதிர்காலம், அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் கரங்களில் உள்ளது என்பதாகும். அவ்வெதிர்காலம் எத்தகையதாக இருக்கும்? பொதுவான முறையில் இக் கேள்விக்கான விடையை லெனின், மா சேதுங் இருவரும் கூறியிருக்கிறார்கள்:

ஒவ்வொரு தேசியப் பண்பாட்டிலும், ஜனநாயக மற்றும் சோசலிசப் பண்பாட்டுக்கான கூறுகள் ஆரம்ப நிலை வடிவிலேனும் இருக்கவே செய்கின்றன. ஏனெனில் ஒவ்வொரு தேசத்திலும் உழைக்கின்ற மக்கள், சுரண்டப்படுகிற மக்கள் இருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கை நிலைமைகள், ஜனநாயக மற்றும் சோசலிச சித்தாந்தத்தைத் தவிர்க்க இயலாதபடி தோற்றுவிக்கின்றன. ஆனால் ஒவ்வொரு தேசமும் ஒரு முதலாளியப் பண்பாட்டையும் கொண்டுள்ளது. (மிகப் பெரும்பாலான தேசங்கள் ஒரு பிற்போக்குத்தனமான, சமயவகைப் பண்பாட்டையும் கொண்டுள்ளன). இப்பண்பாடு முதலாளியக் கூறுகளைக் கொண்டுள்ள பண்பாடு மட்டுமல்ல, ஆதிக்கம் செலுத்தும் பண்பாடும் ஆகும். எனவே பொதுவான தேசியப் பண்பாடு என்பது நிலப்பிரபுக்கள், மதவாதிகள், முதலாளி வர்க்கத்தினர் ஆகியோரின் பண்பாடே ஆகும்...

'ஜனநாயகம் என்ற அனைத்துலகப் பண்பாடு மற்றும் உலகு தழுவிய பாட்டாளி வர்க்க இயக்கம்' என்ற முழக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில், நாம் ஒவ்வொரு தேசியப் பண்பாட்டில் இருந்தும் அதிலுள்ள ஜனநாயக மற்றும் சோசலிசக் கூறுகளை மட்டுமே எடுத்துக் கொள்கிறோம்; ஒவ்வொரு தேசத்திலும் உள்ள முதலாளியப் பண்பாடு மற்றும் முதலாளியத் தேசியம் ஆகியவற்றுக்கு எதிராக ஜனநாயக மற்றும் சோசலிசக் கூறுகளை மட்டுமே முழுமையாக எடுத்துக் கொள்கிறோம். (லெ.தொ.நூ. 20.24)

தற்போதைய கட்டத்தில் சீனாவின் புதிய பண்பாடு, பாட்டாளி வர்க்கத் தலைமையின் கீழுள்ள பரந்துபட்ட மக்கள் திரளினரின் ஏகாதிபத்திய - எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ - எதிர்ப்புப் பண்பாடு என்று நாம் கூறினோம். இன்று உண்மையாகவே மக்கள் திரளினருக்கு உரியன என்பவை

*அனைத்தும் கட்டாயம் பாட்டாளி வர்க்கத்தால் வழிநடத்திச் செல்லப்பட வேண்டும். (லெ.தொ.நூ. 20.24)*

*முதலாளி வர்க்கத்தின் தலைமையில் இருப்பது எதுவும் மக்கள் திரளினருக்கு உரியனவாக இருப்பது சாத்திய மில்லை. இயல்பாகவே இது புதிய பண்பாட்டின் பகுதி யான புதிய இலக்கியம், கலை ஆகியவற்றுக்கும் பொருந்து கிறது. சீனாவிலும், வெளிநாடுகளிலும் கடந்த காலங்களில் இருந்து பெறப்பட்ட இலக்கியம், கலை ஆகியவற்றில் உள்ள பழஞ் செல்வங்களையும், நல்ல மரபுகளையும் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் மக்கள் திரளினருக்கு சேவைசெய்வதே இதன் நோக்கமாக இருக்க வேண்டும். கடந்த காலத்தின் இலக்கிய, கலை வடிவங்களைப் பயன்ப டுத்த நாம் மறுப்பதில்லை; ஆனால் இந்த பழைய வடிவங்கள்கூட நமது கரங்களில் மறுவார்ப்புக்கு உள்ளாக் கப்பட்டு, புதிய உள்ளடக்கம் பொருத்தப்பட்டு, மக்களுக் கான சேவையில் புரட்சித்தன்மை வாய்ந்த ஒன்றாகி விடு கின்றன. (மா.தெ.நூ. 3.76)*

எதிர்காலத்தின் பாட்டாளி வர்க்கப் பண்பாடு, அனைத்துலக உள்ளடக்கமும் தேசிய வடிவமும் கொண்டதாக இருக்கும். அது அனைத்துலக உள்ளடக்கம் கொண்டதாக இருப்பதால் அதன் உள்ளடக்கம் பரந்ததாக இருக்கும்; ஏனெனில் எல்லாத் தேசங்க ளிலும் உள்ள மக்கள் திரளினருக்கும் பொதுவாக உள்ள சோசலிசக் கண்ணோட்டத்தை அது வெளியிடும். அது தேசிய வடிவம் கொண்டதாக இருப்பதால் அதன் வடிவங்கள் பல்வேறு வகையாக இருக்கும். ஏனெனில் ஒவ்வொரு நாட்டின் மொழி, மரபுகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றால் தீர்மானிக்கப்படும் வடிவங்களிலேயே இக்கண்ணோட்டம் திட்டவட்டமாக உருப் பெறும். ஸ்டாலின் விளக்கினார்:

*பாட்டாளி வர்க்க உள்ளடக்கம், தேசிய வடிவம்: சோசலிசம் இத்தகைய உலகு தழுவிய பண்பாட்டை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறது. பாட்டாளி வர்க்கப் பண்பாடு, தேசியப் பண்பாட்டை ஒழித்துக் கட்டுவதில்லை; அது தேசியப் பண்பாட்டுக்கு உள்ளடக்கத்தை வழங்குகிறது. மற்றோர்புறம், தேசியப் பண்பாடு, பாட்டாளி வர்க்கப் பண்பாட்டை ஒழித்துக் கட்டுவதில்லை; அது பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுக்கு வடிவம் வழங்குகிறது. முதலாளி வர்க்கம் அதிகாரத்திலிருந்தவரை, தேசங்களை வலுப்படுத் துவது என்பது முதலாளிய ஆட்சியின் ஆதரவில் நடந்து*

கொண்டிருந்த வரை, தேசியப் பண்பாடு என்ற முழக்கம் ஒரு முதலாளி வர்க்க முழக்கமாகவே அமைந்தது. பாட்டாளி வர்க்கம் ஆட்சிக்கு வந்து சோவியத் ஆட்சியின் ஆதரவில் தேசங்கள் வலுப்படத் தொடங்கிய போது தேசியப் பண்பாடு என்ற முழக்கம் ஒரு பாட்டாளி வர்க்க முழக்கமாக மாறியது. (ஸ்.தொ.நூ. 7. 140)

இது போலவே மா சேதுங்கும் கூறியிருக்கிறார்:

மாபெரும் சீன தேசத்தின் பகுதியாகவும், அதன் சதையின் சதையாகவும் ரத்தத்தின் ரத்தமாகவும் உள்ள சீனப் பொதுவுடைமையாளர்களைப் பொறுத்தவரை, சீனாவின் சிறப்பியல்புகளில் இருந்து தனிமையாக்கப்பட்ட மார்க்சியம் பற்றிப் பேசுவது எல்லாம் அருவமான மார்க்சியம் மட்டுமே, வெற்றிடத்தில் உள்ள மார்க்சியம் மட்டுமே ஆகும். எனவே, சீனத்தில் மார்க்சியத்தைத் திட்டவட்டமாகப் பிரயோகிப்பது, அதன் ஒவ்வொரு வெளிப்பாடும் ஐயத்துக்கு இடமில்லாத சீனத்தன்மையைப் பெறுவது, அதாவது சீனாவின் குறிப்பிட்ட சிறப்பியல்புகளின் ஒளியில் மார்க்சியத்தைப் பிரயோகிப்பது ஒரு பிரச்சினையாகி உள்ளது. கட்சி முழுவதும் இதை விரைவாகப் புரிந்து தீர்வு காணவேண்டியுள்ளது. அந்நிய நாட்டு மாதிரிகள் ஒழித்துக் கட்டப்பட வேண்டும்; பொருளற்ற அருவமான மெட்டுகளில் பாடுவதை நிறுத்தவேண்டும். வறட்டுவாதம் புதைக்கப்பட வேண்டும்; அவற்றுக்குப் பதிலாக சீனாவின் சாதாரண மக்கள் விரும்புகிற புத்தம் புதிய, உயிருள்ள சீனப்பாங்கும் சீன உணர்வும் கொண்டுவரப்பட வேண்டும். அனைத்துலக உள்ளடக்கத்தைத் தேசிய வடிவத்தில் இருந்து பிரிப்பது, அனைத்துலகத் தன்மைபற்றிய ஆரம்பப் பாடத்தைக் கூடப் புரிந்து கொள்ளாதவர்களின் நடைமுறையாகும். (மா.தெ.நூ. 2.209, ஒப்: 381)

இங்கு மா சேதுங் கட்சிப் பிரச்சாரம் பற்றிப் பேசுகிறார்; ஆனால் அவர் சொல்வது பண்பாட்டுக்கும் சரியாகப் பொருந்தும். சீனப் பண்பாட்டுக்கு மட்டுமல்ல, பெரிய - சிறிய, பழைய - புதிய தேசங்கள் அனைத்தினதும் பண்பாட்டுக்கும் பொருந்தும். ஏகாதிபத்தியத்தால் நசுக்கப்பட்டு மரண எல்லைக்கு இட்டு வரப்பட்டுள்ள, சோசலிசத்தால் காப்பாற்றப்படப் போகிற தேசங்களின் பண்பாட்டுக்கும் இது பொருந்தும். இவ்வகையில் பாட்டாளி வர்க்கப் பண்பாடானது, முதலாளி வர்க்கப் பண்பாட்டைக் காட்டிலும் வலுவானதாக இருக்கும்; எல்லையற்ற வகையில் வெவ்வேறு வகைப்பட்டதாக இருக்கும்.

அத்தியாயம் - 5

# ஒரு நாட்டில் சோசலிசம்

*பாட்டாளிகளுக்கு இழப்பதற்கு ஒன்றுமில்லை, அவர்களது அடிமைச் சங்கிலியைத் தவிர. அவர்கள் வெல்வதற்கோ ஓர் உலகம் உள்ளது. அனைத்து நாட்டுத் தொழிலாளிகளே, ஒன்று சேருங்கள்!*

— பொதுவுடைமை அறிக்கை

## 1. இடையறாத புரட்சி பற்றிய மார்க்சின் தத்துவம்

மார்க்சியத் தத்துவத்துக்கு லெனின் வழங்கிய பங்களிப்பை ஸ்டாலின் கீழ்க்கண்டவாறு வரையறுத்தார்:

லெனினியம் என்பது ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சி சகாப்தத்தின் மார்க்சியமாகும். மேலும் துல்லியமாகச் சொல்வதானால், லெனினியம் என்பது பொதுவாக பாட்டாளி வர்க்கப் புரட்சி பற்றிய தத்துவமும் நடைமுறையும் ஆகும்; குறிப்பாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய தத்துவமும் நடைமுறைத் தந்திரமும் ஆகும். மார்க்சும் ஏங்கல்சும் புரட்சிக்கு முந்திய கால கட்டத்தில் (நாம் குறிப்பிடுவது பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு முந்திய காலகட்டம்), வளர்ச்சி பெற்ற ஏகாதிபத்தியம் இன்னும் நிலவாத காலகட்டத்தில், புரட்சிக்குப் பாட்டாளி வர்க்கம் தயாரிப்பு செய்து கொண்டிருந்த கால கட்டத்தில், பாட்டாளி வர்க்கப் புரட்சி என்பது இன்னும் ஒரு உடனடியான, நடைமுறை சார்ந்த, தவிர்க்கமுடியாத நிகழ்ச்சியாக இல்லாத காலகட்டத்தில் தமது செயல்பாடு களை மேற்கொண்டனர். ஆயினும் மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரின் சீடரான லெனின், வளர்ச்சியடைந்த ஏகாதிபத் தியக் கட்டத்தில், பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடித்து மலர்கிற கட்டத்தில், பாட்டாளி வர்க்கப் புரட்சி ஏற்கனவே ஒரு நாட்டில் வெற்றிபெற்று, முதலாளி வர்க்க ஜனநாயகத் தைத் தகர்த்து, பாட்டாளி வர்க்க ஜனநாயக சகாப்தத்தில் — சோவியத் சகாப்தத்தில் — பிரவேசித்துள்ள காலகட்டத் தில் தமது செயல்பாடுகளை மேற்கொண்டார். (ஸ்.தொ.நூ. 6.73)

ஏகாதிபத்திய அல்லது ஏகபோக முதலாளியச் சகாப்தம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் துவங்கி, 1917 அக்டோபர் புரட்சியில் உச்ச நிலையை அடைந்தது. லெனினின் நடவடிக்கைகள் 1890 களில் தொடங்கி அவர் தலைமை தாங்கிய புரட்சிக்கு சில ஆண்டுகளுக்குப் பின்பு முடிவடைந்தன. எனவே லெனினின் நடவடிக்கைகளும் ஏகாதிபத்திய சகாப்தமும் ஒரு சேர நிகழ்ந்தவையாகும். ஏகாதிபத்தியம் பற்றிய தத்துவப் பகுப்பாய்வும் அக்டோபர் புரட்சியின் தலைமையும் அவருடையவை. தொழில் முதலாளியச் சகாப்தத்தில் தாம் மேற்கொண்ட நடவடிக்கைகளின் அடிப்படையில், மார்க்சும் ஏங்கல்சும் உலகப் புரட்சி பற்றி உருவாக்கிய பொதுத் தோற்றத்திலிருந்து துவங்கி, அவர்கள் தம் வாழ்நாளில் பார்க்க முடியாமல் போன ஏகாதிபத்திய யுகத்தின் நிலைமைகளுக்கேற்ப, லெனின் ஒரு புதிய காட்சியை வகுத்தார் என்பது இந்த அத்தியாயத்தில் விளக்கப்படும்:

> முதலாளியச் சுதந்திரப் போட்டி நிலவிய சகாப்தத்தில் வாழ்ந்த மார்க்ஸ், ஏகாதிபத்திய சகாப்தத்துக்கு மட்டுமே உரிய சில குறிப்பிட்ட நியதிகளை திட்டவட்டமாக முன் கூட்டியே அறிந்திருக்க முடியாது. ஏனெனில் முதலாளியத்தின் கடைசிக் கட்டமான ஏகாதிபத்தியம் அப்போது தோன்றியிருக்கவில்லை; அது சம்பந்தப்பட்ட நடைமுறையும் இல்லாதிருந்தது. லெனினாலும் ஸ்டாலினாலுமே இக்கடமையை மேற்கொள்ள முடிந்தது. (மா.தெ.நூ. 1.299)

1847 ஆம் ஆண்டு பொதுவுடைமை அறிக்கைக்கு அடிப்படையாக பயன்பட்ட ஒரு நகல் அறிக்கையில், ஒரு நாட்டில் மட்டும் பாட்டாளி வர்க்கப் புரட்சி நடைபெறுவது சாத்தியமா என்ற கேள்வியை ஏங்கல்ஸ் எழுப்புகிறார்:

> ஒரு நாட்டில் மட்டும் இப்புரட்சி நடைபெற முடியுமா? முடியாது. உலகச் சந்தை ஒன்றை உருவாக்கியுள்ளதன் காரணமாக, பெரிய - அளவுத் தொழிலானது உலகில் உள்ள நாடுகள் அனைத்தையும், குறிப்பாக நாகரிகம் பெற்ற நாடுகளை மிக நெருக்கமாகப் பிணைந்துள்ளது. இதன் காரணமாக ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளில் நடைபெறும் நிகழ்ச்சியைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. மேலும் பெரிய - அளவுத் தொழிலானது எல்லா நாடுகளிலும் சமூக வளர்ச்சியை ஒரே சீராக்கியுள்ளது. இதன் காரணமாக, இந்த

வர்க்கம் நெருக்கமான பிணைப்பு கொள்ளத் தவறியதைச் சுட்டிக் காட்டுகிறார்:

> தேசத்தின் பெருந்திரளான மக்கள் அதாவது சிறு முதலாளி யக் கைவினைஞர்களும் உழவர்களும், அவர்களது மிக நெருக்கமான இயல்பான கூட்டாளிகளான முதலாளி வர்க் கத்தால் கைவிடப்பட்டனர்; ஏனெனில் அவர்கள் மிகவும் புரட்சிகரமானவர்களாக இருந்தார்கள். ஓரளவுக்கு பாட் டாளி வர்க்கத்தாலும் கைவிடப்பட்டனர்; காரணம் அவர்கள் போதுமான அளவில் முன்னேற்றம் அடைந்தவர்களாக இல்லை. (உ.போ. 152)

1861 ஆம் ஆண்டின் உழவர் சீர்திருத்தத்துக்குப் பிறகு மார்க்சும் ஏங்கல்சும், ரசியாவை 'ஐரோப்பாவில் புரட்சிகரச் செயலுக்கான முன்னணிப்படை' எனக் கண்டனர். அந்நாட்டில் ஏற்படும் ஒரு முதலாளியப் புரட்சி, மேற்கு நாடுகளில் ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் பச்சைக் கொடி காட்டும் சாத்தியப்பாட்டை எதிர்பார்த்தார்கள் (மா.ஏ. 1.100, ஒப் : 2.397). வேறு சொற்களில் கூறுவதானால், ஜெர்மனிக்கு அவர்கள் முன்பு அளித்த பாத்திரத்தை ரசியா இப்போது வகிக்கும் என எதிர்பார்த் தார்கள். பாட்டாளி வர்க்கப் புரட்சி உருவானால் அது ஒரே சமயத்தில் எல்லா நாடுகளிலும் வரும் என்று அவர்கள் இன்னும் நம்பினார்கள்.

கடைசியாக, பாட்டாளி வர்க்கப் புரட்சி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உருவாக்க வேண்டியிருந்தது. இக்கருத்தாக்கம் 'பொதுவுடைமை அறிக்கை'யில் ஏற்கனவே தொக்கி நிற்கிறது (முதல் அத்தியாயத்தின் தலைப்பில் மேற்கோளாகக் காட்டப்பட் டுள்ள வாக்கியத்தைக் காண்க). ஆனால் 1852 - இல்தான் மார்க்சால் இது தெளிவாக உருவாக்கப்பட்டது:

> என்னைப் பொறுத்தவரை, நவீன சமுதாயத்தில் வர்க்கங்கள் நிலவுவதையோ அவற்றுக்கிடையே போராட்டம் நிலவுவ தையோ கண்டுபிடித்த பெருமை எனக்கு உரியது அல்ல; எனக்கு நெடுநாட்களுக்கு முன்பே இந்த வர்க்கப் போராட் டத்தின் வரலாற்று வளர்ச்சியைப் பற்றி முதலாளிய வர லாற்று ஆசிரியர்களும், வர்க்கங்களின் பொருளாதார உள்ள மைப்பு பற்றி முதலாளியப் பொருளாதாரவாதிகளும் விளக் கியுள்ளார்கள். நான் புதிதாகச் செய்ததெல்லாம் பின்வருவன வற்றை மெய்ப்பித்ததுதான்: 1. உற்பத்தி வளர்ச்சியின்

குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டங்களுடன் மட்டுமே வர்க்கங்களின் வாழ்வு பிணைக்கப்பட்டுள்ளது; 2. வர்க்கப் போராட்டம் கட்டாயமாக பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு இட்டுச் செல்லும்; 3. இந்த சர்வாதிகாரமுமே எல்லா வர்க்கங்களையும் ஒழித்துக் கட்டுவதற்கும், ஒரு வர்க்க வேறுபாடற்ற சமுதாயத்துக்குமான மாறுதல் கட்டமாக அமைகிறது. (மா.ஏ. 1.528)

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கருத்துக்கு இன்றியமையாத ஒரு அம்சம் இன்னும் இங்கே இல்லை. முதலாளிய அரசு அதிகாரத்தைப் பாட்டாளி வர்க்கம் அழிக்கவேண்டிய தேவை என்பதுதான் இந்த அம்சம். இதுதான் பாரிஸ் கம்யூனின் படிப்பினைகளில் ஒன்றாகும். ஏங்கல்ஸ் கூறினார்:

பாட்டாளி வர்க்கம் ஆட்சிக்கு வருமானால் பழைய அரசு எந்திரத்தைக் கொண்டு செயல்களை மேற்கொள்ள முடியாது என்பதைத் துவக்கம் முதலே ஏற்றுக் கொள்ளுமாறு கம்யூன் நிர்ப்பந்திக்கப்பட்டது; அதாவது புதிதாகப் பெற்ற மேலாண்மையை இழக்காமலிருக்க வேண்டுமானால், ஒரு புறம் அது தனக்கெதிராக முன்பு பயன்படுத்தப்பட்ட பழைய ஒடுக்குமுறை யந்திரத்தை ஒழித்துக் கட்ட வேண்டும். மற்றொருபுறம், தனது சொந்தப் பிரதிநிதிகள், அலுவலர்கள் ஆகியோரிடம் இருந்துமே தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இதற்கு அவர்கள் அனைவருமே விதிவிலக்கின்றி எந்த நேரத்திலும் திரும்பப் பெறப்படுவதற்கு உட்பட்டவர்கள் என்பதை அறிவிக்க வேண்டும் (மா-ஏ. 2.187).

மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரின் இக்கருத்துகளிலிருந்து, லெனினின் புரட்சிகர யுத்த தந்திரத்தின் மூன்று முக்கிய அம்சங்களை நாம் புரிந்து கொள்கிறோம். இவை முதல் மூன்று அத்தியாயங்களில் விளக்கப்பட்டுள்ளன. அவை கீழ் வருமாறு: பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம்; முதலாளி வர்க்கப் புரட்சியில் இருந்து பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு இடையறாத நிலைமாற்றம்; தொழிலாளர் - உழவர் நேச அணி ஆயினும் அக்டோபர் புரட்சி ஏற்படும் தருவாயில் எந்த வடிவத்தை லெனினின் மனக்காட்சி எடுத்துக் கொண்டதோ, அந்த வடிவம் மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரது மனக் காட்சியிலிருந்து ஓர் அம்சத்தில் கூர்மையாக வேறுபட்டிருந்தது.

## 2. அக்டோபர் புரட்சியின் வெற்றி

நாம் ஏற்கனவே பார்த்ததுபோல், மேற்குலகின் வளர்ச்சி யடைந்த நாடுகளில் ஒரே சமயத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடிக்கும் என்றும், ரசியாவில் நடைபெறும் ஒரு முதலாளி வர்க்கப் புரட்சி இதற்குத் தூண்டுகோலாக அமையக் கூடும் என்றும் மார்க்சும் ஏங்கல்சும் நம்பினர். இதிலிருந்து குறிப்பால் உணர்த்தப்பட்டது என்னவென்றால் வேறு இடங்களில் நடக்கும் புரட்சிகளின் ஆதரவைப் பெறாமல் ஒரு தனி நாட்டில் மட்டும் புரட்சிக்கான முயற்சி செய்யப்பட்டால் (பாரிஸ் கம்யூன் போல), அப்புரட்சி நீடித்து நிற்க முடியாது என்பதாகும்.

பல ஆண்டுகளாக லெனின் இத்தகைய முடிவுகளை ஏற்றுக் கொண்டிருந்தார்:

> நாம் ரசிய அரசியல் புரட்சியை, ஐரோப்பாவில் சோசலிசப் புரட்சிக்கான முன்னோடியாக ஆக்குவோம். (லெ.தொ.நூ. 8.303, ஒப்: 541, 9.57,412,413)

> ரசியப் புரட்சியானது தனது சொந்த முயற்சிகளைக் கொண்டே வெற்றியைச் சாதிக்க முடியும். ஆனால் அது தன் சொந்த வலிமையை மட்டும் கொண்டு நீடித்திருப்ப தும், தனது ஆதாயங்களை ஒன்றுதிரட்டிக் கொள்வதும் இயலாது; மேற்கு நாடுகளில் ஒரு சோசலிசப் புரட்சி ஏற்பட்டிருந்தாலன்றி ரசியப் புரட்சியால் இதைச் சாதிக்க இயலாது. (லெ.தொ.நூ. 10.280, ஒப்: 92, 334, 394, 13.327)

'மேற்கு ஐரோப்பாவில் ஒரு சோசலிசப் புரட்சிக்கான புறநிலைமைகள் முதிர்ச்சியடைந்துள்ளன' என்று நம்புவதை லெனின் ஒருபோதும் நிறுத்தவில்லை (லெ.தொ.நூ. 21.419); ஆனால் 1914 ஆம் ஆண்டில் இரண்டாம் அகிலம் தகர்ந்த பிறகு, மேற்கு நாட்டுப் பாட்டாளி வர்க்கம் ஏகாதிபத்தியப் போரை எதிர்ப்பதற்கு எடுத்துக் கொண்ட உறுதிமொழிகளை மறுதலித்த போது, மேற்கு நாடுகளின் அகநிலைமைக் சாதகமற்றவை ஆகிவிட்டன என்பதை லெனின் புரிந்து கொண்டார்:

> ஏகாதிபத்தியப் போர் முடிந்த உடனேயே, மேற்கு ஐரோப் பாவில் சோசலிசப் புரட்சி தொடங்கும் என்று புரட்சியின் துவக்கக் கட்டத்தில் பலர் நம்பிக்கை வைத்திருந்தனர். மக்கள் திரளினர் ஆயுதம் ஏந்தியிருந்த சமயத்தில், மேற்கு நாடுகள் சிலவற்றிலும்கூட ஒரு வெற்றிகரமான புரட்சி இருந்திருக்க முடியும். மேற்கு ஐரோப்பாவின் பாட்டாளி

*வர்க்கத்துக்குள் இருந்த பிளவு, நினைத்ததைக் காட்டிலும் ஆழமானதாக இல்லாதிருந்திருக்குமானால், முன்னாள் சோசலிசத் தலைவர்களின் துரோகம் நினைத்ததைக் காட்டி லும் பெரியதாக இல்லாது இருந்திருக்குமானால் புரட்சி நடந்திருக்க முடியும். (லெ.தொ.நூ. 30.417, ஒப் : 32.481)*

இதற்கிடையில், ஏகாதிபத்தியம் பற்றிய ஆய்வு மேற்கொண் டிருக்கும்போது, கீழ்க்காணும் முடிவுக்கு அவர் வந்தார்; புதிய உலகச் சூழ்நிலையில், ஒரு தனி நாட்டில் முயற்சி செய்யப்படும் பாட்டாளி வர்க்கப் புரட்சி, வெற்றிகரமாக இருக்க முடியாது என்பதை குறிப்பால் உணர்த்திய, 'ஒரே சமயத்தில் எல்லா நாடுகளிலும் புரட்சி' என்ற பழைய தத்துவம் காலாவதியாகி விட்டது:

*ஏற்றத் தாழ்வான பொருளாதார மற்றும் அரசியல் வளர்ச்சி என்பது முதலாளியத்தின் முற்றான நியதி. எனவே சோசலி சத்தின் வெற்றி முதலில் பலநாடுகளில், அல்லது தனியாக ஒரு முதலாளிய நாட்டில் மட்டும் சாத்தியமானதாக உள் ளது. முதலாளிகளிடம் இருந்து பறிமுதல் செய்து, சோசலிச உற்பத்தியை ஒழுங்கமைத்துள்ள அந்நாட்டின் வெற்றிகர மான பாட்டாளி வர்க்கம், உலகின் இதர பகுதிக்கு எதிராக - முதலாளிய உலகுக்கு எதிராக எழுந்து நிற்கும் மற்ற நாடுகளின் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களை தனது லட்சியத் தின்பால் கவர்ந்திழுக்கும். அந்த நாடுகளில் முதலாளிக ளுக்கு எதிரான கிளர்ச்சிகளை மேலும் தட்டியெழுப்பும். தேவைப்பட்டால் சுரண்டும் வர்க்கங்களுக்கும் அவர்களது அரசுகளுக்கும் எதிராக ஆயுதப் படையுடனும் வரும். (லெ.தொ.நூ. 21.342)*

1916 ஆம் ஆண்டு, அவர் மேலும் ஒருபடி சென்று, சோசலிசப் புரட்சி எல்லா இடங்களிலும் ஒரே சமயத்தில் நிகழ முடியாது என்பதை உறுதியாகக் கூறினார்:

*வெவ்வேறு நாடுகளில் முதலாளியத்தின் வளர்ச்சி மிகவும் ஏற்றத்தாழ்வாக நடைபெறுகிறது. சரக்கு உற்பத்தியின் கீழ் இது வேறுவிதமாக இருக்கமுடியாது. இதிலிருந்து மறுக்க முடியாதபடி பெறப்படுவது என்னவெனில், சோசலிசம் எல்லா நாடுகளிலும் ஒரே சமயத்தில் வெற்றியைச் சாதிக்க முடியாது என்பதாகும். அது முதலில் ஒரு அல்லது பல நாடுகளில் வெற்றியைச் சாதிக்கும். மற்ற நாடுகளோ*

*சிறிதுகாலம் முதலாளி வர்க்க நாடுகளாகவோ அல்லது முதலாளியத்துக்கு முந்திய அமைப்புகளைக் கொண்ட நாடுகளாகவோ இருக்கும். (லெ.தொ.நூ. 23.79)*

மேலும், தலையீட்டுப் போர், உள்நாட்டுப் போர் ஆகியவற்றில் புதிய சோசலிசக் குடியரசு வெற்றி வாகை சூடிய பிறகு லெனின் அறிவித்தார்:

*நமது முன்னறிவிப்புகள் எளிதாகவும் விரைவாகவும் நேரடியாகவும் நனவாகவில்லை என்றாலும், நாம் முக்கியமான விசயத்தைச் சாதித்துள்ளோம் என்ற அளவில் அவை நிறைவுபெற்றுள்ளன. உலக சோசலிசப் புரட்சி தாமதப்படும் பட்சத்திலும்கூட, பாட்டாளி வர்க்க ஆட்சி, சோவியத் குடியரசு ஆகியவற்றைப் பராமரிப்பது சாத்தியமாகியுள்ளது. (லெ.தொ.நூ. 31.411)*

*ஆனால் முதலாளியச் சுற்றிவளைப்புக்கு நடுவே ஒரு சோசலிசக் குடியரசு நிலவுவது என்பது சிந்தித்துப் பார்க்கக் கூடியதுதானா? அரசியல், ராணுவ அம்சங்களில் இருந்து பார்த்தால் சிந்தித்துப் பார்க்க முடியாததாகத் தோன்றியது. ஆனால் அரசியல் வகையிலும் ராணுவ வகையிலும் அதைச் சிந்தித்துப் பார்க்க முடியும் என்பது இப்போது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. இது ஒரு உண்மை. (லெ.தொ.நூ. 33.151)*

இம் முடிவுக்கு வந்த லெனின், சோவியத் குடியரசு தொடர்ந்து நிலவுவதற்கு இனி உத்திரவாதம் செய்யப்பட்டு விட்டது என்று பொருள் கொள்ளவில்லை; மாறாக சோசலிசம் உலகளவில் வெற்றி பெற்றபோதுதான், அதன் வெற்றி இறுதியானது என்று கருதப்பட முடியும் என்ற கருத்தைத் தொடர்ந்து மேற்கொண்டிருந்தார்:

*ஒரு தனி நாட்டில் சோசலிசத்தின் இறுதி வெற்றி சாத்தியம் இல்லைதான். (லெ.தொ.நூ. 22.470)*

*ஒரு புரட்சியிலுள்ள சிக்கல்களைப் பற்றி ஒவ்வொருவரும் அறிவர். அது ஒரு நாட்டில் ஒளிமயமான வெற்றியுடன் துவங்கி, வேதனைமிக்க காலகட்டங்களின் ஊடே செல்லலாம். ஏனெனில் ஓர் உலக அளவில்தான் இறுதி வெற்றி சாத்தியம். அனைத்து நாடுகளிலும் உள்ள தொழிலாளிகளின் கூட்டு முயற்சியின் மூலமே இது சாத்தியமாகும். (லெ.தொ.நூ. 27.372)*

நமது லட்சியம் ஒரு அனைத்துலக லட்சியம் என்பதை நாம் எப்போதும் அறிவோம். அதை ஒருபோதும் மறக்க மாட்டோம். மிகவளமான, மிக உயர்ந்த நாகரிகத்தை எட்டியுள்ள நாடுகள் உள்ளிட்ட எல்லா நாடுகளிலும் புரட்சி நடைபெறும்வரை நமது வெற்றி ஒரு பாதி வெற்றியாக அல்லது அதைவிடக் குறைந்த வெற்றியாகவே இருக்கும். (லெ.தொ.நூ. 31.399)

உலகப் புரட்சி என்ற சங்கிலியில் நாம் ஒரு தனிக் கண்ணிதான் என்பதை நாம் எப்போதும் கூறிவந்துள்ளோம். (லெ.தொ.நூ. 31.431, ஒப்: 32.361)

3. ஏற்றத்தாழ்வான வளர்ச்சி

'ஒரே சமயத்தில் எல்லா நாடுகளிலும் புரட்சி' என்ற கோட்பாட்டை நிராகரித்த லெனின், முதலாளியச் சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சி என்ற நியதியைக் கவனிக்குமாறு செய்தார்.

சரக்கு உற்பத்தியின் தன்மையிலிருந்து தோன்றுகிற ஏற்றத் தாழ்வான வளர்ச்சி, முதலாளியச் சமுதாயத்தின் எல்லாக் கட்டங் களிலும் காணப்படுகிறது. முதலாளியத்துக்கு முந்திய சமுதாயத் திலும்கூட காணப்படுகிறது. காரணம் அங்கு அது சரக்கு உற்பத்தியின் ஆரம்ப நிலை வடிவங்களைப் புலப்படுத்துகிறது. ஆனால் உழைப்புச் சக்தியே ஒரு சரக்காக மாறியுள்ள கட்டமான முதலாளியம், சரக்கு உற்பத்தியின் மிக உயர்ந்த கட்டத்தைக் குறிப்பிடுவது போலவே, முதலாளியத்தின் உச்சக் கட்டமான ஏகாதிபத்தியச் சகாப்தத்தில், ஏற்றத்தாழ்வான வளர்ச்சி என்ற நியதி, உலகப் புரட்சியின் முக்கியமான காரணியாக மாறுகிறது. இவை அனைத்தையும் லெனின் ஏகாதிபத்தியம் பற்றிய தனது ஆய்வில் எடுத்துக் காட்டுகிறார். அவரது கருத்துக்களை ஸ்டா லின் பின்னர் தொகுத்துக் கூறுகிறார்:

ஏகாதிபத்திய நிலைமைகளின் கீழ், ஒருநாட்டில் சோசலிசத் துக்கு வழிவகுக்கிற, முதலாளியத்தின் ஏற்றத்தாழ்வான வளர்ச்சி நியதி என்பது என்ன?

இந்நியதியைப் பற்றி லெனின் குறிப்பிட்டதாவது: பழைய, ஏகபோகத்துக்கு முந்திய முதலாளியம், ஏற்கனவே ஏகாதி பத்தியமாக மாறியுள்ளது; உலகப் பொருளாதாரமானது, முதன்மையான ஏகாதிபத்தியக் குழுக்களிடையே பிரதேசம், சந்தைகள், கச்சாப் பொருள்கள் முதலியவற்றுக்கான ஒரு

வெறிபிடித்த போராட்டம் என்ற நிலைமைகளில் வளர்ந்து வருகிறது; உலகை செல்வாக்குப் பிரதேசங்களாக ஏகாதிபத்தியக் குழுக்கள் பங்குபோட்டுக் கொள்வது என்பது ஏற்கனவே முழுமை பெற்றுவிட்டது; முதலாளிய நாடுகளின் வளர்ச்சி சீராக நடைபெறுவதில்லை; ஒரு நாடு மற்றொன்றைப் பின்பற்றிச் செல்லுதல் அல்லது அதற்கு இணையான முறையில் முன்னேறுதல் என்ற வகையில் வளர்ச்சி இல்லை. மாறாக விட்டுவிட்டு முன்னேறும் வகையில்தான் வளர்ச்சி அமைந்துள்ளது. முன்பு மற்ற நாடுகளைத் தாண்டிச் சென்ற நாடுகள் பிறகு பின்னால் தள்ளப்படுவதும், புதிய நாடுகள் முன்னணிக்கு வளர்ந்து செல்வதும் என்ற வகையில் வளர்ச்சி நடைபெறுகிறது; முதலாளிய நாடுகளில் வளரும் இத்தகைய வளர்ச்சி முறை தவிர்க்க முடியாதபடி, ஏற்கனவே பங்கு போடப்பட்டுவிட்ட உலகைப் புதிதாக மறுபங்கீடு செய்வதற்காக, முதலாளியச் சக்திகளிடையே மோதல்களையும் போர்களையும் தூண்டிவிடுகிறது; இந்த மோதல்களும் போர்களும் ஏகாதிபத்தியம் பலவீனம் அடைவதற்கு வழிவகுக்கின்றன; இதன் காரணமாக உலக ஏகாதிபத்திய அணி தனித்தனி நாடுகளில் எளிதாக உடைபடக் கூடியதாயிருக்கின்றது; இதன் காரணமாக தனித்தனி நாடுகளில் சோசலிசத்தின் வெற்றி சாத்தியமாகிறது. மிக அண்மைக் காலத்தில் மற்றெல்லா ஏகாதிபத்திய அரசுகளைக் காட்டிலும் பிரிட்டன் முன்னணியில் நின்றது நமக்குத் தெரியும். பிறகு ஜெர்மனி பிரிட்டனைத் தாண்டிச் சென்று, மற்ற நாடுகளுக்கு, குறிப்பாக பிரிட்டனுக்கு இழப்பு ஏற்படுத்தி 'கதிரவனின் கீழ் ஓர் இடம்' தனக்குக் கோரத் தொடங்கியதும் நமக்குத் தெரியும். இச்சூழ்நிலையின் காரணமாகவே 1914 - 18 ஆம் ஆண்டுகளில் ஏகாதிபத்தியப் போர் மூண்டது என்பதும் நமக்குத் தெரியும். இப்போது, ஏகாதிபத்தியப் போருக்குப் பின், அமெரிக்கா முன்னால் விரைந்து சென்று பிரிட்டனையும், மற்ற ஐரோப்பிய அரசுகளையும் தாண்டிச் சென்று விட்டது. இது பெரும் புதிய முரண்பாடுகள், போர்கள் ஆகியவற்றுக்கான வித்துக்களை உள்ளடக்கியுள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஏகாதிபத்தியப் போரின் பின்விளைவாக ரசியாவில் ஏகாதிபத்திய அணி உடைக்கப்பட்டது என்ற உண்மை, முதலாளிய வளர்ச்சியின் இன்றைய நிலைமைகளில், தொழில்

*மிகவும் வளர்ச்சியடைந்துள்ள நாட்டில் ஏகாதிபத்திய அணியின் சங்கிலி கட்டாயம் உடைபடாது என்பதற்கும்; இச்சங்கிலி எங்கு பலவீனமாக உள்ளதோ, எங்கு ஏகாதிபத்திய ஆட்சிக்கெதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் முக்கியமான கூட்டாளியை — எடுத்துக்காட்டாக உழவர் வர்க்கம் என்ற கூட்டாளியை — பெற்றுள்ளதோ (இதற்கு உதாரணம் ரசியா) அங்குதான் ஏகாதிபத்திய அணியின் சங்கிலி உடைபடும் என்பதற்கும் சான்றாக உள்ளது. (ஸ். தொ. நூ: 8.265)*

ஏற்றத்தாழ்வான வளர்ச்சி நியதி, ரசியாவில் வர்க்கச் சக்திகளின் பலாபலத்தைப் பாட்டாளி வர்க்கத்துக்குச் சாதகமாகத் திருப்பும் வகையில் செயல்பட்டது:

*ரசியாவில் இருந்த கூடுதலான பின்தங்கிய நிலை, போர் அந்நாட்டின் மீது சுமத்திய அசாதாரணமான துன்பங்கள், ஜாரிசத்தின் மிக அழுகிய தன்மை, 1905 இன் புரட்சி மரபுகளின் அசாதாரணமான விடா உறுதி என்ற பல்வேறு வரலாற்றுக் காரணங்களால் மற்ற நாடுகளைவிட விரைவாக ரசியாவில் புரட்சி வெடித்தது. (லெ.தொ.நூ. 25.364, ஒப் : 29.307)*

ஆயினும், முதலாளி வர்க்கம் உறுதியாக நிலை கொண்டிருந்த, பாட்டாளி வர்க்கம் பிளவுபட்டிருந்த மேற்கு நாடுகளில், புரட்சியின் முதல் நடவடிக்கையான அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்பது மேலும் கடினமானதாக இருந்தே தீர வேண்டியிருந்தது:

*ரசியப் புரட்சியின் துவக்கம் எளிதானதாகவும், தொடர்ந்து முன்னேறிச் செல்வது கடினமானதாகவும் இருந்தது என்பதை மறப்பது மிகப் பெரும் அறியாமையாகும், மிகப் பெரும் தவறாகும். இது தவிர்க்க முடியாதது; ஏனெனில் நாம் மிகவும் பின்தங்கிய, அழுகிப் போன அரசியல் அமைப்பைக் கொண்டே தொடங்க வேண்டி இருந்தது. இதைவிட மிகவும் கடுமையான எதிரியான முதலாளி வர்க்கத்துக்கு எதிராக, அளவிட முடியாத வகையில் மேலும் கடினமான நிலைமைகளின் கீழ் ஐரோப்பியப் புரட்சி துவங்க வேண்டியிருந்தது. (லெ.தொ.நூ. 27.176, ஒப் : 98)*

இவ்வாறு, ஏகாதிபத்தியத்தின் விளைவு, பிற்பட்ட நாட்டில் புரட்சியை விரைவுபடுத்துவதாகவும், மேலும் முன்னேறிய நாடுகளில் தாமதப்படுத்துவதாகவும் அமைந்தது. ஏற்றத்தாழ் வான வளர்ச்சியின் இயங்கியல் இத்தகையது ஆகும்.

4. கிழக்கு நாடுகளில் புரட்சி

அக்டோபர் புரட்சிக்குப் பிறகு, உலகப் புரட்சியின் அடுத்த முன்னேற்றம் கட்டாயம் ஐரோப்பாவுக்குள்ளேயே இருக்கவேண் டியதில்லை என்பது தெளிவாகியது. மேற்கு நாடுகளில் புரட்சி யைத் தடுத்து நிறுத்துவதில் ஏகாதிபத்தியவாதிகள் தற்காலிகமாக வெற்றி பெற்றிருந்தனர். ஆனால் அக்டோபர் புரட்சியின் வெற்றியின் இடிமுழக்கம் உலகம் முழுவதும் அதிர்வதை அவர்களால் தடுக்க முடியவில்லை:

> செஞ்சேனை சாதித்துள்ளவை — அதன் போராட்டம், அதன் வெற்றியின் வரலாறு ஆகியவை — கிழ்த்திசை மக்கள் அனைவருக்கும் மாபெரும் யுக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். அவை பலவீனமான வையாக இருந்தாலும், தொழில் நுணுக்கம், ராணுவக் கலை ஆகியவற்றின் சாதனைகள் அனைத்தையும் போராட்டத்தில் ஈடுபடுத்துகிற அவர்களது ஐரோப்பிய ஒடுக்குமுறையாளர் கள் வெல்லப்பட முடியாதவர்களாய்த் தோன்றினாலும், ஒடுக்கப்பட்ட மக்களால் நடத்தப்படும் ஒரு புரட்சிகரப் போர், அது லட்சக்கணக்கான தொழிலாளிகளையும் சுரண் டப்படுபவர்களையும் தட்டியெழுப்புவதில் உண்மையி லேயே வெற்றி பெறுமானால், இத்தகைய உள்ளுறை ஆற்றல்களுக்கும் அதிசயங்களுக்கும் இடம் கொடுத்தால், கிழ்த்திசை மக்களின் விடுதலை அப்போது முற்றிலும் நடைமுறைச் சாத்தியமானதாகி விடும். இது அனைத்துலகப் புரட்சியின் வெற்றி வாய்ப்புகள் என்ற நிலைபாட்டிலிருந்து மட்டுமல்ல; ஆசியாவில், சைபீரியாவில் பெற்ற நேரடி ராணுவ அனுபவம், பலமிக்க ஏகாதிபத்திய நாடுகள் அனைத்திலிருந்தும் ராணுவப் படையெடுப்பை அனுப வித்த சோவியத் குடியரசின் அனுபவம் ஆகியவற்றின் நிலைபாட்டில் இருந்தும் இது நடைமுறைச் சாத்தியமானது. *(லெ.தொ.நூ. 30.153)*

எனவே, ரசியாவில் இருந்த நிலைமைகளைக் காட்டிலும் அதிகம் பின் தங்கிய நிலைமைகளைக் கொண்ட கிழக்கில்,

உலகப் புரட்சிச் சங்கிலியின் ஒரு கண்ணி இப்போது வார்க்கப் பட்டது:

> இதற்கிடையில் இந்தியாவும் சீனாவும் குமுறிக்கொண்டிருக் கின்றன. அவை 70 கோடிக்கும் அதிகமான மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. எல்லாவகையிலும் இவ்விரு நாடுகளைப் போலவே உள்ள அண்டை ஆசிய நாடுகளை யும் சேர்த்தால், உலக மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்களை இவை பிரதிநிதித்துவம் செய்கின்றன. தவிர்க்க முடியாதபடியும், அதிகரிக்கும் வேகத்துடனும் அவை தமது 1905ஐ நெருங்கிக் கொண்டிருக்கின்றன. அடிப்படையான மற்றும் முக்கியமான வேறுபாடு என்ன வென்றால் 1905 இல் ரசியாவில் புரட்சியானது இன்னும் (துவக்கத்திலாவது) தனியாக நடைபெற வேண்டியிருந்தது. அதாவது உடனடியாக மற்ற நாடுகளும் புரட்சியில் இழுக் கப்படாத நிலையில நடைபெற வேண்டியிருந்தது; ஆனால் இப்போது இந்தியாவிலும் சீனாவிலும் முதிர்ந்து வரும் புரட்சிகளோ, ஏற்கனவே புரட்சிப் போராட்டத்துக்குள், புரட்சி இயக்கத்துக்குள், உலகப் புரட்சிக்குள் இழுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. (லெ.தொ.நூ. 33.350)

சீனாவில் அக்டோபர் புரட்சி ஏற்படுத்திய தாக்கம் மா சேதுங்கால் கீழ்வருமாறு விளக்கப்படுகிறது:

> ரசியர்கள் மூலமாகவே சீனர்கள் மார்க்சியத்தைக் கண்ட டைந்தார்கள். அக்டோபர் புரட்சிக்கு முன்பு சீனர்கள், லெனின், ஸ்டாலின் ஆகியோரைத் தெரிந்திருக்கவில்லை என்பது மட்டுமல்ல; மார்க்சையும் ஏங்கல்சையும்கூட அவர் கள் அறிந்திருக்கவில்லை. அக்டோபர் புரட்சியின் பீரங்கி முழக்கம் நமக்கு மார்க்சிய லெனினியத்தைக் கொண்டு வந்தது. உலகம் முழுவதும் நடந்ததுபோலவே, சீனாவில் இருந்த முற்போக்காளர்கள், ஒரு தேசத்தின் தலைவிதியை ஆராயவும் அவர்களது பழைய பிரச்சினைகளைப் புதிதாகப் பரிசீலிக்கவும் உகந்த கருவி என்ற வகையில் பாட்டாளி வர்க்க உலகக் கண்ணோட்டத்தை மேற்கொள்ள அது உதவியது. ரசியர்களின் பாதையைப் பின்பற்றுவோம் — இந்த முடிவுக்குத்தான் அவர்கள் வந்தார்கள். (மா.தெ.நூ. 4.413)

பத்தாண்டுகளுக்குப் பிறகு, சீனப் புரட்சியின் முதல் அலை ஓய்ந்து, புரட்சிகரச் சக்திகள் தோல்வியடைந்தபோது, பல தோழர்கள் புறத் தோற்றங்களால் தவறாக வழிகாட்டப்பட்டு சீனாவின் எதிர்காலம் பற்றிப் புலம்பினார்கள். இச்சூழ்நிலையில் மா சேதுங் எழுதினார்:

*சீனாவின் புரட்சிக்குரிய அகச்சக்திகள் இப்போது வலுக் குறைவானதாக இருப்பினும், சீனத்தின் பிற்பட்ட, பலவீன மான சமூக பொருளாதாரக் கட்டமைப்பைச் சார்ந்துநிற்கும் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களின் அமைப்புகள் அனைத் தும்கூட (அரசியல் அதிகார உறுப்பு, ஆயுதப் படைகள், அரசியல் கட்சிகள் முதலானவை) பலவீனமானவையா கவே உள்ளன. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் புரட்சி உடனடியாக வெடிக்காது என்பதை விளக்குவதற்கு இவ் வுண்மை உதவுகிறது. இந்நாடுகளில் புரட்சிக்குரிய அகச் சக்திகள் சீனாவில் இருப்பதைக் காட்டிலும் ஒருவேளை கூடுதலான வலிவுடன் இருந்தபோதிலும், பிற்போக்கு ஆளும் வர்க்கங்களின் சக்திகள் பலமடங்கு வலுவுள்ளவை யாக உள்ளன. சீனாவில் மேலும் விரைவாக புரட்சியானது ஐயத்துக்கிடமின்றி உயர்ந்த அலையாக முன்னேறிச் செல் லும் என்பதை விளக்கவும் இது உதவுகிறது. ஏனெனில் சீனத்தின் புரட்சிக்குரிய அகச் சக்திகள் பலவீனமானதாக இருந்தபோதிலும், எதிர்ப்புரட்சிக்குரிய சக்திகளும் ஒப் பீட்டு நோக்கில் பலவீனமானவையாகவே உள்ளன. (மா.தெ.நூ. 1.119)*

'புரட்சியின் அகச் சக்திகள்' என்பவை புரட்சிக்குரிய, அமைப்புவகையில் திரட்டப்பட்ட சக்திகள். உண்மையில் இச் சக்திகள், வெளித்தோற்றங்களுக்கு மாறாக, மேற்குநாடுகளில் இருந்ததைக் காட்டிலும் வலுக்கூடியதாகவே சீனாவில் இருந்தன என்பதே இங்கு வாதிடப்படுகிறது. ஏனெனில் அவற்றுக்கு எதிராக நிறுத்தப்பட்டுள்ள சக்திகள் அவற்றைக்காட்டிலும் பலவீ னமானவையாக இருந்தன. மேலும், புரட்சிச் சக்திகள் வளர்ந்தே தீரவேண்டிய வகையில் சீனத்திலிருந்த நிலைமை அமைந்திருந் தது:

*வேறு சொற்களில் கூறுவதானால், தற்போது சிறியதாக உள்ள நமது சக்திகள், மிக விரைவாக வளரும். சீனத்தில்*

நிலவுகிற நிலைமைகளில் அவற்றின் வளர்ச்சி சாத்தியமா னது மட்டுமல்ல, தவிர்க்க முடியாததும் ஆகும். இதை மே - 30 ஆம் நாள் இயக்கமும் அதைத் தொடர்ந்து வந்த பெரும் புரட்சியும் முழுமையாக மெய்ப்பித்துள்ளன. நாம் ஒரு விசயத்தைப் பார்க்கும்போது அதன் சாரத்தை ஆய்வு செய்யவேண்டும். அதன் தோற்றத்தை நுழைவாயிலில் உள்ள ஒரு வாயில்காப்பாளர் என்றே பாவிக்க வேண்டும். நுழைவாயிலைத் தாண்டியதும், நாம் அவ்விசயத்தின் சாரத் தைக் கிரகித்துக் கொள்ள வேண்டும். இது மட்டுமே ஆய்வுக்குரிய நம்பத்தகுந்த விஞ்ஞான முறையாகும். (மா.தெ.நூ. 1.119)

இந்தியாவை நோக்குவோமானால், இங்கு ஏறத்தாழ இதே நிலைமைகள் பரந்த அளவில் இருந்ததைக் காண்கிறோம். ஆனால் இங்கு சக்திகளின் பலாபலம் வேறுவிதமாக இருந்தது. ஒருபுறம் பிரிட்டிசு இந்தியாவில் முதலாளிய உறவுகள் மேலும் அதிக வளர்ச்சி பெற்றவையாக இருந்தன. பெரும் முதலாளிகள் மேலும் அதிகமாக ஐக்கியப்பட்டிருந்தனர். ஒரு தனி ஏகாதிபத் திய அரசுடன் பிணைக்கப்பட்டிருந்தனர். சீனாவைப் போல் போட்டி ஏகாதிபத்திய அரசுகளிடையே அவர்கள் பிரிக்கப்பட்டி ருக்கவில்லை (மா.தெ.நூ. 2.443). அதே வேளையில் நிலவு டைமை உறவுகள் - குறிப்பாக சுதேசி அரசுகளில் தொடர்ந்து நிலவின. மற்றோர்புறம், பாட்டாளி வர்க்கம் உழவர் வர்க்கத்து டன் ஒரு நேச அணியை நிறுவத் தவறியது. இவ்வாறு சீனாவைக் காட்டிலும் இங்கு எதிர்ப்புரட்சிச் சக்திகள் கூடுதலான பலமும் புரட்சிகர சக்திகள் கூடுதல் பலவீனமும் பெற்றிருந்தன. இதன் விளைவாக, தேசிய இயக்கத்தின் தலைமையை முதலாளி வர்க்கம் தக்கவைத்துக் கொண்டு நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தி யம் ஆகியவற்றுடன் சமரசம் செய்து கொண்டது.

1945 ஆம் ஆண்டு கோடையில் மேற்கில் போர் முடிவுக்கு வந்து, ஜப்பானின் சரணாகதி ஏற்கனவே உறுதி செய்யப்பட்டி ருந்த வேளையில், இரு ஜப்பானிய நகரங்களைத் துடைத்தழிக்க, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் தமது மிகப்புதிய தொழில் நுணுக்க சாதனையைப் பயன்படுத்தினார்கள்☆ யுத்தக் கலையின் வரலாறு முழுவதிலும் உள்ள மிகப் பெரும் குற்றங்களில் ஒன்றாகக் கருதப்படவேண்டிய இச்செயலின் நோக்கம், உலகத்

தின் புதிய எசமானர்களைத் தட்டிக்கேட்கத் துணியக்கூடிய அனைவரையும், குறிப்பாக ரசியாவிலும் சீனாவிலும் உள்ளவர் களை அச்சுறுத்துவதே ஆகும். அதேவேளையில் அவர்கள் சீனத்தில் பொதுவுடைமையை அழித்து, சோவியத் யூனியனுக்கு எதிரான புதிய போரில் அதைத் தளமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில், சியாங் கே ஷேக்கின் அழுகிப்போன ஆட்சிக்கு பணத்தையும் போர்த்தளவாடங்களை யும் கொண்டுவந்து கொட்டினார்கள். நான்கு ஆண்டுகளுக்குப் பின், மா சேதுங்கின் மக்கள் போர் என்ற யுத்த தந்திரத்தில் (இது ரசிய உள்நாட்டுப் போரில் செஞ்சேனை பெற்ற அனுப வத்தை ஓரளவு அடிப்படையாகக் கொண்டது) பயிற்றுவிக்கப் பட்ட தொழிலாளர்கள் - உழவர்களால் சியாங்கே ஷேக் பூண்டோடு தூக்கியெறியப்பட்டான். பீகிங்கில் ஒரு மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் நிறுவப்பட்டது. ஏகாதிபத்தியத்துக்கு இரண்டாவது சம்மட்டி அடி கொடுக்கப்பட்டது.

---

1 ஹிரோசிமா, நாகசாகி என்ற இரு ஜப்பானிய நகரங்கள்மீது அமெரிக்கா அணுகுண்டு வீசியது.

# அத்தியாயம் - 6
# கட்சி

*பொதுவுடைமையாளர்கள் பாட்டாளி வர்க்கத்தின் உடனடியான குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகப் போராடுகிறார்கள்; அவ்வப்போதைய நலன்களை நடைமுறைப்படுத்துவதற்காகப் போராடுகிறார்கள்; ஆனால் நிகழ்கால இயக்கத்தில் அவர்கள் அவ்வியக்கத்தின் எதிர்காலத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்; அதன்மீது கவனம் செலுத்துகிறார்கள்.*

— பொதுவுடைமை அறிக்கை

## 1. பாரிஸ் கம்யூனின் படிப்பினைகள்

1871 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் நாள் பிரெஞ்சு முதலாளி வர்க்கம் உழைக்கும் வர்க்கத்தின் ஆதரவுடன் போராடுவதற்குப் பதிலாக, ரசியப் படையெடுப்பாளர்களிடம் சரணடைந்தபோது, பாரிஸ் நகரத் தொழிலாளிகள் கிளர்ந்தெழுந்து அதிகாரத்தைக் கைப்பற்றினர். முதலாளியப் பாராளுமன்றத்தின் இடத்தில் அவர்கள் கம்யூனை நிறுவினார்கள். கம்யூனுக்கு சட்டங்களைச் செயல்படுத்தும் மற்றும் சட்டமியற்றும் கடமைகளும் இருந்தன. அனைவரும் வாக்களித்ததன் மூலம் அதன் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் எந்த நேரத்திலும் திருப்பி அழைக்கப்படுவதற்கு உட்பட்டிருந்தனர். நிலையான படை ஒழித்துக் கட்டப்பட்டது. அதன் இடத்தை ஆயுதம் ஏந்திய மக்கள் பிடித்துக் கொண்டனர். காவல் படையினர் (போலீஸ்) மக்களின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டனர்; நீதிபதிகளும் மற்ற பொது அலுவலர்கள் அனைவரும் தொழிலாளிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தொழிலாளிக்குரிய ஊதியமே வழங்கப்பட்டது. பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தைத் தூக்கி எறிந்து, தனது சொந்த அரசை நிறுவுவதில் வெற்றி பெற்றது வரலாற்றில் இதுவே முதல் முறை. கம்யூனியர்கள் மார்க்சியவாதிகளாக இருக்கவில்லை என்றாலும், அவர்களது கரங்களில் புதிய அரசானது மார்க்சும் ஏங்கல்சும் கருதிய ஒரு பாட்டாளி வர்க்க சர்வாதிகார வடிவத்தை மேற்கொண்டது. ஏங்கல்சு பிற்காலத்தில் எழுதினார்:

> நல்லது பெருந்தகையீர், இந்த சர்வாதிகாரம் எப்படிக் காட்சியளிக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறீர்

> களா? பாரீஸ் கம்யூனைப் பாருங்கள். அது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக இருந்தது. (மா.ஏ. 2.189)

கம்யூன் ஒரு சில வாரங்களே நீடித்திருந்தது; அங்கு பாட்டாளி வர்க்கக் கட்சி ஏதும் இருக்கவில்லை; தொழிற்சங்க இயக்கம் இன்னும் அதன் குழந்தைப் பருவ வடிவத்திலேயே இருந்தது. அனுபவக் குறைவின் காரணமாக, தலைவர்கள் சில கடுமையான தவறுகள் இழைத்துவிட்டனர். அவர்கள் எதிரியிடம் மிகவும் இணக்கமாக நடந்து கொண்டார்கள்; ஒரு தொழிலாளர் - உழவர் நேச அணியை நிறுவுவதில் அவர்கள் வெற்றி பெறவில்லை; எல்லாவற்றுக்கும் மேலாக, நகரத்தைச் சுற்றி வளைத்திருந்த துருப்புகளுடன் ஆயுதமேந்திய போராட்டத்தில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருந்ததால், சோசலிசக் கட்டுமானத்துக்கு அவர்களுக்குச் சிறிதும் அவகாசம் கிடைக்கவில்லை (லெ.தொ.நூ. 17.141). மே இறுதியில் கம்யூன் தூக்கியெறியப்பட்டது. பாரிஸ் நகரத் தொழிலாளிகள் — ஆண்கள், பெண்கள், குழந்தைகள் — முதலாளி வர்க்கத்தின் துப்பாக்கிப் படையினரால் ஆயிரக்கணக்கில் கொன்று குவிக்கப் பட்டனர். இதே முதலாளி வர்க்கம்தான் எண்பது ஆண்டுகளுக்கு முன்பு சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற பெயரில் நிலப்பிரபுத்துவ முடியாட்சியைத் தூக்கியெறிந்திருந்தது.

ஆயினும், வரலாற்று வகையில் மதிப்பிடப்படுமானால் அது ஒரு தோல்வியல்ல; மார்க்சின் மதிப்பீட்டைக் குறிப்பிட்டு லெனின் எழுதினார்:

> 1870 செப்டம்பரில் மார்க்சு இந்தக் கிளர்ச்சியை முரட்டுத் துணிச்சல் வாய்ந்த பயனற்ற செயல் என்று அழைத்தார். ஆனால் 1871 ஏப்ரலில் மக்களின் வெகுஜன இயக்கத்தை அவர் கண்டபோது, வரலாற்றுப் புரட்சி இயக்கத்தில் ஓரடி முன்னேறிச் செல்வதைக் குறிக்கிற பெரும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கிற ஒருவரது ஆழ்ந்த அக்கறையுடன் அதைக் கவனித்தார். (லெ.தொ.நூ. 12.109)

அது, முதல் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக மட்டும் இருக்கவில்லை; அதன் அமைப்பு அலகான கம்யூன், தொழிலாளர் பிரதிநிதிகளின் சோவியத்துகள் என்கிறோமே, அவற்றின் முன்மாதிரியாகவும் இருந்தது. இந்த சோவியத்துகள் 1905 இலும் மீண்டும் 1917 இலும் ரசியாவில் தோன்றின:

> பழைய — அதாவது முதலாளிய மற்றும் அதிகார வர்க்க — நீதித்துறை யந்திரத்தை உடனடியாக உடைத்தல்,

முழுமையாக ஒழித்துக் கட்டுதல் என்பதை உண்மையில் சாதிக்க முடியும். இந்தப் பழைய யந்திரம் மிகவும் ஜனநாயக ரீதியான குடியரசுகளிடம்கூட தக்கவைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இக்குடியரசுகளில் இதைத் தக்க வைத்துக் கொள்வது தவிர்க்க இயலாததாக இருந்தது. இந்த யந்திரம் உண்மையில் பொதுவாக தொழிலாளிகளுக்கும் உழைக்கும் மக்களுக்குமான ஜனநாயகத்தை நடைமுறை யில் செயல்படுத்துவதற்கு எதிரான மிகப் பெரும் தடையாக உள்ளது. இதை உடைத்தெறியும் பாதையில் பாரிஸ் கம்யூன் யுக முக்கியத்துவம் வாய்ந்த முதல் அடி எடுத்து வைத்தது; சோவியத் அமைப்பு இரண்டாவது அடி எடுத்து வைத்துள் ளது. (லெ.தொ.நூ. 28.466)

1871 இன் அனுபவத்தில் இருந்து கற்றுக்கொள்ளப்பட வேண்டிய பாடங்கள் லெனினால் நிறுவப்பட்டு தலைமை தாங்கப்பட்ட புரட்சிகரக் கட்சிப் பணியில் உள்ளடக்கப்பட்டன. அத்தகைய ஒரு கட்சி இன்றியமையாதது என்பது மிக முக்கிய மான பாடங்களில் ஒன்றாகும். அது புரட்சிகரத் தத்துவத்தைத் தரித்துள்ள கட்சி; ஜனநாயகம், கட்டுப்பாடு ஆகியவற்றின் சேர்க்கையால் தனக்குள்ளேயே ஐக்கியப்பட்ட கட்சி; நெருக்க மான தொடர்புகளால் மக்களுடன் பிணைக்கப்பட்டுள்ள ஒரு கட்சி.

## 2. ஒரு புதிய வகைக் கட்சி

1905 புரட்சிக்கான தயாரிப்புகளில் தொடங்கி அக்டோபர் புரட்சியுடன் முடிவடைந்த காலகட்டத்தில், ஒரு பாட்டாளி வர்க்கக் கட்சி அமைப்புக்கு அடிப்படையாக உள்ள தத்துவக் கோட்பாடுகள் லெனினால் வகுக்கப்பட்டன. இக்கால கட்டத் தில் மிகப் பெரும்பகுதி முழுவதிலும் கட்சி தடை செய்யப்பட்டி ருந்தது. மிகக் குறுகிய இடைவேளைகளில்தான் கட்சி சட்டரீதி யாக இயங்க முடிந்தது. அது இறுதிவரை ஜார் அரசாங்கப் போலீசின் ஒடுக்குமுறைக்கு ஆட்பட்டிருந்தது. இச்சூழ்நிலை மைகளில் புரட்சியைத் தொழிலாகக் கொண்டவர்கள் அடங்கிய ஒரு உறுதியான மையப் பிரிவால் தலைமை உருவாக்கப்பட்டி ருக்க வேண்டும் என்பது அவசியமானதாக இருந்தது:

நான் உறுதியாகக் கூறுகிறேன்: 1. ஒருவருக்குப் பின்னால் ஒருவர் செயலாற்றுகிற தலைவர்களைக் கொண்ட ஒரு நிலையான அமைப்பு இல்லாமல் எந்தப் புரட்சி இயக்கத்தா

*லும் தாக்குப்பிடிக்க முடியாது; 2. தன்னியல்பாகவே போராட்டத்தில் இழுக்கப்பட்டு, இயக்கத்தின் அடிப்படை யாக அமைந்து, அதில் பங்கு பெறுகின்ற மக்கள் திரள் பரந்ததாக ஆக இத்தகைய ஒரு அமைப்புக்கான தேவை மேலும் அதிகமாகிறது; அது மேலும் உறுதியானதாக இருக்க வேண்டியுள்ளது... 3. புரட்சிகர நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தொழிலாகக் கொண்டவர்களையே இந்த அமைப்பு முதன்மையாகக் கொண்டிருக்க வேண்டும்; 4. ஒரு எதேச்சதிகார அரசில், அரசியல் போலீசாரை எதிர்த்துப் போராடும் கலையில் பயிற்றுவிக்கப்பட்ட, புரட்சியையே தொழிலாகக் கொண்டவர்களுக்கு மட்டுமே இத்தகைய தொரு அமைப்பின் உறுப்பினர் தகுதியை வழங்குதல் என எவ்வளவுக்கு மட்டுப்படுத்திக் கொள்கிறோமோ, அவ்வள வுக்கு அந்த அமைப்பைக் கண்டுபிடிப்பது மேலும் கடினமா னதாக இருக்கும்; மேலும் 5. இயக்கத்தில் சேர்ந்து அதில் தீவிரமாகச் செயல்பட, பாட்டாளி வர்க்கத்தில் இருந்தும் இதர சமூக வர்க்கங்களில் இருந்தும் வருபவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கவும் செய்யும். (லெ.தொ.நூ. 5.464)*

மிகவும் மையப்படுத்தப்பட்ட ஒரு தலைமையின் தேவை யைக் கீழ்க்காணும் அனுபவம் உணர்த்தியது:

*சட்டரீதியான மற்றும் சட்டத்துக்குப் புறம்பான பணிகள் வேகமாக மாறிமாறி வரும் நிலை — இது பொது ஊழியர்களை — தலைவர்களை மூடிமறைத்து மிகமிக ரகசியமாக வைத்திருக்க வேண்டிய தேவையை உருவாக்கி யது; இது சில சமயங்களில் மிகப் பெரும் அபாயகரமான விளைவுகளையும் தோற்றுவித்தது. இதில் மிக மோசமான நிகழ்ச்சி என்னவென்றால் 1912ஆம் ஆண்டில் அரசாங்க உளவாளியான மாலினோவ்ஸ்கி, போல்சவிக் மத்தியக் குழுவில் நுழைந்து கொண்டதுதான். அவன் மிகச்சிறந்த, மிக விசுவாசமான தோழர்கள் ஏராளமான பேரைக் காட்டிக் கொடுத்தான். அவர்கள் கடும் சிறைத்தண்டனை விதிக்கப்ப டுவதற்குக் காரணமாக இருந்தான். அவர்களில் பலரது சாவை விரைவுபடுத்தினான். (லெ.தொ.நூ. 31.45)*

அதேவேளையில் கட்சி உறுப்பினர்கள் ஒன்றாகச் சேர்ந்து திறம்படப் பணியாற்ற வேண்டுமானால், முழுமையான சுதந்திர மான விவாதத்துக்குப் பிறகு மேற்கொள்ளப்பட்ட கூட்டு

முடிவுகளின் அடிப்படையில் அவர்கள் செயல்பட வேண்டும் என்பது அவசியமாகியது. செயலில் ஒற்றுமை, விமர்சனச் சுதந்திரம் ஆகியவற்றை இணைக்கும் கோட்பாடே ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையாகும்.

தலைமறைவாக இருந்த கட்சி, 1917 ஆம் ஆண்டில் வெளியே வந்தபோது, பயிற்சியளிக்கப்பட்ட புரட்சிவாதிகள் கொண்ட மையப்பிரிவு ஒன்று அதனிடம் இருந்தது. ஆனால் அச்சமயம் புதிய உறுப்பினர்கள் பெரும் அளவில் கட்சிக்குள் வந்து சேர்ந்தார்கள். இவர்கள் கட்சி கட்டுப்பாட்டுக்கான தேவையை அங்கீகரிக்கவில்லை. இவர்களில் ட்ராட்ஸ்கியும் ஒருவர். இவர் 1917 ஆம் ஆண்டு ஜூலையில் கட்சியில் சேர்ந்தார். ஸ்டாலின் லெனின் கோட்பாடுகளை உயர்த்திப் பிடித்தார்; ஒரு கூட்டுத் தலைமையை நிறுவுவதில் இருந்த கடும் எதிர்ப்பைச் சமாளித்து வெற்றிபெற்றார்.

ஆனால் பல ஆண்டுகள் நீடித்த முயற்சிகள் திரும்பத் திரும்பச் செய்யப்பட்டிருந்த போதிலும் (ஸ்.தொ.நூ. 6.238, 7.20,31,161, 10.328, 11.75,137, 12.322), அதிகார வர்க்கத்தின் வளர்ச்சியை அவரால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவரே அதிகரித்த அளவில் நிர்வாக முறைகளைச் சார்ந்து நிற்கத் தொடங்கினார். இதன்விளைவாக, கட்சிக்கும் மக்களுக்குமிடையே உள்ள உறவுக்குக் குந்தகம் விளைந்தது.

இதற்கிடையே லெனினின் கோட்பாடுகள் மா சேதுங்கால் சீனாவில் பிரயோகிக்கப்பட்டு வந்தன. அங்கும் கட்சி காட்டுமிராண்டித்தனமான ஒடுக்குமுறையை அனுபவித்திருந்தது (மா.தெ.நூ. 2.376). ஆனால் சீனா ஒரு பரந்த நிலப்பரப்பைக் கொண்ட நாடாக இருந்ததன் காரணமாக ஒரு உழவர் போரைத் திட்டமிட்டு நடத்த ஏராளமான வாய்ப்பு கிடைத்தது. எனவே பொதுவுடைமையாளர்களால் விடுதலைப் பிரதேசங்களை நிறுவ முடிந்தது. இவற்றில் சிலவற்றை 1949க்கு முன்பு பல்லாண்டுகள் அவர்கள் நிர்வகித்து வந்தனர். இவ்வகையில் அவர்கள் நடைமுறை அனுபவச் செல்வத்தைத் திரட்டிக் கொண்டனர். இதுவும், போல்சவிக் கட்சியினுடைய வரலாற்றைப் பற்றிய ஒரு உன்னிப்பான ஆய்வும், ஜனநாயக மத்தியத்துவத்தின் தத்துவம், நடைமுறை ஆகியவற்றை மேலும் ஒரு உயர்ந்த கட்டத்துக்கு அவர்கள் முன்னெடுத்துச் செல்வதைச் சாத்தியமாக்கியது.

'ஒரு புதிய வகைக் கட்சி' பற்றிய தத்துவம் மா சேதுங்கால் வளர்த்தெடுக்கப்பட்டது. இத்தத்துவத்தைக் கீழ்க்காணும் தலைப்

புகளில் பரிசீலிக்கலாம்: முன்னணிக் கட்சி, ஜனநாயக மத்தியத் துவம், மக்கள்திரள் வழி.

3. முன்னணிக் கட்சி

வரலாற்றில் தனக்குரிய பாத்திரத்தை உணர்ந்து கொள்கிற பாட்டாளி வர்க்கம், மற்ற சுரண்டப்படும் வர்க்கங்களின் முன்னணிப் படையாகத் தன்னை அமைத்துக் கொள்கிறது; இவ்வர்க்கங்களில் முதன்மையானது சிறு முதலாளி வர்க்கம் ஆகும். பாட்டாளி வர்க்கம் அவ்வர்க்கங்களுக்குத் தலைமையை வழங்குகிறது; அவர்களது ஆதரவை வென்றெடுக்கிறது. அதேவேளையில் அவ்வர்க்கங்கள் தம்முடன் இயக்கத்துக்குள் கொண்டுவரும் ஊசலாட்டங்களையும், திசைவிலகல்களையும் எதிர்க்கிறது. பாட்டாளி வர்க்கமுமே ஒரு சுதந்திரமான, பாட்டாளி வர்க்கக் கட்சியின் தலைமையின் கீழ் அமைப்புக்குள்ளாக்கப் பட்டிருந்தால்தான் இதைச் சாதிக்க முடியும்:

> அதிகாரத்துக்காகப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டத்தில் அமைப்பு என்பதைத் தவிர அதற்கு வேறு எந்த ஆயுதமும் இல்லை. பாட்டாளி வர்க்கம் முதலாளிய உலகத்தில் உள்ள அராஜகப் போட்டியின் ஆட்சியால் பிளவுபடுகிறது; மூலதனத்துக்கான வலுக்கட்டாயமான உழைப்பால் நசுக்கப்படுகிறது; முற்றான வறுமை, அநாகரிக நிலை, சீரழிவு என்கின்ற அதல பாதாளங்களுக்கு இடைவிடாது தள்ளப்படுகிறது. பல்லாயிரக்கணக்கான உழைப்பாளிகளை ஒரு பாட்டாளி வர்க்கச் சேனையாக ஒன்றிணைக்கும் அமைப்பின் ஒற்றுமையால் மார்க்சியக் கோட்பாடுகளுக்கு உகந்த அதன் சித்தாந்த ஐக்கியம் வலுப்படுத்தப்படும் பொழுது இத்தகைய பாட்டாளி வர்க்கம் வெல்லப்பட முடியாத சக்தியாகும். (லெ.தொ.நூ. 7.415)

> பாட்டாளி வர்க்கமானது, சோசலிசத்துக்கான ஒரு வர்க்கப் போராட்டத்தை, மிகமிக ஜனநாயகத் தன்மையும் குடியாட்சித் தன்மையும் கொண்ட முதலாளி வர்க்கத்துக்கும் சிறுமுதலாளி வர்க்கத்துக்கும் எதிராகக்கூட தவிர்க்க முடியாதபடி நடத்த வேண்டியதிருக்கும் என்பதை ஒரு சமூக ஜனநாயகவாதி ஒருகணம்கூட மறந்து விடக்கூடாது; இதில் ஐயத்துக்கே இடமில்லை. எனவே சமூக ஜனநாயகத்துக்கு ஒரு தனிப்பட்ட, சுதந்திரமான, கறாரான வர்க்கக் கட்சி ஒன்று முற்றிலும் தேவையானது. (லெ.தொ.நூ. 9.85)

*கட்சி என்பது ஒரு வர்க்கத்தின் அரசியல் ரீதியான, உணர்வுபெற்ற, வளர்ச்சியடைந்த பிரிவாகும்; இது அவ் வர்க்கத்தின் முன்னணிப் படையாகும். அந்த முன்னணிப் படையின் வலிமை அதில் உள்ளவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் ஒரு நூறு மடங்கு அதிகமானதாகும்; நூறு மடங்குக்கும் அதிகமானதும் ஆகும். (லெ.தொ.நூ. 19.406)*

*பொதுவுடைமையாளர்கள் இழைக்கும் மிகப் பெரிய, மிக ஆபத்தான தவறுகளில் ஒன்று (பொதுவாக இத் தவறு ஒரு பெரும் புரட்சியின் துவக்கத்தைச் சாதித்துள்ள புரட்சியாளர்களால் செய்யப்படுகிறது), புரட்சியாளர்களால் மட்டுமே புரட்சியைச் செய்ய முடியும் என்ற கருத்தாகும். அதற்கு மாறாக, தீவிரமான புரட்சிச் செயல் அனைத்தும் வெற்றிகரமானதாக இருக்க வேண்டுமானால், உண்மையிலேயே வீரியமும் வளர்ச்சியும் பெற்ற வர்க்கத்தின் முன்னணிப் படை என்ற பாத்திரத்தையே புரட்சியாளர்களால் வகிக்க முடியும் என்கிற கருத்தை நாம் புரிந்துகொண்டு, அதைச் செயல்படுத்த வேண்டும். ஒரு முன்னணிப் படை, தான் வழிநடத்துகிற மக்களிடமிருந்து தனிமைப்படுவதைத் தவிர்க்கவும், மக்கள்திரள் முழுவதையும் முன்னோக்கி வழிநடத்தவும் உண்மையிலேயே ஆற்றல் பெற்றிருக்கும் போதுதான், ஒரு முன்னணிப் படை என்ற வகையில் அது தன் கடமையைச் செய்கிறது. (லெ.தொ.நூ. 33.227)*

முன்னணிப் படை என்ற வகையில் தன் கடமையை நிறைவேற்றுவதற்காக, கட்சியானது பாட்டாளி வர்க்கத்துக்கும் சிறு முதலாளி வர்க்கத்தில் உள்ள பல்வேறு பிரிவுகளுக்கும் இடையே உள்ள உறவுகளையும், பாட்டாளி வர்க்கத்துக்கு உள்ளேயே இருக்கிற பல்வேறு பிரிவுகளுக்கு இடையே உள்ள உறவுகளையும் சரியாகக் கையாளத் தெரிந்திருக்க வேண்டும்:

*பாட்டாளி வர்க்கம் முழுவதும் பல்வேறு வகையான கதம்பக் கூட்டத்தினரால் சூழப்படாமல் இருக்குமானால் முதலாளியம் முதலாளியமாக இராது. இக் கதம்பக் கூட்டத்தினர் கீழ்வருமாறு: பாட்டாளிக்கும் அரைப் பாட்டாளிக்கும் (தனது பிழைப்புக்கு வேண்டியவற்றில் ஒரு பகுதியைத் தனது உழைப்புச் சக்தியை விற்பதன் மூலம் பெறுகிறவனே அரைப் பாட்டாளி) இடையில் உள்ளவன்; அரைப் பாட்டாளிக்கும் சிறு உழவனுக்கும் இடையில் உள்ளவன்; அரைப்*

பாட்டாளிக்கும் சிறு கைவினைஞன், கைத்தொழில் செய்ப வன், சிறு பட்டறை உடைமையாளன் போன்றோருக்கும் இடையில் உள்ளவன்; சிறு உழவனுக்கும் நடுத்தர உழவ னுக்கும் இடையில் உள்ளவன்; இன்ன பிறர். பாட்டாளி வர்க்கமுமே அதிகமாக வளர்ச்சியடைந்த பிரிவு என்றும் குறைவாக வளர்ச்சியடைந்த பிரிவு என்றும் பிளவுபடாது இருக்குமானால், பாட்டாளிகள் தாம் பிறந்த பிரதேசங்களின் அடிப்படையிலும், சில சமயங்களில் மதத்தின் அடிப்படை யிலும் இன்னபிற வகையிலும் பிளவுபடாமல் இருப்பார்க ளேயானால் முதலாளியம் முதலாளியமாக இருக்க முடி யாது. இதிலிருந்து பெறப்படுவது என்னவெனில், பாட் டாளி வர்க்கத்தின் முன்னணிப் படை என்கிற, அதன் வர்க்க உணர்வுள்ள பிரிவாகிய பொதுவுடைமைக் கட்சி, சூழ்நிலை களைக் கையாளுவதில் மாற்றங்களை மேற்கொள்வதும், பாட்டாளிகளிடையே உள்ள பல்வேறு குழுக்களுடனும் பல்வேறு தொழிலாளர் கட்சிகளுடனும் சிறு பட்டறை உரிமையாளர்களுடனும் உடன்பாடுகளையும் சமரசங்களை யும் மேற்கொள்வது அவசியமானது, முற்றிலும் அவசியமா னது என்பதாகும். இது பாட்டாளிகளின் வர்க்க உணர்வின், புரட்சி உணர்வின், போராடுவதற்கும் வெற்றி பெறுவதற்கு மான ஆற்றலின் பொது அளவைத் தாழ்த்தாமல் அதை உயர்த்துகிற வண்ணம் இந்த நடைமுறைத் தந்திரங்களைப் பிரயோகிப்பது எவ்வாறு என்பதைத் தெரிந்து கொள்கிற விசயமே தவிர வேறல்ல. (லெ.தொ.நூ. *31.74*)

சிறு முதலாளி வர்க்கத்துடன் சேர்ந்து நேச அணியை நிறுவுவதில் சீனக் கட்சியும் இதேபோன்ற பிரச்சினைகளை எதிர்கொண்டது:

கட்சிக்கு வெளியே உள்ள சிறு முதலாளியத் திரள்களிடை யில், சீன முதலாளிய ஜனநாயகப் புரட்சியில் முதன்மைச் சக்தியாக அமைகிற உழவர்களைத் தவிர, தற்போதையக் கட்டத்தில் நகர்ப்புற சிறு முதலாளி வர்க்கமும் புரட்சியில் உந்து சக்திகளில் ஒன்றாக அமைகிறது. ஏனெனில் அவ்வர்க் கத்தின் மிகப் பெரும்பான்மையான உறுப்பினர்கள் எல்லா வகை ஒடுக்குமுறைக்கும் ஆளாக்கப்படுகிறார்கள். அவர்கள் இடைவிடாமலும் விரைவாகவும் வறுமைக்கும் ஒட் டாண்டி நிலைக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கும் துரத்தப்படுகிறார்கள்; அவர்கள் பொருளாதார ஜனநாயக

மும் அரசியல் ஜனநாயகமும் வேண்டும் என அவசரக் கோரிக்கைகள் விடுக்கிறார்கள். ஆனால் நிலைபெயர்ந்து வரும் வர்க்கம் என்கிற வகையில், சிறு முதலாளி வர்க்கம் ஒரு இரட்டைத் தன்மை கொண்டுள்ளது. அதன் நல்ல மற்றும் புரட்சிகரப் பகுதி என்னவென்றால், இவ்வர்க்கத் தில் உள்ள மிகப் பெரும்பான்மையினர் பாட்டாளி வர்க்கத் தின் அரசியல் மற்றும் அமைப்புவகைச் செல்வாக்கையும், ஏன், அதன் சித்தாந்தச் செல்வாக்கையும்கூட ஏற்றுக்கொள் ளக் கூடியவர்களாக இருக்கிறார்கள்; தற்போது அவர்கள் ஒரு ஜனநாயகப் புரட்சியைக் கோருகிறார்கள்; அதற்காக ஒன்றுபட்டுப் போராடும் ஆற்றலுடையவர்களாக இருக்கி றார்கள்; எதிர்காலத்தில் பாட்டாளி வர்க்கத்துடன் சேர்ந்து அவர்கள் சோசலிசப் பாதையை மேற்கொள்ள முடியும். ஆனால் அவ்வர்க்கத்தின் தீய மற்றும் பிற்பட்ட பகுதி என்னவென்றால், அது தன்னைப் பாட்டாளி வர்க்கத்திடமி ருந்து வேறுபடுத்திக் காட்டுகிற பல்வேறு பலவீனங்களைக் கொண்டுள்ளது என்பது மட்டுமல்ல, பாட்டாளி வர்க்கத் தலைமையை இழக்கும்போது, மிதவாத முதலாளி வர்க்கத் தின் செல்வாக்கின்கீழ் அது அடிக்கடி திசைமாறி வீழ்ந்து அவர்களது கைதியாகிறது. எனவே, தற்போதைய கட்டத் தில் பாட்டாளி வர்க்கமும் அதன் முன்னணிப் படையாகிய சீனப் பொதுவுடைமைக் கட்சியும், கட்சிக்கு வெளியே உள்ள சிறு முதலாளிய மக்கள் திரளுடன் ஒரு உறுதியான, பரந்த நேச அணியை அடிப்படையாகக் கொள்ள வேண் டும். ஒருபுறம் அவர்களைக் கையாளுவதில் இணங்கிப் போக வேண்டும்; அவர்களது மிதவாதக் கருத்துகளும் வேலைப்பாங்கும் பகைவனுக்கு எதிரான போராட்டத்துக் குத் தடை செய்யாமலோ அல்லது நம் அனைவருக்கும் பொதுவான சமூக வாழ்வைச் சீர்குலைக்காமலோ இருக்கும் வரை, இக்கருத்துக்களையும் இவ்வேலைப் பாங்கையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். மற்றோர்புறம், அவர்களு டன் நமக்குள் கூட்டை வலுப்படுத்துவதற்காக பொருத்த மான கல்வியை அவர்களுக்கு வழங்க வேண்டும். *(மா.தெ.நூ. 3.214)*

**4. ஜனநாயக மத்தியத்துவம்**

கட்சிக் கட்டுப்பாடு மத்தியப்படுத்தப்பட்ட தலைமையின் கீழ் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இம்

முறையில் விவாதச் சுதந்திரமும் விமர்சனச் சுதந்திரமும் செயல் ஒற்றுமையுடன் இணைக்கப்படுகின்றன; கீழ் அமைப்புகள் மேல் அமைப்புகளைத் தேர்ந்தெடுக்கின்றன, மேல் அமைப்புக ளுக்குக் கட்டுப்படுகின்றன. பெரும்பான்மையோர் முடிவுக்கு எல்லோரும் கட்டுப்பட வேண்டும். ஒவ்வொரு வர்க்க உணர் வுள்ள தொழிலாளியும் தொழிற்சங்கப் போராட்டத்தில் பெற்ற அனுபவத்துக்குப் பொருத்தமாக இக்கோட்பாடுகள் அமைகின் றன:

*கட்டுப்பாட்டின் முக்கியத்துவம் பற்றியும் பாட்டாளி வர்க் கக் கட்சியில் இக் கருத்தாக்கம் எவ்வாறு புரிந்து கொள்ளப் பட வேண்டும் என்பது பற்றியுமான நமது தத்துவக் கருத்துகளை நாம் ஏற்கனவே ஒரு முறைக்கும் மேலாக விளக்கியுள்ளோம். நாம் அதை செயல் ஒற்றுமை, விவாதச் சுதந்திரம், விமர்சனச் சுதந்திரம் என்று வரையறுத்துக் கூறியுள்ளோம். இத்தகைய கட்டுப்பாடுதான் வளர்ச்சிய டைந்த வர்க்கத்தின் ஜனநாயகக் கட்சியின் மதிப்புக்குகந் தது. பாட்டாளி வர்க்கத்தின் வலிமை அதன் அமைப்பில் பொதிந்துள்ளது. மக்கள் திரளினர் அமைப்புக்குள் கொண்டு வரப்படா விட்டால் பாட்டாளி வர்க்கம் ஒன்றுமில்லாததாக இருக்கும். மக்கள் திரளினர் அமைப்புக்குள் கொண்டுவரப் பட்டாலோ பாட்டாளி வர்க்கம் அனைத்தும் பெற்றதாகிவி டும். அமைப்பு என்பது செயல் ஒற்றுமை, நடைமுறைக் காரியங்களில் ஒற்றுமை... எனவே விவாதிப்பதற்கும் விமர் சிப்பதற்குமான சுதந்திரம் இல்லாத செயல் ஒற்றுமை என்பதைப் பாட்டாளி வர்க்கம் ஏற்றுக்கொள்வதில்லை. (லெ.தொ.நூ. 11.320)*

*ஒரு வேலை நிறுத்தம் பற்றி மையத்தால் ஒரு முடிவு எடுக்கப்படுவதற்கு முன்பு வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாக வும் எதிராகவும் கிளர்ச்சி செய்வது அனுமதிக்கத்தக்கது என்பதையும், ஆனால் ஒரு வேலைநிறுத்தத்துக்கு ஆதரவாக ஒரு முடிவு (இம் முடிவை எதிரியிடமிருந்து மறைத்து வைத்திருக்கவேண்டும் என்ற இன்னொரு முடிவும்) எடுக் கப்பட்டதற்குப் பிறகு வேலை நிறுத்தத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வது வேலைநிறுத்தத்தை உடைப்பதுதான் என்பதையும் புரிந்துகொள்வது அவ்வளவு கடினமானதா? எந்தத் தொழிலாளியும் இதைப் புரிந்துகொள்வார். (லெ.தொ.நூ. 26.224)*

சட்டத்துக்கு விரோதமாகக் கட்சி செயல்படும் பொழுது விவாதத்துக்கும் விமர்சனத்துக்கும் வாய்ப்பு கட்டாயம் வரம்புக் குட்பட்டிருக்கும். ஆனால் அதேவேளையில், தலைமையில் நம்பிக்கை இல்லாமல் கட்டுப்பாடு என்பது ஏதும் இருக்க முடியாது. 1920 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட மூன்றாவது (பொதுவுடைமை) அகிலத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற் கான நிபந்தனைகளில் கீழ்க்கண்டவை உள்ளடங்கியிருந்தன:

> பொதுவுடைமை அகிலத்தைச் சேர்ந்த கட்சிகள் ஜனநாயக மத்தியத்துவம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும். இந்தக் கடுமையான உள்நாட் டுப் போர்க்காலத்தில், பொதுவுடைமையாளர்கள், ஒரு மிகவும் மத்தியப்படுத்தப்பட்ட முறையில் அமைப்புக்கு உள்ளாக்கப்பட்டிருக்க வேண்டும்; ராணுவக் கட்டுப்பாட் டுக்கு நெருக்கமான ஒரு உருக்கு நிகர் கட்டுப்பாடு என்ற சிறப்புத்தன்மை பெற்றிருக்க வேண்டும்; பரந்த அதிகாரங்க ளையும் உறுப்பினர்களின் ஒருமனதான நம்பிக்கையையும் பெற்றுள்ள வலுவான, அதிகாரமிக்க கட்சி மையங்களைக் கொண்டிருக்க வேண்டும்; அப்போதுதான் அவர்களால் தமது கடமைகளைச் செய்யமுடியும். (லெ.தொ.நூ. 31.210)

இவ்வடிப்படையில் போல்சவிக் கட்சியைக் கட்டுவதற் கான ஒரு நீண்ட போராட்டத்தின்போது, கட்டுப்பாடு என்ற பிரச்சினையில் மென்சவிக் அறிவாளிகளிடையே நிலவிய அரா ஜக நிலைபாட்டை லெனின் எதிர்த்துப் போராட வேண்டியிருந் தது. அந்த அறிவாளிகளில் ஒருவர் கட்சி ஒரு 'பெரும் தொழிற்சாலை' போலத் தமக்குக் காட்சியளிப்பதாக குறை கூறினார். இவருக்கு லெனின் பதிலளித்தார்:

> அவர் கூறிய கேடுகெட்ட இச்சொல், பாட்டாளி வர்க்க அமைப்பின் நடைமுறை பற்றியோ அல்லது தத்துவம் பற்றியோ பரிச்சயமில்லாத முதலாளிய அறிவாளியின் மனப்பாங்கை உடனடியாகக் காட்டிக் கொடுத்துவிடுகிறது; ஏனெனில் சிலருக்கு ஒரு பூச்சாண்டிபோலத் தெரியும் தொழிற்சாலை, முதலாளியக் கூட்டுறவின் மிக உயர்ந்த வடிவத்தைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. இந்தக் கூட்டுறவு பாட்டாளி வர்க்கத்தை ஐக்கியப்படுத்தி கட்டுப்பாட்டுக்கு உள்ளாக்கி இருக்கிறது; அமைப்புக்குள்ளாகுமாறு கற்பித் துள்ளது. உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்களின் மற்றப் பிரிவுகள் அனைத்தின் தலைவனாக அதை ஆக்கி யது. சுரண்டலுக்கான ஒரு சாதனம் என்ற வகையில்

தொழிற்சாலை இருப்பதையும் (பட்டினிக் கிடக்க வேண்டுமே என்ற அச்சத்தை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாடு), அமைப்புக்கான ஒரு சாதனம் என்ற வகையில் தொழிற்சாலை இருப்பதையும் (தொழில்நுணுக்க ரீதியில் வளர்ச்சியடைந்த உற்பத்தி முறை நிலைமைகளால் ஒன்றுபடுத்தப்பட்ட கூட்டு உழைப்பை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாடு) வேறுபடுத்திப் பார்ப்பதற்கு முதலாளியத்தால் பயிற்றுவிக்கப்பட்ட பாட்டாளி வர்க்கத்தின் சித்தாந்தமான மார்க்சியம் நிலையற்ற அறிவாளிகளுக்குப் பயிற்சியளித்துள்ளது, பயிற்சியளித்துக் கொண்டிருக்கிறது. முதலாளி வர்க்க அறிவாளிக்கு மிகக் கடினமானதாக உள்ள கட்டுப்பாடும் அமைப்பும், பாட்டாளிகளுக்கு எளிதாய் வாய்க்கப் பெறுகின்றன; இதற்குக் காரணமாக உள்ளது இந்த தொழிற்சாலை 'பயிற்சிதான்'. (லெ.தொ.நூ. 7.391)

இங்குதான் 'தொழிற்சாலை என்ற பள்ளியில் படித்து வந்த பாட்டாளி, அராஜகத் தனிமனிதக் கொள்கைக்கு ஒரு பாடம் புகட்ட முடியும், புகட்ட வேண்டும். உணர்வுபெற்ற தொழிலாளி, அறிவாளியை எதிர்த்துப் போராடக் கூச்சமுற்ற தனது குழந்தைப் பருவ நாட்களில் இருந்து நீண்ட நாட்களுக்கு முன்பே எழுந்து நின்றுவிட்டார். சமூக ஜனநாயக அறிவாளிகளிடையே காணப்படும் கூடுதலான அறிவுக் களஞ்சியத்தையும், மேலும் பரந்த அரசியல் கண்ணோட்டத்தையும் உணர்வுபெற்ற தொழிலாளி பாராட்டுகிறார். ஆனால் நாம் ஒரு உண்மையான கட்சியைக் கட்டத் துவங்கும்போது உணர்வுபெற்ற தொழிலாளி, பாட்டாளிப் படையின் போர்வீரனது மனப்பான்மையை, அராஜகச் சொற்களைப் பகட்டாக விளம்பரப்படுத்தும் பூர்சுவா அறிவாளியின் மனப்பான்மையில் இருந்து வேறுபடுத்திப் பார்க்கத் தெரிந்து கொள்ளவேண்டும்; கட்சி உறுப்பினர்களின் கடமைகளை, அணிகள் மட்டுமல்ல, 'மேலிடத்தில் இருப்பவர்களும்'கூட நிறைவேற்ற வேண்டும் என்பதை வற்புறுத்த அவர் தெரிந்து கொள்ள வேண்டும். (லெ.தொ.நூ. 7.394)

சீனப் பொதுவுடைமைக் கட்சி கட்டப்பட்ட சூழ்நிலைமைகள் வேறானவை. சில அம்சங்களில் அவை சிரமம் குறைந்தவையாகவும் இருந்தன. ஏனெனில் போல்சவிக்குகளால் பாதை வகுத்துக் கொடுக்கப்பட்டிருந்தது; ஆனால் அடிப்படைக் கோட்பாடுகள் ஒன்றேதான்:

*கட்சியை வலுவானதாக்க வேண்டுமானால், நாம் உறுப்பி னர்கள் அனைவரின் முன்முயற்சியைத் தூண்ட ஜனநாயக மத்தியத்துவத்தைச் செயல்படுத்த வேண்டும். பிற்போக்கும் உள்நாட்டுப் போரும் இருந்த காலத்தில் கூடுதலான மத்தி யத்துவம் இருந்தது. புதிய காலகட்டத்தில் மத்தியத்துவம் ஜனநாயகத்துடன் நெருக்கமாக இணைக்கப்பட வேண்டும். நாம் ஜனநாயகத்தைப் பிரயோகப்படுத்துவோம். இதன்மூ லம் கட்சி முழுவதிலும் முன்முயற்சிக்கான வாய்ப்புக் கொடுப்போம். கட்சி உறுப்பினர்கள் அனைவருக்கும் முன் முயற்சிக்கான வாய்ப்புக் கொடுப்போம். அதன்மூலம் புதிய ஊழியர்களைப் பெரும் எண்ணிக்கையில் பயிற்றுவித்து, குறுகல்வாதத்தின் எச்சங்களை அப்புறப்படுத்தி, கட்சி முழுவதையும் உருக்குப்போல உறுதியாக ஐக்கியப்படுத்து வோம். (மா.தொ.நூ. 1.292)*

*இக்காரணங்களுக்காக, ஜனநாயகம் பற்றிய கல்வி கட்சிக் குள் நடத்தப்பட வேண்டும். இதன்மூலம், ஜனநாயக வாழ்வு என்பதன் பொருளை, ஜனநாயகத்துக்கும் மத்தியத் துவத்துக்கும் இடையே உள்ள உறவுக்குரிய பொருளை, எந்த முறையில் ஜனநாயக மத்தியத்துவம் நடைமுறைப்ப டுத்த வேண்டும் என்பதை, உறுப்பினர்கள் அறிந்துகொள்ள முடியும். இவ்வழியில்தான் நம்மால் உண்மையிலேயே கட்சிக்குள் ஜனநாயகத்தை விரிவுபடுத்த முடியும்; அதே வேளையில் கட்டுப்பாட்டைச் சீர்குலைக்கும் அதிதீவிர ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் தவிர்க்கவும் முடியும். (மா.தெ.நூ. 2.205)*

சீனக் கட்சி, உழவர் வர்க்கத்திடம் இருந்து மட்டுமல்ல, நகர்ப்புற சிறுமுதலாளி வர்க்கத்திடமிருந்தும், குறிப்பாக அறிவா ளிகளிடம் இருந்தும் புதிய உறுப்பினர்களைப் பெரும் எண்ணிக் கையில் கவர்ந்திழுத்தது; ஆனால் இவர்களுமே லெனின் வகுத்த கோட்பாடுகளுக்கு இசைந்த வகையில் ஒரு சித்தாந்த மறு வார்ப்பு இயக்கத்துக்கு உட்பட்ட பிறகே சிறந்த கட்சி உறுப்பி னர்கள் ஆனார்கள்:

*ஆனால் தமது ஆரம்ப வர்க்க நிலைப்பாட்டைத் தாமாகவே கைவிட்டு, பாட்டாளி வர்க்கக் கட்சியில் சேர்ந்த சிறு முதலாளி வர்க்கப் பிறப்புடையவர்களின் விசயம் முற்றி லும் மாறானது. அவர்களைப் பற்றி கட்சி மேற்கொள்ளும் கொள்கை, கட்சிக்கு வெளியே உள்ள சிறு முதலாளிய*

மக்கள் திரள்கள் பற்றிய கட்சிக் கொள்கையில் இருந்து கோட்பாட்டில் வேறுபட்டதாக இருக்க வேண்டும். துவக்கத்தில் இத்தகையவர்கள் பாட்டாளி வர்க்கத்துடன் நெருக்கமாக இருந்தாலும், பாட்டாளி வர்க்கக் கட்சியில் தாமாகவே முன்வந்து சேர்ந்தாலும், கட்சியில் மார்க்சிய - லெனினியக் கல்வியின் மூலமாகவும், மக்கள் திரள் புரட்சிப் போராட்டங்களில் உறுதி பெறுவதன் மூலமாகவும் அவர்கள் தமது சித்தாந்தத்தில் படிப்படியாக பாட்டாளித் தன்மை பெற முடியும்; பாட்டாளி வர்க்கச் சக்திகளுக்குப் பெரும் பணியாற்றக் கூடியவர்களாக ஆகமுடியும்... ஆயினும் இன்னும் பாட்டாளி வர்க்கத் தன்மை பெறாத சிறுமுதலாளியின் புரட்சித் தன்மை, பாட்டாளியின் புரட்சித் தன்மையில் இருந்து அடிப்படையில் வேறுபட்டது என்பதும், இந்த வேறுபாடு பல சமயங்களில் ஒரு பகை நிலைக்கு வளரும் என்பதும் வற்புறுத்தப்பட வேண்டும்... பாட்டாளி வர்க்கத்தின் வளர்ச்சியடைந்த உறுப்பினர்களின் மார்க்சிய - லெனினியச் சித்தாந்தத்துக்கும், சிறு முதலாளி வர்க்கத்தில் இருந்து வந்த கட்சி உறுப்பினர்களின் மூல முதல் சித்தாந்தத்துக்கும் இடையே ஒரு உறுதியானதும் கூர்மையானதுமான எல்லைக்கோடு வகுக்கப்படாவிட்டால், அவர்களுக்கு கல்விபுகட்டி, பொருத்தமானதும் பொறுமையானதுமான வழியில் அவர்களுடன் போராடாவிட்டால், அவர்களது சிறு முதலாளியச் சித்தாந்தத்தை வெல்வது சாத்தியமற்றதாகி விடும். மேலும், இவ் உறுப்பினர்கள் தவிர்க்க முடியாதபடி பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையை தங்களுக்குரிய வடிவத்தில் மறுவார்ப்பு செய்ய கடும் முயற்சி செய்து, கட்சித் தலைமையைக் கைப்பற்றி, கட்சியின் லட்சியத்துக்கும் மக்களின் லட்சியத்துக்கும் சேதம் விளைவிப்பார்கள். (மா.தெ.நூ. 3.214)

சீன ஜனநாயகப் புரட்சி இயக்கத்தில் முதலில் விழித்தெழுந்தவர்கள் அறிவாளிகள்தான்... ஆனால் அறிவாளிகள் தொழிலாளிகளுடனும் உழவர்களுடனும் ஐக்கியப்படத் தவறினால் அவர்கள் எதையும் சாதிக்க மாட்டார்கள். இறுதிப் பகுப்பாய்வில், புரட்சிகர அறிவாளிகளை புரட்சித் தன்மை இல்லாத அறிவாளிகளிடம் இருந்தும் அல்லது எதிர்ப் புரட்சி அறிவாளிகளிடம் இருந்தும் பிரிக்கும் எல்லைக் கோடு, அவர்கள் தொழிலாளர்கள் - உழவர்கள் ஆகியோரு

டன் ஒன்றிணைந்து கொள்ள விரும்புகிறார்களா இல்லையா, நடைமுறையில் அதைச் செய்கிறார்களா இல்லையா என்பதுதான். (மா.தெ.நூ. 2.238)

கடைசியாக, ஜனநாயக மத்தியத்துவம் என்பது பாட்டாளி வர்க்கக் கட்சிக்கு மட்டுமல்லாது, ரசியாவில் சோவியத்துகளையும், சீனாவில் மக்கள் பேரவைகளையும் அடிப்படையாகக் கொண்ட புதிய பாட்டாளி வர்க்க அரசுக்குமுள்ள அமைப்பியல் கோட்பாடாகும்:

இப்போது, பாட்டாளி வர்க்கமும் வறிய உழவர்களும் முதலாளிகளின் எதிர்ப்பை நசுக்கவும் தனியார் உடைமையில் உள்ள ரயில்வேக்கள், தொழிற்சாலைகள், நிலம் இன்னபிறவற்றை சமுதாயம் முழுவதன் உடைமையாக மாற்றுவதற்கும் அரசு அதிகாரத்தைத் தம் சொந்தக் கரங்களில் எடுத்து, கம்யூன்களில் தம்மைச் சுதந்திரமாக அமைப்புக்கு உட்படுத்தி, மூலதனத்தைத் தாக்குவதில் அனைத்துக் கம்யூன்களின் செயலை ஒன்றுபடுத்துவார்களேயானால், அது மத்தியத்துவம் அல்லவா? அது மிகவும் முரணற்ற ஜனநாயக மத்தியத்துவம் அல்லவா? மேலும் பாட்டாளி வர்க்க மத்தியத்துவம் அல்லவா? (லெ.தொ.நூ. 25.429)

ஜனநாயக மத்தியத்துவமே புதிய ஜனநாயக அரசின் அமைப்புக்குரிய கோட்பாடாக இருக்க வேண்டும். முக்கியக் கொள்கைகளையும் பல்வேறு மட்டங்களுக்கான அரசாங்கங்களைத் தேர்ந்தெடுப்பதையும் மக்கள் பேரவைகள் தீர்மானிக்க வேண்டும். அது, ஒரே சமயத்தில் ஜனநாயகத் தன்மை உடையதும், மத்தியப்படுத்தப்பட்டதும் ஆகும்; அதாவது ஜனநாயகத்தின் அடிப்படையில் மத்தியப்படுத்தப்பட்டதும், மத்தியப்படுத்தப்பட்ட வழிகாட்டுதலில் உள்ள ஜனநாயகமும் ஆகும். எல்லா மட்டங்களிலும் உள்ள மக்கள் பேரவைகளுக்கு வழங்கப்பட்டுள்ள முழு அதிகாரங்கள் கொண்ட ஜனநாயகத்தை முழுமையாக வெளிப்படுத்துகிற ஒரே அமைப்பு இதுதான். அதேவேளையில் இவ் அமைப்பு மத்தியப்படுத்தப்பட்ட நிர்வாகத்துக்கு உத்திரவாதம் செய்கிறது. ஒவ்வொரு மட்டத்திலும் உள்ள அரசாங்கம், அந்தந்த மட்டத்தில் உள்ள மக்கள் பேரவைகளால் ஒப்படைக்கப்பட்ட காரியங்களை மத்தியப்படுத்தப்பட்ட முறையில் நிர்வகிக்கிறது. மக்களின் ஜனநாயக வாழ்வுக்கு அடிப்படையாக உள்ள அனைத்தையும் பாதுகாக்கிறது. (மா.தெ.நூ. 3.280, ஒப்: 2.57,352, மா.நா.க. 86)

5. மக்கள் திரளிடமிருந்து, மக்கள் திரளுக்கு

சீனாவில் வளர்த்தெடுக்கப்பட்ட கட்சிப் பணியின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்று, 'மக்கள் திரள் வழி' என்பதாகும். அதாவது கட்சிக்கும் மக்கள் திரளினருக்கும் இடையே கூடுமான வரையில் நெருக்கமான ஒன்றுக்கொன்று தொடர்புச் செயலை முறையாக மேம்படுத்துதல் ஆகும். ரசியப் புரட்சியில் இருந்து சீனக் கட்சி கற்றுக்கொண்ட பாடங்களில் இது ஒன்றாகும்:

> வர்க்கப் போராட்டம் மேலும் கடுமையாகும் போது, பரந்துபட்ட மக்கள் திரளினரை மிக உறுதியுடனும் முழுமையாகவும் சார்ந்துநின்று, எதிர்ப்புரட்சிச் சக்திகளைத் தோற்கடிப்பதில் அவர்களுக்குள்ள உற்சாகத்தை முழுமையாக வெளிக்கொணருவது பாட்டாளி வர்க்கத்துக்கு மேலும் அவசியமானதாகிறது. அக்டோபர் புரட்சியின்போதும், தொடர்ந்து நிகழ்ந்த உள்நாட்டுப் போரின்போதும் சோவியத் யூனியனில் கொந்தளித்துக் குமுறிய மக்கள்திரள் போராட்டங்களின் அனுபவம் இவ்வுண்மையை முழுமையாக மெய்ப்பித்தது. அக்காலத்திய சோவியத் அனுபவத்தில் இருந்துதான், நமது கட்சி அடிக்கடி சொல்கிற 'மக்கள் திரள் வழி' என்பது வகுக்கப்பட்டது. (வ.அ. 20)

மக்கள் திரளினரைக் கட்சி வழிநடத்திச் செல்லவேண்டுமானால், அது அவர்களது நலன்களுக்குச் சேவை புரிய வேண்டும். தலைமை தாங்க வேண்டுமானால் அது சேவை புரிந்தாக வேண்டும். இவ்வழியில் மட்டுமே அவர்களது நடவடிக்கைகளுக்கு அது வழிகாட்ட முடியும்; தனது தவறுகளையும் திருத்திக் கொள்ள முடியும்:

> மக்கள் திரளினரின் நலன்களைச் சரியாகத் தெரிந்து கொண்டு, மக்களுக்குச் சேவை செய்யவும், அவர்களது நலன்களை வெளிப்படுத்தவும் முன்னணிப்படையான அமைப்பு, தனது நடவடிக்கைகள் அனைத்தையும் மக்கள் திரளிடையே மேற்கொள்ள வேண்டும். விதிவிலக்கின்றி, அவர்களிடையே உள்ள மிகச்சிறந்த மனிதர்களை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு கட்டத்திலும், மக்கள் திரளுடன் அது கொண்டுள்ள தொடர்பு பராமரிக்கப்படுகிறதா, அது ஒரு உயிருள்ள தொடர்பாக உள்ளதா என்பதை எச்சரிக்கையுடனும் புறநிலை ரீதியாகவும் சரிபார்த்துக்

*கொள்ளவேண்டும். இவ்வழியில், இவ்வழியில் மட்டுமே முன்னணிப் படை, மக்கள் திரளினரைப் பயிற்றுவித்து அவர்களுக்கு அறிவு புகட்டுகிறது; அவர்களது நலன்களை வெளிப்படுத்துகிறது; அமைப்பு பற்றி அவர்களுக்குக் கல்வி புகட்டுகிறது; அவர்களது நடவடிக்கைகள் அனைத்தையும் உணர்வு பெற்ற வர்க்க அரசியல் பாதை வழியாகச் செலுத்துகிறது. (லெ.தொ.நூ. 19.409)*

*ஒரு அரசியல் கட்சி தனது சொந்தத் தவறுகள் மீது மேற்கொள்ளும் நிலைபாடே, அது எவ்வளவு நேர்மையான கட்சி, அது தனது வர்க்கத்துக்கும் உழைக்கும் மக்களுக்கும் தனக்குள்ள கடமைகளை நடைமுறையில் எப்படி நிறைவேற்றுகிறது என்பதை மதிப்பிடுவதற்கான மிக முக்கியமான, மிக நிச்சயமான வழிகளில் ஒன்றாகும். ஒரு தவறை வெளிப்படையாக ஒப்புக்கொள்வது அதைச் செய்வதற்குக் காரணமாக இருந்த நிலைமைகளை பகுப்பாய்வு செய்வது, அதைச் சரிசெய்வதற்கான வழிமுறைகளைத் தீர ஆராய்வது — இவையெல்லாம் ஒரு தீவிரமான கட்சிக்குரிய அடையாளமாகும். தனது கடமைகளை அது இவ்வாறுதான் நிறைவேற்ற வேண்டும்; தனது வர்க்கத்துக்கும் பிறகு மக்கள் திரளினருக்கும் இவ்வாறுதான் கல்விபுகட்டி அவற்றைப் பயிற்றுவிக்க வேண்டும். (லெ.தொ.நூ. 31.57)*

'மக்கள் திரள் வழி என்பது சீனப் பொதுவுடைமைக் கட்சியில், எல்லா வேலைக்குமுரிய துவக்க முனையாகக் கருதப்படுகிறது:

*மக்களுக்காகச் செய்யப்படும் பணிகள் அனைத்தும் அவர்களது தேவைகளையே துவக்கமாகக் கொள்ளவேண்டுமேயன்றி, எந்த ஒரு தனிமனிதரின் — அவர் எவ்வளவுதான் நல்லெண்ணம் கொண்டிருந்த போதிலும் — விருப்பத்தையல்ல. புறநிலையாகப் பார்க்கும்போது, மக்கள் திரளினருக்கு ஒரு குறிப்பிட்ட மாற்றம் தேவையாக இருப்பதும், ஆனால் அக நிலையில் அவர்கள் அத்தேவைபற்றி இன்னும் உணர்வு கொள்ளாமல் இருப்பதும், மாற்றத்தை இன்னும் விரும்பாமலோ, அதை ஏற்படுத்த வேண்டும் என்ற உறுதி கொள்ளாமலோ இருப்பதும் பலமுறை நேர்வதுண்டு. இத்தகைய சமயங்களில் நாம் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். நமது பணிகள்மூலம் மக்கள் திரளினரின் மிகப் பெரும்பாலோர் அத்தேவைபற்றிய உணர்வைப் பெற்று,*

*அதை நிறைவேற்றுவதற்கான விருப்பமும் உறுதியும் பெறும்வரை, அம்மாற்றத்தை நாம் செய்யக்கூடாது. இல்லா விடில் நாம் மக்கள்திரளிடம் இருந்து நம்மைத் தனிமைப்ப டுத்திக் கொள்வோம். (மா.தெ.நூ. 3.236)*

*நமது துவக்கமுனை மக்களுக்கு முழுமனத்துடன் சேவை செய்வதும், மக்கள் திரளிடமிருந்து ஒரு கணம்கூட விலகியி ருக்காமல் இருப்பதும், எல்லாச் சமயங்களிலும் தனி மனிதர்கள் அல்லது குழுக்களின் நலன்களில் இருந்து துவங்காமல் மக்களின் நலன்களில் இருந்தே துவங்குவதும், மக்களிடம் நமக்குள்ள பொறுப்புகள், கட்சியின் தலைமை உறுப்பிடம் நமக்குள்ள பொறுப்பு ஆகியவற்றின் ஒத்த தன்மையைப் புரிந்து கொள்வதும் ஆகும். உண்மையின் பக்கம் நிற்பதற்குப் பொதுவுடைமையாளர்கள் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். ஏனெனில் உண்மை என்பது மக்களின் நலன்களுக்கு உரியதாகும். தமது தவறுகளைத் திருத்திக் கொள்வதற்குப் பொதுவுடைமையாளர்கள் எப் போதும் தயாராக இருக்க வேண்டும். ஏனெனில் தவறுகள் மக்களின் நலன்களுக்கு எதிரானவை. சரியான கடமை, சரியான கொள்கை, சரியான வேலைப்பாங்கு ஆகியவை எப்போதும் எந்த ஒரு குறிப்பிட்ட காலத்திலும் இடத்திலும் மக்கள் திரளினருக்குள்ள கோரிக்கைகளுக்கு உகந்தவையாக உள்ளன என்பதையும், எப்போதும் மக்கள் திரளிடம் நமக்குள்ள பிணைப்புகளை வலுவாக்குகின்றன என்பதை யும், ஒரு தவறான கடமை, தவறான கொள்கை, தவறான வேலைப்பாங்கு ஆகியவை எப்போதும் எந்த ஒரு குறிப் பிட்ட காலத்திலும் இடத்திலும் மக்கள் திரளினருக்குள்ள கோரிக்கைகளுக்கு உகந்தவையாக இருப்பதில்லை என்ப தையும், எப்போதும் மக்கள் திரளிடமிருந்து நம்மை அந்நியப்படுத்தும் என்பதையும் இருபத்து நான்கு ஆண்டு அனுபவம் நமக்குச் சொல்கிறது. (மா.தெ.நூ. 3.315)*

*பொதுவுடைமையாளர்களாகிய நாம் விதைகளைப் போன்ற வர்கள். மக்கள் மண்ணை நிகர்த்தவர்கள். நாம் எங்கெல் லாம் செல்கிறோமோ, அங்கெல்லாம் நாம் மக்களுடன் ஐக்கியமாகி, வேர் பிடித்து அவர்களிடையே மலரவேண் டும். எங்கெல்லாம் நமது தோழர்கள் செல்கிறார்களோ, அங்கெல்லாம் அவர்கள் மக்கள் திரளினருடன் நல்லுறவு களை உருவாக்க வேண்டும். அவர்களைப் பற்றிய அக்கறை*

எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தமது இடையூறுக ளைக் கடப்பதற்கு உதவ வேண்டும். நாம் மக்கள்திரளினரு டன் ஐக்கியப்பட வேண்டும். எவ்வளவு அதிகமாக மக்கள் திரளினருடன் நாம் ஐக்கியப்படுகிறோமோ, அவ்வளவுக்கு மிகவும் நல்லது. நாம் மக்கள் திரளினரை ஒன்றுதிரட்ட அனைத்து முயற்சிகளும் செய்தல் வேண்டும்; மக்கள் படைகளை விரிவுபடுத்த வேண்டும்; நமது கட்சியின் தலைமையின்கீழ் ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடித்து ஒரு புதிய சீனாவைக் கட்டவேண்டும். (மா.தெ.நூ. 4.58)

கடும் தவறுகள் இழைத்துள்ள சில ஊழியர்கள், கட்சி உறுப்பினர்கள் ஆகியோரையும், தொழிலாளர் - உழவர் திரளினரிடையே உள்ள தீயவர்களையும் நாம் விமர்சிக்க வேண்டும்; அவர்களுடன் போராட வேண்டும். இத்தகைய விமர்சனம், போராட்டம் ஆகியவற்றில் சரியான முறைக ளையும் வடிவங்களையும் மேற்கொள்ளுமாறும், முரட்டுத் தனமான செயல்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் நாம் மக்கள் திரளினரிடம் இணக்கமாகக் கேட்டுக்கொள்ள வேண்டும். இது விசயத்தின் ஒரு பக்கமாகும். மற்றோர் பக்கம் இதுதான்: மக்கள் திரளினருக்கு எதிரான எதிர்த்தாக் குதல் தொடுக்க மாட்டோம் என்று இந்த ஊழியர்கள், கட்சி உறுப்பினர்கள், தீயவர்கள் ஆகியோரை உறுதிமொழி எடுத் துக்கொள்ளச் செய்ய வேண்டும். அவர்களைச் சுதந்திரமாக விமர்சிப்பதற்கு மட்டும் அல்லாமல், தேவைப்பட்டால் அவர்களைப் பதவி நீக்கம் செய்யுமாறு ஆலோசனை கூறவும் அல்லது கட்சியிலிருந்து அவர்களை வெளியேற்று மாறு ஆலோசனை கூறவும், மிக மோசமான மனிதர்களை விசாரணை செய்து தண்டிக்கவும் மக்கள்-நீதிமன்றங்களுக்கு ஒப்படைக்கவும்கூட அவர்களுக்கு உரிமை உண்டு என்பது அறிவிக்கப்பட வேண்டும். (மா.தெ.நூ. 4.186)

கட்சிக்கும் மக்கள் திரளினருக்கும் இடையே உள்ள உறவு என்பது, கட்சித் தலைமைக்கும் அணிகளுக்கும் இடையே உள்ள உறவைப்போல், எதிர்மறைகளின் ஒற்றுமையாகும். இதில் ஒவ்வொன்றும் மற்றதன்மேல் செயல்புரிகிறது, எதிர்ச்செயல் புரிகிறது:

தோழர் மா சேதுங் கூறுவதுபோல், சரியான அரசியல் வழி 'மக்களிடமிருந்து மக்களுக்கு' என்பதாக இருக்க வேண் டும். வழி உண்மையில் மக்களிடம் இருந்தே வருகிறது,

குறிப்பாக அது உண்மையிலேயே அவர்களுக்குத் திரும்பிச் செல்கிறது என்பதை உறுதிப்படுத்த, கட்சிக்கும் கட்சிக்கு வெளியே உள்ள மக்கள் திரளினருக்கும் (வர்க்கத்துக்கும் மக்களுக்கும்) இடையில் மட்டுமல்லாது, எல்லாவற்றுக்கும் மேலாக கட்சியின் தலைமை உறுப்புகளுக்கும் கட்சிக்கு உள்ளேயே இருக்கிற மக்கள் திரளினருக்கும் (ஊழியர்களுக் கும் அணிகளுக்கும்) இடையிலும் நெருக்கமான பிணைப்பு கள் இருக்க வேண்டும்; வேறு வார்த்தைகளில் சொல்வதா னால், அமைப்புக்குரிய ஒரு சரியான வழி இருக்க வேண்டும். (மா.தெ.நூ. 3.208)

மேலும் கட்சிக்கும் மக்களுக்குமிடையே உள்ள சுழற்சி போன்ற இத்தொடர்புச் செயல், தத்துவத்துக்கும் நடைமுறைக் கும் இடையே உள்ள உறவு பற்றி அறிவு பற்றிய மார்க்சியத் தத்துவம் சொல்கிறதே, அதற்குப் பொருத்தமாக அமைகிறது:

நமது கட்சியின் நடைமுறைப் பணி அனைத்திலும் சரியான தலைமை என்பது கட்டாயமாக 'மக்கள் திரளிடமிருந்து வருகிறது - மக்கள் திரளினரை அடைகிறது.' இதன் பொருள், மக்கள் திரளினரின் கருத்துகளை (சிதறுண்டு கிடக்கிறதும் முறைப்படுத்தப்படாததுமான கருத்துக்களை) எடுத்து அவற்றை ஒருமுகப்படுத்த வேண்டும். (ஆய்வின் மூலம் அவற்றை ஒருமுகப்படுத்தப்பட்ட, முறைப்படுத்தப் பட்ட கருத்துகளாக மாற்றவேண்டும்.) பிறகு மக்கள் திரளினரிடம் திரும்பச் சென்று அக்கருத்துக்களைப் பிரச்சா ரம் செய்யவேண்டும், அவற்றை விளக்க வேண்டும். மக்கள் திரளினர் இவற்றைத் தமது சொந்தக் கருத்துகள் எனத் தழுவி, அவற்றை இறுகப்பற்றி, அவற்றைச் செயல்படுத்தி, இத்தகைய செயலில் அக் கருத்துகளின் சரியான தன்மை யைச் சோதித்து அறியும்வரை, இப்பிரச்சாரமும் விளக்கமும் நடைபெற வேண்டும். பிறகு மீண்டும் ஒருமுறை மக்களிட மிருந்து கருத்துகளை ஒருமுகப்படுத்த வேண்டும். மீண்டும் ஒரு முறை மக்கள் திரளினரிடம் செல்லவேண்டும்; இவ்வ கையில் கருத்துகள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு நிறை வேற்றப்படும். இவ்வாறு ஒரு முடிவற்ற சுழற்சியில் இதை மீண்டும் மீண்டும் திரும்பச் செய்கையில், ஒவ்வொரு முறையும் கருத்துகள் மேலும் சரியானவையாக, மேலும் உயிராற்றல் மிக்கவையாக, மேலும் வளமானவையாக மாறும். அறிவு பற்றிய மார்க்சியத் தத்துவம் இதுதான். (மா.தெ.நூ. 3.119)

புலனறிவிலிருந்து அருவமான சிந்தனைக்கும் சிந்தனையிலிருந்து நடைமுறைக்கும் செல்ல வேண்டும்; உண்மையை அறிவதற்கான, புறநிலை உலகை அறிவதற்கான இயங்கியல் பாதை இதுதான். (லெ.தொ.நூ. 38.171)

எனவே, சோசலிசத்தைக் கட்டுவதில் சமுதாய வளர்ச்சி என்பது, பாட்டாளி வர்க்கம், அதன் கட்சி ஆகியவற்றின் தலைமையின்கீழ், மக்கள் திரளினரால் மேற்கொள்ளப்படும் ஒரு உணர்வுபூர்வமான நிகழ்ச்சிப் போக்காகிறது:

சமுதாய வளர்ச்சியின் இன்றைய யுகத்தில், சரியான முறையில் உலகத்தை அறிந்து கொள்கிற பொறுப்பையும் அதை மாற்றுகிற பொறுப்பையும் வரலாறு பாட்டாளி வர்க்கத்தின் தோள்களிலும் அதன் கட்சியின் தோள்களிலும் சுமத்தியுள்ளது. விஞ்ஞான அறிவின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் இந்த நிகழ்ச்சிப்போக்கு, உலகத்தை மாற்றும் செயல்பாடு, உலகத்திலும் சீனத்திலும் ஏற்கனவே ஒரு வரலாற்றுக் கட்டத்தை அடைந்துள்ளது. இது வரலாற்றில் முன்நிகழ்ந்திராத ஒரு கட்டம்; அதாவது உலகத்திலிருந்து இருளை முற்றாகத் துரத்தியடிப்பதற்கும், முன்பு எப்போதும் இல்லாத வகையில், உலகத்தை ஒளிமிக்க உலகமாக மாற்றுவதற்குமான கட்டமாகும். உலகத்தை மாற்றுவதற்காகப் பாட்டாளி வர்க்கமும் புரட்சிகர மக்களும் மேற்கொள்ளும் போராட்டம் கீழ்க்காணும் கடமைகளை நிறைவேற்றுவதை உள்ளடக்கியுள்ளது: புற உலகை மாற்றுதல், அதே வேளையில் தமது அக உலகை மாற்றுதல், அவர்களது அறியும் ஆற்றலை மாற்றுதல், அக உலகுக்கும் புறஉலகுக்கும் உள்ள உறவுகளை மாற்றுதல்... மாற்றப்படவேண்டிய புற உலகு, மாற்றத்தை எதிர்ப்பவர்கள் அனைவரையும்கூட உள்ளடக்கி இருக்கிறது. அவர்கள் மாற்றப்படுவதற்கு, அவர்கள் வலுக்கட்டாயமான கட்டத்தினூடே செல்ல வேண்டும். அதன் பிறகே அவர்கள் தாமாக முன்வந்து ஏற்கிற, உணர்வுபூர்வமான மாற்றம் என்ற கட்டத்தில் நுழைவார்கள். மனிதகுலம் அனைத்தும் தானாக முன்வந்தும், உணர்வுபூர்வமாகவும் தன்னையும் உலகையும் மாற்றும்போதுதான் பொதுவுடைமைச் சகாப்தத்தை அடைய முடியும். (மா.தெ.நூ. 1.308)

இவ்வாறு, கட்சித் தலைமை - கட்சி அணிகள், கட்சி - பாட்டாளி வர்க்கம், பாட்டாளி வர்க்கம் - மக்களின் இதர

பகுதியினர், மக்கள் - பிற்போக்குவாதிகள் இவைதாம் சோசலிசச் சமுதாயத்தின் இயக்கத்துக்கு அடிப்படையாக உள்ள நான்கு பெரும் முரண்பாடுகள். இவற்றில் ஒவ்வொன்றும் அதைவிடப் பெரிய முரண்பாட்டில் முதன்மையான கூறாக உள்ளடங்குகின்றது. முதல் மூன்று முரண்பாடுகள் பகைத்தன்மை அற்றவை. ஆனால் சரியான முறையில் கையாளப்படவில்லை என்றால் அவை பகைத்தன்மை உள்ளவை ஆகும். நான்காவது முரண்பாடு பகைத்தன்மையுள்ளது. ஆனால் சரியான முறையில் கையாளப் பட்டால் பகைத்தன்மையற்றதாகும். பிறகு, பொதுவுடைமை நோக்கிய மாறுதல் முழுமை பெற்றதும், ஜனநாயகம், சர்வாதிகாரம், கட்சி ஆகியவை உள்ளிட்ட அனைத்து அரசு அதிகார வடிவங்களும் மறையும்:

> வர்க்கங்கள் மறையும்போது, வர்க்கப் போராட்டத்துக்கான கருவிகள் — கட்சிகள் மற்றும் அரசு யந்திரம் — அனைத்தும் தமது செயல்பாட்டை இழக்கின்றன. அவற்றின் அவசியம் முடிவடைகிறது. எனவே அவை படிப்படியாக உலர்ந்து தமது வரலாற்றுக் கடமையை முடிவுக்குக் கொண்டு வருகின்றன; மனித சமுதாயம் மேலும் ஒரு உயர்ந்த கட்டத்துக்கு நகரும்...
>
> உலகம் முழுவதிலும் உள்ள பொதுவுடைமையாளர்கள் முதலாளி வர்க்கத்தைக் காட்டிலும் மதிநுட்பம் மிக்கவர்கள்; அவர்கள் பொருள்களின் வாழ்வையும் வளர்ச்சியையும் நெறிப்படுத்தும் நியதிகளைப் புரிந்து கொள்கிறார்கள்; இயங்கியலைப் புரிந்து கொள்கிறார்கள். அவர்களால் தொலைதூரம் பார்க்க முடியும். முதலாளி வர்க்கம் இவ்வுண்மையை வரவேற்பதில்லை. ஏனெனில் தான் தூக்கியெறியப் படுவதை அது விரும்பவில்லை... ஆனால் பாட்டாளி வர்க்கம், உழைக்கும் மக்கள், பொதுவுடைமைக் கட்சி ஆகியவற்றுக்கோ தாம் தூக்கியெறியப்படுவதல்ல பிரச்சினை; மாறாக மிக இயல்பாகவே வர்க்கங்களும், அரசு அதிகாரமும், அரசியல் கட்சிகளும் செத்துமடிகிற நிலைமைகளை, மாபெரும் இசைவிணக்கம் நிறைந்த் உலகில் மனிதகுலம் நுழைகிற நிலைமைகளை உருவாக்கக் கடினமாக உழைப்பதுதான் பிரச்சினை. (மா.தெ.நூ. 4.411)

## அத்தியாயம் 7

# முதல் சோசலிச அரசு

*கடந்த காலச் சமுதாயம் அனைத்தின் வரலாறும் வர்க்கப் பகைமைகளின் — வெவ்வேறு சகாப்தங்களில் வெவ்வேறு வடிவங்களை எடுத்த வர்க்கப் பகைமைகளின் — வளர்ச்சியில் அடங்கியுள்ளது. ஆனால், அப்பகைமைகள் எந்த வடிவத்தை மேற்கொண்டிருந்தாலும், கடந்த காலச் சகாப்தங்கள் அனைத்துக்கும் பொதுவான ஒரு உண்மை இருக்கிறது. சமுதாயத்தின் ஒரு பகுதியை மற்றொரு பகுதி சுரண்டுவது என்பதே அந்த உண்மை.*

— பொதுவுடைமை அறிக்கை

### 1. பாட்டாளி வர்க்கப் புரட்சி

முதலாளி வர்க்கப் புரட்சிக்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் பற்றிய லெனினின் பகுப்பாய்வைத் தொகுத்துக் கூறும் வகையில் ஸ்டாலின் எழுதினார்:

பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் முதலாளி வர்க்கப் புரட்சிக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை கீழ்க்காணும் ஐந்து முக்கிய அம்சங்களில் சுருக்கி விடலாம்: 1. கிட்டத்தட்ட முழுமை பெற்றுவிட்ட முதலாளிய அமைப்பு வடிவங்கள், பகிரங்கமாகப் புரட்சி வெடிப்பதற்கு முன்பு நிலவுடைமைச் சமுதாயத்தின் கருவில் வளர்ந்து முதிர்ச்சி அடைந்துள்ள வடிவங்கள் நிலவும் போதுதான் பொதுவாக முதலாளி வர்க்கப் புரட்சி துவங்குகிறது; பாட்டாளி வர்க்கப் புரட்சியோ, முழுமை பெற்ற சோசலிச அமைப்பு வடிவங்கள் இல்லாதபோது அல்லது அநேகமாக முற்றிலும் இல்லாதபோது துவங்குகிறது.

2. முதலாளி வர்க்கப் புரட்சியின் முதன்மைக் கடமை அதிகாரத்தைக் கைப்பற்றுவதும், ஏற்கனவே நிலவுகிற முதலாளியப் பொருளாதாரத்துக்கு அதைப் பொருத்தமானதாக ஆக்குவதும் ஆகும். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் முதன்மைக் கடமையோ ஒரு புதிய சோசலிசப் பொருளாதாரத்தை உருவாக்குவதன் பொருட்டு அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகும்.

3. அதிகாரத்தைக் கைப்பற்றுதலுடன் முதலாளி வர்க்கப் புரட்சி பொதுவாக நிறைவு பெற்று விடுகிறது. ஆனால் பாட்டாளி வர்க்கப் புரட்சியிலோ அதிகாரத்தை கைப்பற்று தல் என்பது ஒரு துவக்கம் தான்; அந்த அதிகாரம் பழைய பொருளாதாரத்தை மாற்றி அமைக்கவும் புதிய பொருளாதா ரத்தை ஒழுங்கமைக்கவும் ஒரு நெம்புகோலாகப் பயன்படுத் தப் படுகிறது.

4. அதிகாரபீடத்தில் ஒரு சுரண்டல் கூட்டத்துக்குப் பதிலாக இன்னொரு சுரண்டல் கூட்டத்தைக் கொண்டு வந்து வைத் தல் என்பதுடன் முதலாளி வர்க்கப் புரட்சி தனக்கு வரம்பு செய்து கொள்கிறது; எனவே பழைய அரசு யந்திரத்தை உடைக்கும் தேவை அதற்கு இல்லை. பாட்டாளி வர்க்கப் புரட்சியோ சுரண்டும் குழுக்கள் அனைத்தையும் அதிகாரத்தி லிருந்து அப்புறப்படுத்தி, உழைப்போர், சுரண்டப்படு வோர் அனைவரின் தலைவனான பாட்டாளி வர்க்கத்தை அதிகாரத்தில் அமர்த்துகிறது. இதன் காரணமாக, பழைய அரசு அமைப்பை உடைத்தெறிந்து அதன் இடத்தில் ஒரு புதிய அரசு அமைப்பைக் கொண்டு வருவதைத் தவிர்க்க முடியாது.

5. முதலாளி வர்க்கப் புரட்சியால் கொஞ்ச காலத்துக்குக் கூட பல லட்சக்கணக்கான உழைக்கும் மற்றும் சுரண்டப்ப டும் மக்களை அணிதிரட்ட முடியாது. காரணம் அவர்கள் உழைப்பவர்களும், சுரண்டப்படுபவர்களுமாக இருப்பது தான்; பாட்டாளி வர்க்கப் புரட்சியோ பாட்டாளி வர்க்க அதிகாரத்தை வலுப்படுத்தி, புதிய சோசலிசப் பொருளாதா ரத்தை உருவாக்குதல் என்ற அதன் முதன்மைக் கடமையை நிறைவேற்ற வேண்டுமானால், பாட்டாளி வர்க்கத்துக்கான திடமான நேச அணி ஒன்றில் உழைப்பாளிகளையும் சுரண்டப்படுபவர்களையும் அணிசேர்க்க முடியும், சேர்க்க வும் வேண்டும். *(ஸ்.தொ.நூ. 8. 22, ஒப்: லெ.தொ.நூ. 27. 89)*

இவ்வாறு, முதலாளி வர்க்கத்தைத் தூக்கியெறிந்த பிறகு, பாட்டாளி வர்க்கமானது ஒரு புதிய சமூக அமைப்பைக் கட்டும் கடமையை எதிர் கொள்கிறது. இச் சமூக அமைப்பு முதலாளியத் திடமிருந்து மட்டுமல்ல, வர்க்க சமுதாயத்தின் முந்திய வடிவங் கள் அனைத்திலிருந்தும் வேறுபடுகிறது. அதாவது இது சுரண்ட லுக்கு முற்றுப் புள்ளி வைக்கிறது. இதிலிருந்து பெறப்படுவது

என்னவெனில் பாட்டாளி வர்க்கப் புரட்சி முந்திய புரட்சி எதனைக் காட்டிலும் மேலும் ஆழமான மாறுதல்களை உள்ளடக் குகிறது; எனவே மேலும் பெரிய சிக்கல்களை உள்ளடக்குகிறது என்பதாகும்.

மேலும், பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் தன்மையிலேயே உள்ளார்ந்த இச்சிக்கல்கள், அக்டோபர் புரட்சியில் மிக உச்சக் கட்டத்தை அடைந்தது தவிர்க்க முடியாதது. ஏனெனில் அதுதான் முதல் புரட்சி, பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி, போராட்டம் மும்முரமாக நடந்து கொண்டிருந்த போதே உருவாக்கப்பட்ட ஒரு செஞ்சேனையைக் கொண்டு உள்நாட்டு, வெளிநாட்டுப் பகைவர்களை முறியடித்த பிறகு, ரசியத் தொழிலாளிகளும் உழவர்களும் சோசலிசம் கட்டும் கடமைக்குத் திரும்பினார்கள். இதற்கான முன் அனுபவம் அவர்களிடம் இருக்கவில்லை. எந்த நட்பு நாட்டிலிருந்தும் உதவி இல்லை. வெளிநாடுகளில் திட்டமிடப்பட்ட நாசவேலை யால் தொல்லைக்குள்ளாயினர். புதுப்பிக்கப்பட்ட தலையீட்டு அச்சுறுத்தலை எதிர்கொண்டனர்.

அதிகாரத்தை உண்மையாகவே கைப்பற்றுவது அவ்வளவு கடினமானதாக இருக்கவில்லை. இதற்குக் காரணமாக இருந்தது போரால் உருவாக்கப்பட்டிருந்த அரசியல் நிலைமையாகும். உள்நாட்டில் இராணுவத் தோல்வியின் பாதிப்பால், ஜார் யுகத் தின் பிற்பட்ட பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்தது. வெளி நாட்டு நிலைமையைப் பொறுத்தவரை, மரணப் போராட்டத்தில் பிணைக்கப்பட்டிருந்த ஏகாதிபத்திய அரசுகள், ரசியாவில் தலை யிட முடியாத நிலையில் இருந்தன (லெ.தொ.நூ. 27. 92, ஸ்.தொ.நூ. 6. 162); பிறகு அவர்கள் தலையிட்ட சமயத்தில், அவர்களது சொந்தத் தொழிலாளிகளே காட்டிய எதிர்ப்பு — ஹங்கேரியிலும் ஜெர்மனியிலும் ஏற்பட்ட புரட்சிகரக் கிளர்ச்சி கள், போல்சவிக்குகளுக்கு ஆதரவாக பிரான்சிலும் பிரிட்டனி லும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் (லெ.தொ.நூ. 30. 386, 33. 145, ஸ்.தொ.நூ. 6. 391) — அவர்களுக்குத் தடங்கல் ஏற்படுத்தின. இத்தகைய அரசியல் காரணிகளால் புரட்சி பிழைத்தது. ஆனால் அதிகாரத்துக்கான போராட்டம் என்பதில் இருந்து சோசலிசக் கட்டுமானம் என்பதற்கு அப்புரட்சி கடந்து சென்றபோது, ஜாரிசத்தின் பிற்பட்ட தன்மை ஒரு முதன்மை யான தடங்கலாகியது:

வரலாற்றின் நெளிவு சுளிவுகளின் காரணமாக, சோசலிசப் புரட்சியைத் துவக்குகிற நாடாகத் தன்னை ஒரு நாடு எந்த

அளவு மெய்ப்பித்துக் கொண்டுள்ளதோ, அந்த அளவு பழைய முதலாளிய உறவுகளில் இருந்து சோசலிச உறவுக ளுக்குக் கடந்து செல்வது அதற்குக் கடினமானதாக இருக் கும். (லெ.தொ.நூ. 27. 89)

மேற்கு நாட்டில் தலைகீழான நிலைமை இருந்தது; அங்கு ஏகபோக முதலாளியத்தின் சமூக - பொருளாதார நிலைமைகள் — பெரும் அளவு உற்பத்தி, அனைவர்க்கும் வழங்கப்பட்டிருந்த படிப்பறிவு, ஒரு உயர்அளவு உழைப்புத் திறனும் தொழிற்சங்க அமைப்பும் — சோசலிசக் கட்டுமானத்துக்குச் சாதகமானவை யாக இருந்தன; ஆனால் சீர்திருத்தவாதப் பிரமைகளால் தொழி லாளிகள் பின்னிழுத்து நிறுத்தப்பட்டிருந்ததால், புரட்சிக்கான அரசியல் நிலைமைகள் இல்லாமல் இருந்தன. ரசியாவை ஜெர்மனியுடன் ஒப்பிட்டு, இரண்டுக்குமுள்ள வேறுபாட்டைச் சுட்டிக் காட்டினார் லெனின்:

நவீன விஞ்ஞானத்தின் மிக அண்மைக் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்ட பெரிய அளவு முதலாளியத் தொழில் அமைப்பு இல்லாவிட்டால் சோசலிசத்தைச் சிந்தித் துப் பார்க்க முடியாது; அதே வேளையில் பாட்டாளி வர்க்கம் அரசை ஆளக்கூடியதாக இல்லாவிட்டாலும் சோச லிசத்தைச் சிந்தித்துப் பார்க்க முடியாது... 1918 இல் ஒருபுறம் சோசலிசத்துக்கான பொருளாதார உற்பத்தி மற்றும் சமூகப் பொருளாதார நிலைமைகள் ஜெர்மனியில் கைகூடி வந்ததும், மற்றோர் புறம் சோசலிசத்துக்கான அரசியல் நிலைமைகள் ரசியாவில் கைகூடி வந்ததும் கண்கூடு. (லெ.தொ.நூ. 32. 334)

எனவே, புரட்சி ரசியாவைக் காட்டிலும் மேற்கு நாடுகளில் மெதுவாகவே வரும் என்றும், ஆனால் மேற்கு நாடுகளில் வருமானால் அது சிரமம் குறைந்ததாக இருக்கும் என்றும் லெனின் வழக்காடினார்; அதேவேளையில், அரசியல் அதிகா ரத்தை போல்சவிக்குகள் எளிதாக வென்றெடுத்தது அவர்களை ஏமாற்றி விடக்கூடாது என்றும் அவர் எச்சரித்தார். ஏனெனில் அவர்கள் மிகப் பெரும் சிக்கல்களை எதிர்கொண்டு நின்றனர்:

ஐரோப்பாவில் சோசலிசப் புரட்சிக்கான பொருளாதார முன் தேவைகளைப் பற்றி கவனத்துடன் சிந்தித்துள்ள எவருக் கும், ஐரோப்பாவில் சோசலிசப் புரட்சியைத் தொடங்குவது அளவிடமுடியாத அளவில் மேலும் கடினமானது என்ப

துதும், நமக்கோ அது அளவிட முடியாத அளவில் மேலும் எளிதானது என்பதும் தெளிவாகும்; ஆனால் அங்கு புரட்சியைத் தொடர்ந்து நடத்திச் செல்வதைக் காட்டிலும் இங்கு புரட்சியைத் தொடர்ந்து நடத்திச் செல்வது நமக்கு மேலும் கடினமாக இருக்கும். இப்புறச் சூழ்நிலை, வரலாற்றில் ஒரு அசாதாரணமான முறையில் கூர்மையானதும் கடினமானதுமான திருப்பு முனையை நாம் சந்திக்குமாறு செய்திருக்கிறது. (லெ.தொ.நூ. 27. 93)

எனவே, ரசியப் புரட்சி முழுவதையும் பார்த்த லெனின் கீழ்க்கண்ட முடிவுக்கு வந்தார்:

நமது புரட்சியை நாம் அசாதாரணமான கடினநிலைமைகளில் தொடங்கினோம். இந்நிலைமைகளை உலகில் உள்ள வேறெந்த உழைப்பாளர் புரட்சியும் ஒருபோதும் எதிர்கொள்ள வேண்டி இராது. (லெ.தொ.நூ. 28. 137).

## 2. சோசலிசம் கட்டுதல்

உள்நாட்டுப் போரின் இறுதியில் நாட்டின் பொருளாதார வாழ்வு அநேகமாக நிலைகுலைந்து போயிருந்தது. தொழிலாளர் - உழவர் நேச அணி கடும் நெருக்கடிக்கு ஆளானது. இந்நிலைமையில் இருந்து மீள்வதற்கு லெனினின் புதிய பொருளாதாரக் கொள்கை மட்டுமே உதவி புரிந்தது. புதிய பொருளாதாரக் கொள்கையின் மூலம், சிறு தொழில், வேளாண்மை ஆகியவற்றில் தனியார் வர்த்தகத்தை அனுமதித்தல் என்ற அடிப்படையில் உற்பத்தி உயிர்ப்பிக்கப்பட்டது. இந்த பொருளாதார மீட்சிக் காலகட்டத்துக்குப் பிறகு சோசலிசம் கட்டுவதற்கான போராட்டம் தொடங்கியது.

தொழில்மயமாக்குதலுக்கு மூலதனம் தேவை. மூலதனத்துக்காகக் கிடைக்கிற ஒரே ஊற்றுக்கண், பாட்டாளி வர்க்கம் உழவர் வர்க்கம் ஆகியோரின் உழைப்புதான். ஸ்டாலின் கூறினார்:

முதலாளிய நாடுகளில் தொழில் மயமாக்குதல் என்பது வழக்கமாக கீழ்க்காணும் வகைகளிலேயே முதன்மையாக நிறைவேற்றப்பட்டது: மற்ற நாடுகளைக் கொள்ளையடித்தல், காலனிகளையோ அல்லது தோற்கடிக்கப்பட்ட நாடுகளையோ கொள்ளையடித்தல், வெளி நாட்டிலிருந்து கணிசமான மற்றும் ஏறக்குறைய அடிமைப்படுத்துகிற கடன்களின் உதவி பெறுதல்.

நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பிரிட்டன் தனது காலனிகளி டமிருந்தும் உலகின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் மூலதனத்தைச் சேகரித்து வந்தது என்பதையும் இவ்வழியில் அது தனது தொழில்களின் கூடுதலான முதலீடுகளைச் செய்ய முடிந்தது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். பிரிட் டன் ஏன் 'உலகின் பட்டறை' ஆகியது என்பதை இது தன்போக்கில் விளக்கிவிடுகிறது.

பிரான்சுக்கும் பிரசியாவுக்கும் இடையே நடந்த போர் முடிந்த பிறகு, பிரான்சின் மீது விதித்த நட்டஈடான 500 கோடி பிராங்குகள், ஜெர்மனி தனது தொழிலை வளர்ப்பதற் குப் பெற்ற உதவிகளில் ஒன்று என்பதும் உங்களுக்குத் தெரியும்.

முதலாளிய நாடுகளிடமிருந்து நமது நாடு ஒரு அம்சத்தில் வேறுபடுகிறது. அதாவது காலனிக் கொள்கையிலோ, பொதுவாக மற்ற நாடுகளைக் கொள்ளையடிப்பதிலோ நாம் ஈடுபடமுடியாது, ஈடுபடவும் கூடாது. எனவே அந்த வழி நமக்கு மூடப்பட்டுவிட்டது.

ஆயினும், வெளிநாட்டிலிருந்து வருகிற அடிமைப்படுத்தும் கடன்களும் நமது நாட்டுக்கு இல்லை, அதைப் பெற நமதுநாடு விரும்புவதும் இல்லை. எனவே அந்த வழிகூட நமக்கு மூடப்பட்டு விட்டது.

எஞ்சி இருப்பது எது? ஒன்றே ஒன்றுதான்; அதாவது உள்நாட்டுத் திரட்டல்களின் உதவியுடன் தொழில்களை வளர்த்தலும், நாட்டைத் தொழில்மயமாக்குதலும் தான்...

இத்திரட்டல்களுக்கான முதன்மையான ஊற்றுக் கண்கள் யாவை? நான் கூறியதைப் போல இத்தகைய ஊற்றுக்கண் கள் இரண்டு உள்ளன: முதலாவது, பாட்டாளி வர்க்கம். இது மதிப்புகளை உருவாக்குகிறது, நமது தொழில்களை மேம்படுத்துகிறது. இரண்டாவது, உழவர் வர்க்கம்.

இவ்விசயத்தில் உழவர் வர்க்கத்தின் நிலைமைகள் கீழ்வரு மாறு: அது வழக்கமான நேர்முக, மறைமுக வரிகளை அரசுக்குச் செலுத்துவது மட்டுமல்ல, முதலாவதாக, ஒப்பள வில் உயர்ந்த விலைகளை நகரங்களில் தயாரிக்கப்படும் பொருள்களுக்குக் கொடுக்கிறது. இரண்டாவதாக, விவசாய

உற்பத்திப் பொருள்களுக்குப் பெரும்பாலும் குறைந்த விலையே பெறுகிறது.

இது, உழவர் வர்க்கம் உட்பட நாடு முழுவதன் தேவையை நிறைவு செய்கிற தொழில்களை வளர்ப்பதன் பொருட்டு உழவர் வர்க்கத்தின்மேல் விதிக்கப்படும் கூடுதல் வரியாகும். (ஸ்.தொ.நூ. 11.165)

இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்த, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் உழவர் - தொழிலாளர் நேச அணியையும் பேணிப் பாதுகாக்க வேண்டும். இந்த நேச அணியில் குலாக்குகளுக்கு எதிரான போராட்டத்தில் உழவர் வர்க்க மக்கள் திரளினர் பாட்டாளி வர்க்கத்துடன் சேர்ந்திருப்பர்:

பாட்டாளி வர்க்கத்துக்கும் உழவர் வர்க்கத்துக்கும் உள்ள நேச அணி என்பது, உழவர் வர்க்கத்தில் உள்ள உழைக்கும் மக்கள் திரளினருடன் தொழிலாளி வர்க்கம் ஏற்படுத்திக் கொண்ட நேசஅணியாகும். இத்தகைய ஒரு நேசஅணி, உழவர் வர்க்கத்திலுள்ள முதலாளியச் சக்திகளுக்கு அதாவது குலாக்குகளுக்கு எதிரானபோராட்டம் ஒன்று இல்லாமல் பயன்மிக்கதாக அமையாது. நாட்டுப் புறங்களில் தொழிலாளி வர்க்கத்துக்கான பாதுகாப்பு அரணாக அமைகிற வகையில், வறிய உழவர்கள் அமைப்புக்குள் கொண்டுவர விடப்படாவிட்டால் இத்தகைய நேச அணி உறுதியானதாக இருக்கமுடியாது. அதனால்தான் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் இன்றைய நிலைமைகளில் தொழிலாளிகளுக்கும் உழவருக்குமிடையே உள்ள நேசஅணி, லெனினின் புகழ் பெற்ற முழக்கத்தின் அடிப்படையிலேயே செயல்படுத்தப் பட முடியும்: வறிய உழவர்களைச் சார்ந்து நிற்றல், நடுத்தர உழவர்களுடன் ஒரு உறுதியான நேச அணியைக் கட்டுதல், குலாக்குகளை எதிர்த்துப் போராடுவதை ஒரு போதும் நிறுத்தி விடாமல் இருத்தல் என்பதே இந்த முழக்கம். இந்த முழக்கத்தைப் பிரயோகிப்பதன் மூலமே, சோசலிசம் கட்டும் பாதையில் உழவர் வர்க்கத்தின் முதன்மையான மக்கள் திரளைக் கவர்ந்திழுக்க முடியும். (ஸ்.தொ.நூ. 11. 101, ஒப்: லெ.தொ.நூ. 29. 117)

ஸ்டாலினின் தலைமையின் கீழ் இப் பணிகள் சாதிக்கப்பட்டன. போராலும் உள்நாட்டு யுத்தத்தாலும் அழிவுக்குள்ளான, பகைவர்களால் சூழப்பட்ட ஒரு பிற்பட்ட நாட்டில் ஒரு சோசலிச

அரசு, உலகின் முதல் சோசலிச அரசு, ஒரு நவீனத் தொழிலுடனும் நவீன வேளாண்மையுடனும், பாசிச ஜெர்மனியின் ஆயுத பலத்தை எதிர் கொண்டு நின்று அதை அழித்தொழிக்கக் கூடிய வலிமை பெற்ற ஒரு நவீன இராணுவத்துடனும் உருவாக்கப்பட்டது. பாசிச ஜெர்மனியின் ஆயுத பலம், சோசலிசத்தை அழித்து விட வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் ஏகாதிபத்தியவாதிகளால் உருவாக்கப்பட்டதாகும். இக்காரணங்களுக்காகவே, வரலாற்றில் லெனினுக்குப் பக்கத்தில் ஓர் இடம் ஸ்டாலினுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது:

### 3. இடது மற்றும் வலது திசை விலகல்கள்

புறச் சூழலில் உள்ளார்ந்த இன்னல்கள் ஒருபுறம் இருக்க, புரட்சியின் அகச் சக்திகளில் ஒற்றுமை இல்லாத காரணத்தால் தோன்றிய சிக்கல்களும் இருந்தன. பல ஆண்டுகள் தலைமை வெளிப்படையாகப் பிளவுபட்டிருந்தது. லெனினாலும் பிறகு ஸ்டாலினாலும் தலைமை தாங்கப்பட்ட லெனினியவாதிகள், ட்ராட்ஸ்கி, புகாரின் மற்றும் பலரால் தலைமை தாங்கப்பட்ட பல்வேறு குழுக்களால் எதிர்க்கப்பட்டார்கள். இக்குழுவினருக்கு இடையிலேயே அடிக்கடி பிளவுகள் நிகழ்ந்தன; ஆனால் லெனினையும் ஸ்டாலினையும் எதிர்ப்பதில் இவர்கள் ஒன்றாகவே இருந்தார்கள். இரு முதன்மையான எதிர்ப்பு வழிகள் தோன்றின. ஒன்று ட்ராட்ஸ்கியால் தலைமை தாங்கப்பட்டது. மேற்கு நாடுகளில் ஒரு புரட்சி வராவிட்டால், சோவியத் குடியரசு வீழ்ச்சியடைந்தே தீரும் என்று கூறினார் இவர். மற்றொரு வழிக்குத் தலைமை தாங்கியவர் புகாரின். அவர், குலாக்குகள் மீது நிர்ப்பந்தம் செலுத்தக் கூடாது, மாறாக 'சோசலிசத்துக்குள் சமாதானமாக வளர்ச்சி அடைய' அவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும் என்று கூறினார். முதல் அத்தியாயத்தில் விவாதிக்கப் பட்ட 'இடது', வலது திசை விலகல்களுக்கு இவ்வழிகள் உதாரணங்களாக உள்ளன.

1905 ஆம் ஆண்டில் 'இடையறாத புரட்சி' என்ற தன் தத்துவத்தை லெனின் வகுத்தபோது, அதற்கெதிராக 'நிரந்தரப் புரட்சி' என்ற தனது சொந்தத் தத்துவத்தை முன்வைத்தார் ட்ராட்ஸ்கி. இந்த 'நிரந்தரப் புரட்சி' என்பது மார்க்சிடமிருந்து கடன் வாங்கப்பட்ட சொல் ஆகும். ட்ராட்ஸ்கியின் தத்துவம் கூறியது: 'ஜாரைத் தூக்கியெறிந்துள்ள பாட்டாளி வர்க்கம், உழவர் வர்க்கத்தின் மக்கள் திரளினருடன் மோதலை

எதிர்கொள்ள வேண்டிவரும், மேற்கு நாட்டுப் பாட்டாளி வர்க்கத்தின் அரசு ஆதரவு இல்லாமல், அதாவது மேற்கில் ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சி ஏற்படாமல் ரசியப் பாட்டாளி வர்க்கம் தன்னை அதிகாரத்தில் வைத்துப் பராமரித்துக் கொள்ள இயலாது.' இக்கோட்பாட்டுக்கு இணங்க, ப்ரெஸ்ட் - லிடோவ்ஸ்க் என்ற இடத்தில் நடந்த சமாதானப் பேச்சு வார்த்தைகளில் உடன்பாடு காண மறுத்தார் ட்ராட்ஸ்கி. அதற்கு அவர் கூறிய காரணம், ஜெர்மானிய ஏகாதிபத்தியவாதிகளுடன் சமாதான ஒப்பந்தம் கொள்வது, ஜெர்மனியில் வரப் போகிற புரட்சியைக் காட்டிக் கொடுப்பதாகும் என்பதாகும். இதை ஒரு 'விந்தையான, வக்கரித்துப் போன முடிவு' என்று லெனின் வர்ணித்தார் (லெ.தொ.நூ. 27. 68). இந்த முடிவை மாற்றுவதில் அவர் வெற்றி பெறாமல் இருந்திருந்தால், ஐயத்துக்கிடமின்றி சோவியத் குடியரசு வீழ்ந்திருக்கும்.

ரசியாவில் புரட்சி தோல்வியடையலாம் என்பதை லெனின் அங்கீகரித்தார் என்பது உண்மைதான்; ஆனால், அது தோல்வி அடைந்தாலும் கூட, உலகப் புரட்சியில் ஏற்படும் ஒரு வளர்ச்சியை அது குறிக்கவே செய்யும் என்றும், முற்றிலும் வெற்றிகரமாக இல்லாத இத்தகைய அடுத்தடுத்த முயற்சிகளின் மூலமாகவே உலக சோசலிசத்தின் அறுதிவெற்றி உறுதி செய்யப்படும் என்றும் லெனின் வலியுறுத்தினார்:

> ரசியாவில் பழைய நிலை திரும்பி வருவதற்கு எதிரான ஒரே உத்திரவாதம், மேற்கு நாட்டில் ஏற்படுகிற ஒரு சோசலிசப் புரட்சிதான். ஆனால் இதை நினைத்த மாத்திரத்தில் வரவழைக்கக் கூடிய ஒரு நிலையில் நாம் இல்லை. ஆனால் ஒரு சார்பு நிலையான, நிபந்தனைக்கு உட்பட்ட 'உத்திரவாதம்' ஒன்று உண்டு. ரசியாவில் கூடுமான வரை மிகமிக விரிவான விளைவுகள் ஏற்படுத்துகிற, முரணற்ற, உறுதியான முறையில் புரட்சியை நிறைவேற்றுவதில்தான், பழைய நிலை திரும்பி வருவதற்கு எதிராகக் கூடுமான வரையில் மிகவும் சாத்தியமான தடைகளை எழுப்புவது பொதிந்துள்ளது. எவ்வளவுக் கெவ்வளவு புரட்சியானது விரிவான விளைவுகளை ஏற்படுத்துவதாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு பழைய அமைப்பைத் திரும்பக் கொண்டு வருவது கடினமானதாக அமையும். பழைய அமைப்பு மீட்கப்பட்டாலும் மேலுமதிக ஆதாயங்கள் எஞ்சி நிற்கும். (லெ.தொ.நூ. 13.327)

*நமது பொருளாதாரச் 'சக்திகளுக்'கும் நமது அரசியல் வலிமைக்கும் இடையில் ஒரு வேறுபாடு இருப்பதால், நாம அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி இருக்கக் கூடாது என்று அறிவிப்பது ஒரு அபாயகரமான தவறாகும். இத்தகைய ஒரு வாதத்தை 'கழுத்தில் மஃப்ளர் சுற்றிய மனிதன்'[1] ஒருவனாலேயே முன் வைக்க முடியும். அவன் கீழ்க்கண்டவற்றை மறந்து விடுகிறான்: இத்தகையதொரு வேறுபாடு எப்போதும் இருந்துவரும்; இயற்கையிலும் சமுதாயத்திலும் அது ஒரு சேர எப்போதும் இருந்து வருகிறது. அடுத்தடுத்த முயற்சிகளின் மூலமே அனைத்து நாட்டுப் பாட்டாளிகளின் புரட்சிகர ஒத்துழைப்புடன் முழுமையான சோசலிசம் உருவாக்கப்படும். இந்த முயற்சிகள் ஒவ்வொன்றும், தனித்தனியாக எடுத்துக் கொண்டால், ஒரு தலைச் சார்பானதாக, சில முரண்பாடுகளைக் கொண்டதாகவே இருக்கும். (லெ.தொ.நூ. 32. 339)*

'நிரந்தரப் புரட்சி' என்ற ட்ராட்ஸ்கியின் கோட்பாட்டுக்கும், மார்க்சின் கோட்பாட்டுக்கும் பெயர் ஒற்றுமையைத் தவிர வேறு பொது அம்சம் இல்லை என்பதும், 'ஒரே சமயத்தில் நிகழும் தன்மை என்பது மட்டுமே இரண்டுக்கும் உள்ள பொதுவான அம்சம் என்பதும் இது தவறானது என்பது நடைமுறையில் மெய்ப்பிக்கப்பட்டு விட்டது என்பதும் நாம் காணப்போகிற விசயங்கள். புரட்சியின் இரு கட்டங்களை வேறுபடுத்திப் பார்க்க ட்ராட்ஸ்கி தவறினார். அவர் உழவர் வர்க்கத்துக்குப் புரட்சிகரப் பங்கு இருப்பதை மறுத்தார். இது மென்சவிய நிலைப்பாடு. 1905-க்குப் பிறகு உழவர் வர்க்கத்தில் ஏற்பட்ட பாகுபாடு, அவர்களை மேலும் புரட்சிகரமாக்கியதே அன்றி புரட்சித் தன்மை குறைந்தவர்களாக்கவில்லை என்பதை மென்சவிக்குகளைப் போலவே ட்ராட்ஸ்கியும் பார்க்கத் தவறினார். உழவர் திரளினர் நகர்ப்புறப் பாட்டாளி வர்க்கத்திடம் மேலும் நெருக்கமாக ஈர்க்கப்பட்டுக் கொண்டிருந்தனர். அதே வேளையில் ஜாரிசத்துக்கெதிரான போராட்டம் கடுமையாகிக் கொண்டிருந்தது. இப்போராட்டத்தில் உழவர் வர்க்கம் முழுவதும் ஈடுபடுத்தப்பட்டது:

*'நமது சொல்' என்ற பத்திரிகையில் ட்ராட்ஸ்கி எழுதிய கட்டுரையில் இக்கடமையை அவர் தவறாக எதிர்த்துப் போராடுகிறார். அவர் தனது 1905 ஆம் ஆண்டு 'மூலத் தத்துவத்தை' திரும்பச் சொல்கிறார். பத்தாண்டுகளில்*

வாழ்க்கை அவரது இந்த அற்புதமான தத்துவத்தைக் கடந்து சென்று கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன என்பதைக் கொஞ்சமும் சிந்தித்துப் பார்க்க அவர் மறுக்கிறார்.

ட்ராட்ஸ்கியின் மூலத்தத்துவம், தீர்மானகரமான பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான அறைகூவலை போல்சவிக்குகளிடம் இருந்தும், உழவர் வர்க்கத்தின் பங்கை 'மறுதலிப்பதை' மென்சவிக்குகளிடம் இருந்தும் கடன் வாங்கியுள்ளது...

பத்தாண்டுகள் — 1905 இலிருந்து 1915 வரையான மகத்தான பத்தாண்டுகள் — ரசியப் புரட்சியில் இரண்டு, இரண்டே இரண்டு வழிகளே இருப்பதை எடுத்துக்காட்டியுள்ளன. உழவர் வர்க்கத்தின் பாகுபாடு, அவர்களுக்குள்ளேயே உள்ள வர்க்கப் போராட்டத்தை அதிகரித்துள்ளது; இதுவரை அரசியல் ரீதியாக உறங்கிக் கொண்டிருந்த பல சக்திகளை அது தட்டி எழுப்பியுள்ளது. கிராமப்புறப் பாட்டாளி வர்க்கத்தை நகர்ப்புறப் பாட்டாளி வர்க்கத்திடம் மேலும் நெருக்கமாக இழுத்து வந்துள்ளது... ஆயினும் ஒருபுறம் உழவர் வர்க்கத்துக்கும் மறுபுறம் மார்க்கோவ்கள், ரோமனோவ்கள், குவாஸ்டோவ்கள் ஆகியோருக்கும் இடையே உள்ள பகை மேலும் வலுவுள்ளதாகவும் மேலும் கடுமையானதாகவும் மாறியுள்ளது. இத்தகையதொரு வெளிப்படையான உண்மையை ட்ராட்ஸ்கியின் டஜன் கணக்கான பாரிஸ் கட்டுரைகளில் உள்ள ஆயிரக்கணக்கான சொற்றொடர்களால் கூட 'மறுக்க' முடியாது. ரசியாவில் உள்ள மிதாவத - தொழிலாளர் கட்சி அரசியல்வாதிகளுக்கு உண்மையில் ட்ராட்ஸ்கி உதவி புரிகிறார். இவர்கள் உழவர் வர்க்கத்தின் பாத்திரத்தை 'மறுதலிப்பதன்' மூலம் புரட்சிக்காக உழவர்களைத் தட்டியெழுப்புவதையே மறுக்கிறார்கள். (லெ.தொ.நூ. 21. 419-20)

ட்ராட்ஸ்கியின் தத்துவ, அரசியல் வழி பற்றிய லெனினின் கருத்தை கீழ்க்காணும் விமர்சனங்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம்:

ட்ராட்ஸ்கி போல்சவியத்தைச் சிதைக்கிறார்; ஏனெனில் ரசிய முதலாளி வர்க்கப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தின் பாத்திரம் பற்றிய திட்டவட்டமான கண்ணோட்டங்கள் எதையும் உருவாக்குவதற்கான ஆற்றல் அவரிடம் ஒருபோதும் இருந்ததில்லை. (லெ.தொ.நூ. 16. 380)

'சிறுகுழு மனப்பான்மையின் மிக மோசமான எச்சங்களின்' பிரதிநிதி ட்ராட்ஸ்கி என்று நாம் அழைத்தது சரியே என்பதை உண்மை மெய்ப்பிக்கின்றது...

'சிறுகுழு மனப்பான்மை - இன்மை' என்ற திரையின் பின், வெளிநாட்டில் உள்ள ஒரு குழுவின் நலன்களுக்கு ட்ராட்ஸ்கி பரிந்து செயலாற்றுகிறார். குறிப்பாக, இக் குழுவுக்குத் திட்டவட்டமான கோட்பாடுகளோ ரசியாவில் உள்ள உழைக்கும் வர்க்க இயக்கத்தில் எந்த ஒரு அடிப்ப டையுமோ இல்லை. மின்னுவதெல்லாம் பொன் அல்ல. ட்ராட்ஸ்கியின் சொற்றொடர்களில் பளபளப்பும் ஆரவார மும் நிறைய உள்ளன. ஆனால் அவை பொருளற்றவை. *(லெ.தொ.நூ. 20.332)*

மார்க்சியத்தின் முக்கியப் பிரச்சினை எதிலும் ட்ராட்ஸ்கி ஒரு போதும் ஒரு உறுதியான கருத்தைக் கொண்டிருந்த தில்லை. எந்தக் கருத்து வேறுபாட்டிலும் உள்ள விரிசல்க ளில் நுழைந்து கொள்ள எப்போதும் அவர் கடும் முயற்சி செய்கிறார்; ஒரு சாராரைக் கைவிட்டு இன்னொரு சாராரு டன் சேர்ந்து கொள்கிறார். *(லெ.தொ.நூ. 20. 447)*

1917-ஆம் ஆண்டு பிப்ரவரி 19 ஆம் நாளிட்ட கடிதத்தில் லெனின் எழுதினார்:

ட்ராட்ஸ்கி வந்து சேர்ந்தார்; வந்து சேர்ந்த உடனேயே இந்த அயோக்கியர் இடது ஸிம்மர்வால்டினருக்கு[2] எதிராக 'நோவிமிர்' பத்திரிகையில் இருந்த வலதுசாரியுடன் கோஷ்டி சேர்ந்து கொண்டார்!! இதுதான் ட்ராட்ஸ்கி!! பார்த்துக் கொள்ளுங்கள்!! அவர் தனது சுயரூபத்தை எப்போ தும் வெளிப்படுத்துகிறார் — திரிபுகள், மோசடிகள், இடது சாரியாக வேடம் போடுவது, வலது சாரிகளுக்கு உதவுவது, தன்னால் இயன்ற வரை இதைச் செய்வது... *(லெ.தொ.நூ. 35. 288, ஒப்: 285)*

1920 ஆம் ஆண்டு இறுதியல் ட்ராட்ஸ்கி ஒரு சிறு பிரசுரம் கொண்டு வந்தார். இதில் அவர் தொழிற்சங்க ஜனநாயகம் பற்றிய கட்சியின் வழியைத் தாக்கினார். லெனின் அதைக் கீழ்க்கண்ட வாறு விமர்சித்தார்:

எனது விமர்சனத்துக்குரிய முதன்மையான விசயம் தோழர் ட்ராட்ஸ்கியின் சிறு பிரசுரமான 'தொழிற்சங்கங்களின் பாத்திரமும் கடமைகளும்' என்பதாகும். மத்தியக் குழுவுக்

குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுரைகளுடன் இப்பிரசுரத்தை ஒப்பிடும்போது, அதை மிக எச்சரிக்கையாகப் படிக்கும் போது, அது கொண்டுள்ள ஏராளமான தத்துவத் தவறுகளையும் வெளிப்படையான குழப்படிகளையும் கண்டு பெரிதும் வியப்படைகிறேன்...

*பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் சாரத்தைப் பாதிக்கக்கூடிய ஏராளமான தவறுகளை அவர் செய்துள்ளார் என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன். (லெ.தொ.நூ. 32. 19-22, ஒப்: 36, 565)*

*1930* இல் 'இடது' மற்றும் வலது திசை விலகல்கள் இரண்டுக்கும் எதிராக லெனினிய வழிக்காகப் போராடும் போது ஸ்டாலின், ட்ராட்ஸ்கியம் பற்றிக் கீழ்க்கண்ட பகுப்பாய்வை வழங்கினார்:

ட்ராட்ஸ்கியத்தின் சாரம் என்ன? ட்ராட்ஸ்கியத்தின் சாரம் என்பது, முதலாவதாக, நமது நாட்டின் தொழிலாளி வர்க்கம், உழவர் வர்க்கம் ஆகியவற்றின் முயற்சிகளைக் கொண்டு சோவியத் யூனியனின் சோசலிசத்தை முழுமையாகக் கட்டுகின்ற சாத்தியப்பாட்டை மறுப்பதாகும். இதன் பொருள் என்ன? இதன் பொருள், ஒரு வெற்றிகரமான உலகப் புரட்சியானது நம் உதவிக்கு கூடிய விரைவில் வராவிட்டால், நாம் முதலாளி வர்க்கத்திடம் சரணடைந்து, ஒரு முதலாளிய ஜனநாயகக் குடியரசுக்கு வழிகோல வேண்டியிருக்கும் என்பதாகும். இதன் விளைவாக, நம் நாட்டில் சோசலிசத்தை முழுமையாகக் கட்டுகின்ற சாத்தியப் பாட்டைப் பற்றிய ஒரு முதலாளிய மறுதலிப்பை நாம் காண்கிறோம். இந்த மறுதலிப்பு உலகப் புரட்சியின் வெற்றி பற்றிய 'புரட்சிகரச்' சொற்றொடர்களால் மூடி மறைக்கப்பட்டுள்ளது...

ட்ராட்ஸ்கியத்தின் சாரம், இரண்டாவதாக, நாட்டுப்புறத்தில் சோசலிசம் கட்டும் பணியில் உழவர் வர்க்கத்தினரின் முதன்மையான திரளினரை இழுக்கும் சாத்தியப் பாட்டை மறுப்பதாகும். இதன் பொருள் என்ன? தனிப்பட்ட உழவர்களின் பண்ணைகளைக் கூட்டுறவு மார்க்கங்களில் மாற்றுகிற பணியில் உழவர் வர்க்கத்தை வழி நடத்திச் செல்லும் ஆற்றல் பாட்டாளி வர்க்கத்துக்கு இல்லை என்பதாகும். அதாவது, உலகப் புரட்சியின் வெற்றி பாட்டாளி வர்க்கத்

தின் உதவிக்கு கூடிய விரைவில் வராவிட்டால், உழவர் வர்க்கம் பழைய முதலாளிய அமைப்பை மீட்டுவிடும் என்பதாகும்...

ட்ராட்ஸ்கியத்தின் சாரம், கடைசியாக,' கட்சியில் உருக்குப் போன்ற கட்டுப்பாடு இருக்க வேண்டியதன் தேவையை மறுப்பதாகும்; கட்சியில் சிறு குழுக்களுக்கான சுதந்திரத்தை அங்கீகரிப்பதாகும்; ஒரு ட்ராட்ஸ்கியக் கட்சியை உருவாக்கு வதன் தேவையை அங்கீகரிப்பதாகும். ட்ராட்ஸ்கியத்தைப் பொறுத்தவரை, 'சோவியத் யூனியனின் பொதுவுடைமைக் கட்சி (போல்சவிக்) ஒரு தனி, ஐக்கியப்பட்ட, போர்க்குண மிக்க கட்சியாக இருக்கக்கூடாது; மாறாக குழுக்கள், சிறு குழுக்கள் ஆகியவற்றின் சேர்க்கையாக இருக்கவேண்டும். இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி மையம், தனித்தனிக் கட்டுப்பாடு, தனித்தனிப் பத்திரிகைகள் இன்னபிற இருக்க வேண்டும். இதன் பொருள் என்ன? இதன் பொருள், கட்சிக்குள் இருக்கிற அரசியல் சிறு குழுக்களுக்கு சுதந்திரம் உண்டு என்று அறிவித்துவிட வேண்டும் என்பதாகும்; இதன் பொருள், கட்சிக்குள் இருக்கிற அரசியல் சிறு குழுக்களுக்கான சுதந்திரத்துடன் நாட்டில் அரசியல் கட்சிக ளுக்கான சுதந்திரம் இருக்க வேண்டும், அதாவது முதலா ளிய ஜனநாயகம் இருக்க வேண்டும் என்பதாகும்...

நடைமுறையில், சரணடைதல் என்பதுதான் இதன் உள்ள டக்கம். 'இடது' சொற்றொடர்கள், புரட்சிகரத் துணிச்சல்வா தப் பாவனைகள் ஆகியவைதான் வடிவம். தோல்வி மனப் பான்மை உள்ளடக்கத்தை மூடி மறைத்து அதற்கு விளம்ப ரம் செய்யும் வடிவம் — இதுதான் ட்ராட்ஸ்கியத்தின் சாரம்.

ட்ராட்ஸ்கியத்தின் இந்த இரட்டைத் தன்மை, நகர்ப்புறச் சிறு முதலாளி வர்க்கத்தின் நிலையிலுள்ள இரட்டைத் தன்மையைப் பிரதிபலிக்கிறது. இச்சிறு முதலாளி வர்க்கம் நாசமடைந்து வருகிறது; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் 'ஆட்சி'யை இதனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. தனது அழிவைத் தவிர்த்துக் கொள்வதற்காக, 'ஒரே தாண் டில்' சோசலிசத்துக்குள் குதித்துவிடவோ (இதனால்தான் கொள்கையில் துணிச்சல்வாதமும் வெறியுணர்வும் தோன்று கின்றன), அல்லது அது சாத்தியப்படவில்லை என்றால் சிந்தனைக்குப் படுகிற ஒவ்வொரு சலுகையையும் முதலாளி யத்துக்கு வழங்கவோ (இதனால்தான் சரணாகதிக் கொள்கை

உருவாகிறது) இவ்வர்க்கம் கடும் முயற்சி செய்கிறது. (ஸ்.தொ.நூ. 12. 364)

இதே பேரவையில் புகாரின், ரைகோவ், டாம்ஸ்கி ஆகியோரால் தலைமை தாங்கப்பட்ட வலது திசை விலகலை ஸ்டாலின் பகுத்தாய்ந்தார்:

சோவியத் யூனியனில் சோசலிசத்தை முழுமையாகக் கட்டி முடிப்பதற்கான சாத்தியப்பாட்டை வலது திசை விலகலாளர்கள் ஒப்புக் கொள்வதில்லை என்று சொல்ல முடியாது. இல்லை, அவர்கள் இதை ஒப்புக் கொள்கிறார்கள். இதுவே அவர்களை ட்ராட்ஸ்கியவாதிகளிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. ஆனால் வலது திசை விலகலாளரின் துரதிருஷ்டம் என்னவென்றால், ஒரு நாட்டில் சோசலிசத்தைக் கட்டுவது சாத்தியம் என பெயரளவில் அவர்கள் ஒப்புக் கொள்கிற நேரத்தில், எந்தப் போராட்ட வழிமுறைகள் இல்லாமல் சோசலிசத்தைக் கட்டுவது சாத்தியம் இல்லையோ அவற்றை அங்கீகரிக்க மறுக்கிறார்கள்... சோசலிசம் அமைதியாக, தானாகவே, வர்க்கப் போராட்டம் இல்லாமலேயே, முதலாளியச் சக்திகளுக்கு எதிரான ஒரு தாக்குதல் இல்லாமலேயே கட்டப்பட முடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆயினும், இத்தகைய அதிசயங்கள் வரலாற்றில் நிகழ்வதில்லை என்பதால், உண்மையில், வலது திசை விலகலாளர்கள் நம்நாட்டில் சோசலிசத்தை முழுமையாகக் கட்டுவதற்கான சாத்தியப்பாட்டை மறுக்கும் கண்ணோட்டத்துக்குச் சரிந்து விழுகிறார்கள்.

நாட்டுப்புறத்தில் சோசலிசம் கட்டும் பணியில் உழவர் வர்க்கத்தின் முதன்மையான திரளினரை இழுத்துக் கொள்வது சாத்தியம் என்பதை வலது திசை விலகலாளர்கள் மறுக்கிறார்கள் என்றும் சொல்ல முடியாது. இல்லை, அது சாத்தியம் என்பதை அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். இது அவர்களை ட்ராட்ஸ்கியவாதிகளிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. ஆனால் இதைப் பெயரளவுக்கு ஒப்புக் கொள்ளும் அதே நேரத்தில், எந்தப் போராட்ட வழிமுறைகள் இல்லாமல் சோசலிசத்தைக் கட்டுவதில் உழவர் வர்க்கத்தை ஈர்த்துக் கொள்வது சாத்தியம் இல்லையோ அவற்றை அவர்கள் ஒப்புக் கொள்வதில்லை... இப்போதுள்ள முக்கியமான விசயம் ஒரு உயர்விகிதத் தொழில் வளர்ச்சி அல்ல, கூட்டுப் பண்ணைகளோ அரசுப் பண்ணை

*களோ அல்ல; சந்தையின் ஆதாரச் சக்திகளை 'விடுவித்தல்', சந்தைக்குச் 'சுதந்திரம் வழங்குதல்', நாட்டுப்புறத்தில் உள்ள முதலாளிகள் உட்பட தனிப்பட்டவர்களின் பண்ணைகள் மீதுள்ள தளைகளை அகற்றுதல்தான் முக்கியமான விசயம் என்கிறார்கள். ஆயினும் குலாக்குகள் சோசலிசத்துக்கு வளர்ந்து செல்ல மாட்டார்கள். ஆதலால், சந்தையை 'விடுதலை செய்வது' என்பது, குலாக்குகளை ஆயுதபாணிக ளாக்குவதும் உழைக்கும் மக்களை நிராயுதபாணிகள் ஆக்கு வதும்தான் என்பதால், சோசலிசம் கட்டும் பணியில் உழவர் வர்க்கத்தின் முதன்மைத் திரளை ஈர்த்துக் கொள்வது சாத்தி யம் என்பதை மறுக்கும் கண்ணோட்டத்துக்கு வலது திசைவிலகலாளர்கள் உண்மையில் சரிந்து விழுகிறார்கள்... இன்னொரு கட்சியை அமைத்தல் என்ற நிலைப்பாட்டை வலது திசைவிலகலாளர்கள் எடுப்பதில்லை. இவர்களை ட்ராட்ஸ்கியவாதிகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் மற் றொரு விசயம் இதுதான். வலது திசைவிலகாளர்களின் தலைவர்கள் தமது தவறுகளை வெளிப்படையாக ஒப்புக் கொண்டு கட்சியிடம் சரணடைந்து விட்டனர். ஆனால் இக்காரணங்களால் வலது சந்தர்ப்பவாதம் ஏற்கனவே புதைக்கப்பட்டு விட்டது என்று நினைப்பது மடத்தனமா கும். இச் சூழ்நிலையைக் கொண்டு வலது திசைவிலகலின் வலிமை அளவிடப்படுவதில்லை. வலது சந்தர்ப்பவாதத் தின் வலிமை, சிறு முதலாளிய வர்க்கத்தின் ஆதாரச் சக்திகளின் வலிமையிலும், கட்சி மீது பொதுவாக முதலாளி யச் சக்திகளும் குறிப்பாக குலாக்குகளும் செலுத்தும் நிர்ப்பந்தத்தின் வலிமையிலும் பொதிந்துள்ளது...*

*கட்சியில் நிலவுகிற 'இடது' மற்றும் வலது திசைவிலகல் கள் பற்றிய விசயம் இதுதான்.*

*இரண்டு முனைகளில் சிறுமுதலாளியத் தீவிரவாதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 'இடதுசாரிகளு'க்கு எதிராகவும் சிறுமுதலாளிய மிதவாதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வலதுசாரிகளுக்கு எதிராகவும் சமரசமற்ற போராட்டத்தை நடத்துவதே கடமையாகும். (ஸ்.தொ.நூ. 12. 364 - 72)*

இனி நாம் இங்கு கீழ்க்காணும் தகவல்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். தமது தவறுகளை ஒப்புக் கொள்வதாகக் கூறிய வலதுசாரிகள் மோசடிக் குற்றத்துக்கு ஆளானார்கள்; இது

இரண்டு குழுக்களும் எதிர்ப் புரட்சிக்காகச் செயல்பட்டன என்று மாஸ்கோ விசாரணையின் போது பின்பு எடுத்துக் காட்டப்பட்டது.

**4. புதிய முதலாளி வர்க்கம்**

பாட்டாளி வர்க்கப் புரட்சி சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது, வர்க்கப் பேராட்டத்துக்கு அல்ல. வேளாண்மையில் கூட்டுடைமையாக்கல் ஏற்பட்டபிறகும் கூட, கூட்டுறவுகளின் உடைமையில் உள்ள கூட்டுப் பண்ணைகளுக்கும், அரசுக்குச் சொந்தமான அரசுப் பண்ணைகளுக்கும் இடையே பொருளாதார அடித்தளத்தில் ஒரு முரண்பாடு எஞ்சி நிற்கிறது. கூட்டுப் பண்ணைகளுக்கு உள்ளேயே ஒவ்வொரு குடும்பத்துக்கும் சொந்த நிலம் உண்டு. அது உற்பத்தி செய்கிற பொருட்களை பகிரங்கச் சந்தையில் விற்பதற்கான உரிமை உண்டு. இவ்வாறு, உழவர் வர்க்கம் இன்னும் சிறு சரக்கு உற்பத்தியுடன் பிணைக்கப் பட்டுள்ளது. இதேபோலத்தான் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளிகளும். பாட்டாளி வர்க்கம் உழவர் வர்க்கத்தைக் காட்டிலும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவிக்கிறது. இது நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையில் உள்ள பிளவுக்குப் பொருத்தமாக அமையும் வேறுபாடாகும். இந்தப் பிளவு, முதலாளியச் சமுதாயத்தில் இருந்து சுவீகரிக்கப்பட்டதாகும். தொழில் துறையிலேயே உழைப்பின் கூட்டுத் தன்மைக்கும் ஊதியத்தின் தனியாள் தன்மைக்கும் இடையில் ஒரு முரண்பாடு உள்ளது. முதலாளிகள், நில உடைமையாளர்கள், குலாக்குகள் ஆகியோரின் உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. ஆனால் அவர்கள் இன்னும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் கள்; அவர்களில் பலர் அரசாங்கப் பணிகளிலும் பொதுப் பணிகளிலும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

லெனின் திரும்பத் திரும்ப எச்சரித்தார்: வெளிநாட்டுத் தலையீடு ஒருபுறம் இருக்க சோவியத் அமைப்புக்குள்ளேயே ஒரு முதலாளிய மீட்புக்குள்ள சாத்தியப்பாட்டுக்கான நிலைமை கள் இன்னும் இருக்கின்றன:

> முதலாளியத்திலிருந்து பொதுவுடைமைக்கான மாறுதல் என்பது ஒரு வரலாற்றுச் சகாப்தம் முழுவதையும் எடுத்துக் கொள்கிறது. இந்தச் சகாப்தம் முடியும் வரை, பழைய நிலையைத் திரும்பக் கொணரும் நம்பிக்கையைச் சுரண்டுப வர்கள் தவிர்க்க இயலாதபடி பேணி வருவர். இந்த

நம்பிக்கை, *பழைய நிலையை மீட்பதற்கான முயற்சிகளாக மாறுகிறது. (லெ.தொ.நூ. 28. 254)*

முதலாளிகள் உருவாகி வருகிறார்கள். சோவியத் அரசாங்க ஊழியர்களிடையே இருந்து மட்டுமல்ல — இவர்களது அணிகளிலிருந்து ஒருசிலரே வரமுடியும் — உழவர்கள், கைவினைஞர்கள் ஆகியோரது அணிகளிடமிருந்தும் முதலாளிகள் உருவாகி வருகிறார்கள்... ரசியாவிலும் கூட முதலாளியச் சரக்கு உற்பத்தி உயிரோடு இருக்கிறது, செயல்படுகிறது, வளர்ச்சியடைகிறது, ஒவ்வொரு முதலாளியச் சமுதாயத்திலும் தோற்றுவிப்பது போல இங்கும் ஒரு முதலாளி வர்க்கத்தைத் தோற்றுவிக்கிறது என்பதை இது காட்டுகிறது. *(லெ.தொ.நூ. 29. 189)*

நாம் ஒரு சிறு - உழவர்கள் உள்ள நாட்டில் வாழும் வரை, பொதுவுடைமைக்கு இருப்பதைக் காட்டிலும் மேலும் ஓர் உறுதியான பொருளாதார அடிப்படை முதலாளியத்துக்கே இருந்து வரும். இதைக் கருத்தில் கொள்ள வேண்டும். நாட்டுப்புறத்தில் உள்ள வாழ்வை நகர்ப்புற வாழ்வுடன் ஒப்பிட்டு கவனத்துடன் நோக்குகிற எவரும், முதலாளியத்தின் வேர்களை நாம் பிடுங்கியெறிந்திருக்கவில்லை என்பதையும், உள்நாட்டு எதிரியின் அடிப்படையை, அடித்தளத்தை நாம் இன்னும் தகர்க்கவில்லை என்பதையும் அறிவார். உள்நாட்டு எதிரியின் அடித்தளம், சிறுஅளவு உற்பத்தியைச் சார்ந்துள்ளது. அதைத் தகர்ப்பதற்கு ஒரே ஒரு வழி தான் உள்ளது; அதாவது வேளாண்மை உள்ளிட்ட நமது பொருளாதாரத்தை ஒரு புதிய தொழில் நுணுக்க அடிப்படை மீது — நவீன பெரும் அளவு உற்பத்திக்குரிய தொழில் நுணுக்க அடிப்படை மீது — வைத்தல் என்பது தான். *(லெ.தொ.நூ. 31.516)*

லெனினின் எச்சரிக்கை ஸ்டாலினால் மீண்டும் விடுக்கப்பட்டது:

முதலாளியத்தைத் திரும்பக் கொண்டுவரும் சாத்தியப் பாட்டுக்கான நிலைமைகள் நமது சோவியத் நாட்டில் உள்ளனவா? ஆம், இங்கு உள்ளன. இது விந்தையாகத் தோன்றலாம் தோழர்களே, ஆனால் இது ஒரு உண்மை. நாம் முதலாளியத்தைத் தூக்கி எறிந்துள்ளோம்; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவியுள்ளோம்; நமது சோசலிசத்

தொழிலை விரைவாக வளர்த்து வருகிறோம்; அதனுடன் உழவர் பொருளாதாரத்தை இணைத்து வருகிறோம். ஆயினும் இன்னும் நாம் முதலாளியத்தின் வேர்களைப் பிடுங்கி எறிந்துவிடவில்லை. இந்த வேர்கள் எங்கு புதைந்து கிடக்கின்றன? அவை சரக்கு உற்பத்தியில், நகரங்களிலும் குறிப்பாக நாட்டுப்புறத்திலும் உள்ள சிறு உற்பத்தியில் புதைந்து கிடக்கின்றன. (ஸ்.தொ.நூ. 11. 235)

நாட்டைவிட்டு வெளியேறியவர்கள் மிகவும் தீவிரமாகச் செயல்பட்ட, அவர்கள் நன்கு அமைப்புக்குட்பட்டிருந்த வெளி நாடுகளில் தவிர வேறு எங்கும் இப்புதிய முதலாளி வர்க்கத்தால் பகிரங்கமாகச் செயல்பட முடியவில்லை. ஆனால் இவ்வர்க்கம் தனக்கென ஒரு சித்தாந்தத்தைக் கொண்டிருந்தது. அது ஸ்மேனா - வெகிசம் என்றழைக்கப்பட்டது. அதை ஸ்டாலின் பின்வருமாறு விளக்கினார்:

ஸ்மேனா - வெகிசம் என்பது புதிய முதலாளி வர்க்கத்தின் சித்தாந்தம். அது குலாக்குகளுடனும் அரசாங்கப் பணிகளில் உள்ள அறிவுஜீவிகளுடனும் இணைந்து சிறிது சிறிதாக வளர்ந்து வருகிறது. புதிய முதலாளி வர்க்கம், ஸ்மேனோ - வெக் சித்தாந்தம் என்ற தனது சித்தாந்தத்தை முன் வைத்துள்ளது. 'பொதுவுடைமைக் கட்சி சீரழிந்தே தீரும், புதிய முதலாளி வர்க்கம் வலுப்பட்டே தீரும், அதே வேளையில் நம்மை அறியாமலே, போல்சவிக்குகளாகிய நாம் ஜனநாயகக் குடியரசின் நுழைவாயிலை அடைந்தே தீருவோம்; பிறகு நுழைவாயிலைத் தாண்டியே தீருவோம். பிறகு இராணுவ அணிகளில் இருந்தோ அல்லது அரசாங்க அலுவலர்களில் இருந்தோ முன்வருகிற ஒரு 'சீசரின்' ஒத்துழைப்புடன், ஒரு சாதாரண முதலாளிய ஜனநாயகத்துக்கு வந்து சேர்வோம்' என்ற கண்ணோட்டத்தைக் கொண்டது இச் சித்தாந்தம். (ஸ்.தொ.நூ. 7.350)

நமது தொழில் முன்னேற்றம், நமது வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைப்புகளின் முன்னேற்றம், நமது அரசுக் கருவியில் ஏற்பட்டுள்ள மேம்பாடு ஆகியவை பாட்டாளி வர்க்கத்தின் நன்மைக்கான முன்னேற்றமும் மேம்பாடும் ஆகும்; உழவர் வர்க்கத்தின் முதன்மைத் திரளினரின் நன்மைக்கான முன்னேற்றமும் மேம்பாடும் ஆகும். ஆனால் புதிய முதலாளி வர்க்கத்துக்குப் பாதகமானதாகும்;

> பொதுவாக நடுத்தரத் தட்டினருக்கும் குறிப்பாக நகர்ப்புற நடுத்தரத் தட்டினருக்கும் பாதகமானதாகும். இந்தத் தட்டின ரிடையே சோவியத் ஆட்சி பற்றிய அதிருப்தி வளர்ந்து வருவதில் வியப்புண்டா? இந்த வட்டாரங்களில் எதிர்ப்பு ரட்சி மனோநிலை இருப்பதற்கு இதுவே காரணம். எனவே தான், புதிய முதலாளி வர்க்கத்தின் அரசியல் சந்தையில் ஒரு பகட்டுமிக்க சரக்காக ஸ்மேனா - வெகிசச் சித்தாந்தம் நிலவுகிறது. (ஸ்.தெ.நூ. 10. 325)

புதிய முதலாளி வர்க்கத்தின் கரங்களில் இருக்கும் மிகச் சக்தி வாய்ந்த ஆயுதங்களில் ஒன்று அதிகார வர்க்க அமைப்பு. இது பழைய ஆட்சியிலிருந்து சுவீகரிக்கப்பட்ட தீமைகளில் ஒன்றாகும்:

> முதலாளியத்தில், மக்களின் கூலி அடிமைத்தனம், வறுமை, துன்பம் ஆகிய நிலைமைகள் அனைத்தாலும் ஜனநாயகம் வரம்புக்குட்படுத்தப்படுகிறது, நசுக்கப்படுகிறது, குறைக் கப்படுகிறது, சிதைக்கப்படுகிறது. நமது அரசியல் அமைப் புகளிலும் தொழிற்சங்க அமைப்புகளிலும் செயல்படுபவர் கள் ஏன் முதலாளிய நிலைமைகளால் ஊழலுக்கு உள்ளாகி றார்கள் அல்லது ஊழலுக்குள்ளாகும் போக்குடையவர்க ளாய் இருக்கிறார்கள் என்பதற்கும், அதிகார வர்க்கத்தினராக அதாவது மக்களிடமிருந்து விலகி மக்களுக்கு மேலாக நிற்கும் சலுகை பெற்ற மனிதர்களாக மாறும் போக்கை வெளிப்படுத்துகிறார்கள் என்பதற்கும் இது ஒன்றே காரண மாகும். அதிகார வர்க்க அமைப்பின் சாரமே அதுதான். முதலாளிகளின் உடைமை பறிக்கப்பட்டு முதலாளி வர்க்கம் தூக்கியெறியப்படும்வரை, பாட்டாளி வர்க்கத்திலிருந்து வந்த பணியாளர்கள் கூட தவிர்க்க முடியாமல் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதிகார வர்க்கத் தன்மை உடையவர் கள் ஆக்கப்படுவார்கள். (லெ.தொ.நூ. 25. 486)

புதிய பாட்டாளி வர்க்க நிர்வாகிகளைப் பயிற்றுவிப்பது தவிர்க்க முடியாதபடி மெதுவாக நிகழ வேண்டியிருந்தது. இதற்கிடையில் பழைய அதிகாரிகள் பலரைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. இவர்களில் பலர் புதிய ஆட்சிக்கு

எதிராக உள்ளூறப் பகை கொண்டிருந்தனர். இவர்கள் அனைவருமே பழைய முறைகளையும் பழைய மதிப்பீடுகளையும் இறுகப் பற்றிக் கொண்டிருந்தனர்:

> இப்போது நம்மிடம் அரசாங்க ஊழியர்களின் பரந்த சேனை ஒன்று உள்ளது. ஆனால் அவர்கள் மீது உண்மையான கட்டுப்பாடு செலுத்துவதற்குப் போதுமான கல்வியறிவு பெற்ற சக்திகள் நம்மிடம் இல்லை. நடைமுறையில் அடிக்கடி நிகழ்வது என்னவென்றால், இங்கு நாம் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தும் மேல் மட்டத்தில் யந்திரம் எப்படியோ ஓடிக் கொண்டிருக்கிறது... ஆயினும் கீழே ஆயிரமாயிரம் பழைய அலுவலர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஜாரிடமிருந்தும் முதலாளியச் சமுதாயத்திலிருந்தும் நம்மால் எடுத்துக் கொள்ளப்பட்டவர்கள்; இவர்கள் ஓரளவுக்கு வேண்டுமென்றும் ஓரளவு அறியாமலும் நமக்கெதிராக வேலை செய்கிறார்கள். *(தெ.தொ.நூ. 33.428, ஒப்: 29. 32)*

> ... ஒவ்வோர் இடத்திலும் உள்ள அரசுப் பண்ணைகள், ஓரளவு தம்மை மறைத்துக் கொண்டுள்ள அல்லது மறைத்தே கொள்ளாத பழைய நிலவுடைமையாளர்கள் ஒளிந்து கொள்கிற இடங்களாக உள்ளன என்பதும், முக்கியமான நிர்வாக மற்றும் மத்திய வாரியங்களில் இத்தகைய விசயங்கள் அடிக்கடி காணப்படுகின்றன என்பதும் நமக்குச் சொல்லப்படும்போது, அது உண்மைதான் என்பதை நான் ஒருபோதும் சந்தேகிப்பதில்லை. *(தெ.தொ.நூ. 30.245)*

மேலும் கூர்மையான சொற்களில் ஸ்டாலின் இதே தீமை மீது கவனத்தை ஈர்த்தார்:

> நமது கட்சி, அரசாங்கம், தொழிற்சங்கம், கூட்டுறவு மற்றும் இதர அமைப்புகள் அனைத்திலும் காணப்படும் அதிகார வர்க்கத்தினரைக் குறிப்பிடுகிறேன். நமது பலவீனங்களையும் தவறுகளையும் பயன்படுத்திக் கொழுத்து வருகிற — மக்கள் திரளினரின் விமர்சனங்கள் அனைத்தையும், அவர்கள் மீது மக்கள் திரளினர் செலுத்துகிற கட்டுப்பாடு அனைத்தையும் கொள்ளை நோய்போலக் கண்டு அஞ்சுகிற

— சுய விமர்சனத்தை வளர்த்துவதிலும் நமது பலவீனங்களையும் தவறுகளையும் போக்கிக் கொள்வதிலும் நமக்கு இடையூறு விளைவிக்கிற — அதிகார வர்க்கத்தினரையே நான் குறிப்பிடுகிறேன். நமது அமைப்புகளில் உள்ள அதிகார வர்க்கத் தனத்தை வெறும் வழக்கமான சிவப்பு நாடா முறை என்று கருதிவிடக் கூடாது. அதிகார வர்க்க முறை என்பது நமது அமைப்புகளில் உள்ள முதலாளியச் செல்வாக்கின் வெளிப்பாடாகும். (ஸ்.தொ.நூ. 11, 137, ஒப்: லெனின் 32. 191)

ஆபத்து மேலும் அதிகமாக இருந்தது. ஏனெனில், ஊழியர்கள் பற்றாக்குறையாக இருந்ததன் காரணமாக, அதிகார வர்க்க நடைமுறைகள் கட்சிக்குள்ளுமே ஊடுருவிக் கொண்டிருந்தன:

சோவியத் யந்திரத்திலுள்ள சிவப்புநாடா முறை கட்சி யந்திரத்திலும் ஊடுருவும் என்பது எதிர் பார்க்கப்பட்ட ஒன்றுதான்; ஏனெனில் இரண்டும் நெருக்கமாகப் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளவையே. (தெ.தொ.நூ. 31. 435, ஒப்: 421, ஸ்.தொ.நூ. 6. 10)

முக்கிய அம்சம் என்னவென்றால், சரியான இடங்களுக்கு நம்மிடம் சரியான ஆட்கள் இல்லை; புரட்சியின் போது அற்புதமாகச் செயலாற்றிய பொறுப்புமிக்க பொதுவுடைமையாளர்களுக்கு வர்த்தக மற்றும் தொழில்துறைப் பணிகள் வழங்கப்பட்டுள்ளன. இவை பற்றி அவர்களுக்கு ஏதும் தெரியாது; உண்மையைப் பார்க்க முடியாமல் நம்மை அவர்கள் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் அயோக்கியர்களும் போக்கிரிகளும் அவர்களது முதுகுக்குப் பின் திறமையாக ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். (தெ.தொ.நூ. 33. 304)

சிறு உடைமையாளர்கள் நமது கட்சிக்குள் மேலாதிக்கம் பெறுவதற்கு, அதுவும் மிக விரைவாகப் பெறுவதற்கு எதிராக நமது கட்சிக்குள்ள பாட்டாளி வர்க்கத்தன்மை என்பது தன்னைச் சிறிதும் பாதுகாத்துக் கொள்ளாது என்று, சாதுர்யமுள்ள வெண்படையினர் அனைவரும் நிச்சயமாக நம்புகிறார்கள். (தெ.தொ.நூ. 33. 254, ஒப்: 187, 31. 115)

நமது பொருளாதார அமைப்புகளின் பணிகள் அனைத்தும் அவதியுறுவதற்கு அதிகார வர்க்க அமைப்பே மிகப் பெரும் காரணமாக உள்ளது. பொதுவுடைமையாளர்கள் அதிகார வர்க்கத்தினர் ஆகிவிட்டனர். நமது அழிவுக்கு ஏதேனும் காரணமாகப் போகிறது என்றால் அது இதுதான். (தெ.தொ.நூ. 35. 549, ஒப்: 32. 24, 56)

அதிகார வர்க்க அமைப்பு, எதிர்ப்புரட்சியாளர்களுக்கான ஒரு மூடு திரையாகச் சேவை செய்யாத நேரத்திலும் கூட அது அபாயகரமானதாகவே இருந்தது. ஏனெனில் அரசியலுக்கு மேலாக நிர்வாகத்தை வைத்ததன் மூலம், கட்சியில் இருந்து மக்கள் திரளினரை அந்நியமாக்கியது; பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்தின் அடித்தளத்துக்குக் குழி பறித்தது:

வேலையை முறையாக ஒழுங்கமைத்தல், பின்தங்கி நில் லாமை, தக்க சமயத்தில் கண்டிப்பைத் தளர்த்துதல், நிர்வா கத்தை அரசியலில் இருந்து பிரிக்காமை ஆகியவற்றைத் தெரிந்து கொள்வது நமது கடமையாகும்; ஏனெனில் நமது நிர்வாகமும் நமது அரசியலும் பாட்டாளி வர்க்கம், உழவர் வர்க்கம் ஆகியவற்றின் மக்கள் திரள் அனைத்துடனும் தொடர்பைப் பேணி வளர்ப்பதில் முன்னணிப் படை முழுவதற்குமுள்ள திறமையைச் சார்ந்துள்ளன. யாரேனும் இந்த உண்மையை மறந்து, நிர்வாகத்திலேயே முற்றாக உட்கிரகிக்கப் படுவார்களேயானால், விளைவு நாசகரமான தாக அமையும். (தெ.தொ.நூ. 33. 299)

மக்கள் என்ற கடலில் நாம் வெறும் சமுத்திரத் துளிதான். மக்களின் உணர்வில் உள்ளவற்றை நாம் சரியாக வெளியி டும் போதுதான் நம்மால் நிர்வாகம் செய்ய முடியும். இதை நாம் செய்யாவிட்டால் பொதுவுடைமைக் கட்சியால் பாட் டாளி வர்க்கத்தையும், பாட்டாளி வர்க்கத்தால் மக்கள் திரளினரையும் வழி நடத்திச் செல்ல முடியாது. யந்திரம் முழுவதும் வீழ்ந்து விடும். (தெ.தொ.நூ. 33. 304)

அதிகார வர்க்கப் பிரச்சினைபற்றிப் பரிசீலித்த லெனின், இது ஏதோ சொற்பொழிவுகளின் மூலம் தீர்க்கப்படக் கூடிய ஒரு பிரச்சினை எனக் கருதிய ட்ராட்ஸ்கி போன்றவர்களிடம் சிறிது கூடப் பொறுமை காட்டவில்லை:

அதிகார வர்க்கத் தீமைகளை வெல்வதற்கு பல பத்தாண்டு கள் பிடிக்கும். அது மிகக் கடினமான போராட்டமாகும். அதிகார வர்க்க - எதிர்ப்புச் சொற்பொழிவு மேடைகளை மேற்கொள்வதன் மூலம் ஒரேநாளில் நம்மிடமிருந்து அதி கார வர்க்க நடைமுறைகளைக் களைந்தெறிந்துவிட முடியும் என்று சொல்கிற எவனும் நேர்த்தியான சொற்களை விரும்பு கிற ஒரு அரைவேக்காடே தவிர வேறல்லன். (தெ.தொ.நூ. 32. 56, ஒப், 68, 89, 33.428, 481)

## 5. ஒரு பண்பாட்டுப் புரட்சியின் தேவை

அதிகார வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தை இவ்வளவு கடினமாக்கிய நிலைமை எது? அப்போராட்டம் ஒரே சமயத்தில் பொருளாதார அடித்தளம், சித்தாந்த மேலடுக்கு இரண்டிலும் நடத்தப்படவேண்டியிருந்தது. ஒருபுறம், இந்த அதிகார வர்க்கம் சிறிய - அளவு சரக்கு உற்பத்தியில் வேர் கொண்டிருந்ததால், பெரிய - அளவு சோசலிச உற்பத்தி என்ற அடிப்படையில் பொருளாதாரச் சீரமைப்புக்கு எதிராக இந்த அதிகார வர்க்கமே ஒரு முக்கியத் தடையாக இருந்தது; அகற்றப்படா விட்டால் ஒரு முழு நிகழ்ச்சிப் போக்கையும் தலைகீழாகத் திருப்பிவிடக் கூடிய ஒரு தடையாக இருந்தது.

இந்தப் பிரச்சினைக்கான தீர்வு மக்கள் திரளிடம் பொதிந் துள்ளது என்பதை லெனின் புரிந்து கொண்டார். உற்பத்தியை வளர்த்துவதிலும், தனிப்பட்ட ஆதாயத்துக்காக அல்லாமல் பொது நன்மைக்காக உழைக்கவும் முன் முயற்சி எடுத்துக் கொள்ள மக்கள் திரளினர் தட்டியெழுப்பப் படுவார்களேயா னால், பழைய சமுதாயத்திலிருந்து சுவீகரிக்கப்பட்ட சித்தாந்தத் தடைகளை அவர்களே வெல்வார்கள், நிர்வாக வேலையைத் தமது சொந்தக் கரங்களில் எடுத்துக் கொள்ளவேண்டிய தேவையை அவர்களே அங்கீகரிப்பார்கள்.

உற்பத்தியைப் பொறுத்தவரை, மக்கள் திரளினர் சப்போட் னிக்குகளில்[3] தமது முன்முயற்சியை ஏற்கனவே மெய்ப்பித்திருந் தனர். உள்நாட்டுப் போரின்போது கோல்சாக்கின்[4] படைகள், இளம் சோவியத் குடியரசைத் தூக்கியெறிய அச்சுறுத்திக் கொண் டிருந்தபோது, ரயில்வேக்களில் மிகைநேர ஊதியமற்ற

உழைப்பை நல்க தாமாகவே முன்வந்த அணிகளை மாஸ்கோ நகர ரயில்வேத் தொழிலாளிகள் அமைத்தனர்; ஒரு சில வாரங்களில் இந்த இயக்கம் மற்ற முதன்மையான ரயில்வே மையங்கள் அனைத்துக்கும் காட்டுத்தீ போலப் பரவியது. தொழிலாளிகளை வாழ்த்தி லெனின் கூறினார்:

> இது ஒரு துவக்கம்தான் என்பது வெளிப்படை. ஆனால் இது அசாதாரணமான பெரும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு துவக்கம். இது முதலாளி வர்க்கத்தைத் தூக்கியெறிந்ததைக் காட்டிலும் மேலும் கடினமான, மேலும் திடமான, மேலும் தீவிரமான, மேலும் தீர்மானகரமான ஒரு புரட்சியின் துவக்கமாகும்; ஏனெனில் இது நமது சொந்தப் பழைமை வாதத்துக்கும், கட்டுப்பாடின்மைக்கும், சிறு முதலாளிய அகங்காரத்துக்கும் எதிரான வெற்றியாகும். கேடுகெட்ட முதலாளியம் தொழிலாளிகளுக்கும் உழவர்களுக்கும் வழங்கிய பழக்க வழக்கங்கள் மீது ஈட்டப்பட்ட வெற்றியாகும். இந்த வெற்றி வலுப்படுத்தப்பட்ட போதுதான், புதிய சமூகக் கட்டுப்பாடு, சோசலிசக் கட்டுப்பாடு உருவாக்கப் பட முடியும்; பிறகு — பிறகுமட்டுமே — முதலாளியத்துக் குத் திரும்பிச் செல்வது சாத்தியமற்றதாகும்; பொதுவுடைமை உண்மையிலேயே வெல்லப்பட முடியாததாகும். *(தெ.தொ.நூ. 29. 411)*

நிர்வாகத்தைப் பொறுத்தவரை, தொழிலாளிகள் தமது கல்வி அளவையும் பண்பாட்டு அளவையும் உயர்த்திக் கொள்வது அவசியமானதாக இருந்தது என்பது உண்மைதான்; ஆனால் அது மட்டுமே போதுமானதாக இல்லை. அதிகார வர்க்கத்துக்கு அவர்கள் முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமானால், அவர்களே அரசாங்கப் பணியில் பங்கேற்க வேண்டியது அவசியமாயிற்று. அதன்பிறகே சோவியத் அமைப்பு மக்களுக்கான அரசாக மட்டுமல்லாது, மக்களால் நடத்தப்படும் அரசாகவும் மாறும். எட்டாவது கட்சிப் பேரவையில் *(1919)* லெனின் பேசும்போது குறிப்பிட்டார்:

> மக்கள் தொகையினர் முழுவதும் அரசாங்கப் பணியில் பங்கேற்கும்போதுதான் நம்மால் அதிகார வர்க்கத்தை எதிர்த்

துக் கடைசிவரை, முழுவெற்றியடையும் வரை போராடமு டியும். முதலாளியக் குடியரசுகளில் இது சாத்தியமற்றது மட்டுமல்ல, அங்கு சட்டமே இதைத் தடுக்கிறது. முதலாளி யக் குடியரசுகளில் மிகச் சிறந்தவை. அவை எவ்வளவுதான்

ஜனநாயகத் தன்மை உடையவையாக இருந்தபோதிலும், ஆயிரமாயிரம் சட்ட ரீதியான தடங்கல்களைக் கொண்டுள் ளன; அரசாங்கப் பணிகளில் மக்கள் பங்கேற்பதைத் தடுக்கின்றன. நாம் செய்துள்ளதெல்லாம் இத்தடைகளை நீக்குவதையே. ஆனால் இதுவரை நாம் உழைக்கும் மக்கள் அரசாங்கத்தில் பங்கு வகிக்கிற கட்டத்தை அடைய வில்லை. சட்டம் ஒருபுறம் இருக்க, பண்பாட்டு அளவு என்ற ஒன்று இன்னும் இருக்கிறது. இதை எந்தச் சட்டத்துக் கும் உட்படுத்த முடியாது. இந்தத் தாழ்ந்த பண்பாட்டு அளவின் விளைவு என்னவென்றால், சோவியத்துகள் உழைக்கும் மக்களால் நடத்தப்படும் அரசாங்க உறுப்புகள் என்று அவற்றின் செயல் திட்டத்தில் காணப்படுவதற்கு மாறாக, பாட்டாளி வர்க்கத்தின் முன்னேறிய பிரிவால் மக்களுக்காக நடத்தப்படும் அரசாங்க உறுப்புகளாகவே உண்மையில் இருக்கின்றன. உழைக்கும் மக்கள் அனைவரா லும் நடத்தப்படும் அரசாங்க உறுப்புகளாக இல்லை...

அதிகார வர்க்கம் தோற்கடிக்கப் பட்டுள்ளது. சுரண்டலாளர் கள் துடைத்தெறியப்பட்டுள்ளனர். ஆனால் பண்பாட்டு அளவு உயர்த்தப்படவில்லை. எனவே அதிகாரிகள் இன் னும் தமது பழைய இடங்களை ஆக்கிரமித்துள்ளனர். இது வரையிலும் அமைப்புக்குள்ளாக்கப்பட்டதைக் காட்டிலும் மிகமிக விரிவாக பாட்டாளி வர்க்கமும் உழவர் வர்க்கமும் அமைப்புக்குள்ளாக்கப்பட்டு, பாட்டாளிகளை அரசாங்கத் தில் சேர்ப்பதற்கான உண்மையான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டால் தான் அதிகார வர்க்கத்தினரைப் பின் வாங்குமாறு நிர்ப்பந்திக்க முடியும் (தெ.தொ.நூ. 29. 183)

பதினோராவது கட்சிப் பேரவையில் (1922) லெனின் இதே பிரச்சினைக்குத் திரும்பி வந்தார். இதுதான் அவர் கலந்து கொண்ட கடைசிப் பேரவை; 1923 ஆம் ஆண்டின் துவக்கத்தில்

அவர் எழுதிய கடைசிக் கட்டுரைகள் ஒன்றில் ஒரு 'பண்பாட்டுப் புரட்சிக்கான' அறைகூவல் விடுத்தார்:

> போதுமான அளவு பண்பாடு வளர்ந்திராத ஒரு நாட்டில் சோசலிசத்தை நிலைநாட்டுவதை மேற்கொள்வதில் நாம் மிகவும் அவசரப்பட்டு விட்டோம் என்று நமது எதிர்ப்பாளர்கள் திரும்பத் திரும்ப நம்மிடம் கூறியிருக்கிறார்கள். தத்துவத்தில் — எல்லாவகைப் பண்டிதர்களின் தத்துவத்திலும் — குறிப்பிடப்பட்டுள்ள முடிவுக்கு நேர்மாறான முடிவிலிருந்து நாம் தொடங்கியதால் அவர்கள் இத்தவறான கருத்துக்கு வருகிறார்கள். நமது நாட்டில் அரசியல் மற்றும் சமூகப்புரட்சி, பண்பாட்டுப் புரட்சியை முந்தி விட்டது. ஆயினும் அதே பண்பாட்டுப் புரட்சி இப்போது நம்மை எதிர்கொண்டுள்ளது. (தெ.தொ.நூ. 33. 474)

லெனினின் அறைகூவல் ஸ்டாலினால் மீண்டும் திரும்ப விடுக்கப்பட்டது:

> அதிகார வர்க்கத்தை ஒழிப்பதற்கான மிக உத்திரவாதமான நிவாரணி, தொழிலாளர் - உழவரது பண்பாட்டு அளவை உயர்த்துவதுதான். அரசு யந்திரத்தில் உள்ள அதிகார வர்க்கத்தை ஒருவரால் சபிக்கவும் கண்டிக்கவும் முடியும்; நமது நடைமுறைப் பணியில் அதிகார வர்க்கத்தை ஒருவரால் அம்பலப்படுத்தவும் கேலிக்குள்ளாக்கவும் முடியும்; ஆனால் அரசு யந்திரத்தின் மீது கட்டுப்பாடு செய்வதற்கான சாத்தியப்பாடு, விருப்பம், ஆற்றல் ஆகியவற்றை உருவாக்கும் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டு அளவை பாட்டாளி மக்கள் திரளினர் அடைந்தாலன்றி, அதிகார வர்க்கம் எல்லாவற்றையும் மீறி தொடர்ந்து நிலவும். எனவே, பாட்டாளி வர்க்கம், உழைக்கும் உழவர் வர்க்க மக்கள் திரளினர் ஆகியோரின் பண்பாட்டு வளர்ச்சி, படிப்பறிவு வளர்ச்சி மட்டுமல்ல — படிப்பறிவு என்பது பண்பாடு அனைத்துக்குமான அடிப்படையாக இருந்த போதிலும் — முதன்மையாக, நாட்டின் நிர்வாகத்தில் பங்கேற்கும் ஆற்றலை வளர்த்துவதுமே, அரசு யந்திரத்தையும் மற்ற கருவிகள் அனைத்தையும் மேம்படுத்துவதற்கான முதன்மையான

*நெம்புகோலாகும். பாட்டாளி வர்க்கப் புரட்சி பற்றிய லெனினின் முழக்கத்துக்குரிய பொருளும் முக்கியத்துவமும் இதுதான். (ஸ்.தொ.நூ. 10.330, ஒப்: 11. 40)*

*கடைசியாக, நமது பொருளாதார அமைப்புகள்... இந்த அமைப்புகள் அனைத்திலும் அதிகார வர்க்கத்துக்கு நாம் முற்றுப்புள்ளி வைப்பது எவ்வாறு? இதைச் செய்வதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு: அதாவது கட்டுப்படுத்துதலைக் கீழே இருந்து உருவாக்குவது. நமது நிறுவனங்களில் உள்ள அதிகார வர்க்கம், அவர்களது குறைபாடுகள், தவறுகள் ஆகியவை பற்றிய பாட்டாளி வர்க்கத்தின் பரந்த மக்கள் திரளினரின் விமர்சனத்தை ஒழுங்கமைப்பது என்பதே அவ்வழியாகும். (ஸ்.தொ.நூ. 11.77)*

ஒரு பண்பாட்டுப் புரட்சியின் தேவை ஒப்புக் கொள்ளப்பட்டால், அது எந்த வடிவத்தை எடுக்கும்? இப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அநேகமாகக் கடக்க முடியாத இன்னல்களை எதிர்கொண்ட சோவியத் தொழிலாளிகளும் உழவர்களும் தமது சொந்த அரசைக் கட்டுவதில் வெற்றிபெற்றனர்; ஆனால் மேலே கூறப்பட்ட காரணங்களால், அதைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் முழுமையாகக் கொண்டு வருவதில் வெற்றிபெறவில்லை.

## 6. சோசலிசச் சமுதாயத்தில் வர்க்கப் போராட்டம்

1931 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஸ்டாலின் கீழ்க்காணும் தொலை நோக்குமிக்க எச்சரிக்கையை விடுத்தார்:

*நாம் வளர்ச்சியடைந்த நாடுகளில் இருந்த ஐம்பது அல்லது ஒரு நூறாண்டுகள் பின்தங்கியுள்ளோம். இந்த இடைவெளியை நாம் பத்தாண்டுகளில் நிரப்ப வேண்டும். ஒன்று நாம் இதைச் செய்தாக வேண்டும் அல்லது நாம் வீழ்ந்தாக வேண்டும். (ஸ்.தொ.நூ. 13.41)*

இரண்டாண்டுகளுக்குப் பிறகு நாஜிகள் ஜெர்மனியில் அதிகாரத்தைக் கைப்பற்றினர். பாராளுமன்றத்தில் ஒரு பொதுவுடைமையாளர் பெரும்பான்மை உருவாகும் சாத்தியப்பாட்டைச் சந்திப்பதற்குப் பதிலாக, ஜெர்மானிய ஏகபோக முதலாளிகள்,

மேற்கு நாடுகளில் இதர ஏகபோக முதலாளிகளின் ஆதரவுடன், இதுவரை அவர்களுக்கு ஒரு மூடு திரையாகச் சேவைசெய்து வந்த முதலாளியப் பாராளுமன்ற முறையை ஒதுக்கித் தள்ளி, சோவியத் யூனியனுடன் இறுதி மோதலுக்கான தயாரிப்பாக ஒரு வெளிப்படையான சர்வாதிகாரத்தை நிறுவினர். கடுமையான போர்த் தயாரிப்புகள் என்ற இந்தப் பின்னணியில்தான், உள் நாட்டு வர்க்க முரண்பாடுகளை ஸ்டாலின் கையாண்ட விதம் மதிப்பீடு செய்யப்படவேண்டும்.

1933 இல் முதல் ஐந்தாண்டுத் திட்டம் முழுமை பெற்றது. 1937-இல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முழுமை பெற்றது. இவற்றில் எதிர்கொள்ளப்பட்ட இன்னல்கள் ஏராளம் — அனுப வக் குறைவு, தகுதிக் குறைவு, எல்லாவற்றுக்கும் மேலாக நாசவேலை; ஆயினும் இவை அனைத்தும் வெற்றி கொள்ளப் பட்டன. இதற்குக் காரணமாக இருந்தது 'சாதாரணமான, அன்றாட வேலைகளில் மக்கள் திரளினர் காட்டிய துணிச்சல்' என்று லெனினால் அழைக்கப்பட்ட ஒன்றாகும். (தெ.தொ.நூ. 29. 423)

1933 ஜனவரியில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் விளைவுக ளைப் பரிசீலித்த ஸ்டாலின் கூறினார்:

> சோவியத் அரசு அதிகாரத்தின் வளர்ச்சி, செத்துக் கொண்டி ருக்கும் வர்க்கங்களின் கடைசி எச்சங்களின் எதிர்ப்பை ஆழப்படுத்தும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். அவ்வர்க்கங்கள் செத்துக் கொண்டிருப்பதாலும் அவர்களது நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருப்பதாலுமே, அவர்கள் தாக்குதலின் ஒரு வடிவத்தில் இருந்து மற்றொரு, மேலும் கூர்மையான வடிவத்துக்குப் போய்க் கொண்டே இருப்பார் கள். மக்கள் தொகையின் பிற்பட்ட பிரிவினரின் ஒத்துழைப் பைக் கோருவார்கள். சோவியத் ஆட்சிக்கு எதிராக அவர் களை ஒன்று திரட்டுவார்கள். (ஸ்.தொ.நூ. 13. 216)

ஓராண்டுக்குப் பிறகு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து அவர் கூறினார்:

> பொருளாதார வாழ்வில் முதலாளியத்தின் எச்சங்கள் அனைத்தையும் நாம் ஏற்கனவே வெற்றிகொண்டு விட் டோம் என்று நம்மால் கூறமுடியுமா? முடியாது, நம்மால்

அதைக் கூறமுடியாது. மக்களின் மனங்களில் உள்ள முதலாளிய எச்சங்களையும் நாம் வெற்றிக் கொண்டுவிட்டோம் என்றும் நாம் கூறமுடியாது. மக்களின் மனங்களின் வளர்ச்சி, அவர்களது பொருளாதார நிலைக்குப் பின் தங்கி விடுகிறது என்பது மட்டுமல்ல, நாம் இன்னும் முதலாளிய நாடுகளால் சூழப்பட்டுள்ளோம் என்பதும் இதற்குக் காரணமாகும். இம்முதலாளிய நாடுகள் சோவியத் யூனியனின் பொருளாதார வாழ்விலும் மக்களின் மனங்களிலும் உள்ள முதலாளியத்தின் எச்சங்களைப் புதுப்பிக்கவும் அவற்றை நிலைநிறுத்தவும் முயற்சி செய்கின்றன. இவற்றுக்கு எதிராக நாம் நமது பீரங்கிக் குண்டை தயாராக வைத்திருக்கவேண்டும்.

இந்த எச்சங்கள், தோற்கடிக்கப்பட்ட லெனினிய - எதிர்ப்புக் குழுக்களின் சித்தாந்தத்தை நமது கட்சியில் உள்ள தனிப்பட்ட உறுப்பினர்களின் மனங்களில் உயிர்ப்பிப்பதற்கான ஒரு சாதகமான விளைநிலத்தை உருவாக்கியே தீரும் என்பதை மறுக்க முடியாது...

அதனால்தான் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது என்றோ, சோசலிசத் தாக்குதல் கொள்கைக்கான தேவை இனிமேலும் இல்லை என்றோ நாம் கூறமுடியாது. (ஸ்.தொ.நூ. 13. 356)

இவ்வாறு, இவ்விரு கூற்றுகளின்படி, முதலாளிய அரசுகளால் ஆதரிக்கப்படும் சுரண்டும் வர்க்கங்களின் எச்சங்கள், சோவியத் ஆட்சிக்கு எதிராக சோவியத் மக்களின் பிற்பட்ட பகுதியினரை ஒன்று திரட்ட இன்னும் முயற்சி செய்து கொண்டிருந்தன என்பது தெரிகிறது. வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது மட்டுமல்ல, மேலும் கூர்மையாக வளர்ந்து கொண்டும் இருந்தது.

1936-இல் ஒரு புதிய அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அது அனைவர்க்கும் சரிசமமான உரிமைகள் வழங்கியது. இனம், தேசம், மதம், கல்வித் தகுதி, இருப்பிடம், சமூகப் பிறப்பு, சொத்துத் தகுதி அல்லது கடந்த காலச் செயல்கள் என்ற பாகுபாடு ஏதும் அற்ற முறையில் அமைந்த உரிமைகள் இவை. ஸ்டாலின் கூறியதைப்போல இதுதான் உலகிலேயே

மிகவும் ஜனநாயகத் தன்மை வாய்ந்த அரசியல் சட்டம். அவ்வாண்டு நவம்பர் மாதம் அதை அறிமுகப்படுத்திய ஸ்டாலின் கூறினார்:

உள்நாட்டுப் போரின் வெற்றிகரமான முடிவின் விளைவாக நிலப்பிரபு வர்க்கம் ஏற்கனவே தூக்கியெறியப்பட்டுள்ளது என்பது உங்களுக்குத் தெரிந்ததே. மற்ற சுரண்டும் வர்க்கங்களைப் பொறுத்தவரை அவர்களுக்கும் நிலப்பிரபு வர்க்கத்தின் கதியே ஏற்பட்டது. தொழில் துறையில் முதலாளி வர்க்கத்தின் வாழ்வு முடிந்து விட்டது. வேளாண்மைத் துறையில் குலாக்குகளின் வாழ்வு முடிந்துவிட்டது. வர்த்தகத் துறையில் வர்த்தகர்கள், கொள்ளை இலாபமடிப்பவர்கள் ஆகியோரின் வாழ்வு முடிந்து விட்டது. இவ்வாறு சுரண்டும் வர்க்கங்ள் அனைத்தும் இப்போது துடைத்தெறியப்பட்டுள்ளன. (ஸ்லெ. 565)

சோவியத் யூனியனின் புதிய அரசியல் சட்டத்தின் நகல், சமுதாயத்தில் பகைத் தன்மை கொண்ட வர்க்கங்கள் ஏதும் இனிமேல் இல்லை என்ற உண்மையில் இருந்து தொடங்குகிறது... (ஸ்லெ. 571)

இங்கு சுரண்டல் வர்க்கங்கள் துடைத்தெறியப்பட்டுள்ளன; வர்க்கப் போராட்டம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்ற கருத்து காணப்படுகிறது.

1937 மார்ச்சில், எதிர்ப் புரட்சி கையாட்களின் ஊடுருவலிலிருந்து கட்சியைப் பாதுகாக்க கட்சிக்குள் கூடுதலான விழிப்புணர்வு கொள்ளுமாறு அறைகூவல் விடுத்து ஸ்டாலின் கூறினார்:

'நாம் முன்னேற்றப் பாதையில் எடுத்துவைக்கிற ஒவ்வொரு அடியுடனும் வர்க்கப் போராட்டம் மென்மேலும் மடிந்தே தீரவேண்டும்; நமது வெற்றிகளின் வளர்ச்சி விகிதத்துக்கு ஏற்ப, வர்க்கப் பகைவன் மென்மேலும் அடக்கப்படுவான் என்கிற அழுகிப் போன தத்துவத்தை நாம் சிதறடிப்பதும் ஒதுக்கித் தள்ளுவதும் அவசியமாகும். அதற்கு மாறாக, நமது முன்னேற்றம் பெரிதாக ஆக, நமது வெற்றிகள் பெரிதாக ஆக, தகர்த்தெறியப்பட்ட சுரண்டும் வர்க்கங்களின் எச்சங்கள் மென்மேலும் கசப்படைவார்கள்; மேலும் கூர்மையான போராட்ட வடிவங்களை அவர்கள் மேலும்

குடியுரிமைகளுக்கு எதிரான இக்கொடிய மீறல்கள் இந்த உரிமைகள் உத்திரவாதம் செய்யப்பட்டிருந்த புதிய அரசியல் சட்டத்துடன் வெளிப்படையாக முரண்பட்டன; இந்த முரண் பாடு, சோவியத் யூனியனில் இருந்த வர்க்கங்களின் நிலைபற்றிய ஸ்டாலின் பகுப்பாய்வில் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட முரண் பாட்டுடன் உறவு கொண்டிருந்தது தெளிவு. இந்தப் பகுப்பாய் வுக்குத் திரும்பிச் சென்று நாம் வினவுவோம்: உண்மையான நிலைமை என்ன? வர்க்கப் போராட்டம் மேலும் கடுமையாகி வந்ததா அல்லது மடிந்து கொண்டு வந்த்தா?

இந்த ஆண்டுகளில் ஒரு புதிய சோசலிசப் பொருளாதாரம் கட்டப்பட்டது. முதலாளிய உடைமையின் இடத்தில் சோசலிச உடைமையும், சிறு அளவு உற்பத்தியின் இடத்தில் பெரிய அளவு உற்பத்தியும் கொண்டுவரப்பட்டன. ஆனால் அரசியல், சித்தாந்த மேலடுக்கின் சோசலிச உருமாற்றம் முழுமையாக்கப் பட்டிருக்கவில்லை. ஒரு புதிய அரசு யந்திரம் உருவாக்கப்பட் டது. இது கட்சியின் வழியாக பாட்டாளி வர்க்கத்தால் கட்டுப்ப டுத்தப்பட்டது. ஆனால் மக்கள் திரளினர் அதில் இன்னும் முழுமையாக ஈடுபடுத்தப்படவில்லை. மாறாக அது ஓரளவுக்கு மக்கள் திரளினரிடமிருந்து அந்நியப்பட்டிருந்தது. அதற்குக் காரணமாக இருந்தது அதில் சலுகை மிக்க இடங்களைப் பிடித்துக் கொண்டிருந்த முதலாளிய அதிகாரிகளின் அதிகார வர்க்க நடைமுறைகளாகும். கட்சிக்குள்ளுமே அதிகார வர்க்கப் போக்குகள் வளர்ந்து வந்தன. பழைய சுரண்டும் வர்க்கங்களின் உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டுவிட்டன. ஆனால் நிச்சய மாக அவ்வர்க்கங்கள் துடைத்தெறியப்பட்டிருக்கவில்லை. பல முன்னாள் நில உடைமையாளர்களும் முதலாளிகளும் பொதுப்ப ணிகளில் வேலை தேடிக் கொண்டனர். முன்னாள் குலாக்குகள் கூட்டுப் பண்ணைகளில் சேர்ந்து கொண்டனர்; இவர்கள் தமது உடைமைகளை இழந்திருந்தனர். ஆனால் தமது பழக்க வழக்கங் களையும் வாழ்க்கைக் கண்ணோட்டத்தையும் இழந்து விட வில்லை. கூட்டுப் பண்ணைகளில் இருந்த உழவர் திரளினர் இன்னும் சிறு உடைமையாளர் மனப்பான்மையைத் தக்க வைத்துக் கொண்டிருந்தனர். பாட்டாளி வர்க்கமுமே தொழில் வளர்ச்சியின் தேவைகளை நிறைவு செய்ய உழவர் வர்க்கத்தில் இருந்து பெரும் எண்ணிக்கையினரை எடுத்துக் கொண்டது. உழவர் வர்க்கத்தில் இருந்து வந்தவர்கள் சிறு முதலாளியத்

தற்சாய்வுகளையும் தம்முடன் கொண்டு வந்தார்கள். கல்விமுறை வேகமாக விரிவடைந்ததன் காரணமாக, மக்கள் திரளினர் தமது பண்பாட்டு அளவை உயர்த்திக் கொண்டனர். படிப்பறிவின்மை என்பது அநேகமாக முற்றிலும் ஒழித்துக் கட்டப்பட்டது. ஆயினும் இது இன்னும் பண்பாட்டுப் புரட்சியாகி விட வில்லை. அரசாங்கப் பணியில் மக்கள் திரளினரை ஈடுபடுத்துவ தற்கு இப்பண்பாட்டுப் புரட்சி அவசியமாகும் என லெனின் கருதினார். இக்காரணங்களால் வர்க்கப் போராட்டத்தின் இறுதிப் பிரச்சினை இன்னும் போராடித் தீர்க்கப்பட வேண்டியிருந்தது. பாட்டாளி வர்க்கம் தனது தலைமையைத் தளர்த்துமேயானால் உடைமைகள் இழந்த வர்க்கங்கள் தாம் இழந்ததைத் திரும்பப் பெற தமது முயற்சிகளை இரட்டிப்பாக்கும்.

இக்கால கட்டத்தில் கட்சி ஊழியர்களுக்கு ஸ்டாலின் ஆற்றிய உரைகள், 'அதிகார வர்க்கத் துரு' (ஸ்.மா.வி. 278) மக்களுடன் கட்சிக்குள்ள பிணைப்புகளை அரித்துவிட கட்சி அனுமதித்துவிடக் கூடிய அபாயத்தைக் கூர்மையாக உணர்ந்திருந் தார் என்பதைக் காட்டுகின்றன. அவர் அந்த அபாயத்தைக் கண்டு அதற்கு எதிராக மீண்டும் மீண்டும் எச்சரித்தார். ஆனால், அவருமே 'வெறும் நிர்வாக'த்தின் மீது மட்டும் (லெ.தொ.நூ. 36. 606) மிக அதிகமாக சார்ந்து நின்றதாலோ, என்னவோ அவராலும் அவ் அபாயத்தைத் தடுக்க முடியவில்லை; சோசலிசத் தற்காப்புகளில் இருந்த இந்த பலவீனத்தின் மூலமாக பகைவன் உள்ளே நுழைந்து கொண்டான். வர்க்கப் போராட்டத்தைத் தம் கரங்களில் எடுத்துக் கொண்டு, எதிரிகளையும் நண்பர்களையும் பாகுபடுத்திப் பார்ப்பதில் எச்சரிக்கை மேற்கொண்டு, இறுதி வரை அதை நிறைவேற்றுமாறு மக்கள் திரளினர் தட்டியெழுப் பப் பட்டிருந்தால், அவர்கள் தம் மத்தியிலிருந்த எதிர்ப் புரட்சியாளர்களைத் தனிமைப்படுத்தி இருந்திருப்பார்கள்; அதே வேளையில் பாதுகாப்புப் போலீசின் நடவடிக்கைகள் மீது ஒரு கண்காணிப்பையும் செலுத்தியிருந்திருப்பார்கள்.

எனவே நமது கேள்விக்கான விடை இதுதான்: உடைமை கள் இழந்த வர்க்கங்களின் எதிர்ப்பு, மடிந்தொழிவதற்கு மாறாக தொடர்ந்து நீடித்தது, புதிய வடிவங்களை மேற்கொண்டது. இவை பழைய வடிவங்களைக் காட்டிலும் கூடுதலான தந்திரம் மிக்கவை; எனவே மேலும் அபாயகரமானவையாகவும் இருந்

தன. இச்சூழ்நிலைமைகளில், லெனின் முன் கூட்டியே பார்த்தது போல, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பேணிப் பாதுகாப்பதும் வலுப்படுத்துவதும் மிக மிக அவசியமானதாக இருந்தது.

இவை அனைத்திலிருந்தும் பெறப்படுவது என்னவெனில் ஸ்டாலின் 1935 வரை லெனினிய வழியைப் பின்பற்றினார். ஆனால் பிறகு, முதலாளியச் சுற்றிவளைப்பின் அழுத்தம் அதிகரித்ததால் அவர் அந்த வழியிலிருந்து இரு வழிகளில் விலகிச் சென்றார். ஒருபுறம், புதிய அரசியல் சட்டமானது, உள்நாட்டு உறவுகளைப் பொறுத்த வரை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைத் தளர்த்திக் கொள்ள முடியும் என்ற எண்ணத்தைச் சார்ந்து நின்றது; இக் காரணத்தால் அது புதிய முதலாளிகளால் வரவேற்கப்பட்டது. இவர்கள் தமக்குள்ள சிறப்புரிமைகள் அரசியல் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் கருதினார்கள். இது ஒரு வலது திசைவிலகல். மற்றோர்புறம், உண்மையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தளர்த்தப்பட முடியாததாக இருந்ததால், பாதுகாப்புப் போலீசின் செயல்பாடு என்ற ஏகையில் நிர்வாக முறைகளின் மூலம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் நிலை நிறுத்தப்பட்டது (ஸ்.தொ.நூ.13. 160). இது ஒரு 'இடது' திசைவிலகல்; 'மிகை நிர்வாகம்' என்று லெனினால் அழைக்கப்பட்ட தவறு. இத்தவறு குலாக்குகளுக்கு எதிரான போராட்டத்தைக் களங்கப்படுத்திய தவறாகும். (ஸ்.தொ.நூ. 12.368). இரண்டு திசை விலகல்களும் ஒன்றையொன்று நிறைவு செய்தன. ஒன்றுக்கொன்று ஆதரவு கொடுத்தன. பகைவர்கள் நண்பர்களாகவும் நண்பர்கள் பகைவர்களாகவும் கருதப்பட்டனர்.

இயங்கியல் பொருள் முதலியலும் வரலாற்றுப் பொருள் முதலியலும் (1938) என்ற தமது நூலில் ஸ்டாலின் பகை முரண்பாடுகளையும் பகையற்ற முரண்பாடுகளையும் பாகுபடுத்திப் பார்ப்பதில்லை என்பதும், அவற்றைக் கையாளும் போது பகை முரண்பாடுகள் பகையற்ற முரண்பாடுகளாகவும் பகையற்ற முரண்பாடுகள் பகை முரண்பாடுகளாகவும் மாறலாம் என்பதை அவர் சுட்டிக் காட்டவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இப்படிப் பாகுபாடு செய்வது மா சேதுங்கின் கையாளுதலில் இயங்கியல் பெற்ற வளர்ச்சியைக் குறிப்பிட்டுக் காட்டும் அம்சங்களில் ஒன்றாகும்.

## 7. புதிய புரட்டல் வாதம்

சோவியத் யூனியன் வலுவடைய அடைய, ஏகாதிபத்திய அரசுகளிடையே உள்ள முரண்பாடுகளும் மேலும் கடுமையாகின. முதல் சோசலிச அரசுக்கு எதிரான தமது பகைமையில் அவை ஒன்றுபட்டன. அதன் வளர்ந்து வரும் வலிமையின் முன்னால் அவை பிளவுபட்டன. இப்பிளவு ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஆளும் வர்க்கத்துக்குள் பிரதிபலித்தது. பிரிட்டனில் சேம்பர்லினால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட பெரும்பான்மையாக இருந்த பிரிவு சோவியத் யூனினைத் தாக்குமாறு ஹிட்லரை ஊக்குவித்தது. ஹிட்லர் சோசலிசத்தை அழிப்பதுடன் இந்த நிகழ்ச்சிப் போக்கில் தன்னையும் பலவீனப்படுத்திக் கொள்வான் என்றும், அதனால் பிரிட்டன் ஐரோப்பாவின் மிகப்பலம் பொருந்திய அரசாக உருவாகும் என்றும் இப்பிரிவு நம்பிக்கை கொண்டிருந்தது. பிரிட்டனிடமும், பிரான்சிடமும் ஸ்டாலின் பரஸ்பரப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை முன்வைத்தார். இது ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் போர் தடுக்கப்பட்டிருக்கம். அது ஏற்றுக் கொள்ளப்படப் போவதில்லை என்பது தெளிவாகியதும், அவர் ஹிட்லருடன் ஆக்கிரமிப்புத் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டார். ஹிட்லர் பிறகு மேற்குப் பகுதியைத் தாக்கினான்; பிறகு பால்கன் நாடுகளுக்குள் புகுந்தான். இவ்வாறு மத்தியக் கிழக்கில் இருந்த பிரிட்டிசு நலன்களை அச்சுறுத்தினான். இதற்கிடையில் சேம்பர்லினின் இடத்துக்கு சர்ச்சில் வந்தார். அவர் ஹிட்லரை மேலும் உடனடியான எதிரி எனக் கருதிய பிரிவின் பிரதிநிதி. மேற்கில் தனது நிலையை வலுப்படுத்திக் கொண்ட ஹிட்லர் இப்போது கிழக்கில் தாக்குதல் தொடுக்கத் தயாராக இருந்தான். பிரிட்டனின் ஆதரவைப் பெற ஒரு முயற்சி செய்தான்; ஆனால் சர்ச்சில் பிரிட்டிசு மக்களின் ஆதரவுடன் பிரிட்டனை சோவியத் யூனியன் பக்கம் நிறுத்தி தன் பதிலை வழங்கினார். இதன் பொருள் பிரிட்டிசு ஆளும் வர்க்கம் தனது குறிக்கோளைக் கைவிட்டு விட்டது என்பதல்ல, அதன் நடைமுறைத் தந்திரம் மட்டுமே மாறியது. சர்ச்சிலின் நோக்கம் என்னவென்றால், ஜெர்மனியைத் தோற்கடிக்க சோவியத் யூனியனுக்கு இயலும் வகையில் ஆதரவைத் தருவது; இதன் மூலம் சோவியத் யூனியன் தனது சக்தி அனைத்தையும் செலவி

டும்; அதன் பிறகு பிரிட்டன் உண்மையான வெற்றியாளனாகி விடும் என்பதுதான். மீண்டும் ஒரு முறை அவர்கள் தவறாகக் கணக்கிட்டு விட்டார்கள். சோவியத் மக்கள் அளவிட முடியாத இழப்புகளை அனுபவித்தனர். ஏறத்தாழ இரண்டு கோடி மக்கள் இறந்தனர்; இரண்டரைக் கோடி மக்கள் வீடிழந்தனர். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் பலன்களைக் காட்டிலும் அதிகமான பொருள்வகைச் சேதம் ஏற்பட்டது; ஆயினும் அவர்கள் வெற்றி பெற்றனர். முதல் சோசலிச அரசு, பாசிசத்திலிருந்து உலகைக் காப்பாற்றியது. ஏகாதிபத்தியத்தின் கடைசிக் கட்டத்துக்கான - அதன் இறுதி வீழ்ச்சிக் கட்டத்துக்கான பாதையைத் திறந்து விட்டது.

ஆயினும் இதற்கிடையில், உள்நாட்டு முரண்பாடுகள் எஞ்சியிருந்தன. உள்நாட்டிலிருந்து கொண்டே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்குக் குழிபறிப்போருக்கு எதிராக அதைப் பாதுகாப்பதன் மூலம் வெளிநாட்டுப் பகைவன் மீது கொண்ட வெற்றியை முழுமை பெறச் செய்யுமாறு மக்கள் திரளினருக்கு அறைகூவல் விடுக்கப்பட்டிருக்குமானால் இம் முரண்பாடுகள் தீர்க்கப்பட்டிருக்கலாம்; ஆனால் அந்த அறைகூவல் விடுக்கப்படவில்லை. ஏகாதிபத்திய நிர்ப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு ஒரு புதிய போருக்கான அச்சுறுத்தலை அந்த நிர்ப்பந்தம் கொண்டு வருவதை எதிர் நோக்கிய ஸ்டாலின், முன்பு கையாண்ட அதே நடவடிக்கைகளை நாடினார் — புதிய முதலாளி வர்க்கத்துக்கு தொடர்ந்து சலுகைகள் வழங்குதல், இத்துடன் தொடர்ச்சியான ஒடுக்குமுறை. இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவரது தலைமையின் கிழ் அதிகாரங்கள் மங்கிக் கொண்டிருந்திருக்கக் கூடும். வரலாற்றில் வேறு எந்த ராஜதந்திரியும் இத்தகைய ஒரு சுமையை இத்தனை காலம் சுமந்ததில்லை.

அதிகார வர்க்கம் இப்போது தன்னை ஒரு சலுகை பெற்ற வர்க்கமாக உறுதிப்படுத்திக் கொண்டிருந்தது. ஒரு விரிந்த மற்றும் வளர்ந்து வருகிற வருமான வேறுபாட்டினால் அதிகார வர்க்கம் தொழிலாளர் உழவர்களிடமிருந்து துண்டிக்கப்பட்டிருந்தது. பத்தொன்பதாவது கட்சிப் பேரவையில் (1952) முதலாளிய ஊழலுக்கான சில பளிச்சிடும் உதாரணங்கள் அம்பலப்படுத்தப்பட்டன. 1953-ஆம் ஆண்டு ஸ்டாலினின் மரணத்துக்குப் பிறகு

அதிகாரத்துக்கான போராட்டம் ஒன்று நடந்தது. இதன் விளைவாக 1938 தொட்டு பாதுகாப்புப் போலீசின் பொறுப்பாளராக இருந்த பெரியா கைது செய்யப்பட்டு மரணதண்டனை விதிக்கப் பட்டார்; அதன் பிறகு தலைமை குருஷ்சேவால் பிரதி நிதித்துவப் படுத்தப்பட்ட புதிய முதலாளி வர்க்கத்தின் கரங்களுக்குச் சென்று விட்டது.

குருஷ்சேவின் நோக்கம், அதிகார வர்க்க அரசு முதலாளிய அமைப்பு ஒன்றில் புதிய முதலாளி வர்க்கத்தை ஆளும் வர்க்க மாக நிறுவுவதுதான். அவன் தனது கொள்கையை இந்தச் சொற்களில் வெளிப்படையாகக் கூறவில்லைதான். மாறாக, பெர்ன்ஸ்டின், காவுத்ஸ்கி ஆகியோரின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி, மார்க்சியத்துக்கு வரிசை வரிசையான 'திருத்தங்கள்' என்ற வடிவத்தில் அதை முன் வைத்தான்.

மார்க்சிய - லெனினியத்தின்படி, பாட்டாளி வர்க்க சர்வாதி காரம் தான் முதலாளியத்திலிருந்து பொதுவுடைமைக்கு மாறிச் செல்லும் காலகட்டத்தில் - அதாவது சோலிசக் காலகட்டம் முழுவதிலும் கட்டாயம் நிலவ வேண்டிய அரசு வடிவமாகும். குருஷ்சேவ் மற்றும் புதிய புரட்டல்வாதிகளின் கருத்துப்படி, சோவியத் யூனியனில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வாழ்வு முடிந்து விட்டது. அதற்குப் பதிலாக 'மக்கள் அனைவரின் அரசு' கொண்டு வரப்பட்டது. இக்கருத்தாக்கம் மார்க்சியத்துக்கு அந்நியமானது. மார்க்சியத்தின் படி, நவீன சமுதாயத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கான ஒரே மாற்று, முதலாளி வர்க்க சர்வாதிகாரம்தான். குருஷ்சேவின் 'மக்கள் அனைவரின் அரசு' என்பது உண்மையில் முதலாளி வர்க்க சர்வாதிகாரம்தான்.

மார்க்சிய - லெனினியத்தின்படி, பாட்டாளி வர்க்க சர்வாதி காரம் என்பது ஜனநாயகத்தின் மிக உயர்ந்த வடிவம். ஏனெனில் இது சிறுபான்மையோர் மீது பெரும்பான்மையோர் செலுத்தும் சர்வாதிகாரம், குருஷ்சேவ் மற்றும் புதிய புரட்டல்வாதிகளின் கருத்துப்படி, 'மக்கள் அனைவரின் அரசு' என்பது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைக் காட்டிலும் மேலும் ஜனநாயகத் தன்மையுடையது. ஏனெனில் மக்கள் அனைவருக்கும் இது ஜனநாயகத்தை விரிவுபடுத்துகிறது. வர்க்கத் தன்மையற்ற ஜனநா யகம் என்ற கருத்தாக்கத்துக்கு மார்க்சியத்தில் இடம் இல்லை.

இது ஒரு முதலாளியக் கருத்தாக்கம்; 'மக்கள் அனைவரின் அரசு' என்பது, உண்மையில் அது ஒரு முதலாளி வர்க்க சர்வாதிகாரம் தான் என்பதை மூடிமறைக்க குருஷ்சேவால் எடுத்தாளப்பட்ட கருத்தாக்கமாகும்.

மார்க்சிய - லெனினியத்தின்படி, பாட்டாளி வர்க்க சர்வாதி காரம் என்பது மார்க்சிய - லெனினியப் புரட்சிகரத் தத்துவத்தால் ஆயுத பாணியாக்கப்பட்டு, பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகச் செயல்படும் பொதுவுடமைக் கட்சியின் தலைமை யின்கீழ் நிறுவப்பட்டு பராமரிக்கப்படுகிறது. குருஷ்சேவ் மற் றும் புதிய புரட்டல்வாதிகளின் தலைமையின் கீழ் சோவியத் யூனியனின் பொதுவுடமைக் கட்சி பாட்டாளி வர்க்க சர்வாதிகா ரத்தை வலுப்படுத்துவதற்கான போராட்டத்தை வழிநடத்திச் செல்லும் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிக் கட்சியாக இருப்ப தில்லை; அது 'மக்கள் அனைவரின் கட்சி'யாக மாறுகிறது. அதாவது முதலாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பேணிப்பாதுகாத் தல் என்ற பணியைச் செய்யும் கட்சியாகிறது.

மார்க்சிய - லெனினியத்தின்படி, சோசலிசம் கட்டுதல் என்ற பணியை முழுமை பெறச் செய்வதற்கு மட்டுமல்லாமல், சோசலிசக் கட்டுப்பாட்டில் தொழிலாளிகளுக்கு மறுகல்வி புகட்டி, பொதுவுடைமை நோக்கிய மாற்றத்துக்கான தயாரிப்பில் முதலாளியத் தனிமனிதக் கொள்கையின் அனைத்து வடிவங்க ளையும் துடைத்தெறிவதற்காகவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகா ரம் பேணிப் பாதுகாக்கப்பட்டு வலுப்படுத்தப்படவேண்டும். சப்போட்னிக் இயக்கம், சோசலிசப் போட்டியார்வ இயக்கம் ஆகியவை கொண்டிருந்த உணர்வு இதுதான். இவ்வியக்கங்களில் லெனின், ஸ்டாலின் ஆகியோரது தலைமையின் கீழ் தொழிலாளி கள் கூட்டு உழைப்பின் அற்புதங்களை நிகழ்த்தினார்கள். குருஷ்சேவ் மற்றும் புதிய புரட்டல்வாதிகளின் தலைமையின் கீழ் இந்த உணர்வு கைவிடப்பட்டது; பொருள்வகை ஊக்குவிப் புகள் மேற்கொள்ளப்பட்டன; அதேவேளையில் சோவியத் சமுதாயம் பொதுவுடைமை நோக்கி முன்னேறுவதாகக் கூறப்படு கிறது. மார்க்சியத்தின்படி சோசலிசத்திலிருந்து பொதுவுடை மைக்கான முன்னேற்றம், சமுதாய உற்பத்தியில் ஒவ்வொரு தொழிலாளியின் பங்கும் அவரது உழைப்புக்கு ஏற்ப இராமல்

அவரது தேவைகளுக்கு ஏற்ப இருக்க வேண்டும் எனக்கோருகிறது (லெ.தொ.நூ. 25. 472). இது 'எல்லாரும் ஒவ்வொருவருக்காக, ஒவ்வொருவரும் எல்லாருக்குமாக' என்ற கோட்பாட்டுக்கு உகந்ததாக இருக்க வேண்டும் (லெ.தொ.நூ. 31. 124). பொருள் வகை ஊக்குவிப்புகளின் அடிப்படையில் இந்த முன்னேற்றத்தைச் செய்துவிட முடியாது. ஏனெனில் இது முதலாளிய சமுதாயத்திலிருந்து பெறப்பட்ட கூலி உழைப்பில் உள்ள போட்டியம்சத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. (மா.ஏ.3.17.18).

மார்க்சிய - லெனியத்தின்படி, வன்முறை கொண்டே ஆளும் வர்க்கம் ஆட்சி செய்கிறது. எனவே, வன்முறை இல்லாமல் அதைத் தூக்கியெறிய முடியாது. காலனிகளில் ஏகாதிபத்திய வாதிகள் எப்போதுமே வெளிப்படையான வன்முறையின் மூலமே ஆட்சி செலுத்தி வந்துள்ளனர்; பெரு நகர மையங்களைக் கொண்ட முதலாளிய நாடுகளில் பொதுவாக பாராளுமன்ற வடிவங்களின் கீழ் வன்முறையைப் பயன்படுத்து தலை மூடி மறைக்கிறார்கள்; ஆனால் அவர்களது சிறப்புரிமைகளுக்கு ஒரு உண்மையான அச்சுறுத்தல் ஏற்படும்போது, 'அவசர நிலை' ஒன்றை அறிவித்து வெளிப்படையான வன்முறையை நாடுவதற்கு அவர்கள் எப்போதும் தயாராக உள்ளனர். ஆளும் வர்க்கம் ஒவ்வொன்றும் இதைத்தான் எப்போதும் செய்துள்ளது.

> தேசங்களின் வாழ்விலுள்ள முக்கியப் பிரச்சினைகள் அனைத்தும் வன்முறையின் மூலமே தீர்க்கப்படுகின்றன. பிற்போக்கு வர்க்கங்கள்தாம் பொதுவாக முதலில் வன்முறையை, உள்நாட்டுப்போரை நாடுகின்றன; 'நிகழ்ச்சி நிரலில் துப்பாக்கிச் சனியனை வைப்பது முதலில் அவ்வர்க்கங்கள் தான்...' (லெ.தொ.நூ. 9.12)

குருஷ்சேவ் மற்றும் புதிய புரட்டல்வாதிகளின் கருத்துப்படி, 'முதலாளியத்தில் இருந்து சோசலிசத்துக்கான மாறுதல் பாராளுமன்ற முறைகளின் மூலம் அமைதியான வழியில் சாதிக்கப்படக்கூடியதற்கான சாத்தியப்பாடுகள் வளர்ந்து வருகின்றன. இந்த வழியில் மாற்றம் நிறைவேற்றப்பட்ட சோசலிசநாடு ஒன்று கூட இல்லை; மாறாக, அமைதியான மாற்றம் என்ற பிரமையால் நிராயுதபாணி ஆக்கப்பட்டு, உழைப்பாளிகளின்

இயக்கங்கள் நசுக்கப்பட்டுள்ள முதலாளிய நாடுகள்தாம் ஏராள மாக உள்ளன.

இவ்விசயங்களில் எல்லாம் குருஷ்சேவும் புதிய புரட்டல்வா திகளும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய மார்க்சிய - லெனினியத் தத்துவத்தைக் கைவிட்டுள்ளனர்.

குருஷ்சேவினுடைய பாதையில் இருந்த தடங்கல்களில் ஒன்று, சோவியத் யூனியனில் மட்டுமல்லாது உலக முழுவதிலும் உள்ள பாமர மக்களிடையே ஸ்டாலினின் பெயருக்கு இருந்த பெரும் மரியாதையாகும். எனவே ஏகாதிபத்தியவாதிகளின் வெறித்தனமான கைதட்டல்களுக்கிடையே குருஷ்சேவ் ஸ்டாலி னைக் கண்டனம் செய்தான். எதிர் காலத்துக்கான சரியான பாடங்களை வகுக்கும் பொருட்டு, கடந்தகாலச் சாதனைகள், தோல்விகள் ஆகியவற்றில் ஒரு புறநிலையான பகுப்பாய்வு மேற்கொள்வதற்குப் பதிலாக, ஸ்டாலினின் தலைமையின்கீழ் இழைக்கப்பட்ட குற்றங்களை அவன் வெளிப்படுத்தியபோது, மக்களின் உள்ளத்தில் இயல்பாகவே ஏற்பட்ட அதிர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டான். இதன் நோக்கம், 'தனி மனித வழிபாடு' என்பதை எதிர்த்துப் போராடுவது என்ற காரணம் காட்டி மார்க்சிய - லெனினியத்துக்கு அவன் திட்டமிட்டு இழைத்த துரோகத்தை மூடிமறைப்பதுதான். நீண்டகாலம் கட் சித் தலைமையின் உறுப்பினர்களில் ஒருவனாக இருந்த தானுமே, கட்சியின் தவறுகளுக்குப் பதில் சொல்ல வேண்டியவ னாவான் என்பதையும், ஸ்டாலினின் வாழ்நாளில் தன்னைக் காட்டிலும் அவரை ஆர்ப்பாட்டமாகப் புகழ்ந்தவர்கள் வேறு யாரும் இல்லை என்பது மிக அதீத எல்லைகளுக்குச் சென்றது என்பது உண்மைதான். 'செங்கொடியை ஒழித்துக்கட்ட செங்கொ டியை அசைப்பதில்' திறமைமிக்க முதலாளிய அதிகார வர்க்க அதிகாரிகளால் இப்புகழ்ச்சி ஊதிப் பெருக்கப்பட்டது. ஆனால் சாரத்தில் இப்புகழ்ச்சி பொதுமக்களது உணர்வின் தன்னியல் பான வெளிப்பாடுதான். சோவியத் யூனியனின் தொழிலாளரும் உழவரும் லெனினுக்கு விசுவாசமாக இருந்தது போலவே ஸ்டாலினுக்கும் விசவாசமாக இருந்தனர். காரணம் தாம்பெற்ற ஒவ்வொன்றுக்கும் காரணமாக இருந்தவர்கள் ஸ்டாலினும் லெனினும்தான் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

இந்த அத்தியாயத்தை மா சேதுங்கின் சொற்களைக் கொண்டு முடிக்கலாம்.

*சோவியத் யூனியன் முதல் சோசலிச அரசாகும். சோவியத் யூனியனின் பொதுவுடைமைக் கட்சி லெனினால் நிறுவப் பட்ட கட்சியாகும். சோவியத் கட்சியின் தலைமை, புரட் டல்வாதிகளால் கைப்பற்றப்பட்டுவிட்ட போதிலும், சோவி யத் மக்கள் திரளினரும் கட்சி உறுப்பினர்களும் ஊழியர்க ளும் நல்லவர்கள், அவர்கள் புரட்சியை விரும்புகிறார்கள். புரட்டல்வாதிகளின் ஆட்சி நீண்ட நாள் நீடிக்காது என்ற நம்பிக்கையில் உறுதியுடன் இருக்குமாறு தோழர்களை நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். (பீரி. 69-18-27).*

[1] ரசியக் கதையொன்றில் வரும் பாத்திரம். கோழைத்தனமும், குறுகல் நோக்கும் உடைய ஒரு அற்ப மனிதன் இவன். நெடிய பார்வை இல்லாத மனிதர்களைக் குறிக்கவே லெனின் இச்சொற்றொடரைப் பயன்படுத்துகிறார்.

[2] இரண்டாம் அகிலத்திலிருந்த சந்தர்ப்பவாதிகளை எதிர்த்துப் போராடி, பிறகு புரட்சிகரமான மூன்றாம் அகிலத்தை உருவாக்க லெனினின் தலைமையில் அணி திரண்டவர்கள்.

[3] ரசியாவில் சனிக்கிழமை விடுமுறை நாளாக இருந்தது. அந்த விடுமுறை நாளிலும் தமது உழைப்பை நல்க முன் வந்த தொழிலாளரின் இயக்கமே சப்போட்னிக் இயக்கமாகும்.

[2] எதிர்ப்புரட்சி வெண்படைத் தலைவர்களில் ஒருவன்.

அத்தியாயம் — 8

# பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சி

*பொதுவுடைமைப் புரட்சி என்பது மரபுவழிப்பட்ட உடைமை உறவுகளுடன் ஏற்படுத்திக் கொள்ளும் மிகத் தீவிரமான முறிவாகும். எனவே அப்புரட்சியின் வளர்ச்சி, மரபுவழிப்பட்ட கருத்துகளுடன் மிகத் தீவிரமான முறிவை உட்படுத்துகிறது என்பதில் வியப்பில்லை.*

— பொதுவுடைமை அறிக்கை

## 1. தேசிய விடுதலை

1949 அக்டோபரில் சீன மக்கள் குடியரசு அறிவிக்கப்பட்டது. இது ஒரு நீண்ட சிக்கல் மிகுந்த புரட்சிகரப் போரின் வெற்றிகரமான முடிவைக் குறித்தது. இப்புரட்சிகரப் போர், உள்நாட்டுப்போர், ஐப்பானிய எதிர்ப்புப்போர் இரண்டையும் உள்ளடக்கியதாகும். இது சீனச் செஞ்சேனை (தற்போதைய மக்கள் விடுதலைச் சேனை) உருவாக்கப்பட்டதுடன் துவங்கி சீனா முழுவதும் படிப்படியாக விரிவடைந்தது. அது சாரத்தில் ஒரு உழவர் போராகும் (மாதெநூ. 2.366)- நிலத்துக்காக நடத்தப்பட்ட ஒரு ஆயுதப் போராட்டமாகும். உழவர் கிளர்ச்சிகள் என்பன இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான சீன வரலாற்றில் காணப்படும் ஒரு அம்சமாகும். அக்கிளர்ச்சிகள் அனைத்தும் தோற்கடிக்கப்பட்டன. ஏனெனில் உழவர் வர்க்கம் ஒருவர்க்கம் என்ற முறையில் ஒரு புரட்சியை வழிநடத்திச் செல்லும் ஆற்றல் உடையது அல்ல. ஆனால் இப்போது நடந்தது ஒரு புதியவகை உழவர் புரட்சி. இதில் உழவர்கள் பாட்டாளி வர்க்கத்தாலும் அதன் முன்னணிப்படையான பொதுவுடைமைக் கட்சியாலும் வழிநடத்தப்பட்டனர். ஒரு புதியவகைச் சேனையே அதன் போராட்டச் சக்தியாக இருந்தது. அச்சேனை மக்கள் திரளினருடன் நெருக்கமாக இருந்த ஒன்று; அது ஜனநாயக மையத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. உற்பத்தி, நிர்வாகம் ஆகியவற்றிலும் போரிடுவதிலும் செயலூக்கம் கொண்டதாக இருந்தது; தான் சென்ற இடங்களிலெல்லாம் அது பாட்டாளி வர்க்க ஒழுக்க நெறிக்கும் மக்கள் சேவையில் தன்னைத் தியாகம்

செய்யும் பண்புக்கும் ஒரு நடைமுறை சார்ந்த எடுத்துக்காட்டாக விளங்கியது. இதன் விளைவாக, 1949-இல் விடுதலை ஈட்டப் பட்டபோது, சோசலிசம் கட்டுவதற்கான அனைத்துக் கடமைகளி லும் தலைமை வழங்கத் தயாராக இருந்த அனுபவம் பெற்ற ஊழியர் படையொன்று புதிய மக்கள் அரசாங்கத்தின் ஆணைக ளுக்குக் காத்திருந்தது. இத்துடன் புதிய மக்கள் அரசாங்கம், சோவியத் யூனியனிடமிருந்து மதிப்புமிக்க உதவியைப் பல ஆண்டுகள் பெற்றது. சோசலிசம் கட்டுவதில் பாடங்கள் பெற சோவியத் யூனியனின் நேர்மறை அனுபவம், எதிர்மறை அனுப வம் இரண்டும் அதன்முன் இருந்தன.

1949-ஆம் ஆண்டு கோடைகாலத்தில் ஒரு முடிவை நோக்கி வந்து கொண்டிருந்த ஆயுதப் போராட்டக் கால கட்டத்தை ஆய்வு செய்த மா சேதுங் கூறினார்:

> மார்க்சிய - லெனினியத் தத்துவத்தால் ஆயுதபாணியாக்கப் பட்ட, சுய விமர்சனம் என்ற முறையைக் கையாள்கிற, மக்கள் திரளினருடன் பிணைந்துள்ள சிறந்த கட்டுப்பாடு டைய ஒரு கட்சி, இத்தகைய ஒரு கட்சியின் தலைமையி லுள்ள ஒரு சேனை, இத்தகைய ஒரு கட்சியின் தலைமை யின் கீழ் அமைந்த அனைத்துப் புரட்சிகர வர்க்கங்கள், அனைத்துப் புரட்சிகரக் குழுக்களின் ஐக்கிய முன்னணி - இந்த மூன்று முதன்மையான ஆயுதங்களைக் கொண்டு நாம் பகைவனைத் தோற்கடித்துள்ளோம். நாம் ஒரு வளைவு சுளிவான பாதையில் பயணம் செய்திருந்தோம். நாம் நமது கட்சியில் வலது மற்றும் 'இடது' திசைவிலகல்கள் இரண் டுக்கும் எதிராகப் போராடியுள்ளோம். எப்போதெல்லாம் நாம் இந்த மூன்று விசயங்களில் கடும் தவறு செய்தோமோ, அப்போதெல்லாம் புரட்சி பின்னடைவுகளை அனுபவித் தது. தவறுகள், பின்னடைவுகள் ஆகியவற்றால் கல்வி புகட்டப்பட்டு நாம் மென்மேலும் மதியுடையவர்களா னோம். நமது காரியங்களை மேலும் சிறப்பாகக் கையாண் டோம். தவறுகளைத் தவிர்ப்பது என்பது எந்த அரசியல் கட்சிக்கும் மனிதனுக்கும் கடினமானது, ஆனால் கூடுமான வரை நாம் தவறுகளை மிகவும் குறைத்துக் கொள்ள வேண்டும். ஒருமுறை தவறு ஏற்பட்டால் நாம் அதைச்

*சரிசெய்ய வேண்டும். எவ்வளவு சீக்கிரம் எவ்வளவு முழுமையாகச் சரி செய்கிறோமோ அவ்வளவு நல்லது. (மா.தெ.நூ. 4.422).*

*தனக்கு முன்னால் நின்று கடமைகளை நிறைவேற்றுவதற்கு, கட்சி புதிய நிலைமைக்கேற்ப தன்னை மாற்றிக் கொள்வது அவசியமாக இருந்தது. போராட்ட மையம் போர்க் களத்திலிருந்து பண்ணைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் அரசாங்கத் துறைகளுக்கும் இடம் மாறியது தான் இந்தப் புதிய நிலைமை. இந்த நிலைமையில் கட்சி ஒரு புதிய எதிரியை அல்லது ஒரு புதிய வேடத்தில் உள்ள ஒரு பழைய எதிரியை எதிர் கொண்டது.*

*மிக விரைவில் நாம் நாடு முழுவதும் வெற்றி பெறுவோம். இந்த வெற்றி ஏகாதிபத்தயத்தின் கிழக்கு அணியை உடைத்து, மாபெரும் அனைத்துலக முக்கியத்துவம் பெறும். இவ்வெற்றியை வென்றெடுக்க மேலும் அதிகக் காலமும் முயற்சியும் தேவைப்படாது. ஆனால் அதை ஒன்றுதிரட்டி வலுப்படுத்துவதற்கு மேலும் அதிகக் காலமும் முயற்சியும் தேவைப்படும். கட்டுமாணப் பணியில் நமக்குள்ள ஆற்றலை முதலாளி வர்க்கம் சந்தேகிக்கிறது. ஏகாதிபத்தியவாதிகள் நினைக்கிறார்கள், உயிர் வாழ்வதற்கு இறுதியில் நாம் அவர்களிடம் பிச்சை ஏந்துவோம் என்று. வெற்றிபெற்றதும் நம் கட்சிக்குள் சில மனோநிலைகள் வளரக்கூடும். அகந்தை, தன்னைத் தானே வீரனாகக் கருதிக் கொள்ளும் மனப்பான்மை, செயலற்ற தன்மை, முன்னேற்றத்தைச் சாதிப்பதில் விருப்பமின்மை, இன்பநாட்டம், தொடர்ந்து கடின வாழ்வை மேற்கொள்வதில் விருப்பமின்மை ஆகியவையே அந்த மனோநிலைகள். வெற்றியால், மக்கள் நம்மிடம் நன்றியுணர்வு கொண்டவர்களாக இருப்பார்கள். நம் முகத்துக்கு எதிரே நம்மைப் புகழ்வதற்கு முதலாளிகள் முன்வருவார்கள். ஆயுத வலிமை கொண்டு பகைவனால் நம்மை வெற்றி கொள்ள முடியாது என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும் நமது அணிகளில் உள்ள பலவீனமான மனமுடையவர்களை முதலாளிகளின் புகழ்ச்சி வெற்றி கொள்ளும். எதிரிகளால் துப்பாக்கிகளைத்*

கொண்டு வெற்றி கொள்ளப்படாத இந்த எதிரிகளை எதிர்த்து நின்ற காரணத்தால் வீரர்கள் என்ற பெயருக்கு உரிய, ஆனால் சர்க்கரை தடவிய தோட்டாக்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாத சில பொதுவுடைமயாளர்கள் இருக்கக் கூடும். இத்தகைய தொரு நிலைமைக்கு எதிராக நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். (மா.தெ.நூ. 4.323).

எச்சரிக்கை மிகுந்த நம்பிக்கையுடன் தலைவர் மாவோ எதிர்காலத்தை நோக்கினார்.

சீனப்புரட்சி மகத்தானது. ஆனால் புரட்சிக்குப் பிறகு வரும் பாதை மேலும் நீளமானது, பணி மேலும் அதிகமானது, மேலும் கடினமானது. இது கட்சியில் இப்போது தெளிவுபடுத்தப்பட வேண்டும். நமது தோழர்கள் தன்னடக்கத்துடனும், விவேகத்துடனும், தமது வேலைப்பாங்கில் அகந்தையிலிருந்தும் அவசரத்தன்மையிலிருந்தும் விடுபட்டவர்களாகவும், இருக்குமாறு கற்பிக்கப்படவேண்டும். எளிய வாழ்வு, கடினமான போராட்டம் என்ற பாங்கைப் பாதுகாக்குமாறு தோழர்கள் கற்பிக்கப்படவேண்டும். விமர்சனம், சுய விமர்சனம் என்ற மார்க்சிய - லெனினியப் படைக் கருவி நம்மிடம் உள்ளது. நம்மால் மோசமான வேலைப் பாங்கை நீக்கிக் கொண்டு நல்ல வேலைப் பாங்கைப் பேண முடியும். நமக்குத் தெரியாமல் இருந்தவற்றை நம்மால் கற்றுக் கொள்ள முடியும். பழைய உலகை அழிப்பதில் மட்டும் நாம் சிறந்தவர்கள். ஏகாதிபத்தியவாதிகளிடம் இரந்துண்ணாமல் சீன மக்களால் வாழமுடியும் என்பது மட்டுமல்ல, ஏகாதிபத்திய நாடுகளில் இருப்பதைக் காட்டிலும் சிறந்ததொரு வாழ்வை அவர்களால் வாழவும் முடியும். (மா.தெ.நூ. 4.374).

சீனச் சமூகத்தில் ஏற்பட்ட மூன்று தீவிரமான மாறுதல்களின் புறவெளிப்பாடகவே மக்கள் குடியரசு பற்றிய அறிவிப்பு அமைந்தது. இம்மாறுதல்கள் கீழ் வருமாறு.

முதலாவது: தேசிய விடுதலைக்கான போராட்டத்தின் நிறைவு. (தைவான் தவிர) நாடு முழுவதும் ஏகாதிபத்திய ஒடுக்குமுறையிலிருந்து விடுவிக்கப்பட்டது மட்டுமல்ல, வர

லாற்றில் முதன்முறையாக, மக்கள் தொகையில் ஏறத்தாழ ஆறுசதவீத்தினராக இருந்த தேசிய இனச் சிறுபான்மையினர், ஹான் தேசிய இனமக்களுடன் சரிசமமான உரிமைகளைப் பெற்றனர்.

இரண்டாவது: முதலாளிய ஜனநாயகப் புரட்சியின் நிறைவு. நிலப்பிரபுத்துவ உறவுகள் அனைத்தும் ஒழித்துக் கட்டப்பட்டன. நாட்டுப் புறத்தில் உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில், நிலம் உழவர் வர்க்கத்திடையே பகிர்ந்தளிக்கப்பட்டது. நகரங்களில் தரகு முதலாளிகளுக்குச் சொந்தமான மூலதனம் பறி முதல் செய்யப்பட்டது. தேசிய முதலாளிகளோ தமது தொழிற்சாலை உடைமைகளைத் தக்க வைத்துக் கொண்டனர். ஆனால் கச்சாப் பொருள்கள், சந்தைகள், தொழிலாளர் நிலைமைகள் ஆகியவை அரசு கட்டுப்பாட்டுக்கு உட்பட்டன; அதேவேளையில் ஒரு பிரதிநிதித்துவ அரசாங்க அமைப்பு நிறுவப்பட்டது. இது அனைவர்க்கும் வாக்குரிமை என்ற அடிப்படையைக் கொண்டிருந்தது. தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்ற அரசியல் கட்சிகளின் கூட்டணி ஒன்றால் இந்த அரசாங்கம் ஆதரிக்கப்பட்டது.

மூன்றாவது: சோசலிசப் புரட்சியின் துவக்கம். நாட்டுப் புறத்தில் ஒருவருக்கொருவர் உதவி புரியும் குழுக்கள் உருவாக்கு மாறு உழவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். இவை பிறகு வேளாண் மைக் கூட்டுறவுகளாகவும் அதன் பிறகு கம்யூன்களாகவும் வளர்ச்சியடைந்தன. உழவர் சங்கங்களின் மூலம் செலுத்தப் பட்ட பாட்டாளி வர்க்கத் தலைமையின் காரணமாக, இந்த அடுத்தடுத்த கட்டங்கள் பணக்கார உழவர்களின் தீவிரமான எதிர்ப்பு இல்லாமல் நிறைவேற்றப்பட்டது. நகரங்களில் அரசும் தனியாரும் சேர்ந்த கூட்டு உடைமைக்கான ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளுமாறு தேசிய முதலாளிகள் ஊக்குவிக்கப்பட்ட னர். சோசலிசத் தொழில் வளர்ச்சியின் பொருட்டு வர்த்தகப் பயிற்சியும் நிர்வாக அனுபவமும் கொண்ட முன்னாள் தொழிற் சாலை உடைமையாளர்களின் ஒத்துழைப்பைப் பெறும் அனு கூலம் இந்த ஏற்பாட்டில் அடங்கியிருந்தது. கடைசியாக, லஞ்சம், ஊழல், அதிகார வர்க்கம் ஆகியவற்றுக்கு எதிராகத் திருப்பிவிடப்பட்ட 1952-ம் ஆண்டின் சீர்-செய் இயக்கத்திலி

ருந்து தொடங்கி ஒரு தொடர்ச்சியான மக்கள் திரள் இயக்கங்களைக் கட்சி துவக்கியது. இது பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சி (1966-68)யில் உச்சக் கட்டத்தை அடைந்தது. இந்த இயக்கங்கள் அகலத்திலும் ஆழத்திலும் ஒன்றன்பின் ஒன்றாக வளர்ந்தன. ஆனால் அவற்றுக்கு அடிப்படையாக இருந்த நோக்கம் ஒன்றுதான் - முன்முயற்சி எடுக்குமாறு மக்கள் திரளினருக்கு அறைகூவல் விடுத்து வர்க்கப் போராட்டத்தை இறுதிவரை நிறைவேற்றுவதுதான்: சிந்திக்கத் துணிக! பேசத்துணிக! செயல்படத் துணிக!

## 2. முரண்பாடுகளைக் கையாளுதல்

சோசலிச சமுதாயத்தில் முரண்பாடுகள் உள்ளனவா? அப்படியானால் அவற்றின் தன்மை என்ன? அவற்றை எவ்வாறு தீர்ப்பது?

இதற்கு விடை, முதலாவதாக, சோசலிச சமுதாயத்தில் முரண்பாடுகள் இருந்தே தீரவேண்டும். ஏனெனில் முரண்பாடுகள் எல்லாவிடத்திலும் உள்ளன.

எதிர்மறைகளின் ஒற்றுமை பற்றிய நியதி, பேரண்டத்தின் அடிப்படை நியதியாகும் என மார்க்சியத் தத்துவம் கருதுகிறது. இயற்கை உலகானாலும் சரி, மனித சமுதாயமானாலும் சரி, அல்லது மனிதனின் சிந்தனையானாலும் சரி - இந்த நியதி உலகு தழுவிய வகையில் செயல்படுகிறது. ஒரு முரண்பாட்டில் உள்ள எதிர்மறைகளுக்கு இடையில் ஒரே நேரத்தில் ஒற்றுமையும் இருக்கிறது, போராட்டமும் இருக்கிறது. இதுதான் பொருள்களை இயங்கவும் மாறவும் தூண்டுகிறது. முரண்பாடுகள் எல்லா இடங்களிலும் நிலவுகின்றன. ஆனால் அவை வெவ்வேறு பொருள்களுக்குரிய வெவ்வேறு தன்மைக்கு இணங்க மாறுபடுகின்றன. எந்த ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிப் போக்கிலோ அல்லது விசயத்திலோ, எதிர்மறைகளின் ஐக்கியம் நிபந்தனைக்குட்பட்டது, தற்காலிகமானது, மாற்றமடையக் கூடியது, எனவே சார்பு நிலையானது. ஆனால் எதிர்மறைகளின் போராட்டம் முற்றானது. இந்நியதி பற்றிய மிகத் தெளிவானதொரு விளக்கத்தை லெனின் வழங்கினார். நம் நாட்டில் ஒரு அதிகரித்து வரும் எண்ணிக்கையிலான மக்கள் இதைப் புரிந்து கொண்டுள்ளார்கள். ஆயினும் பலருக்கு இந்நியதியை ஒப்புக்

கொள்வது ஒரு விசயமாகவும், பிரச்சினைகளை ஆய்வு செய்து அவற்றைக் கையாள்வதில் இந்நியதியைப் பிரயோகிப்பது வேறு விசயமாகவும் உள்ளது. நமது சமுதாயத்தை முன்னோக்கித் தள்ளுகிறவை இதே முரண்பாடுகளாக இருந்தபோதிலும், நமது நாட்டில் மக்களிடையே இன்னும் முரண்பாடுகள் நிலவுகின்றன என்பதைப் பலர் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளத் துணிவதில்லை. ஒரு சோசலிச சமுதாயத்தில் முரண்பாடுகள் தொடர்ந்து நிலவுகின்றன என்பதைப் பலர் ஒப்புக் கொள்வதில்லை. இதன் விளைவாக, சமுதாய முரண்பாடுகளை எதிர் கொள்ளும்போது அவர்கள் கையாலாகாதவர்களாகவோ, செயலற்றவர்களாகவோ ஆகிறார்கள்; முரண்பாடுகளைச் சரியாகக் கையாளுதல், அவற்றுக்குச் சரியான தீர்வு காணுதல் என்ற இடைவிடாத இயக்கப் போக்கின் மூலமே சோசலிச சமுதாயம் மேலும் ஐக்கியப்பட்டும் வலுப்பட்டும் வளரும் என்பதை அவர்கள் புரிந்து கொள்வதில்லை. இக்காரணம் கருதி, விசயங்களை நமது மக்களுக்கும் முதலில் நமது ஊழியர்களுக்கும் விளக்கி, அவர்கள் ஒரு சோசலிச சமுதாயத்தில் உள்ள முரண்பாடுகளைப் புரிந்து கொள்ளுமாறும் அவற்றைக் கையாள்வதற்கான சரியான முறைகளைப் பயன்படுத்தக் கற்றுக் கொள்ளுமாறும் செய்ய வேண்டும். (மா.நா.க. 91, ஒப்: லெ.தொ.நூ. 38.360)

சோசலிச சமுதாயத்தில் முரண்பாடுகள் இருக்கவே செய்கின்றன என்றால், அவற்றின் தன்மை என்ன? அவை இருவகையானவை: மக்களிடையே உள்ள முரண்பாடுகள் ஒருவகை. இவை இயல்பாகவே பகைத் தன்மையற்றவை. அதாவது புரட்சியை ஆதரிக்கும் வர்க்கங்களிடையே உள்ள முரண்பாடுகள்; எடுத்துக்காட்டாக, பாட்டாளி வர்க்கத்துக்கும் உழவர் வர்க்கத்துக்குமிடையே உள்ள முரண்பாடு. ஒருபுறம் புரட்சியை ஆதரிக்கும் வர்க்கங்களுக்கும் மற்றோர்புறம் பழைய சுரண்டும் வர்க்கங்களின் எச்சங்களுக்குமிடையே (எடுத்துக்காட்டாக முன்னாள் நிலப்பிரபுக்கள்) உள்ள முரண்பாடுகள் இரண்டாவது வகை, சோசலிச சமுதாயத்தில் உள்ள இருவகை முரண்பாடுகளும் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்தில் உள்ள இரு கூறுகளுக்குப் பொருத்தமாக உள்ளன; மக்களுக்கான ஜனநாயகம், பிற்போக்காளர்கள் மீதான சர்வாதிகாரம் என்பனவே இக்கூறுகள்.

இவ்வாறு, சோசலிச சமுதாயத்தில் பகையற்ற முரண்பாடுகள், பகை முரண்பாடுகள் என்ற இருவகை முரண்பாடுகளும் நிலவுகின்றன. மேலும், சரியாகக் கையாளப்படா விட்டால் பகையற்ற முரண்பாடுகள் பகை முரண்பாடுகளாக மாறும்; சரியாகக் கையாண்டால் பகை முரண்பாடுகள் பகையற்ற முரண்பாடுகளாகவும் மாறும். பாட்டாளி வர்க்கத்துக்கும் உழவர் வர்க்கத்துக்கும் இடையே உள்ள முரண்பாடு பகையற்ற முரண்பாடு. தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலதனத்தை வழங்குவதற்கு வேண்டிய ஒரு உபரியை வேளாண்மை உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்குத் தேவையான யந்திரங்களைப் பெற தொழில்துறையை சார்ந்திருக்க வேண்டியுள்ளது; ஆயினும் பழைய சமுதாயத்திலிருந்து பெறப்பட்ட வேறுபாடு இருக்கிறதே அதாவது நகரத்துக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடையே உள்ள வேறுபாடு (ஜெ.சி.64) — இதன் காரணமாக தொழில் துறை உழைப்பைக் காட்டிலும் வேளாண்மைத் துறை உழைப்பு உற்பத்தித்திறன் குறைந்ததாக உள்ளது. இம்முரண்பாடு சரியாகக் கையாளப்படாவிட்டால் வேளாண்மை வளர்ச்சி, தொழில் துறை வளர்ச்சி இரண்டுக்கும் இடையே ஒரு சம நிலையைப் பராமரிக்க முடியாது. பிறகு இரண்டு வர்க்கங்களுக்குமிடையே உள்ள முரண்பாடு பகைத் தன்மை உள்ளதாகி விடும். மாறாக, பழைய சீனாவில் தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே உள்ள முரண்பாடு பகைத் தன்மை உடையதாக இருந்தது. காரணம் அது சுரண்டுபவர்களுக்கும் சுரண்டப்படுபவர்களுக்கும் இடையே உள்ள முரண்பாடு. ஆனால் இரண்டாம் அத்தியாயத்தில் விளக்கப்பட்டது போல, சீனப் புரட்சியின் சிறப்பான நிலைமைகளில் இம்முரண்பாடு, பகைத் தன்மையுள்ளதாக விளங்கும் வகையில் கையாளப்பட்டது. ஆயினும் அது மறைந்து விடவில்லை. அரசும் தனியாரும் சேர்ந்த கூட்டு உடைமையின்கீழ், முன்னாள் தொழிற்சாலை அதிபர்கள் தமது மூலதனத்துக்கான ஒரு நிலையான வட்டியை பல்லாண்டுகள் தொடர்ந்து பெற்றுக் கொண்டு வந்தனர். இது இன்னும் ஒரு சுரண்டல் வடிவமாக இருந்தது. கடுமை குறைந்த வடிவமாக இருந்த போதிலும் சுரண்டல் சுரண்டல்தானே. பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்த்தக்துக்கும் இடையே உள்ள முரண்பாடு இன்னும் இறுதியாகத் தீர்க்கப்படவில்லை.

இக்காரணங்களால், சோசலிச சமுதாயத்தில் வர்க்க முரண் பாடுகளும் வர்க்கப் போராட்டமும் தொடர்ந்து நிலவுகின்றன. இவற்றுடன் முதலாளியத்துக்குத் திரும்பிச் செல்லும் சாத்தியப் பாடும் நிலவுகிறது என்பதைப் புரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

சீனாவில் முதன்மையான சோசலிச உருமாற்றம், உடைமை யைப் பொறுத்தவரை முழுமையாகச் செய்து முடிக்கப்பட் டுள்ளது; முந்திய புரட்சிகரக் கால கட்டங்களின் சிறப்புப் பண்புகளாக இருந்த விரிந்த அளவு கொந்தளிப்பு மிக்க வர்க்கப் போராட்டங்கள் பெரும்பாலும் முடிவுக்கு வந்து விட்டன; ஆயினும் தூக்கியெறியப்பட்ட நிலப்பிரபு வர்க் கம், தரகு வர்க்கம் ஆகியவற்றின் எச்சங்கள் உள்ளன. இன்னும் ஒரு தேசிய முதலாளி வர்க்கம் இருக்கிறது. சிறு முதலாளி வர்க்கத்தை மறுவார்ப்புச் செய்வது இப்போது தான் துவங்கப்பட்டுள்ளது. வர்க்கப் போராட்டம் நிச்சய மாக முடிந்து விடவில்லை. பாட்டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையே உள்ள வர்க்கப் போராட்டம், பல்வேறு அரசியல் சக்திகளுக்கு இடையில் உள்ள வர்க்கப் போராட்டம், சித்தாந்தத் துறையில் பாட் டாளி வர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையி லான வர்க்கப் போராட்டம் தொடர்ந்து நீடிக்கும். அது வளைவு சுளிவானதாகவும் சில சமயங்களில் மிகவும் கடுமையானதாகவும் இருக்கும். பாட்டாளி வர்க்கம் தனது சொந்த உலகக் கண்ணோட்டத்துக்கு உகந்தவாறு உலகை உருமாற்ற முனைகிறது. அதேபோலத்தான் முதலாளி வர்க்க மும் தனது சொந்த உலகக் கண்ணோட்டத்துக்கு உகந்தவாறு உலகை உருமாற்ற முனைகிறது. இதில் எது வெற்றிபெறும், சோசலிசமா அல்லது முதலாளியமா என்பது இன்னும் உண்மையில் தீர்க்கப்படவில்லை. (மா.நா.க. 115).

வர்க்கப் போராட்டம், உற்பத்திக்கான போராட்டம், விஞ் ஞானப் பரிசோதனை ஆகியவைதான் ஒரு வலுவான சோசலிச நாட்டைக் கட்டுவதற்கான மூன்று பெரும் புரட்சிகர இயக்கங்களாகும். பொதுவுடமையாளர்கள் அதி காரத்திலிருந்து விடுபட்ட, புரட்டல் கொள்கையாலும் வறட்டுக் கொள்கையாலும் பாதிக்கப்படாத, என்றென்றும்

வெல்லப்பட முடியாதவர்களாக விளங்க நிச்சயமான உத்தி ரவாதமாக இருப்பவை இந்த இயக்கங்களேயாகும். பரந்து பட்ட உழைக்கும் மக்கள் திரளினருடன் ஐக்கியப்பட்டு ஒரு ஜனநாயக சர்வாதிகாரம் கைகூடி வரச் செய்வதற்குப் பாட்டாளி வர்க்கத்துக்கு ஆற்றல் வழங்கும் ஒரு நம்பத் தகுந்த உத்திரவாதமாக இருப்பவை இந்த மூன்று இயக்கங் களே ஆகும். இந்த இயக்கங்கள் இல்லாத நிலையில் நிலப்பிரபுக்களும் பணக்கார உழவர்களும் எதிர்ப் புரட்சியா ளரும் தீயமனிதர்களும் எல்லாவகை அரக்கர்களும் தவழ்ந்து வர அனுமதிக்கப்படுகையில் இவற்றையெல்லாம் பார்க்கா மல் நமது தோழர்கள் தம் கண்களை மூடிக்கொண்டும், பல சமயங்களில் பகைவனுக்கும் நம்மவர்க்கும் இடையே பாகுபாடு செய்யத் தவறி, பகைவனுடன் ஒத்துழைத்து ஊழல்பட்டு நெறிபிறழ்ந்தாலோ, இவ்வகையில் நமது ஊழியர்கள் எதிரி முனைக்குள் இழுக்கப்பட்டு விட்டாலோ அல்லது எதிரிகள் நமது அணிக்குள் புகுந்து கொண்டாலோ, நமது பாட்டாளிகள், உழவர்கள், அறிவாளிகள் ஆகியோர் எதிரியின் மென்மையான மற்றும் கடினமான நடைமுறைத் தந்திரங்களுக்கு எதிராகப் பாதுகாப்பற்றவர்களாகி விட் டாலோ - தேச அளவில் ஒரு எதிர்ப் புரட்சிகரமான பழைய நிலையின் மீட்பு தவிர்க்க முடியாமல் நிகழ்வதற்கும், மார்க்சிய-லெனினியக் கடசி ஐயத்துக்கிடமின்றி ஒரு புரட் டல் கட்சியாகவோ அல்லது ஒரு பாசிசக் கட்சியாகவோ மாறுவதற்கும், சீனா முழுவதும் தன் வண்ணத்தை மாற்றிக் கொள்வதற்கும் நீண்டகாலம் பிடிக்காது. பல ஆண்டுகள் அல்லது ஒரு பத்தாண்டு அல்லது உயர்ந்த பட்சம் பல பத்தாண்டுகளேகூடப் போதுமானதாகிவிடும். (மா.மே. 40)

சோசலிச சமுதாயம் ஒரு கணிசமான நீண்ட வரலாற்றுக் கால கட்டத்தைத் தழுவிய ஒன்றாகும். சோசலிச வரலாற்றுக் காலகட்டத்தில் இன்னும் வர்க்கங்கள், வர்க்க முரண்பாடு கள், வர்க்கப் போராட்டங்கள், சோசலிசப் பாதைக்கும் முதலாளியப் பாதைக்கும் இடையில் உள்ள போராட்டம், முதலாளியம் திரும்பக் கொண்டு வரப்படும் அபாயம் ஆகியவை உள்ளன. நாம் இப் போராட்டத்தின் நீடித்த, சிக்கலான தன்மையைப் புரிந்துகொள்ள வேண்டும்; நமது விழிப்புணர்வை உயர்த்திக்கொள்ள வேண்டும். நாம் சோச

*லிசக் கல்வியை நடத்த வேண்டும். நாம் வர்க்க முரண்பாடு களைச் சரியாகப் புரிந்து கொண்டு அவற்றைச் சரியாகக் கையாள வேண்டும். நமக்கும் பகைவனுக்கும் இடையே உள்ள முரண்பாடுகளையும் மக்களிடையே உள்ள முரணபா டுகளையும் பாகுபடுத்திப் பார்க்கவும், அவற்றைச் சரியாகக் கையாளவும் வேண்டும். இல்லாவிடில் நம் நாட்டைப் போன்ற ஒரு சோசலிச நாடு தனது எதிர்மறையாக மாறி, சீரழிந்து விடும்; ஒரு முதலாளிய மீட்சி நிகழ்ந்து விடும். (பீரி. 69-18. 15)*

### 3. முதலாளியப் பாதை

*1937* ஆம் ஆண்டில் மா சேதுங் எழுதினார்:

*வர்க்கங்கள் நிலவும் வரை பொதுவுடைமைக் கட்சிக்குள் சரியான கருத்துகளுக்கும் தவறான கருத்துகளுக்கும் இடையில் உள்ள முரண்பாடுகள், கட்சிக்குள் வர்க்க முரண்பாடு கள் ஏற்படுத்துகிற எதிரொளிப்பாகும். முதலாவதாக சில பிரச்சினைகளைப் பொறுத்தவரை, இத்தகைய முரண்பாடு கள் பகைத் தன்மையுள்ள முரண்பாடுகளாகப் புலப்படா மல் இருக்கலாம். ஆனால் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியுடன், அவை வளர்ச்சி பெற்று பகைத் தன்மையுள் ளவையாக மாறும். சோவியத் யூனியனின் பொதுவுடை மைக் கட்சி காட்டுவது என்னவென்றால், லெனின், ஸ்டாலின் ஆகியோரின் சரியான சிந்தனைக்கும், டிராட்ஸ்கி, புகாரின் முதலியவர்களின் தவறான சிந்தனைக் கும் இடையிலான முரண்பாடு முதலில் ஒரு பகைத் தன்மையுள்ள வடிவத்தில் தன்னைப் புலப்படுத்திக் கொள் ளவில்லை. ஆனால் பிறகுதான் அது பகையாக வளர்ச்சி பெற்றது. சீனப் பொதுவுடைமைக் கட்சியிலும் இதே போன்ற நிகழ்வுகள் உள்ளன... தற்போது நமது கட்சியில் உள்ள சரியான சிந்தனைக்கும் தவறான சிந்தனைக்கும் இடையிலுள்ள முரண்பாடு ஒரு பகைத் தன்மையுள்ள வடிவத்தில் தன்னைப் புலப்படுத்தவில்லை. தவறுகளை இழைத்துள்ள தோழர்கள் அவற்றைத் திருத்திக் கொள்ள முடியுமென்றால், அம்முரண்பாடுகள் பகைமையாக மாறா. எனவே கட்சியானது, ஒருபுறம் தவறான சிந்தனைக்கு எதிரான தீவிரமான போராட்டமொன்றை நடத்தவேண்டும்.*

மற்றோர்புறம், தவறுகளை இழைத்துள்ள தோழர்கள் விழித்தெழுவதற்கு நிறைய வாய்ப்பு தரவேண்டும். இப்படியிருக்கும்போது, மிகையான போராட்டம் பொருத்தமற்றது என்பது வெளிப்படை. ஆனால் தவறுகளைச் செய்துள்ளவர்கள் அவற்றில் விடாப்பிடியாக இருந்து அவற்றை மேலும் ஆழப்படுத்தினால் இந்த முரண்பாடு பகையாக வளர்வதற்கான சாத்தியப்பாடு இருக்கும். (மா.தெ.நூ.1.344)

பண்பாட்டுப் புரட்சியில் மக்கள் திரளினர் 'எல்லாவகையான பேய்களையும் அரக்கர்களையும் அம்பலப்படுத்தவும் பொறுப்பில் உள்ளவர்களின் பணியில் உள்ள குறைபாடுகள், தவறுகள் ஆகியவற்றை விமர்சிக்கவும்' கூட்டங்களை நடத்துமாறு ஊக்குவிக்கப்பட்டார்கள் (பீரி. 66-33.7). இக் கூட்டங்களின் மூலம் லியு ஷா-சியின் தலைமையின் கீழ் மா சேதுங்குக்கு எதிராக கட்சித் தலைமைக்குள் ஒரு சிறு குழு பல ஆண்டுகள் செயல்பட்டு வந்தது தெரியவந்தது. இச் சிறுகுழு தேசிய முதலாளி வர்க்கத்தின் ஒரு பிரிவின் நலன்களை பிரதிநிதித்துவப் படுத்தியது.

சீனத்தின் குறிப்பிட்ட நிலைமைகளில் தேசிய முதலாளி வர்க்கமானது, நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்தில், தொழிலாளர் - உழவர் நேச அணியின் பக்கம் வென்றெடுக்கப்பட்டது என்பது இரண்டாம் அத்தியாயத்தில் சுட்டிக் காட்டப்பட்டது:

நமது நாட்டில் பாட்டாளி வர்க்கத்துக்கும் தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் இடையிலுள்ள முரண்பாடு, மக்களிடையே உள்ள முரண்பாடு என்ற வகையினத்தைச் சேர்ந்தது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் இரண்டுக்கும் இடையிலுள்ள வர்க்கப் போராட்டம் மக்கள் அணிகளுக்குள்ளேயே நடக்கும் போராட்டமாகும். ஏனெனில் சீன தேசிய முதலாளி வர்க்கம் இரட்டைத் தன்மை உடையது. முதலாளிய ஜனநாயகப் புரட்சிக் கட்டத்தில் அதன் தன்மையில் ஒரு புரட்சிகரமான பகுதியும் அதேபோல ஒரு சமரசப் பகுதியும் இருந்தன. சோசலிசப் புரட்சிக் கட்டத்தில் இலாபத்துக்காகப் பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டுவது என்பது தேசிய முதலாளி வர்க்கத்தின் தன்மையில் உள்ள ஒரு பகுதியாக அமைகிறது. அரசியல் சட்டத்துக்கு அது தரும் ஆதரவும்

சோசலிச உருமாற்றத்துக்கு அது காட்டும் விருப்பமும் மற்றொரு பகுதியாக அமைகின்றன. தேசிய முதலாளி வர்க்கம் ஏகாதிபத்தியவாதிகள், நிலப்பிரபுக்கள், அதிகார வர்க்க முதலாளி வர்க்கம் ஆகியோரிடமிருந்து வேறுபடு கின்றது. தேசிய முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையில் உள்ள முரண்பாடு, சுரண்டுவோ ருக்கும் சுரண்டப்படுவோருக்கும் இடையில் உள்ள முரண் பாடாகும்; எனவே பகைத் தன்மை உடையது. ஆனால் சீனாவில் திட்டவட்டமான நிலைமைகளில் இந்த பகைத் தன்மை உள்ள முரண்பாடு முறையாகக் கையாளப்படுமா னால், ஒரு பகைத் தன்மையற்ற முரண்பாடாக அதை உருமாற்ற முடியும்; அமைதியான வழிமுறைகளைக் கொண்டு தீர்க்கப்படவும் முடியும். ஆயினும் நாம் இம்மு ரண்பாட்டை சரியாகக் கையாளாமல், தேசிய முதலாளி வர்க்கத்துடன் ஐக்கியப்படுதல், விமர்சித்தல், கல்வி புகட் டல் என்ற கொள்கையைப் பின்பற்றாமல் இருந்தாலோ அல்லது நமது இக்கொள்கையை தேசிய முதலாளி வர்க்கம் ஏற்றுக்கொள்ளாமல் போனாலோ, இந்த முரண்பாடு நமக் கும் பகைவனுக்கும் உள்ள முரண்பாடாக மாறும். (மா.நா.க. 82)

இம் முரண்பாட்டைச் சரியாக கையாண்டதன் காரணமாக, தேசிய முதலாளி வர்க்கத்தின் பெரும்பாலான உறுப்பினர்கள் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரத்துக்குத் தம் ஆதரவைத் தந்தனர். ஆனால் ஒரு முதலாளிய சீனாவை விரும்பிய சிலர் புரட்சியின் தொடர்ந்த முன்னேற்றத்தை எதிர்த்து, எதிர்ப் புரட்சிச் சக்திகளு டன் தம்மை இணைத்துக் கொண்டனர். தேசிய முதலாளி வர்க்கத்தின் இந்தப் பிரிவின் நலன்களுக்காகத்தான் கட்சித் தலைமைக்குள் லியு ஷா-சி சேவை புரிந்தார். மா சேதுங்குக்கு அவர் காட்டிய எதிர்ப்பு, முதலாளிய ஆதரவு சக்திகளுக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையே இருந்த முரண்பாட்டை வெளிப்படுத்தியது. இம்முரண்பாடு துவக்கமுதலே இருந்து வந்தது, ஜப்பானுக்கு எதிரான போர் முடிந்ததும் 1945-க்குப் பிறகு கடுமையாகியது; 1949க்குப் பிறகு முதலாளிய ஜனநாயகப் புரட்சி சோசலிசப் புரட்சியாக மாறியபோது, இது மேலும் கடுமையானதாகியது.

லியு ஷா-சியால் பின்பற்றப்பட்ட வழி, அது சில சமயங்க ளில் ஒரு வலது வடிவத்திலும், சில சமயங்களில் ஒரு 'இடது' வடிவத்திலும் முன் வைக்கப்பட்ட போதிலும், உள்ளடக்கத்தில் அது முரணற்ற சந்தர்ப்பவாதம் ஆகும். வடிவத்தில் இருந்த வேறுபாடு, முதலாளிய, சிறுமுதலாளியச் சித்தாந்தத்துக்கே சிறப்பாக உரிய ஊசலாட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கத்துடன், நடைமுறைத் தந்திர காரணங்களால் ஏற்பட்ட ஒன்றாகும். முன்னேறிச் செல்வதா அல்லது பின்வாங்குவதா என்பதை கட்சி விவாதித்துக் கொண்டிருந்த போது, லியு ஷா-சி பின்வாங்குவதை ஆதரித்தார். முன்னேறிச் செல்வது என்று கட்சி முடிவெடுத்தபோது தோல்வி என்ற அபாயத்தைச் சந்திக்கும் அளவுக்கு மிகவேகமாகச் செல்வதை லியு ஷா-சி ஆதரித்தார். போருக்குப் பிந்திய காலகட்டத்தில் அடுத்தடுத்துப் பல பிரச்சி னைகளில் அவர் எடுத்த நிலைப்பாட்டில் இருந்து, துவக்கத்தில் பகையற்ற தன்மை கொண்டிருந்த முரண்பாட்டின் வளர்ச்சியைப் பார்க்கலாம்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின், விடுதலை பெற்ற நாடுகளில் இருந்த பொதுவுடைமைக் கட்சிகள் தாம் முன் எப்போதையும்விட மேலும் வலுவுள்ளவையாக இருப்பதைக் கண்டன. எதிர்ப்புப் போரில் அக்கட்சிகள் வகித்த தலைமையின் மூலம் மக்கள் திரளினரின் ஆதரவை அவை வென்றெடுத்தன. முதலாளி வர்க்கமோ பிளவுபட்டு அவமதிப்புக்குட்பட்டது. இக்கட்சிகள் ஒரு தேர்வை மேற்கொள்ள வேண்டியிருந்தது. சோசலிசப் புரட்சியை நோக்கி மக்களை வழிநடத்திச் செல்வது அல்லது ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, பழைய அமைப்பை மீண்டும் நிறுவுவதற்கு முதலாளி வர்க்கத்துக்கு உதவுவது — இதில் ஏதேனும் ஒன்றை அக்கட்சிகள் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டியிருந்தது. அது அடிப்படையில் சோசலிசப் பாதையா அல்லது முதலாளியப் பாதையா என்ற தேர்வுதான். மேற்கு ஐரோப்பியக் கட்சிகள் முதலாளியப் பாதையைத் தேர்ந்தெடுத் துக் கொண்டன. சீனாவிலும்கூட, லியு ஷா-சி உள்ளிட்ட சில கட்சித் தலைவர்கள் இப்பாதையைப் பரிந்துரைத்தார்கள். இது புரட்சிகரப் படைகளைக் கோமிண்டாங்கின் கட்டுப்பாட்டில் வைக்கிற நிபந்தனைகளின் பேரில் கோமிண்டாங்குடன் ஏற்படுத் திக் கொள்ளும் ஒரு கூட்டாக அமைந்திருக்கும். மா சேதுங்கின்

தலைமையின் காரணமாக சீனப் பொதுவுடைமையாளர்கள் தொடர்ந்து போராட முடிவு செய்தனர்.

நாட்டுப்புறத்தில் நிலப்பிரபுத்துவ உறவுகளை ஒழித்துக் கட்டும் நோக்கத்துடன் நிலச் சீர்திருத்தம் கட்சியால் திட்டமிடப் பட்டது. நிலப்பிரபுக்கள், பணக்கார உழவர்கள் ஆகியோருக்குச் சொந்தமான உடைமைகளைப் பற்றிய ஒரு கவனமான மதிப்பீடு செய்த பிறகு, அவர்களது உபரி நிலங்களை உழவர் சங்கங்கள் எடுத்து அவற்றை வறிய உழவர்களிடையே மறுபங்கீடு செய்ய வேண்டியிருந்தது. இந்த வழி, சிறிது காலம் லியு ஷா-சியால் சிதைவுக்குள்ளாக்கப்பட்டது. மறுபங்கீட்டின் நோக்கம் ஏழை உழவர்கள் அனைவருக்கும் நடுத்தர உழவர்களின் அந்தஸ்தை வழங்குவதுதான் என்று நம்புமாறு அவர்களை லியு ஷா-சி ஊக்குவித்தார். வேளாண்மை உற்பத்தி அன்றிருந்த நிலையில் இது சாத்தியமற்றதாக இருந்தது. எனவே இத்தவறான வழி மா சேதுங்கால் திருத்தப்படாமல் இருந்திருந்தால் நிலச்சீர்திருத்த இயக்கம் தோல்வியடைந்திருக்கும் (மா.தெ.நூ. 4.197)

நிலப்பிரபுத்துவ உறவுகளை ஒழித்துக் கட்டிய பிறகு எழுந்த கேள்வி, அடுத்த கட்டம் எது என்பதுதான். வேளாண்மை ஒரு சோசலிச அடிப்படையில் வளர்வதா அல்லது ஒரு முதலாளிய அடிப்படையில் வளர்வதா? ஒருவருக்கொருவர் உதவி செய்யும் குழுக்களின் மூலமாக கூட்டுறவுகளையும் கூட்டுமயமாக்குதலை யும் நோக்கி முன்னேற, இன்னும் ஏழை உழவர்களையே சார்ந்திருப்பது கட்சி வழியாக இருந்தது. வேளாண்மை உபரி, கனரகத் தொழிலை உருவாக்குவதற்கான ஓர் அடிப்படையை வழங்க வேண்டியிருந்தது. ஆனால் இந்த உபரியில் ஒரு பகுதி சிறு ரகத் தொழிலில் முதலீடு செய்யப்பட வேண்டியிருந்தது. இதனால் தொழில்களுக்கு வேண்டிய பயிர்களுக்கான கிராக்கி ஏற்படும். போதுமான அளவு நுகர்வுப் பண்டங்களை உழவர் வர்க்கத்தினர் பெறும் வாய்ப்பும் ஏற்படும். இதன் காரணமாக உழவர் வர்க்கத்தினர்மேல் தேவையற்ற சுமையைத் திணிப்பது தவிர்க்கப்படும். இந்த வழி லியு ஷா-சியால் எதிர்க்கப்பட்டது. அவர் கீழ்க்கண்டவாறு வழக்காடினார்: யந்திரங்கள் இல்லாமல் கூட்டுமயமாக்குதல் என்பது சாத்தியமில்லை; எனவே தொழில் வளர்ச்சி சாதிக்கப்படும் வரை காத்திருக்க வேண்டும். இதற்கி டையில் முதலாளிய வழிகளில் வேளாண்மையை வளர்க்க

வேண்டும். அதாவது நிலத்தை வாங்கவும் விற்கவும் அனுமதிக்க வேண்டும். கூலி உழைப்பாளிகளை அமர்த்திக்கொள்ள அனும திக்க வேண்டும். 'எழுபது சதவீத உழவர்கள் பணக்கார உழவர்கள் ஆகும்போதுதான் கூட்டுமயமாக்குதல் என்பது பற் றிப் பேச முடியும்' என்றார் அவர். சோவியத் யூனியனில் புகாரின் முன்வைத்த விழியிகத்தின் சாயலை லியு ஷா-சியின் வழி கொண்டுள்ளது புலப்படும். வேளாண்மையில் ஒரு சுதந்தி ரச் சந்தையை அனுமதித்தால், குலாக்குகள் 'சோசலிசத்துக்கு வளர்ந்து செல்வார்கள்' என்று புகாரின் வாதிட்டார்.

கூட்டுறவு இயக்கம் 1950களின் நடுப்பகுதியில் விரைவான வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்தபோது, அதன் வேகத்தைக் குறைக்க முயற்சி செய்தார் லியு ஷா-சி. அவரது வேலை இதிலிருந்துதான் தொடங்கியது. அவரை மீறியும் அதுவேகமாக முன்னேறிச் சென்றபிறகு, அதீதமான சமத்துவக் கொள்கை ஒன்றை அவர் முன்வைத்தார். நிலச் சீர்திருத்தத்தின்போதும் அவர் இத்தகைய கருத்தை முன்வைத்திருந்தார். பிறகு, மோச மான மகசூல்கள் அடுத்தடுத்து நேரிட்டு இந்த இயக்கம் சிக்கல்களுக்கு ஆளானபோது, ஒரு சுதந்திரச் சந்தை, தனியார் முயற்சிக்கான சுதந்திரம் ஆகியவற்றுக்காக அவர் வழக்காடினார். 'சுயநலத்தை எதிர்த்துப் போராடுமாறும், புரட்டல் வாதத்தை விமர்சிக்குமாறும்' — அதாவது தம்மிடத்திலும் பிறரிலும் இருக்கிற முதலாளியத் தனிமனிதக் கொள்கையின் அனைத்து வடிவங்களையும் சுயநலத்தையும் எதிர்த்துப் போராடுமாறு — பாட்டாளிகளுக்கு கட்சி அறைகூவல் விடுத்தபோது, லியு ஷா-சி 'தன்னைத்தானே பண்படுத்திக் கொள்ளுதல்' என்ற கருத்தையும் பொருள்வகை ஊக்குவிப்புகளைப் பயன்படுத்தல் என்ற கருத் தையும் முன்வைத்தார்.

எனவே துவக்கம் முதலே கட்சித் தலைமைக்குள் இரண்டு வழிகளுக்கிடையே — மா சேதுங்கால் பிரதிநிதித்துவப் படுத்தப் பட்ட பாட்டாளி வர்க்க வழி, லியு ஷா-சியால் பிரதிநிதித்துவப்ப டுத்தப்பட்ட முதலாளிய வழி ஆகியவற்றுக்கிடையே — ஒரு முரண்பாடு இருந்து வந்தது; முதலாளிய வழி ஒரு சமயம் வலப்பக்கமும், மற்றொரு சமயம் 'இடப்' பக்கமும், ஆனால் எல்லாச் சமயங்களிலும் பாட்டாளி வர்க்க வழிக்கு எதிரான முறையில் திசைவிலகியது.

சோவியத் யூனியனின் குருஷ்சேவ் மற்றும் புதிய புரட்டல் வாதிகள் காட்டிய உதாரணத்தால் ஊக்குவிக்கப்பட்டு, லியு ஷா-சியும் அவரது சிறு குழுவும் சீனத்தில் இதேபோன்று அதிகாரத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டனர். அவர்களது எண் ணிக்கை பெரிதாக இருக்கவில்லை; ஆனால் கட்சித் தலைமை யில் அவர்கள் சில முக்கியமான பதவிகளை வகித்தனர். அவற்றின் மூலம் பரந்து விரிந்த செல்வாக்கைச் செலுத்தவும், அணிகளுக்குத் தவறாக வழிகாட்டவும் அவர்களைக் குழப்பவும் முடிந்தது. 1966 ஆம் ஆண்டு வசந்தகாலத்தில் இப் பிரச்சினை உச்சகட்டத்தை அடைந்தது. மே 16 ஆம் நாள் மா சேதுங்கால் வரையப்பட்ட ஒரு சுற்றறிக்கை, கட்சி உறுப்பினர்கள் அனைவ ருக்கும் மத்தியக் குழுவால் அனுப்பப்பட்டது. இந்த அறிக்கை யில் சொல்லப்பட்டவை கீழ்வருமாறு:

முதலாளி வர்க்கத்தின் இந்தப் பிரதிநிதிகள், மத்தியக் குழு, கட்சி, மத்திய, மாநில, நகராட்சி, தன்னாட்சிப் பிரதேச மட்டங்களில் உள்ள அரசாங்கம் மற்றும் இதர துறைகள் ஆகியவற்றில் பெரும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.

முழுக் கட்சியும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சி யின் மாபெரும் பதாகையை உயர்த்திப் பிடிக்க வேண்டும். கட்சியையும் சோசலிசத்தையும் எதிர்க்கிற 'கற்றறிந்த பண்டி தர்கள்' எனக் கூறப்படுபவர்களின் பிற்போக்கு முதலாளிய நிலைபாட்டை முற்றிலுமாக அம்பலப்படுத்த வேண்டும். நடைமுறைசாரா ஆராய்ச்சிப் பணி, கல்வி, பத்திரிக்கைத் துறை, இலக்கியம் மற்றும் கலைப் பிரசுரம் ஆகிய துறைகளில் உள்ள பிற்போக்கு முதலாளியக் கருத்துக்களை முற்றிலுமாக மறுதலிக்க வேண்டும். இந்தப் பண்பாட்டுத் துறை

களில் தலைமையைக் கைப்பற்ற வேண்டும். இதைச் சாதிக்க, கட்சிக்குள்ளும், அரசாங்கத்துக்குள்ளும் இராணு வத்துக்குள்ளும் பண்பாட்டுத் துறைகள் அனைத்துக்குள்ளும் நுழைந்து கொண்டுள்ள முதலாளி வர்க்கப் பிரதிநிதிகளை விமர்சிப்பதும் மறுதலிப்பதும், அவர்களை அப்புறப்படுத் துவதோ அல்லது அவர்களில் சிலரை வேறு நிலைகளுக்கு மாற்றுவதுமோ அவசியமானதாகும்.

கட்சி, அரசாங்கம், இராணுவம், பல்வேறு பண்பாட்டு வட்டாரங்கள் ஆகியவற்றுக்குள் நுழைந்து கொண்டுள்ள அந்த முதலாளி வர்க்கப் பிரதிநிதிகள் எதிர்ப் புரட்சிப் புரட்டல் கும்பலாவர். நிலைமைகள் முதிருமானால், அவர் கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஒரு முதலாளி வர்க்க சர்வாதிகாரமாக மாற்றிவிடுவார்கள். சிலரை நாம் ஏற்கனவே அடையாளம் கண்டுள்ளோம்; சிலரை இன்னும் அடையாளம் காண வில்லை; சிலர் இன்னும் நமது நம்பிக்கைக்கு உரியவர்க ளாக இருக்கிறார்கள்; நமது வாரிசுகளாகப் பயிற்சி அளிக் கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எடுத்துக்காட் டுக்கு குருஷ்சேவைப் போன்றவர்கள். நமக்கருகே இன்னும் மொய்த்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லா மட்டங்களிலும் உள்ள கட்சிக் குழுக்கள் இவ்விசயத்தில் முழுக் கவனம் செலுத்த வேண்டும். *(பீரி. 67-21.10)*

இவ்வகையில், அபாயம் குறித்து கட்சி எச்சரிக்கை பெற் றது. எதிரியை இனங்கண்டு தனிமைப்படுத்துவதற்காக தங்குத டையின்றி தனது பணியை விமர்சிக்குமாறு மக்கள் திரளினருக்கு அறைகூவல் விடுத்தது:

1967 பிப்ரவரி மாதம் ஆற்றிய உரையில் தலைவர் மாவோ சுட்டிக் காட்டினார்: கடந்த காலத்தில் நாம் கிராமப் பகுதிகளிலும், தொழிற்சாலைகளிலும், பண்பாட்டுத் துறை யிலும் போராட்டங்கள் நடத்தியுள்ளோம், சோசலிசக் கல்வி இயக்கத்தை நடத்தியுள்ளோம். ஆனால் அவை அனைத்தும் பிரச்சினையைத் தீர்ப்பதில் தோல்வி அடைந்தன. ஏனெ னில் நமது இருண்ட அம்சத்தை, வெளிப்படையானதும் அனைத்தும் தழுவிய வகையிலும், கீழிருந்தும் அம்பலப் படுத்த பரந்த மக்கள் திரளினரைத் தட்டியெழுப்புவதற்கான ஒரு வடிவத்தை, ஒரு முறையை நாம் கண்டடையவில்லை.

இப்போது நாம் இவ்வடிவத்தைக் கண்டடைந்துள்ளோம் — அதுதான் மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சியாகும். தமது கருத்துக்களைச் சுதந்திரமாகச் சொல்ல வும், கொட்டையெழுத்துச் சுவரொட்டிகளை எழுதவும், பெரும் விவாதங்களை நடத்தவும் மக்கள் திரளினரைப் பல

*லட்சக்கணக்கில் தட்டியெழுப்புவதன் மூலமே, கட்சிக்குள் நுழைந்து கொண்டுள்ள ஓடுகாலிகள், எதிரிக் கையாட்கள், அதிகாரத்திலுள்ள முதலாளியப் பாதையாளர்கள் ஆகியோரை அம்பலப்படுத்த முடியும்; முதலாளியத்தைத் திரும்பக் கொண்டுவர அவர்கள் தீட்டியுள்ள சதிகளைத் தகர்த்தெறியவும் முடியும். (பீரி. 68-18.16)*

4. அரசாங்கத்தில் மக்கள் பங்குபெறுதல்

ஒரு 'பண்பாட்டுப் புரட்சி'க்கு லெனின் அறைகூவல் விடுத்தபோது, சோசலிசத்தின் முழு வெற்றியைச் சாதிக்க தொழிலாளர் - உழவர் திரளினர் அரசாங்கப் பணியைத் தம் கரங்களில் எடுத்துக் கொள்வது அவசியம் என்பதையும் இதன் பொருட்டு அவர்கள் தம் பண்பாட்டு அளவை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார்; அதாவது, பழைய முதலாளி வர்க்கச் சித்தாந்தத்தின் இடத்தில் தமது சொந்தப் பாட்டாளி வர்க்கச் சித்தாந்தத்தை நிலைநாட்ட வேண்டும்; எந்த அதிகார வர்க்கத் தடைகளின் மறைவில் முதலாளிகள் தமது நிலையை வலுப்படுத்திக் கொள்கிறார்களோ அத்தடைகளை அப்புறப்படுத்தக் கூடிய அளவுக்குத் தம் பண்பாட்டு அளவை தொழிலாளர் - உழவர் திரளினர் உயர்த்திக் கொள்ள வேண்டும்.

சீனப் பண்பாட்டுப் புரட்சியின் குறிக்கோள்கள் இவைதான்: சோசலிசத்துக்குப் பகையான சக்திகளைத் துடைத்தெறிவது மட்டுமல்லாமல், 'எல்லாவற்றிலும் தலைமையைப் பிரயோகிக்கவும்', 'நிர்வாகத்தில் அரசியல் ஆணை செலுத்தவும்', ஒரு அதிகாரியாகப் பணிபுரியும் ஒவ்வொருவரும் 'சாதாரண மக்களில் ஒருவராக இருப்பதை' உறுதி செய்யவும் பாட்டாளி வர்க்கத்துக்குத் திறன் வழங்குவதே பண்பாட்டுப் புரட்சியின் நோக்கமாகும்.

இக்குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு மக்கள் திரளினரைச் செயலூக்கத்துடன் ஈடுபடுத்தும் வகையில் முதலாளியச் சித்தாந்தத்துக்கு எதிரான அனைத்துவகைத் தாக்குதலைத் தொடுக்க வேண்டியது அவசியமாகிறது:

முதலாளி வர்க்கம் தூக்கியெறியப் பட்டிருந்த போதிலும், மக்களைக் கறைப்படுத்துவதற்காக, அவர்களது உள்ளங்களை அடிமைப்படுத்துவதற்காக, பழைய இடத்துக்குத் திரும்பி வருவதற்காக, சுரண்டும் வர்க்கங்களின் பழைய கருத்துகள், பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்த முதலாளி வர்க்கம் இன்னும் முயன்று கொண்டிருக்கிறது. பாட்டாளி வர்க்கம் இதற்கு நேர் எதிரானவற்றைச் செய்ய வேண்டும். அது சித்தாந்தத் துறையில் முதலாளி வர்க்கத்தின் அறைகூவல் ஒவ்வொன்றையும் நேருக்குநேர் சந்திக்க வேண்டும். சமுதாயம் முழுவதன் மனக் கண்ணோட்டத்தை மாற்ற பாட்டாளி வர்க்கத்தின் புதிய கருத்துக்கள், பண்பாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும். *(பீரி. 66-33.6)*

மாபெரும் பண்பாட்டுப் புரட்சியில் மக்கள் திரளினருக்குள்ள ஒரே வழிமுறை, அவர்களது விடுதலையை அவர்களே தேடிக் கொள்வதுதான். அவர்கள் சார்பில் வேறு யாரும் விசயங்களைச் செய்வதற்கான வழிமுறை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

மக்கள் திரளினரை நம்புங்கள், அவர்களைச் சார்ந்திருங்கள், அவர்களது முன்முயற்சியை மதியுங்கள், அச்சத்தைத் தூக்கி எறியுங்கள். ஒழுங்குச் சீர்குலைவைக் கண்டு அஞ்சாதீர்... இந்த மாபெரும் புரட்சிகர இயக்கத்தில் மக்கள் திரளினர் தமக்குக் கல்வி புகட்டிக் கொள்ளட்டும். சரியானதையும் தவறானதையும் செயல்களைப் புரிவதில் சரியான முறைகளையும் தவறான முறைகளையும் வேறுபடுத்திப் பார்க்கக் கற்றுக்கொள்ளட்டும். *(பீரி. 66-33.7)*

சோவியத் யூனியனில் 'மக்கள் மனங்களிலுள்ள முதலாளிய எச்சங்'களுக்கு எதிராக, ஸ்டாலின் விடுத்த அறைகூவலான 'சோசலிசத் தாக்குதல்' என்பது இத்தகையதுதான்; ஆனால் மக்கள் திரளினருடன் நெருக்கம் குறைந்திருந்த சோவியத் கட்சி, மக்கள் திரளினரைப் போராட்டத்துக்குள் ஈர்க்கும் அளவுக்கு வலிமை பெற்றிருக்கவில்லை.

பண்பாட்டுப் புரட்சியின்போது ஒரு புதிய அமைப்புப் பிரிவு தோன்றியது. அதுதான் புரட்சிகரக் குழு என்பதாகும். அது 'ஒன்றில் - மூன்று' என்ற சேர்க்கையை அடிப்படையாகக் கொண்டது. அதாவது, அதன் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் திருப்பி அழைக்கப்படுவதற்கு உட்படுவர்; அவர்கள் மக்களுக்கு நேரடியாகப் பொறுப்புடையவர்கள்; கட்சி, மக்கள் விடுதலைச் சேனை, மக்கள் திரள் அமைப்புகள் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்டவர்கள். இக்குழுக்கள் மக்கள் திரளினரின் படைப்பாகும். அவை தொழிற்சாலை அல்லது கம்யூனிலிருந்து மாநில, பிரதேச அரசாங்க உறுப்புகள் வரை எல்லா மட்டங்களிலும் தோன்றின. நாட்டை நிர்வகிப்பதில் மக்கள் திரளினர் நேரடியாகப் பங்கேற்கக் கூடிய ஒரு இணைப்பாக இருப்பதுதான் அக்குழுக்களின் செயல்பாடாகும்:

> இந்த 'ஒன்றில் - மூன்று' என்ற அதிகார உறுப்பு, மக்கள் திரளினரிடையே பாட்டாளி வர்க்க அரசியல் அதிகாரம் ஆழமாக வேரூன்றுவதைச் சாத்தியமாக்குகிறது. தலைவர் மாவோ சுட்டிக் காட்டுகிறார்: 'அரசு உறுப்புகள் மக்கள் திரளினருடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் அரசு உறுப்புகளைச் சீர்திருத்துதல் என்பதில் உள்ள மிக அடிப்படையான கோட்பாடாகும்'. மாபெரும் பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சியின் போக்கில் கூட்டம் கூட்டமாக முன்வந்துள்ள புரட்சிகர மக்கள் திரளினரின் பிரதிநிதிகள், குறிப்பாக உழைக்கும் மக்களின் — தொழிலாளர் உழவரின் — பிரதிநிதிகள், நடைமுறை அனுபவம் கொண்ட புரட்சிகரப் போராளிகள் ஆவர். புரட்சிகர மக்கள் திரளினரின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இவர்கள், பல்வேறு மட்டங்களில் உள்ள தலைமைக் குழுக்களில் பங்கேற்கிறார்கள். இது இந்த மட்டங்களில் உள்ள புரட்சிகரக் குழுக்களுக்கு ஒரு பரந்த மக்கள் திரள் அடிப்படையை வழங்குகிறது. நாட்டை நிர்வகிப்பதில் புரட்சிகர மக்கள் திரளினரின் நேரடிப்பங்கு, பல்வேறு மட்டங்களில் உள்ள அரசியல் அதிகார உறுப்புகள் மீது கீழிருந்து புரட்சிகரக் கண்காணிப்பை நடைமுறைப்படுத்

தல் ஆகியவை, எல்லா மட்டங்களிலும் உள்ள நமது தலைமைக் குழுக்கள் எப்போதும் மக்கள் திரள் மார்க்கத்தையே பின்பற்றுகின்றன, மக்கள் திரளினருடன் மிக நெருக்கமான உறவுகளைப் பேணுகின்றன, அவர்களது நலன்களையே எப்போதும் பிரதிபலிக்கின்றன, மக்களுக்கு மனப்பூர்வமாகச் சேவை செய்கின்றன என்பனவற்றை உறுதிப்படுத்துவதில் ஒரு மிக முக்கியமான பங்கு ஆற்றுகின்றன. *(பீரி. 68-14.6)*

இந்தப் புரட்சிகரக் குழுக்களை உருவாக்கியதானது, சோசலிசப் புரட்சியில் ஏற்பட்ட ஒரு முக்கியமான முன்னேற்றத்தைக் குறிக்கிறது. மக்கள் திரளினர் நாட்டின் நேரடியான நிர்வாகத்தை மேற்கொள்ளத் துவங்கியுள்ளனர். இந்த இயக்கப்போக்கு முழுமைபெற்றதும், பொதுவுடைமை நோக்கிய மாறுதல் துவக்கப் பெறும்; ஆனால் இது ஒரு நீண்ட இயக்கப் போக்கு. வர்க்கப் போராட்டத்தை இறுதிவரை நடத்துவதன் மூலமே அதன் வெற்றிகரமான நிறைவு உறுதி செய்யப்படும். தலைவர் மாவோ சுட்டிக் காட்டியதுபோல:

*நாம் ஒரு பெரும் வெற்றியை ஈட்டியுள்ளோம். ஆனால் தோற்கடிக்கப்பட்ட வர்க்கம் இனியும் போராடும். இத்தகைய மனிதர்கள் நம்மைச் சுற்றிலும் இருக்கிறார்கள். இந்த வர்க்கம் இன்னும் நிலவுகிறது. எனவே இறுதி வெற்றி பற்றி நம்மால் பேசமுடியாது; பல பத்தாண்டுகளுக்குக்கூட பேசமுடியாது. நாம் நமது விழிப்புணர்வைத் தளர்த்தக் கூடாது. லெனினியக் கண்ணோட்டத்தின்படி, ஒரு சோசலிச நாட்டின் இறுதி வெற்றிக்கு உள்நாட்டில் உள்ள பாட்டாளி வர்க்கம் மற்றும் பரந்துபட்ட மக்கள் திரளினரின் முயற்சிகள் மட்டும்போதாது. அது மனித குலம் அனைத்தையும் விடுவிக்கிற உலகப் புரட்சியின் வெற்றியையும், புவியில் மனிதனை மனிதன் சுரண்டும் அமைப்பு ஒழித்துக் கட்டப்படுதலையும் உள்ளடக்கியது. எனவே நம்நாட்டில் புரட்சியின் இறுதி வெற்றி பற்றி எளிதாகக் கருதுவது தவறாகும்; அது லெனினியத்துக்கு மாறானது, உண்மைகளுடன் பொருந்தாதது. (பீரி. 69-18.23)*

5. புரட்சியும் உற்பத்தியும்

*ஒன்பதாவது கட்சிப் பேரவையின் (1969) அறிக்கையில் சொல்லப்பட்டவை:*

*தொடர்ந்து பல ஆண்டுகள் நமது நாடு வேளாண்மை உற்பத்தியில் நல்ல அறுவடைகளைக் கண்டுள்ளது. தொழில் உற்பத்தியிலும் விஞ்ஞானம், தொழில் நுணுக்கம் ஆகியவற்றிலும் ஒரு ஆரோக்கியமான நிலைமை நிலவுகி றது. புரட்சி, உற்பத்தி இரண்டிலும் மக்கள் திரளினருக் குள்ள உற்சாகம் முன் எப்போதும் இல்லாத சிகரங்களை எட்டியுள்ளது. பல தொழிற்சாலைகள், சுரங்கங்கள், இதர தொழில் நிறுவனங்கள் மீண்டும் மீண்டும் தமது உற்பத்தி இலக்குகளை விஞ்சியுள்ளன... உற்பத்தியில் இதுவரை இல்லாத சாதனைகளை ஏற்படுத்தியுள்ளன. தொழில் நுணுக் கப் புரட்சி இடைவிடாத முன்னேற்றம் கண்டு வருகிறது; சந்தை தழைத்தோங்குகிறது; விலைகள் நிலையாக உள்ளன. 1968 ஆம் ஆண்டு இறுதியில் தேசியக் கடன் பத்திரங்கள் அனைத்தையும் நாம் மீட்டு விடுவோம். நமது நாடு இப்போது உள்நாட்டுக் கடன்களோ வெளிநாட்டுக் கடன் களோ ஏதும் இல்லாத ஒரு சோசலிச நாடாக உள்ளது. (பீரி. 69-18.22)*

*புரட்சியின் முக்கிய முழக்கமான 'புரட்சியை இறுகப் பற்றுக, உற்பத்தியை மேம்படுத்துக' என்ற கோட்பாட்டை இவ் அறிக்கை விளக்குகிறது:*

*'புரட்சியை இறுகப் பற்றுக, உற்பத்தியை மேம்படுத்துக' — இக்கோட்பாடு முற்றிலும் சரியானது. புரட்சிக்கும் உற்பத்திக்கும், உணர்வுக்கும் பொருளுக்கும், மேலடுக்குக் கும் பொருளாதார அடித்தளத்துக்கும், உற்பத்தி உறவுகளுக் கும் உற்பத்திச் சக்திகளுக்கும் இடையில் உள்ள உறவுகளை இது சரியாக விளக்குகிறது. தலைவர் மாவோ நமக்கு எப்போதுமே கற்பிக்கிறார்: 'அரசியல் பணி என்பது பொருளாதாரப் பணி அனைத்துக்குமான உயிர்நாடி'. அரசி யல் வகையில் பிரச்சினைகளை அணுகுவதை எதிர்த்த*

சந்தர்ப்பவாதிகளைக் கண்டனம் செய்து லெனின் எழுதினார்: பொருளாதாரத்தைக் காட்டிலும் அரசியல் முதலிடத்தைப் பெற்றே தீரவேண்டும். வேறுவகையில் வழக்காடுவது மார்க்சியத்தின் அரிச்சுவடியையே மறப்பதாகும். (லெ.தொ.நூ. 32.83)

... அரசியல் என்பது பொருளாதாரத்தின் செறிவூட்டப்பட்ட வெளியீடு. நாம் மேலடுக்கில் புரட்சி செய்யத் தவறினால், பரந்துபட்ட தொழிலாளர் - உழவர் திரளினரைத் தட்டியெழுப்பத் தவறினால், புரட்டல் வழியை விமர்சிக்கத் தவறினால், விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய ஓடுகாலிகள், எதிரிகளின் கையாட்கள், அதிகாரத்திலுள்ள முதலாளியப் பாதையாளர்கள், எதிர்ப் புரட்சியாளர்கள் ஆகியோரை அம்பலப்படுத்தத் தவறினால், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை வலுப்படுத்தத் தவறினால், எவ்வாறு நம்மால் சோசலிசப் பொருளாதார அடித்தளத்தைத் தொடர்ந்து வலுப்படுத்தவும், சோசலிச உற்பத்திச் சக்திகளைத் தொடர்ந்து வளர்த்தவும் முடியும்? இது உற்பத்தியின் இடத்தில் புரட்சியை வைப்பதல்ல, ஆனால் உற்பத்தியின் மீது ஆணை செலுத்தவும், அதை மேம்படுத்தவும், அதை முன்நோக்கி வழிநடத்திச் செல்லவும் அரசியலைப் பயன்படுத்துவதாகும். (பீரி. 69-18.22)

புரட்சிக்கும் உற்பத்திக்கும் உள்ள உறவை எதிர்மறைகளின் ஒற்றுமை என்று காணும் இக்கருத்தாக்கம், 'புரட்சிகர இயங்கியல்' என்று லெனினால் அழைக்கப்பட்டதன் ஒரு வெளியீடு ஆகும். இது, விடுதலைக்கு முந்திய காலகட்டத்தில் நடந்த சீர்திருத்த இயக்கங்களின் காலந்தொட்டே மா சேதுங்கின் சிந்தனையில் ஆழமாக வேரூன்றியிருந்த கருத்தாக்கமாகும் (மா.தெ.நூ. 3.328). இது இயங்கியல் மற்றும் வரலாற்றுப் பொருள் முதலியலின் அடிப்படைக் கோட்பாடுகளில் ஒன்றை ஆதாரமாகக் கொண்டுள்ளது. மார்க்சு எழுதினார்:

தமது வாழ்வின் சமூக உற்பத்தியில் மனிதர்கள் திட்டவட்டமான உறவுகளை மேற்கொள்கிறார்கள். இவை இன்றியமை

யாதன. அவர்களது சித்தத்திலிருந்து சுயேச்சையாக நிற்பன. இந்த உற்பத்தி உறவுகள் அவர்களது பொருள்வகையான உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியிலுள்ள ஒரு திட்டவட்ட மான கட்டத்துக்குப் பொருத்தமாக அமைகின்றன. இந்த உற்பத்தி உறவுகளின் கூட்டுத்தொகை, சமூகத்தின் பொரு ளாதாரக் கட்டமைப்பாக, உண்மையான அடித்தளமாக அமைகிறது. இந்த அடித்தளத்தின்மீது ஒரு சட்ட மேலடுக் கும் அரசியல் மேலடுக்கும் எழுகின்றன. இந்த அடித்தளத் துக்குப் பொருத்தமாக சமூக உணர்வின் திட்டவட்டமான வடிவங்கள் அமைகின்றன. மனிதர்களின் வாழ்நிலையைத் தீர்மானிப்பது அவர்களின் உணர்வு அல்ல, மாறாக அவர்க ளது சமூக வாழ்நிலையே அவர்களின் உணர்வைத் தீர்மா னிக்கிறது. (மா.ஏ. 1.503)

அதேவேளையில், பொருளாதார அடித்தளத்தால் தீர்மானிக் கப்படும் மேலடுக்கு, அடித்தளத்தின் மீது எதிர்ச்செயல் புரிகிறது;

அரசியல், சட்டம், தத்துவம், சமயம், இலக்கியம், கலை முதலியவற்றின் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சியை அடிப் படையாகக் கொண்டது. ஆனால் இவை ஒவ்வொன்றும் மற்றவற்றின்மீதும் பொருளாதார அடித்தளத்தின்மீதும் எதிர்ச் செயல் புரிகின்றன. எல்லாவற்றுக்கும் காரணமாக அமைவது பொருளாதார நிலைமைதான்: அது மட்டுமே செயலூக்கமுள்ளதாக இருக்கிறது. பிற அனைத்தும் செயலூக் கமற்ற வெறும் விளைவுகள்தான் என்பதல்ல இதன் பொருள். மாறாக பொருளாதாரத் தேவை என்ற அடித்தளத் தின் மீது எதிர்ச் செயல் நிகழவே செய்கிறது. இறுதியில் பொருளாதார அடித்தளம் தானே எல்லாவற்றுக்கும் ஆதாரம் என்பதை எப்போதும் உறுதிப்படுத்திக் கொள்கிறது. (மா.ஏ. 3.502)

இதிலிருந்து பெறப்படுவது என்னவெனில், சில குறிப் பிட்ட நிலைமைகளில், குறிப்பாக புரட்சிகரச் சூழ்நிலைமை களில், தமது சமூக வாழ்நிலையை நெறிப்படுத்தும் நியதிகளைப்

புரிந்துகொண்டுள்ள மனிதர்களின் உணர்வானது தீர்மானகரமான காரணியாகலாம் என்பதுதான். மா சேதுங் எழுதுகிறார்:

உற்பத்திச் சக்திகள், நடைமுறை, பொருளாதார அடித்தளம் ஆகியவை பொதுவாக முதன்மையான மற்றும் தீர்மானகர மான பாத்திரம் வகிக்கின்றன என்பது உண்மைதான். இதை மறுப்பவர் எவரும் பொருள்முதல்வாதிகள் அல்லர்; ஆனால் சில குறிப்பிட்ட நிலைமைகளில், உற்பத்தி உறவு கள், தத்துவம், மேலடுக்கு போன்ற கூறுகள்கூட, தம் பங்குக்கு முதன்மையான மற்றும் தீர்மானகரமான பாத்திரத் தில் தம்மைப் புலப்படுத்திக் கொள்கின்றன. உற்பத்தி உறவுகளில் ஒரு மாற்றம் ஏற்படாமல் உற்பத்திச் சக்திகள் வளர்ச்சி பெறுவது என்பது சாத்தியமில்லை என்கிற சமயத்தில், உற்பத்தி உறவுகளில் ஏற்படும் மாற்றம் முதன் மையான மற்றும் தீர்மானகரமான பாத்திரம் வகிக்கிறது. லெனின் கூறினாரே, 'புரட்சிகரத் தத்துவம் இல்லாமல் புரட்சிகர இயக்கம் ஏதும் இருக்க முடியாது' (லெ.தொ.நூ. 5.367) என்று, அத்தகைய சமயங்களில், புரட்சிகரத் தத்து வத்தை உருவாக்குவதும் அதைப் பரிந்துரைப்பதும் முதன் மையான மற்றும் தீர்மானகரமான பாத்திரம் வகிக்கிறது. ஒரு கடமை — அது எந்தக் கடமையாக இருந்தபோதிலும் — செய்யப்பட வேண்டும்; ஆனால் இன்னும் ஒரு வழிகாட்டும் வழி, வழிமுறை, திட்டம் அல்லது கொள்கை ஏதும் இல்லை என்றால், ஒரு வழிகாட்டும் மார்க்கம், வழிமுறை, திட்டம் அல்லது கொள்கையைத் தீர்மானிப்பது முதன்மையான மற்றும் தீர்மானகரமான விசயமாக அமைகி றது. மேலடுக்கானது (அரசியல், பண்பாடு முதலியவை) பொருளாதார அடித்தளத்தின் வளர்ச்சியைத் தடை செய்யும் போது, அரசியல் மற்றும் பண்பாட்டு மாற்றங்கள் முதன் மையானதும் தீர்மானகரமானதும் ஆகின்றன. இதைச் சொல் வதால் நாம் பொருள் முதலியலுக்கு எதிராகச் செல்கி றோமா? இல்லை. காரணம் என்னவெனில், வரலாற்றின் பொதுவான வளர்ச்சியில், பொருள்சார்ந்தவை மனம்சார்ந்த வற்றைத் தீர்மானிக்கின்றன, சமூக வாழ்நிலை சமூக

*உணர்வைத் தீர்மானிக்கின்றன என்பதை நாம் ஏற்கும் போது, மனம்சார்ந்தவை பொருள்சார்ந்தவை மீதும், சமூக உணர்வு சமூக வாழ்நிலை மீதும், மேலடுக்கு பொருளாதார அடித்தளத்தின்மீதும் எதிர்ச்செயல் புரிவதையும் நாம் ஏற்கி றோம் — உண்மையில் ஏற்றாக வேண்டும். இது பொருள் முதலியலுக்கு எதிராகச் செல்வதாகாது. மாறாக இது யாந்திரிகப் பொருள்முதலியலைத் தவிர்க்கிறது, இயங்கி யல் பொருள்முதலியலை உயர்த்திப் பிடிக்கிறது. (மா.தெ.நூ. 1.336)*

*இறுதியில், பொருளாதார அடித்தளத்தால் தீர்மானிக்கப்ப டும் அரசியல் சித்தாந்த மேலடுக்கு, அந்த அடித்தளத்தின்மீது எதிர்ச்செயல் புரிகிறது. சில சமயங்களில் தீர்மானகரமான முறையில் எதிர்ச்செயல் புரிகிறது. இதிலிருந்து பெறப்படுவது என்னவெனில், சோசலிசம் கட்டும் பணியில் பாட்டாளி வர்க்கம் தனது சர்வாதிகாரத்தை ஒரே சமயத்தில் அடித்தளம், மேலடுக்கு இரண்டிலும் பராமரிக்க வேண்டும், விரிவுபடுத்த வேண்டும் என்பதாகும். சோவியத் யூனியனில் இப்பிரச்சினை தீர்க்கப்பட வில்லை. இதற்குக் காரணமாக இருந்தது முதலாளியச் சுற்றி வளைப்பு என்ற நிர்ப்பந்தமாகும். இதுதான் சோவியத் யூனிய னின் உள்நாட்டு வளர்ச்சியை உந்தித் தள்ளியது. ஆனால் மா சேதுங்கின் வழிகாட்டுதலின் காரணமாக, இப்பிரச்சினைக்கான தீர்வு சீனாவில் கண்டறியப்பட்டுள்ளது:*

*புதிய சமூக அமைப்பு இப்போதுதான் நிறுவப்பட்டு உள்ளது. அதை வலுப்படுத்த காலம் பிடிக்கும். புதிய அமைப்பை, அதை நிறுவிய உடனேயே முழுமையாக வலுப்படுத்தி விடலாம் எனக் கருதக்கூடாது. ஏனெனில் அது சாத்தியமே இல்லை. அதைப் படிப்படியாகத்தான் வலுப்படுத்த முடியும். அதை இறுதியாக வலுப்படுத்தி முடிக்க, நாட்டை சோசலிசத் தொழில்மயமாக்கி பொருளா தார முனையில் சோசலிசப் புரட்சியை விடாது மேற்கொள் வது மட்டுமல்ல, அரசியல் சித்தாந்த முனைகளிலும் இடைவிடாத, சிரமம் மிக்க சோசலிசப் போராட்டங்களை யும் சோசலிசக் கல்வியையும் நடத்துவதும் அவசியமானது.*

மேலும் உதவிகரமாக இருக்கக்கூடிய பல்வேறு அனைத்துலகக் காரணிகளும் இதற்குத் தேவைப்படுகின்றன. (மா.மே. 27)

## பொதுவுடைமை உழைப்பு

நாம் சப்போட்னிக்குகள் மீது மீண்டும் கவனம் செலுத்துவோம். 1919 ஆம் ஆண்டு வசந்த காலத்தில் நிகழ்ந்த முதல் சப்போட்னிக் — லெனின் கூறியது போல் ஒரு துவக்கம்தான். 1920 மே மாதம் முதல் நாள், அனைத்து ரசிய சப்போட்னிக் நடந்தது. இந்த இயக்கத்தில் மாஸ்கோ நகரில் மட்டும் 4,50,000 தொழிலாளர் ஈடுபடுத்தப்பட்டனர். லெனினின் செய்தி ஒன்றைத் தாங்கிய ஒரு பிரசுரம் சுற்றுக்கு விடப்பட்டது. இச்செய்தியில் லெனின் கூறினார்:

> நாம் ஒரு புதிய சமுதாயத்தை அமைப்போமாக!
>
> ஜாரிசத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் அனைத்து வல்லமை பொருந்திய ஏகாதிபத்திவாதிகளுக்கும் எதிரான மாபெரும் புரட்சிகரப் போரின்போது ஏற்பட்ட தோல்விகளால் நாம் துவண்டுவிட மாட்டோம்.
>
> மிகவும் கடினமான கடமையின் துவக்கத்தில் தவிர்க்க முடியாத பெரும் இன்னல்கள், தவறுகள் ஆகியவற்றால் நாம் துவண்டுவிட மாட்டோம். உழைப்பைச் செய்வதில் உள்ள சகல பழக்க வழக்கங்களை உருமாற்றுவதற்குப் பல பத்தாண்டுகள் பிடிக்கும்... சாபக்கேடான நீதியான ''ஒவ்வொருவரும் தன்னை மட்டும் காப்பாற்றிக் கொள்ளட்டும்; கடைசியில் வருபவன் நாசமாய்ப் போகட்டும்'' என்பதை, வேலை என்பதை வெறும் கடமையாகப் பார்க்கும் வழக்கத்தை, ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் ஊதியம் அளிக்கப்படும் வேலை மட்டுமே நியாயமானது என்று கருதுவதை நாம் ஒழித்துக் கட்டுவோம். 'எல்லாரும் ஒவ்வொருவருக்காக, ஒவ்வொருவரும் எல்லாருக்குமாக' என்ற நியதியையும், 'ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவரது ஆற்றலுக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரவரது தேவைக்கு ஏற்ப' என்ற நியதியையும் மக்களின் மனங்களில் ஆழப் பதிய

*வைக்கவும், அவற்றை ஒரு பழக்கமாக உருவாக்கவும், மக்கள் திரளினரின் அன்றாட வாழ்வில் அவற்றைக் கொண்டுவரவும் நாம் பணியாற்றுவோம். பொதுவுடைமைக் கட்டுப்பாட்டையும் பொதுவுடைமை உழைப்பையும் படிப்படியாக ஆனால் உறுதியாக அறிமுகப்படுத்தவும் நாம் பணியாற்றுவோம்.*

*நாம் ஒரு பெரும் மலையை நகர்த்தியுள்ளோம். அது பழைமைவாதம், அறியாமை, 'சுதந்திர வர்த்தகம்', மனித உழைப்புச் சக்தியை மற்ற எந்த ஒரு சரக்கையும் போலவே 'சுதந்திரமாக' வாங்குதல் - விற்றல் என்ற பழக்கத்தைப் பிடிவாதமாகப் பின்பற்றுதல் என்ற பெரும் பிண்டமாகும். மிக உறுதியான, காலங்காலமாக வந்த, மனத்தில் ஆழப்பதிந்துள்ள பழக்கங்களுக்குக் குழிபறித்து அவற்றை ஒழித்துக்கட்ட நாம் துவங்கியுள்ளோம். ஒரே ஆண்டில் நமது சப்போட்னிக்குகள் முன்னோக்கிய ஒரு பெரும் பாய்ச்சலைச் சாதித்துள்ளன. அவை இன்னும் மிகமிக வலுக்குன்றியவையாக உள்ளன. ஆனால் இதனால் நாம் துவண்டுவிடமாட்டோம். 'மிகமிக பலவீனமான' சோவியத் அரசு, நம் கண் முன்னாலேயே நம் உழைப்பின் பலனாக வலிமை பெறுவதையும், ஒரு வலுமிக்க உலகச் சக்தியாகி வருவதையும் நாம் பார்த்துள்ளோம். சப்போட்னிக்குகளை நடைமுறைப்படுத்தியும் மேம்படுத்தியும், அவற்றை ஒரு பழக்கமாக மாற்றியும் நாம் பல்லாண்டுகள், பல பத்தாண்டுகள் உழைப்போம்; பொதுவுடைமை உழைப்பின் வெற்றியைச் சாதிப்போம். (லெ.தொ.நூ. 31.124)*

*சீன மக்களுக்கு மா சேதுங் வழங்கிய செய்தியும் இதுதான். பொதுவுடைமைக் கட்சியால் வழிநடத்தப்பட்டு, தொழிலாளர் - உழவர் திரளினர் ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ அமைப்பைத் தூக்கி எறிந்தனர். கடைசியில் சுரண்டலில் இருந்து விடுவிக்கப்பட்ட அவர்களுக்குள்ளே இருந்த ஆக்கபூர்வமான சக்தி என்ற வற்றாத களஞ்சியம் விடுவிக்கப்பட்டது. இது உலகத்தை உருமாற்றும் ஆற்றலை அவர்களுக்கு வழங்கியது. 1945 ஜூன் மாதம் ஏழாவது கட்சிப் பேரவையில் பேசும்போது மாவோ கீழ்க்காணும் கிராமியக் கதையை நினைவுபடுத்தினார்:*

'மலைகளை அகற்றிய மூடக் கிழவன்' என்ற பழஞ்சீன நீதிக்கதை ஒன்று உண்டு. இது நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பு வடசீனாவில் வாழ்ந்த, வடக்கு மலைகளின் முட்டாள் கிழவன் என்றழைக்கப்பட்ட ஒரு கிழவனைப் பற்றிய கதை. அவனது வீடு தென் திசையை நோக்கி இருந்தது. அவனது வாயிலுக்கு அப்பால் இருபெரும் சிகரங்களான டாயச்ஹாங், வாங்சு ஆகியவை நின்றிருந்தன. இவை பாதையை மறித்தன. அவன் தன் மக்களைக் கூப்பிட்டான். மண்வெட்டியைக் கையில் ஏந்தி, பெரும் உறுதியுடன் அவர்கள் மலைகளைப் பெயர்க்க ஆரம்பித்தனர். புத்திசாலிக் கிழவன் என்றழைக்கப்பட்ட மற்றொரு நரைத்தாடிக் கிழவன், அவர்களைப் பார்த்து கேலியாகக் கூறினான்: ''எவ்வளவு முட்டாள்களாக இருந்தால் இதைச் செய்வீர்கள்! இந்தப் பெரும் மலைகளைப் பெயர்த்தெடுப்பது உங்களுக்கு முற்றிலும் சாத்தியப்படாது!'' முட்டாள் கிழவன் பதில் கூறினான்: ''நான் செத்தால் என் மக்கள் தொடர்ந்து செய்வார்கள்; அவர்கள் செத்தால் எனது பேரப் பிள்ளைகள் செய்வார்கள். இப்படியே தொடர்ந்து நடக்கும். மலைகள் உயரமானவைதாம். ஆனால் அவை இப்போது இருப்பதைக் காட்டிலும் மேலும் உயரமாக வளர முடியாது. நாங்கள் வெட்டுகிற ஒவ்வொரு துணுக்குக்கும் ஏற்ப மலைகளின் உயரம் குறைந்து கொண்டே வரும். ஏன் அவற்றை எங்களால் அப்புறப்படுத்த முடியாது?'' புத்திசாலிக் கிழவனின் தவறான கருத்தை மறுத்துக்கூறிய அவன், ஒவ்வொரு நாளும் தனது நம்பிக்கையில் தளராது தோண்டிக் கொண்டே வந்தான். இதைக் கண்டு கடவுள் இரங்கி, இரண்டு தேவதூதர்களைக் கீழே அனுப்பினார். இத் தேவதூதர்கள் மலைகளைத் தம் முதுகில் தூக்கிச் சென்றுவிட்டனர்.

இன்று, சீன மக்கள் மேல் இரண்டு பெரும் மலைகள் பாறாங்கல்போல் அழுத்திக் கொண்டிருக்கின்றன. ஒன்று ஏகாதிபத்தியம்; மற்றொன்று நிலப்பிரபுத்துவம். சீனப் பொதுவுடைமைக் கட்சியானது அவற்றைப் பெயர்த்தெடுத்து எறிய நெடுநாட்களாகவே உறுதிபூண்டுள்ளது. நாம்

> விடாமுயற்சி செய்து இடைவிடாது பணியாற்றுவோமானால் நாமும்கூட கடவுளின் இதயத்தைத் தொட்டுவிட முடியும். நமது கடவுள் சீன மக்கள் திரளினரே தவிர வேறு யாருமல்ல. அவர்கள் எழுந்துநின்று நம்மோடு சேர்ந்து தோண்டுவார்களேயானால், இந்த இருமலைகளை ஏன் அப்புறப்படுத்த முடியாது? (மா.தொ.நூ. 3.321)

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, மக்கள் குடியரசு அறிவிக்கப்படும் முன்பு அவர் கூறினார்:

> உலகில் உள்ள அனைத்துப் பொருள்களிலும் மிகவும் மதிப்புள்ளவர்கள் மக்கள்தான். பொதுவுடைமைக் கட்சியின்கீழ் மக்கள் இருக்கும்வரை, எல்லாவகை அதிசயங்களையும் புரியலாம்... புரட்சியால் எல்லாவற்றையும் மாற்ற முடியும், விரைவில் ஒரு பெரும் மக்கள் தொகையும் உற்பத்திப் பொருள்களின் பெருஞ்செல்வமும் கொண்ட ஒரு புதிய சீனா தோன்றும். அங்கு வாழ்க்கை வளமாக இருக்கும். பண்பாடு தழைக்கும். நம்பிக்கை வறட்சி கொண்ட கருத்துகள் முற்றிலும் அடிப்படை இல்லாதவை. (மா.தெ.நூ. 4.454)

புரட்சியால் அனைத்தையும் மாற்ற முடியும். பாட்டாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சி என்பது மனிதன், இயற்கை இரண்டையுமே மறுவார்ப்பு செய்தெடுப்பதற்கான மக்கள் திரள் இயக்கம்; வரலாற்றில் முன்னுவமை காண முடியாத ஒரு மக்கள் திரள் இயக்கம். இவ்வியக்கத்தில், அக்டோபர் புரட்சியின் பாதையைப் பின்பற்றி, சீனப் பாட்டாளிகளும் உழவர்களும் உலகுக்கு ஓர் எடுத்துகாட்டை வழங்கியுள்ளனர். அதாவது புரட்சியின் மூலம் வறுமையை செழுமையாக மாற்றமுடியும் என்பதை அனைத்து நாட்டுத் தொழிலாளர் - உழவர்களுக்கும் காட்டியுள்ளனர். இயக்கத்தின் வெற்றிக்கான விளக்கம், கட்சிக்கும் மக்கள் திரளினருக்குமிடையே உள்ள உறவில் பொதிந்துள்ளது. மக்கள்மீது அளவற்ற நம்பிக்கை வைத்துள்ள கட்சி மென்மேலும் துணிச்சலுடன் முன்முயற்சி எடுக்குமாறு மக்கள் திரளினருக்கு அறைகூவல் விடுக்கிறது. மக்கள் திரளினரும் செவிமடுக்கின்றனர்.

1955 ஆம் ஆண்டில் மக்கள் கம்யூன்களை உருவாக்க வழிகோலிய நாட்டுப்புறத்தின் சோசலிச எழுச்சியின் போது மா சேதுங் எழுதினார்:

மக்கள் திரளினர் அளவற்ற படைப்புச் சக்தி கொண்டுள்ளனர். எந்தெந்த இடங்களிலும் வேலைப் பிரிவுகளிலும் தமது ஆற்றலை முழுமையாக வெளிக்காட்ட முடியுமோ, அங்கெல்லாம் அவர்களால் தம்மை அமைப்புக்குள்ளாக்கிக் கொள்ள முடியும்; கவனத்தைக் குவிக்க முடியும். தமது சொந்த நல்வாழ்வுக்காக மென்மேலும் கூடுதலான முயற்சிகளை மேற்கொள்ள முடியும். (மா.மே.118)

அதுதொட்டு வேளாண்மையை யந்திரமாக்குதலில் கணிசமான முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மிக விரைவில் சீனத் தொழிலாளரும் உழவரும் நவீன சமுதாயத்தின் முன்னேற்றமடைந்த தொழில் நுணுக்கங்கள் வாய்க்கப் பெறுவர். இதற்கிடையில் அவர்கள் யந்திரங்களுக்காகக் காத்துக் கிடப்பதற்குப் பதிலாக, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அவர்கள் முன்னோர்கள் பயன்படுத்திய அதே கருவிகளுடன் — ஆனால் ஒரு புதிய முறையில் — வேலை செய்யத் தயாராக உள்ளனர்.

இரண்டரை லட்சத்துக்கும் மேற்பட்ட உழவர்களின் உயிர்களைப் பலிகொண்ட கிழக்கு வங்க வெள்ளப் பேரழிவு ஏற்பட்ட ஒரு சில வாரங்களுக்கும் பிறகு — 1970 டிசம்பர் 9 ஆம் நாள் — ஒரு பிரெஞ்சு செய்தித்தாள் நிருபர் பீகிங்கிலிருந்து கீழ்க்காணும் செய்தியை அனுப்பினார்:

பீகிங் நகரிலிருந்து பன்னிரண்டே மைல் தொலைவில் 1,00,000 சீனர்கள் இரவு பகல் பாராமல் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் ஒரு நதியின் போக்கை மாற்ற கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். கருவிகளாக அவர்களிடம் உள்ளவை — தள்ளுவண்டிகள், மண் வெட்டிகள், கொந்தாளங்கள் ஆகியவையும் மா சேதுங் சிந்தனைகளும் தான்.

தலைநகருக்குத் தென் கிழக்கே உள்ள விமான நிலையத்துக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருக்கிற

அயல்நாட்டுத் தூதர்கள் யாராக இருந்தாலும் சரி அனைவருமே வென் யு நதியின் மீதுள்ள பாலத்தைத் தாண்டும்பொழுது தங்கள் கார்களின் வேகத்தைக் குறைத்துக் கொண்டு அடிவானம் வரை கருந்திட்டாய் விரிந்து, எறும்புக் கூட்டம் போல் இயங்கும் மனிதரையும், அவர்களிடையே புள்ளிகளாய்ச் செறிந்துகிடக்கும் எண்ணற்ற செங்கொடிகளையும் பேராச்சரியத்துடன் உற்றுப் பார்க்கிறார்கள்.

SEELAN BOOKS
SIGNATURE

விடியும் காலை ஒளியில் இக்காட்சி மேலும் வசீகரமாயத் தோன்றுகிறது. இதைக் காணும் எவரும், சீன நடப்பு இதுதான் என அயல்நாட்டினருக்குக் காட்டுவதற்காகத் தயாரிக்கப்பட்ட வழக்கமான மாதிரிக் காட்சிகளில் இதுவும் ஒன்றோ என்று எண்ணத் தூண்டப்படலாம்.

வென் யு நதி வளர்ச்சித் திட்டமானது வடகிழக்குச் சீனாவில், ஹாய் நதி பாயும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் ஒரு பகுதியே என்று அதிகாரிகள் விளக்குகிறார்கள். ஹாய் நதியின் சரித்திரத்தில் வெள்ளங்களும், வறட்சியும் ஏராளம் ஏராளம்.

ஹாய் நதியைப் 'பணியவைக்கு'மாறு 1963 இல் மாவோ அறைகூவல் விடுத்தபோது, பல நூறாயிரம் உழவர்கள் அதற்குச் செவிமடுத்தனர் என சீனப் பத்திரிகைகள் கூறுகின்றன. அன்றுதொட்டு, உலகைச் சுற்றி 37 முறை — 3 அடி உயரமும் அதே அளவு அகலமும் கொண்ட தடுப்புச் சுவரொன்றை எழுப்புவதற்குத் தேவைப்படும் மண் வெட்டி எடுக்கப்பட்டிருக்கிறது.

ஹாய் நதியில் இணையும் 19 முதன்மையான துணை நதிகளுக்கு, வடிகால்களும், 900 மைல்கள் நீள மண் கரைகளும் எழுப்பியதால் நதியின் முக்கியமான வடிகால் பகுதியான ஸியன்ட்ஸினில், வினாடிக்கு 9000 கன அடிகளாக இருந்த நீர்ப்பாய்வு, வினாடிக்கு 1,27,000 கன அடிகளாக உயர்ந்து விட்டது. இதனால் 8,25,000 ஏக்கர் சாகுபடி நிலங்கள் வெள்ளத்தால் ஏற்படும் சேதங்களிலிருந்து காப்பாற்றப்பட்டு விட்டன.

ஹாய் நதியின் துணைநதியான வென் யுவில் 34 மைல் பரப்பில் வேலைசெய்ய, அக்டோபர் மாத இறுதியில் ஹோபெய் மாநில உழவர்கள், படைவீரர்கள், துணைப் படை வீரர்கள், மற்றும் பீகிங் நகர மக்கள் ஆகியோரை அதிகாரிகள் ஒன்று திரட்டினர்.

நான்கு மாதங்கள் எடுத்திருக்க வேண்டிய இப்பணியில் ஏற்கனவே ஐந்தில் நான்கு பங்கு முடிந்துவிட்டது என அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

அண்மையில் நான் வேலை நடக்கும் இடங்களுக்குச் சென்று பார்த்தேன். அங்கு யந்திரங்களின் இரைச்சல் ஏதும் இருக்கவில்லை; கொந்தாளங்களை ஓங்கிப் போடும் மனித ரின் கனத்த மூச்சொலிகள், மட்டக் குதிரைகளின் கனைப்பு கள், வண்டியோட்டிகளின் கூச்சல்கள், தொழிலாளிகளின் முழக்கங்கள், ஒலிபெருக்கிக் கருவிகளில் இசைக்கப்பட்ட புரட்சிக் கீதங்களின் இன்னிசை ஆகியவை மட்டுமே வெளியை நிரப்பிக் கொண்டிருந்தன.

ஆற்றுப்படுகைகளில் மண்தோண்டி எடுக்க, மூடிக்கி டக்கும் பனிப் பாளத்தை உடைப்பது அவசியம். இருந்த போதிலும் தன் கொந்தாளத்தை வீசுவதற்கு வசதியாக இருக்கிறது என்பதற்காக, இடுப்புவரை திறந்த மேனியுடன் அறுபது வயது மதிக்கத்தக்க ஒரு மனிதர் வேலைசெய்து கொண்டிருப்பதைக் கண்டேன்.

இரவும் பகலும், இடைவிடாது, எட்டெட்டு மணி நேர வேலைகளில் சிலசமயம் உறைநிலைக்கும் கீழாகிப் போன கடுங்குளிரிலும், அடுத்தடுத்து பணியாற்றும் அணியினர் ஆற்றுப் படுகையை ஆழப்படுத்துகிறார்கள்; மண் கரைகள் எழுப்புகிறார்கள்; ஆற்றுக்கு ஒரு புதுப் படுகையை உரு வாக்குவதற்காக பல துணை நதிகளை அழித்து வருகிறார் கள்.

மாவோவின் அறைகூவலுக்குச் செவிசாய்ப்பதில் எத்தகைய வேலை முறைகளும் தொழிலாளிகளுக்கு ஏற்புடையனவாகி

விடுகின்றன. அவர்கள் தம் உடல்பாரத்தைக் கொண்டே வேரோடு மரங்களைச் சாய்த்து விடுகிறார்கள்.

*இவர்கள் குடிசைகளிலோ அல்லது பனிக்காற்றைத் தடுப்ப தற்காக சிறிய மண் சுவர்களாலும் வைக்கோலாலும் சூழப் பட்ட பெரிய கூடாரங்களிலோ வசிக்கிறார்கள். பெரிய பெரிய பானைகளில் ஆவிபறக்கும் உணவு, வேலை நடக்கும் இடத்துக்கே கொண்டு வரப்படுகிறது. (தி டைம்ஸ். 70-12-10)*

*மார்க்சு கூறியதுபோல், 'தத்துவம் மக்கள் திரளினரை இறுகப் பற்றுமானால் அது ஒரு பொருள்வகைச் சக்தியாகி விடுகிறது.' (ம.ப. 50)*

*தலைவர் மாவோவின் படைப்புகளில் இருந்து எடுக்கப் பட்ட மற்றொரு மேற்கோளுடன் முடித்துக் கொள்கிறேன்:*

*மக்கள் திரளினர்தான் உண்மையான வீரர்கள். நாமோ பல சமயங்களில் சிறு பிள்ளைத்தனமும் அறியாமையும் உடைய வர்களாக இருக்கிறோம். இதைப் புரிந்துகொள்ளாமல் மிகமிக அடிப்படையான அறிவைக்கூடப் பெறுவது என் பது சாத்தியமே இல்லை. (மா.தெ.நூ. 3.12)*

☆ ☆ ★ ☆ ☆

## நூலாசிரியர்

ஜார்ஜ் தாம்ஸன்: பர்மிங்ஹாம் பல்கலைக் கழகத்தின் முன்னாள் கிரேக்கப் பேராசிரியர். இவர் படைத்துள்ள நூல்கள்: 'ஈஸ்கைலஸும் ஏதன்ஸும்', 'மார்க்சியமும் கவிதையும்', 'பண்டையக் கிரேக்க சமுதாயம் பற்றிய ஆய்வுகள்' முதலானவை. இவர் பிரிட்டனில் உள்ள மிகச் சிறந்த மார்க்சிய ஆசிரியராவார். 'மார்க்ஸ் முதல் மா சேதுங் வரை' என்ற நூலைத் தொடர்ந்து 'முதலாளியமும் அதன் பிறகும்: சரக்கு உற்பத்தியின் எழுச்சியும் வீழ்ச்சியும்', 'மனித சமூக சாரம், விஞ்ஞானம், கலை ஆகியவற்றின் ஊற்றுக் கண்கள்' ஆகிய இரு நூல்களையும் எழுதியுள்ளார். இம் மூன்று நூல்களும் சேர்ந்து புரட்சிகர மார்க்சியம் பற்றிய ஒரு சிறந்த புரிதலை வழங்குகின்றன.